# மணியே... மணிக்குயிலே...

## 1

இரு கண்ணிலும் உன் ஞாபகம்
உறங்காமல் இருக்கின்றது
பாசங்களும் பந்தங்களும்
பிரித்தாலும் பிரியாதது!

சாலையோரமாய்ப் பரந்து விரிந்திருந்த கொன்றை மரத்தின் அடியில் பொறுமையாய் நின்று கொண்டிருந்தான் சுப்பிரமணி. செக்கச் செவேரென்று பூத்திருந்த கொன்றை மலர்கள் காற்றின் அசைவிற்கேற்ப தனது மலர்களை உதிர்த்து அவனைப் பூத்தூவி வாழ்த்தியது.

தான் செய்யப் போகும் காரியத்தை இயற்கையே ஆசிர்வதித்து வாழ்த்தி அனுப்புவதாக எண்ணிக் கொண்ட சுப்பிரமணிக்கு முப்பது வயது. மாநிறம், களையான கம்பீரமான முகம், உயரமாய் அதற்கேற்ற பருமனாய், பார்க்கும் யாவரும் மதிக்கும் தோற்றம். வேட்டியை மடித்துக் கட்டியிருந்தான்.

நேரமாகிக் கொண்டே இருக்க, வானத்தை அண்ணாந்து பார்த்தான். சூரியனைப் பார்த்தே நேரத்தைக் கணக்கிட்டுப் பழகியிருந்ததால் காலை பதினொரு மணி என்பதை உணர்ந்து கொண்டான். எதிரே இருந்த வீட்டைக் கவனித்தான்.

பங்களா டைப் வீடுதான். வரிசையாய் இருந்த அனைத்துமே பெரிய வீடுகள்தான். ஆள் அரவமின்றி அமைதியாய் இருந்தது. வீட்டின் முன் ஏராளமான விதவிதமான பூச்செடிகள், கொடிகள் பல நிறங்களில் பூத்துக் குலுங்கின.

திடீரென வீட்டின் உள்ளே சலசலப்பு தெரிய சட்டென உஷாராகி மரத்தின் பின்னே மறைந்து கொண்டான். கண்கள் மட்டும் கூர்மையாய்த் தன் எதிரே இருந்த வீட்டை ஆராய, அந்த வீட்டின் அகலமான கேட் இரண்டாய் விரிந்தது.

மற்றவர்கள் காரில் ஏறி அமர கார் கதவின் ஓசை கேட்டது. அடுத்த நிமிடத்தில் கார் புறப்பட்டு வெளியேற, ஒரு இளைஞன் கேட்டைச் சாத்தினான். கார் வேகமெடுத்துக் கிளம்ப, சுப்பிரமணி மரத்தை விட்டு நகர்ந்து சாலையின் இருபுறமும் நோட்டமிட்டான்.



வெகு அமைதி. எங்கோ கரைந்த காகத்தின் ஒலியைத் தவிர துளியும் ஓசையில்லை. திருப்தியாய் புன்னகைத்து விட்டு, நிமிர்ந்த நடையோடு கொஞ்சமும் தயக்கமில்லாமல் சாலையைக் கடந்து அந்த வீட்டை அடைந்தான்.

தன் சொந்த வீட்டினுள் நுழைபவன் போல் கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்து முதல் வேலையாய் கேட்டைச் சாத்தி தாழிட்டான். இரண்டு நாட்களாய் துப்பறிந்ததில் இந்த வீட்டிற்குக் காவலாளியும் இல்லை. காவலாய் இருந்த நாயும் சமீபத்தில்தான் இறந்து விட்டது என்பதையும் அறிந்திருந்ததால் எதைப் பற்றியும் கவலைப்படாமல் முன்னேறி கதவைத் தட்டினான்.

வீடே அதிரும்படியாய் ஆங்கிலப் பாடல் அலறிக் கொண்டிருக்க, கதவைத் தட்டுவதை நிறுத்தி, அழைப்பு மணியை அழுத்தினான். இப்போதும் பலனில்லாமல் போகவே விடாமல் அழுத்தினான்.

"யாரது? கொஞ்சமும் டீஸன்ஸ்ட் இல்லாம?" கோபமாய்க் கேட்டவாறு கதவைத் திறந்தான் அந்த இளைஞன். அப்போதுதான் குளித்திருப்பான் போலும். உடல் முழுக்க ஈரமாய் இருக்க, பூத்துவாலையால் இடுப்பில் கட்டியிருந்தான்.

"ஹூ ஆர் யூ மேன்? இப்படியா பெல் அடிப்பது?"

சுப்பிரமணி புன்னகைத்தான். "மன்னிச்சிடுங்க ஸார். பாட்டுச் சத்தத்தில கேட்காதுன்னு கூட கொஞ்ச நேரம் அழுத்திட்டேன்."

"நல்லா அழுத்தின... ஆமா யார் நீ?" கேட்டுக் கொண்டே தலையைத் துவட்ட ஆரம்பித்தான்.

"ஸார்! என் பேர் மணி. பக்கத்து வீட்லதான் இருக்கேன்..." சுப்பிரமணி சொன்னதும் அவனை மேலும் கீழுமாய்ப் பார்த்தான் அந்த இளைஞன்.

"ஈஸிட்? நான் பார்த்ததே இல்லையே...!"

"நான் கிராமத்தான். கம்மா சொத்துக்காகத்தான் இந்த வீட்டைக் கட்டிப் போட்டிருக்கேன். அடிக்கடி வந்துட்டுப் போவேன்... ஒரு தரம் பார்த்திருக்கீங்க."

"நானா? ஓ.கே. இப்ப என்ன வேணும்? நான் கொஞ்சம் அவசரமா வெளியே கிளம்பிட்டு இருக்கேன்..." என்றான் பொறுமை இல்லாமல்.

"ஒரு முக்கியமான விஷயம். உள்ளே போய் பேசுவோமா?"

குழப்பமாய்ப் பார்த்தான் அவன். "என்ன முக்கியமான விஷயம்? அதுவும் என்கிட்ட... உங்களை நான் பார்த்ததே இல்லையே! ஞாபகம் இல்ல...!"

"சரி. உங்க பேர் தானே கிஷோர்."

"ஆமா."

"அப்போ உங்ககிட்டதான் பேசணும். உள்ளே போலாமா?" கிஷோரின் பதிலை எதிர்பாராமல் சுப்பிரமணி உள்ளே நுழைய லேசாய் எழுந்த கோபத்தோடு அவனைத் தொடர்ந்தான் கிஷோர்.

"ஹலோ! என்ன விஷயம்? சட்டுன்னு சொல்லுங்க. எனக்கு வேலை இருக்கு."



"சொல்றேன். டவலோட நிற்கிறீங்களே... போய் துணியை மாத்திட்டு வாங்க."

"முதல்ல வந்த விஷயத்தைச் சொல்லுங்க."

"தம்பி! நீங்க நிறைய படிச்சிருக்கீங்களோ?"

"ஆமா."

"எனக்கு ஒரு உதவி செய்யணுமே... நீங்க?"

"உதவியா... என்ன உதவி?"

"முதல்ல துணியை மாத்திட்டு வாங்க சொல்றேன்..." சுப்பிரமணி சொல்ல எரிச்சலாய்த் தன் அறையை நோக்கிச் சென்றான் கிஷோர். கதவைச் சாத்தியதும் சுப்பிரமணி எழுந்து போய் கிச்சனுக்குள் நுழைந்து ஒரே நிமிடத்தில் வந்து இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

கதவைத் திறந்துவிட்டு வந்த கிஷோர், பனியன் ஷார்ட்ஸோடு சுப்பிரமணியை நெருங்கினான். "ம்... சொல்லுங்க. என்ன விஷயம்?"

"ஸார்! எனக்கு ஒரு கடிதம் எழுதித் தரணும்."

"என்ன... லெட்டரா?"

"ஆமா ஸார். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது."

"அதுக்கு?"

"அவசரமா ஒரு லெட்டர் எழுதணும். நீங்க படிச்சவ ராச்சே... அதான் உங்ககிட்ட கேட்கலாம்னு வந்தேன்."

நம்பிக்கையின்றிப் பார்த்தான் கிஷோர். "யாருக்கு எழுதணும்?"

"எங்க அக்கா மகளுக்கு..."

"வாட்? என்ன லவ் லெட்டரா?"

"அப்படின்னு சொல்ல முடியாதுங்க. மன்னிப்பு லெட்டர்னு வெச்சுக்கலாம்."

"புரியலை."

"நான் சொல்றேன். நீங்க எழுதுங்க. உங்களுக்கே புரியும்."

"உங்க அக்கா மகன்னா... ஸாரி! எனக்கு இங்கிலீஷ்ல எழுதித்தான் பழக்கம்."

"பரவாயில்லங்க. இங்கிலீஷ்லயே எழுதுங்க. அதுவும் படிச்ச பொண்ணுதான். இங்கிலீஷ் புரியும்."

"என்ன? படிச்ச பொண்ணா?"

"ஆமாங்க... இந்தாங்க பேப்பர், பேனா. எழுதுறீங்களா?"

"ம்..." என்றவாறு சோபாவில் அமர்ந்து டீப்பாயின் மேல் இருந்த நாளிதழை எடுத்து, அதன் மீது பேப்பரை வைத்துக் கொண்டு நிமிர்ந்தான் கிஷோர்.

"சொல்லுங்க."

"நான் சொல்றதை அப்படியே எழுதிடுங்க. குறுக்கே எதுவும் கேள்வி கேட்டா சொல்ல வேண்டியதை மறந்திடுவேன்."

"ம்... சொல்லுங்க."



"எல்லாரும் என்னை மன்னிச்சிடுங்க. நான் பெரிய தப்புப் பண்ணிட்டேன். அதுக்கு மன்னிப்பே இல்லை. என் மனசாட்சியே என்னைக் கொன்னுடும் போலிருக்கு. அதனால நானே என் உயிரை போக்கிக் கொள்கிறேன். என் தற்கொலைக்கு யாரும் காரணமல்ல...!"

எழுதிக் கொண்டிருந்த கிஷோர் அதிர்ச்சியாய் நிமிர்ந்தான். விழிகளில் திகில் பரவ, "ஹலோ! என்ன இது? தற்கொலைக் கடிதம் மாதிரி இருக்கு!" என்றான்.

"ஆமா ஸார். தற்கொலைக் கடிதம்தான்."

"என்ன விளையாடுறீங்களா? நீங்க தற்கொலை பண்ணிக்க நான் லெட்டர் எழுதணுமா?"

"இல்லை கிஷோர்! நீதான் தற்கொலை பண்ணிக்கப் போறே... அதனாலதான் உன் கைப்பட எழுதச் சொன்னேன்..." என்றான் சுப்பிரமணி அமைதியாய்.

"ஹேய்! யார் நீ? நான் ஏன் தற்கொலை செய்யணும்? நீ என்ன பைத்தியமா? முதல்ல வெளியே போ."

"நான் போவது இருக்கட்டும். முதல்ல லெட்டர்ல கையெழுத்துப் போடு."

"யூ இடியட்!" என அவசரமாக கடிதத்தைக் கிழிக்க முயல, "அவசரப்படாதே கிஷோர். இங்கே பார்!" என வலது கையை விரித்துக் காட்டினான்.

திகைப்பாய் பார்த்த கிஷோர் பயத்தில் உறைந்து போனான். கறுப்பாய் சின்னதாய் ரிமோட் கண்ட்ரோல்.

"ஏய்! ஏய் என்ன இது?" எழ முயற்சித்தான்.

"பதறாதே... உட்கார். நான் சொல்ற மாதிரி செய்தா உன் உடம்பு சிதறாது. இல்லன்னா... இதை லேசா அழுத்தினாப் போதும். பீஸ் பீஸா சிதறிடுவ... எப்படி வசதி?"

"நோ... நோ... நீ என்ன சொன்னாலும் செய்யறேன்."

"ம்... வெரிகுட். லெட்டர்ல கையெழுத்துப் போடு."

"ஏன்?"

"எதிர் கேள்வி கேட்டா எனக்குக் கோபம் வரும். பட்டனை அழுத்..."

"நோ... போடுறேன்... போடுறேன்...!" அவசரமாகக் கையெழுத்திட்டு சுப்பிரமணியிடம் நீட்டினான்.

"அதுதானே உன் ரூம்?"

"ஆமாம்."

"வா... வந்து உன் கட்டில்ல இல்லன்னா டேபிள்ல வை."

திருதிருவென விழித்தான் கிஷோர். "என்ன முழிக்கிற? ரூம் எங்கே இருக்கும்னு பார்க்கிறியா? இந்த டீப்பாய்க்கு அடியிலதான் இருக்கு. பார்க்கணுமா?"

"இல்ல... வே... வேண்டாம்."

"அநியாயத்துக்குப் பயப்படுறியே கிஷோர். இந்தப் பயம் எல்லாத்திலயும் இருந்திருக்கணும். பொண்ணுங்க கிட்டதான் உன் வீரத்தைக் காட்டுவியா?"

"நீ... நீ என்ன சொல்றே?"



"சொல்றேன். வா... முதல்ல லெட்டரை வை!" கூடவே எழுந்து கிஷோரின் அறைக்குள் நுழைந்து தலையணைக் கடியில் கடிதத்தை வைக்கச் சொன்னான்.

"வெச்சிட்டேனே! இப்பவாவது சொல். நீ யார்?"

"சொல்றேன். எல்லா ஜன்னலையும் மூடு."

"எ... எதுக்கு?"

"எதிர் கேள்வி கேட்காதே."

"இல்ல... கேட்கல!" அவசரமாய் ஜன்னலை மூடினான்.

"ம். இப்போ எனக்குச் சூடா ஒரு கப் காபி போட்டுக் கொண்டு வா."

"என்ன?"

"ஏன்... காபி போடத் தெரியாதா?"

"முதல்ல நீ யாருன்னு சொல்லு."

"சொல்லிட்டாப் போச்சு. ஜகனைத் தெரியுமா?"

திக்கென நிமிர்ந்தான். "யாரு? ஜெ... ஜகனா?"

"ஆமாம். தெரியாதுன்னு சொல்லித் தப்பிக்கலாம்னு நினைக்காதே."

"தெ... தெரியும்."

"அவன் கட்டிக்கப் போற பொண்ணையும் தெரிஞ்சிருக்கணுமே...!"

"ஸ... ஸாரி நீங்க யாரு?"

"அந்தப் பெண்ணோட தாய்மாமா. புரியல்ல... என் அக்கா பொண்ணு..." சுப்பிரமணி நிதானமாய்ச் சொல்ல, சர்வமும் நடுங்கிப் போனான் கிஷோர்.

"ஸார்... அது வந்து... நாங்க வேணுமின்னே...!"

"நான் எதுவுமே கேட்கலலயே கிஷோர்!"

"இல்லை ஸார். அன்னிக்குக் கொஞ்சம் அதிகமா டிரிங்க்ஸ் சாப்பிட்டிருந்தோம்."

"அதிகமாக சாப்பிட்டா பொண்டாட்டின்னு நினைச்சி உன் அம்மாகிட்டப் போவியா?"

"ஸார்."

"வாயை மூடுடா நாயே. உங்க மூணு பேருக்குமே இன்னிக்குத்தான் சங்கு."

"வேண்டாம் ஸார். தெரியாம பண்ணிட்டோம். மன்னிச்சிடுங்க."

"தெரியாம பண்ணினா... அது தப்பு இல்லையா? பாதிப்பு இல்லையா?"

"தப்புதான் ஸார்."

"ம்... அதுக்குத்தான் இந்த தண்டனை. நீயே தற்கொலை பண்ணிக்க...!"

"ஸார். ப்ளீஸ். என்னை விட்டுடுங்க...!"

"சரி. முதல்ல ஒரு காபி கொடு. பிறகு பார்க்கலாம்."

"ஸார்... என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க."



"முதல்ல காபி போடுப்பா. வா... நான் கிச்சன் வாசல்ல நிற்கிறேன்."

உடல் மொத்தமும் நடுங்க எழுந்தான் கிஷோர். கூடவே நடந்தபடி சொன்னான் சுப்பிரமணி.

"இதோ பார் கிஷோர். கத்திக் கூச்சல் போடலாம். தப்பிச்சுப் போகலாம்னு முயற்சி பண்ணாதே. பேசாம நான் சொன்னபடி கேட்டு நட."

"ச... சரிங்க ஸார்."

"ம்.. போ. சரியா அஞ்சே நிமிஷத்தில காபியோட வா. நான் வாசல்ல நிற்கிறேன். போ."

சற்றே பயமாய் கிச்சனுக்குள் கிஷோர் நுழைய கதவைச் சத்தமில்லாமல் மூடினான் சுப்பிரமணி. பரபரவென வெளியேறி வாசல் கதவையும் சாத்திவிட்டு கேட்டை நெருங்கி வெளியேறுகையில் அந்தச் சத்தம் கேட்டது.

'டொம்ம்ம்...' என கேஸ் சிலிண்டர் வெடித்துச் சிதறும் ஓசை. பகல் நேர அமைதியைக் கலைத்து அக்கம்பக்கத்தவர் வீடுகளில் சலனம் தெரிய வெகுதூரம் போய் விட்டிருந்தான் சுப்பிரமணி.

நேராக பெட்ரோல் பங்க் சென்று, "ஸார்! நான் வெளியூரு. வண்டியில வந்தேன். பெட்ரோல் தீர்ந்து போச்சு. ஒரு ரெண்டு லிட்டர் பெட்ரோல் கேன் ஏதாவது இருந்தா தர்றீங்களா?" என்றான்.

"வண்டியைத் தள்ளிட்டு வந்திருக்கலாமே...!"

"பெரிய வண்டி. வெயிலும் ஜாஸ்தியா இருக்கு. தள்ளிட்டு வர முடியல்ல..."

"சரி, ராமு. அந்த ரெண்டு லிட்டர் வாட்டர் கேனை எடுத்திட்டு வாடா!" கடைப் பையன் காலியான வாட்டர் கேனை எடுத்துக் கொண்டு வர, ஊழியர் அதில் பெட்ரோலை நிரப்பினார்.

பார்த்துக் கொண்டிருந்த சுப்பிரமணியின் கண்கள் செந்தணலாய் கனன்றது. நெஞ்சு விம்மியது.

"மாமா... எரியுது மாமா... எரியுது மாமா... என்னைக் கொன்னுடச் சொல்லு மாமா... எரியுது மாமா!" காதிற்குள் ஒலித்த குரலில் உடல் துடிக்க, கண்களில் நீர் தளும்பியது.

## 2

ஆற்றங்கரை ஓரத்திலே யாருமற்ற
நேரத்திலே வீற்றிருந்த மணல்பரப்பு
வேதனையைத் தூண்டுதடி!

"அண்ணா! மணி என்னாகுது? நீ இன்னும் கடைக்குக் கிளம்பலியா?" கோபமாய்க் கேட்டாள் திலோத்தமா. செல்போனை குடைந்து கொண்டிருந்த சுரேந்தர் நிமிர்ந்தான். பக்கத்து வீட்டில் ஸ்பீக்கர் அலற, சத்தமாய்க் கேட்டான்.

"கடைக்கா? என்ன வாங்கணும்?"

"சமையலுக்குக் காய்கறி வாங்கணும்னு காலையில இருந்து சொல்லிட்டு இருக்கேனே...!"

"என்ன விளையாடுறியா? என்னால போக முடியாது."



"ஏன்? போனா உன் கிரீடம் இறங்கிடுமா?"

"இதோ பார். நானே டென்ஷனா இருக்கேன். நீ வேற விளையாடாதே!"

"என்ன ஆச்சு அண்ணா?"

"இந்தக் கிஷோருக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை. காலையிலயே கிளம்பி ரெடியா இரு. ஒரு முக்கியமான வேலை இருக்குன்னான். இன்னும் வரல்ல..."

"போன் பண்ணிக் கேளேன்."

"அப்பவே இருந்து ட்ரை பண்றேன். பெல் அடிக்குது. எடுக்க மாட்டேங்குறான்."

"இன்னும் தூங்கிட்டு இருப்பாரோ?"

"இல்ல... அவன்தான் எனக்குப் போன் பண்ணி எழுப்பினான்."

"சரி விடு. குளிச்சு ரெடியாகிட்டு வரட்டும். அதுக்குள்ள நீ கடைக்குப் போயிட்டு வந்துடுண்ணா."

"இதோ பார். நீ வீட்லதானே இருக்க. பொடிநடையா போய் வாங்கிட்டு வந்திடு. நான் கிஷோர் வந்ததும் கிளம்பணும்."

"சரி. காசு கொடு. அப்படி எங்கேதான் சுத்தப் போறீங்களோ.. உங்க மூணு பேருக்கும் கல்யாணமான பிறகுதான் உங்க ஆட்டம் அடங்கும்!" முணுமுணுத்துக் கொண்டே சுரேந்தரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு கூடையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"அண்ணா! நான் வர்றதுக்குள்ள கிளம்பினா கதவைப் பூட்டிட்டு சாவியை நிலையில வெச்சிட்டுப் போ."

"ம்... ம்... நீ சீக்கிரம் வா!" என்றவாறு மீண்டும் செல்லை எடுத்து கிஷோருக்கு போன் செய்தான். பெல் அடித்துக் கொண்டே இருக்க சலிப்பாய் போனைக் கட் பண்ணியபோது வாசலில் நிழலாடியது.

நிமிர்ந்தான் சுரேந்தர். "யாரு?"

"இங்க சுரேந்தர்ன்றது..." சுப்பிரமணி தயக்கமாய்க் கேட்க, புருவம் சுருக்கினான்.

"நான்தான். நீங்க யாரு?"

"கிஷோர் ஸார் அனுப்பினாரு...!"

"கிஷோரா? அவன் எங்கே?"

"வீட்லதான் இருக்கார். அவர் போன் ஏதோ ரிப்பேராம். அதான் என்னை அனுப்பினார்."

"ஆமா. நீங்க யாரு?"

"அவங்க வீட்டுக்குப் புதுசா சேர்ந்திருக்கிற வாட்ச்மேன்."

"வாட்ச்மேனா? கிஷோர் வீட்டுக்கு வாட்ச்மேன் கிடையாதே!"

"இப்பத்தான் ரெண்டு நாளுக்கு முன்னதான் வேலையில சேர்ந்தேன்."

"சரி... கிஷோர் என்ன சொன்னான்?"

"கிஷோர் ஸாருக்கு தமிழ்ல சரியா எழுத வராதாமே..."



"ஆமா! ஏன்?"

"ஏதோ கடுதாசி எழுதணுமாம். நீங்க தமிழ்ல எழுதித் தரணுமாம்."

"லெட்டரா? ஏன்?"

"எதுக்குன்னு சொல்லல ஸார். சீக்கிரம் எழுதி வாங்கிட்டு வா. நீ வந்ததும் நான் வெளியே போகணும்னு சொன்னார்."

புரியாத பார்வையோடு நம்பிக்கையின்றிப் பார்த்தான் சுரேந்தர்.

"என்ன லெட்டர்? என்ன எழுதணுமாம்?"

"மனப்பாடம் பண்ணிட்டு வந்திருக்கேன். பேப்பர் இருந்தா எடுங்க ஸார். சொல்றேன்!" கைகளைக் கட்டிக் கொண்டு நின்ற சுப்பிரமணி பவ்யமாய்ச் சொல்ல, ஒரு நோட்டை எடுத்துப் பேப்பரைக் கிழித்தான் சுரேந்தர். பேனாவை எடுத்துக் கொண்டு சுப்பிரமணியை ஏறிட்டான்.

"ம்! சொல்லுங்க."

"செய்த பாவத்தைத் தொலைக்க முடியாமல் நாங்கள் மொத்தமாய்ப் போகிறோம். எங்களை எண்ணி வருத்தப்பட வேண்டாம். இது நாங்களே தேர்ந்தெடுத்த முடிவு. இதற்கு வேறு யாரும் காரணமில்லை."

குபீரென நிமிர்ந்தான் சுரேந்தர்.

"ஏய்! இது... என்ன இது?"

"ஏன் ஸார் பதறீங்க... அவர் சொன்னதைத் தானே சொன்னேன்."

"அவனா சொன்னான்?"

"ஆமா ஸார். கீழே உங்க கையெழுத்தும் போடணுமாம்."

"ஏன்? என் கையெழுத்து எதுக்கு?"

"நீங்க எல்லாரும் சேர்ந்து எங்கேயோ போகப் போறீங்களே? அதை உங்க வீட்ல தெரிவிக்க வேண்டாமா? அதுக்குத்தான்."

"நாங்க எங்கே போறோம்?"

"அதையெல்லாம் என்கிட்ட சொல்லல ஸார்..."

"நான்... கிஷோர்கிட்ட பேசிக்கிறேன். நீ போ..."

"எல்லாம் மேலே போய் பேசிக்க. இப்ப கையெழுத்துப் போடு!" சுப்பிரமணியன் குரலும் முகமும் மாறியது. சுரேந்தர் பயமாய்ப் பார்த்தான்.

"யார்? யார் நீ?"

"என்னைத் தெரியலையா? ஒரு நாள் பார்த்திருக்கோம் நாம...!"

"எங்கே?"

"முதல்ல கையெழுத்துப் போடு. சொல்றேன்..."

"நோ. போட மாட்டேன்."

"இப்பப் போடுவ!" என்றவாறு இடுப்பில் பதுக்கி வைத்திருந்த பாட்டிலை எடுத்தான் சுப்பிரமணி.



"ஏய்! எ... என்னது இது?" முகம் வெளுக்கக் கேட்டவனைப் பார்த்து லேசாய்ச் சிரித்தான் சுப்பிரமணி.

"இதுவா? இது ஒருவகை ஆசிட். உம்மேல ஊத்தினேன்னு வை. எலும்புகூட மிஞ்சாது. சுத்தமா உருக்கிடும். ஸாம்பிள் பார்க்கிறியா?"

"ஐயோ! வேண்டாம். யார் நீ? எதுக்காக இப்படிப் பண்றே?"

"சொல்றேன். முதல்ல கையெழுத்துப் போடு."

சுரேந்தர் அசையாமல் நிற்க, பாட்டிலின் மூடியைத் திருகினான் சுப்பிரமணி. பதறி அலறினான் சுரேந்தர்.

"வேண்டாம். திறக்காதே... நான் போடுறேன். கையெழுத்துப் போட்டுடுறேன்!" நடுக்கமாய்க் கையெழுத்துப் போட்டு பேப்பரை நீட்டினான்.

"ம்... இது நல்ல பிள்ளைக்கு அழகு. அதை இப்படி வை. நாம வெளியே ஹால்ல நின்னு பேசுவோம்."

"எ... என்ன பேசணும்?"

"முதல்ல வா... ராசா. பேசலாம். லெட்டரை டே பிள்ல வெச்சு உன் போனை மேலே வை. வெச்சிட்டியா? இப்ப இந்த ரூம் கதவை மூடு. வா... வெளியே நின்னு பேசுவோம்."

'யாராவது வந்து விடமாட்டார்களா? கடைக்குப் போன தங்கை வந்து விடுவாளா!' என பரிதவிப்பாய் வெளியே எட்டிப் பார்த்தான். வழக்கமாய் கலகலப்பாய் இருக்கும் தெருவில் இன்று ஏனோ நடமாட்டமே இல்லை.

"என்ன ரொம்பப் பதட்டமா இருக்கா? நீதான் சிகரெட் பிடிப்பியே... இப்ப ஒன்னு பத்த வையேன்."

"எ... எதுக்கு?"

"இல்ல... எங்க ஊர் பக்கம் சிகரெட் பிடிக்கிறது தனக்குத் தானே கொள்ளி வெச்சுக்கிற மாதிரின்னு சொல்வாங்க. அது உண்மையான்னு பார்க்கத்தான்."

"ஸா... ஸார்.. நீங்க என்ன சொல்றீங்க?"

"ஒரு சிகரெட் பிடிப்பா. நான் பார்க்கணும்."

"ஸார்..."

"ஓ! உனக்கு தண்ணியடிச்சாத்தான் சிகரெட் பிடிக்கணும்னு தோணும் இல்ல. இந்தா இதைக் குடி." வாட்டர் கேனை நீட்டினான்.

"வேண்டாம்... வேண்டாம்...!" பதறினான்.

"அட... பயப்படாதப்பா. இது ஒன்னும் ஆசிட் இல்லை. தண்ணிதான். சும்மா குடி."

"இல்ல... வேண்டாம்."

"ஓ! நீ சும்மா குடிக்க மாட்டியே... தலையில ஊத்தி தளிச்சிட்டேதானே குடிப்ப... இந்தா குளி."

"ஸார்! நீங்க யாரு? இ... இதெல்லாம்..."

"எப்படித் தெரியும்னு கேட்கிறியா?"

"ஆ... ஆமாம்."

"ஜெகனோட நிச்சயதார்த்தத்தை அப்படித்தானே கொண்டாடினீங்க?"

"ஸ... ஸார்...!"



"என்னடா ஸார்... மோர்...? அன்னிக்கு எப்படியெல்லாம் பண்ணினியோ அப்படியே இப்பவும் பண்ணு..."

"ஸார்..."

"இந்தா! இதுதான் பீர். இதைத் தலையில ஊத்து."

"வேண்டாம் ஸார்."

"ஊத்துடா...!" சுப்பிரமணியின் குரலில் கடுமை தொனித்தது.

கைகள் நடுங்க வாங்கித் தலையில் ஊற்றினான். ஊற்றும்போதே நாசியைச் சுருக்கினான். விழிகள் தெறித்துவிடுவதைப் போல் பிதுங்கின.

"ஸார்! ஸார்... இது... பெ... பெட்ரோல் ஸார்!"

"அப்படியா? இது கலப்பட பெட்ரோலா... நல்ல பெட்ரோலான்னு பார்க்கலாம். சிகரெட்டை எடுத்துப் பத்தவை."

"ஸார். வேண்டாம் ஸார். என்னை விட்டுடுங்க ஸார்."

"இப்படித்தானே அன்னிக்கு அவ கத்தினா. விட்டீங்களா? எவனாவது பாவம் பார்த்து விட்டீங்களா? உங்களை எப்படி நான் விடுவேன்?"

"ஸார். தெரியாம பண்ணிட்டோம் ஸார். மன்னிச்சிடுங்க ஸார்."

"எதைச் செய்தாலும் நீங்க மூணுபேரும் சேர்ந்தேதான் செய்வீங்க இல்ல. உன் நண்பன் கிஷோர் போயிட்டான். நீயும் கிளம்பு. அடுத்த ஆளையும் அனுப்புறேன்."

"ஸார்! விட்டுடுங்க ஸார்."

"சிகரெட்டை எடுடா. பத்தவை."

"வேண்டாம் ஸார்."

"இதோ பார். உன்னைக் கொளுத்த எனக்கு ஒரு நொடி போதும். ஆனா நான் கொளுத்தினா உன்னை முழுசாக் கொளுத்த மாட்டேன்."

"ஸார்...!"

"என் ஆத்திரம் தீரும் வரைக்கும் உன்னைத் துண்டு துண்டா வெட்டி மொத்தமாப் போட்டுக் கொளுத்திட்டுப் போயிடுவேன்...!"

"ஐயோ வேண்டாம் ஸார். வேண்டாம்...!"

"அப்போ நீயே கொளுத்திக்க. சிகரெட்டை மட்டும் பத்தவை. மத்தது தானா பத்திக்கும்."

"ஸார்..."

"கொளுத்துடா நாயே!" இடுப்பில் சொருகியிருந்த கத்தியை உருவியதும் பதறி லெட்டரை எடுத்து அழுத்தினான் சுரேந்தர்.

குப்பெனப் பற்றிக் கொள்ள அவன் அலறத் துவங்கும் முன் டிவியைப் போட்டு ஃபுல் சவுண்ட்டையும் வைத்தான். சாதாரணமாக நடந்து கதவை அடையும்போது பற்றி யெரியும் உடலோடு ஓடி வந்தான் சுரேந்தர்.

வேகமாக வெளியேறி கதவை மூடி கதவில் இருந்த சாவியால் வீட்டைப் பூட்டிச் சாவியை நிலைப்படியில் வைத்துவிட்டு மளமளவென வெளியேறினான்.



அடுத்த வீட்டில் பாடிய புரியாத பாட்டோடு சுரேந்தர் வீட்டின் தொலைக்காட்சியின் ஓசையும் சேர்ந்து கொள்ள சுரேந்தரின் அலறல் வெளியே கேட்காமல் போனது.

படிகளில் இறங்கி சற்றே வேகமாய் தெருவைக் கடந்து திரும்புகையில் அவள்மீது மோதி நின்றான். கையில் காய்கறிக் கூடையோடு வந்த திலோத்தமாவின் கையில் இருந்த காய்கறிகள் சிதறி ஓடின. வரிசையாய் வந்த வாகனங்களின் சக்கரத்தில் நசுங்கி சில தக்காளிகள் பாழாக கோபமாய் நிமிர்ந்தாள் திலோத்தமா.

"கண்ணை எங்கே வெச்சிட்டு வர்றீங்க?"

சுப்பிரமணி அவசரமாய் மன்னிப்புக் கேட்டான்.

"மன்னிச்சிடுங்க. கவனிக்கல்ல... மன்னிச்சிடுங்க."

"இந்தக் காய்களோட விலை என்ன தெரியுமா? அத்தனையும் வீணாய்ப் போச்சே... மன்னிப்புக் கேட்டா சரியாப் போச்சா?"

"நான்... வேணும்னா காசு தந்திடுறேனே...!"

"உங்க காசு எனக்கு எதுக்கு?"

"ரொம்ப நன்றி. வரட்டுமா?"

"ஹலோ! என் காய்கறிகளுக்குப் பதில் சொல்லிட்டுப் போங்க."

"காய்கறி எப்படிக் கேள்வி கேட்கும்?"

"நக்கலா?"

"ஐயோ... இல்லங்க...!"

"இந்த மொத்தக் காய்கறியும் நூற்றித் தொண்ணூறு ரூபா. ஒழுங்கா பக்கத்துல உள்ள கடைக்கு வந்து காய்களை வாங்கித் தந்துட்டுக் கிளம்புங்க."

"காசே வேண்டாம்னு சொன்னீங்களே!"

"காசுதான் வேண்டாம்னு சொன்னேன். அதுக்காக நான் நஷ்டப்படலாமா?"

"நான் கொஞ்சம் அவசரமாப் போகணும்..."

"எங்களுக்கு மட்டும் வேலை வெட்டி இல்லையா? நானும் சீக்கிரம் போய் சமைக்கணும்."

"சரி... கடை எங்கே இருக்குன்னு சொல்லுங்க."

"வாங்க..." என்றவாறு திலோத்தமா கூடையை எடுத்துக் கொண்டு நடக்க, தவிப்பாய் பின்னால் திரும்பிப் பார்த்தவாறு அவளைத் தொடர்ந்தான். சீக்கிரம் இந்த இடத்தை விட்டுக் கிளம்ப வேண்டுமே.

"ஏங்க... இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

"ஏன் அவசரப்படுறீங்க. அதோ தெரியுதே... அதுதான் வாங்க."

"நான் காசைத் தந்திடுறேன். நீங்க வாங்கிட்டுப் போங்களேன்..."

"நான்தான் ஏற்கனவே சொல்லிட்டேனே...!"

"இல்லங்க. நான் அவசரமாய்ப் போகணும்..."

"ஷ்ஷ... பேசாம வாங்க." அதட்டியவளைப் பார்த்துக் கொஞ்சம் பயமாய்க் கேட்டான் சுப்பிரமணி.



"நீங்க டீச்சரா?"

"என்ன?"

"டீச்சர்தான் இப்படிப் பசங்களை மிரட்டுவாங்க. கணக்கா பேசுவாங்க."

லேசாய்ப் புன்னகைத்தாள். "நான் டீச்சர் இல்லை. ஜர்னலிஸ்ட்."

"அப்படின்னா...?"

"அப்படின்னா... பத்திரிக்கை நிருபர். பத்திரிக்கைன்னா தெரியுமா?"

"கல்யாணப் பத்திரிக்கைதானே?"

"சரியாப் போச்சு. நியூஸ் பேப்பர்னு ஒன்னு இருக்கே... அதையெல்லாம் படிச்சதே இல்லையா?"

"எனக்குப் படிப்பறிவே கிடையாதுங்க."

"பார்த்தாலே தெரியுது. ஆமா நீங்க யாரு? எங்க தெருப் பக்கம் இருந்துதானே வந்தீங்க?"

"உங்க தெருவா?"

"ஆமா. தேரடித் தெருதான் எங்களது?"

சட்டென உஷாரானான்.

மாடிப்படி அருகே மறைந்திருந்த போது வீட்டைப் பூட்டச் சொல்லிவிட்டு வெளியேறிய பெண் இவளாகத் தான் இருக்குமோ? அவள் கூட காய்கறி வாங்கத்தானே போவதாகச் சொன்னாள்.

அப்படியென்றால்... இவள் சுரேந்தரின் தங்கையா?

திக்கென நிமிர்ந்தவனைப் பார்த்துச் சிரித்தாள் திலோத்தமா.

"என்ன ஸார்? திருடன் மாட்டிக்கிட்ட மாதிரி முழிக்கிறீங்க? திருடத்தான் வந்தீங்களா?"

"ஐயோ. அப்படியெல்லாம் இல்லங்க...!" எச்சில் விழுங்கினான்.

"ஹலோ பயப்படாதீங்க. நான் எப்பவுமே இப்படித்தான். சும்மா சகஜமா பேசிடுவேன். தப்பா எடுத்துக்காதீங்க."

சுப்பிரமணி பதில் சொல்லும் முன் பின்னால் இருந்து அந்தக் குரல் கேட்டது.

"திலோ அக்கா! உங்க வீட்ல தீ பிடிச்சிடுச்சு. புகையா வருது. சீக்கிரம் வாங்க!"

மூச்சுவாங்க ஓடி வந்த சிறுவன் சொல்ல, "ஐயோ!" என அலறிக் கொண்டு ஓடினாள் திலோத்தமா.

சுப்பிரமணியின் இதயம் ஒருகணம் பதறியது.

மறுகணமே, "மாமா! எனக்கு அசிங்கமா இருக்கு மாமா. எல்லாரும் வந்து பார்க்கிறாங்க மாமா. என்னைக் கொன்னுடு மாமா!" எனக் குரல் காதினுள் ஒலிக்க, முகம் இறுகிப் போனான்.

சாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.



# 3

காத்து மழை பட்டாலே கருத்தேதான்
போகுமுன்னு பொத்திவெச்ச ரோஜாப்
பூவை போடுவேனா வெயிலிலே
வாழவெச்சுப் பார்க்கலியே இந்த மனம்!

மாலைப் பொழுதின் வாகன நெரிசலில் நீந்தி அந்தப் பெரிய மருத்துவமனையை நெருங்கினான் சுப்பிரமணி. இதயம் இருந்த இடத்தில் எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. அரசாங்க மருத்துவமனைக்கே உரிய நெடி நாசியை நெருட, மருத்துவமனையின் இடப்புறப் பிரிவில் திரும்பி சற்றே ஒதுங்கியிருந்த தீ விபத்து சிகிச்சைப் பகுதியை நெருங்கினான்.

உடலும் உள்ளமும் பதற சுப்பிரமணியின் கால்கள் துவண்டன. திடீரென கேட்ட அலறல்களும் முனகல்களும் அரற்றல்களும் இந்த நான்கு நாட்களில் பழகிப் போயிருந்த போதும் வயிற்றைப் பிசைந்தது.

ஏதோ ஒரு பெண் வலி தாளாமல் அலறிக் கொண்டிருக்க, நடக்க இயலாமல் அருகே நின்ற பூவரசு மரத்தின் அடியில் நின்றான். சொல்ல முடியாத வேதனை மனதை அழுத்தியது. தீயில் கருகிய உடல்களின் வாடை நாசியை அடைத்தது.

மருத்துவமனையின் யூனிஃபார்மோடு எதிரே வந்தவன் சுப்பிரமணியை நெருங்கினான்.

"யோவ்! இவ்ளோ நேரமா எங்கேய்யா போயிட்ட?"

"ஏங்க... என்ன ஆச்சு?"

"அந்தப் பொண்ணு லபோதிபோன்னு கத்திட்டே இருக்குதுய்யா... மருந்தும் போட விடமாட்டேங்குது. மருந்து போடலன்னா எப்படி புண் ஆறும். போ... போய்ப் பாரு. கூப்பாடு போட்டுட்டு இருக்குது பாரு!" அவன் சொல்லி விட்டு சலிப்போடு போய்விட, பதறும் இதயத்தோடு ஓடினான் சுப்பிரமணி.

அறையின் வாசலில் அமர்ந்திருந்த ஈஸ்வரி, தம்பியைப் பார்த்ததும் வாயை மூடி அழுதவாறே எழுந்து ஓடி வந்தாள்.

"தம்பி! எங்கேய்யா போனே? இவ துடிக்கிறதை என்னால பார்க்க முடியலியே... கத்துறாளே... எம்பொண்ணு துடிக்கிறாளே...!" கண்ணீர்ப் பெருக்கோடு கதறியவளை அணைத்துக் கொண்டான் சுப்பிரமணி.

தொண்டை அடைத்துக் கொண்டது. "அழாதேக்கா. பெரிய டாக்டர் வந்திட்டுப் போயிட்டாரா?"

"அப்பவே வந்திட்டுப் போயிட்டாருப்பா. நம்மளைத் தான் ஏசுறாங்க..."

"ஏன்? எதுக்காக?"

"மருந்து போட விடமாட்டேங்கிறாளாம்... தொட விடமாட்டேங்கிறாளாம்..."

வேதனையாய் கண்களை மூடிக் கொண்டான் சுப்பிரமணி. மருத்துவர் என்றாலும் அவரும் ஆண்மகன் தானே. விபரம் தெரிந்த நாள் முதலாய் உடம்பை மூடி போர்த்திப் பாதுகாத்து வைத்திருக்கும் பெண் தன்னை பெற்றவளிடம் கூட காட்டமாட்டாளே...!



உடம்பில் ஒட்டுத்துணியில்லாமல் மருத்துவர்களிடமும் உதவியாளர்களிடமும் வயதுக்கு வந்த பெண் எப்படி உடம்பைக் காட்டுவாள்? அவள் மனம் என்ன பாடுபடும். நெருப்பில் வெந்து பாளம்பாளமாய் பிளந்தும் கருகியும் இருந்தாலும், தன் உடம்பை வெறுமையாய் மற்றவர்கள் பார்க்கும்போது அவளது பெண்மை துடிக்காதா?

பேருந்தில் போனால்கூட ஆண்கள் உரசுவார்கள் என்று சைக்கிளில் அதுவும் தன்னுடன் மட்டுமே வருபவள்... இன்று அனைவருக்கும் காட்சிப் பொருளாய்த் தன் தேகத்தை எப்படிக் காட்டுவாள்? சூடாய்க் கண்ணீர் வழிந்தது.

"இந்தாப்பா சுப்பிரமணி. உன் அக்காமக கூப்பிடுது பார். உள்ளார வா..."

கண்ணீரைத் துடைத்து விட்டு நிமிர்ந்தான். "இதோ வர்றேன்மா..."

"செருப்புக் காலோட வராதே. செருப்பை வெளியே கழட்டிட்டு அந்த உறையை கால்ல மாட்டிட்டு வா!" சற்றே வயதான நர்ஸ் சொல்லிவிட்டுப் போக, அவசரமாய் செருப்பைக் கழற்றிவிட்டு, பச்சை நிறத்தில் துணியால் ஆன காலுறையை மாட்டிவிட்டு சற்றே அரை இருட்டான அந்த அறைக்குள் நுழைந்தான்.

நாற்றம் குடலைப் புரட்டியது. மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு மங்கிய விளக்கொளியில் பார்வையைத் துழாவினான்.

வரிசையாய் போடப்பட்டிருந்த படுக்கையில் வாழை இலை மட்டுமே விரிக்கப்பட்டிருக்க, நெருப்பால் பொசுக்கிக்

கொண்டவர்களும், நெருப்பில் சிக்கியவர்களும், உடல் முழுக்க நெருப்புக் காயங்களோடும் வலியோடும் துடித்துக் கொண்டிருக்க, கண்களில் நீர் சுரந்து பார்வையை மறைத்தது.

வெறும் வாழை இலையால் உடலை மூடியிருக்க, ஒவ்வொரு படுக்கையைச் சுற்றிலும் கொசு வலை போன்ற மெல்லிய துணி மூடியிருந்தது. சுப்பிரமணியின் கால்கள் தயங்கி நின்றன.

"மா...மா..." மெல்லிய முனகல் கேட்டது. அந்தப் படுக்கையை நெருங்கினான். உடல் முழுக்க வாழை இலை மூடியிருக்க, லேசாய் கருகியிருந்த முகம் மட்டும் தெளிவாய்த் தெரிந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது.

"சுசீம்மா..." என்றான் அழுகுரலில்.

"மாமா... எங்கே மாமா... போயிட்டே?"

"பலி கொடுக்கப் போயிருந்தேன்ம்மா...!"

"மாமா... ரொம்ப எரியுது மாமா... பிடிச்சுப் பிடிச்சு இழுக்குது மாமா...!"

கதறி விட்டான். "ராஜாத்தி! நீ ஏன்டா மருந்து போட விடமாட்டேங்கிற... மருந்து போட்டாத்தானே காயம் ஆறும். எரியாது."

"மாமா... கண்டவன் எல்லாம் தொடுறான் மாமா. எனக்குக் கூசுது மாமா. எனக்கு அசிங்கமா இருக்குது மாமா!"

"டாக்டர்தானேம்மா மருந்து போடுறார்."



"வேண்டாம் மாமா. எனக்கு மருந்தும் வேணாம். ஊசியும் வேணாம். நான் செத்துப் போயிடுறேன் மாமா. என்னை ஏன் மாமா காப்பாத்தின...? நான் தினம் தினம் சாகிறேனே... இதுக்கா என்னைக் காப்பாத்தின?" கத்தினாள் சுசீலா.

நர்ஸ் அருகே வந்தாள். "இந்தா! சும்மா ஏம்மா கத்துற? மத்தவங்க எல்லாம் தூங்க வேண்டாம்."

"மன்னிச்சிடுங்க நர்ஸம்மா... சின்னப்புள்ள...!"

"என்னய்யா சின்னப்புள்ள? அவ்வளவு தைரியமா கெரசினை ஊத்திக் கொளுத்தியிருக்கா. இவளா சின்னப்புள்ள?"

சுசீலாவின் கண்களில் நீர் நிறைந்து வழிந்தது.

"செத்துப் போகணும்னு முடிவெடுக்கிறதே தப்பு. அதிலயும் தீக்குளிக்கலாமா? உடல் முழுக்க எரியும் போது எப்படி இருக்கும்? சாகுறவ மருந்து மாயம் தின்ன வேண்டியதுதானே?"

"நர்ஸம்மா... ஏற்கனவே அவ எரிஞ்சு போய் கிடக்கிறா. நீங்க மேல மேல ஏம்மா நெருப்பை அள்ளிக் கொட்டுறீங்க?"

"நான் ஒன்னும் தப்பா சொல்லலய்யா... வயசுப் பொண்ணு. இந்த நிலையில் கிடக்கிறதை என்னாலயே பார்க்க முடியலியே! நானும் ஒரு பொண்ணுதானே... அதான் சொல்றேன். சாகுறதுக்கு எத்தனையோ வழி இருக்குது. இதை ஏன் தேர்ந்தெடுக்கணும்?

உடம்புல சுடுதண்ணி கொட்டினாலே என்ன பாடுபடுறோம். தீயாய்க் காந்துமே... அது கொப்புளமாகி

உடைஞ்சி புண்ணாகி ஆற எத்தனை நாளாகும். அதுவரைக்கும் நமக்கு வலிதானே!

சுடுதண்ணிக்கே இவ்வளவு பாடுன்னா இது சாதாரண விஷயமா? உடம்பெல்லாம் தீய்ஞ்சு கருகி தலைமுடியெல்லாம் பொசுங்கி... பல் தெறிச்சு எலும்பு நொறுங்கி..."

சுப்பிரமணி காதுகளைப் பொத்திக் கொண்டான். "போதும்மா... அதான் கண்ணால பார்க்கிறேனே... நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்."

"மத்தவங்களை விட இவளுக்குக் காயம் கம்மிதாம்ப்பா... ஒழுங்கா மருந்து மாத்திரை சாப்பிட்டா காப்பாத்திடலாம். ஆனா இவ எதுக்குமே ஒத்துவரலன்னா எப்படி? நாங்களும் எவ்வளவுதான் போராட முடியும்?"

உண்மைதான். அவர்களுக்கு இது ஒன்றும் புதிதல்லவே... சுசீலா மட்டும் நோயாளி இல்லையே... இதேபோன்று விதம்விதமாய் ஆயிரம் நோயாளிகளைப் பார்த்திருக்கலாம். அதனால் ஏற்படும் சலிப்பாகவும் இருக்கலாம். அவர்களும் மனிதர்கள்தானே! நர்ஸ் விலகிச் சென்றுவிட...

சுசீலாவிடம் திரும்பினான். "சுசி இப்படி அடம் பிடிக்கக் கூடாதும்மா. நீ எங்களுக்கு வேணும்மா...!"

"வேண்டாம் மாமா. நான் இனிமே யாருக்குமே வேண்டாம்."

"அப்படியெல்லாம் சொல்லாதேடா..."

"மாமா! எனக்காக ஒண்ணே ஒண்ணு செய்வியா?"



"சொல்லுடா..."

"எனக்கு ஒரு சேலை வாங்கிட்டு வந்து போர்த்திவிடு மாமா!"

"ஏம்மா! துணி போட்டா காயத்துல பட்டு ஒட்டிக்கும். அப்புறம் அதைப் பிய்ச்சு எடுக்கும்போது வலியில உயிரே போயிடும்..."

"போகட்டும். என் உயிர் போகட்டும். இப்போ என் மானம் போகுதே...!" கதறினாள் சுசீலா.

"அழாதேடா. காயம் கொஞ்சம் குணமானதும் மாமா சேலை வாங்கித் தர்றேன்."

"இன்னிக்கே வாங்கிட்டு வா மாமா. நாம நம்ம ஊருக்குப் போயிடலாம். "

"என்னம்மா சொல்றே? இந்த நிலைமையில..."

"இந்த இடம் வேண்டாம் மாமா. எனக்குப் பயம்மா இருக்கு. நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடு மாமா."

"கொஞ்சம் பொறும்மா. ரெண்டு பலி கொடுத்தாச்சு. முக்கியமானது தப்பிச்சு எங்கேயோ ஒளிஞ்சுருக்கு. அதையும் தேடி அனுப்பி வெச்சபிறகு நாம ஊருக்குப் போயிடலாம்."

சுசீலாவின் கண்கள் விரிந்தது. உதடு துடிக்கக் கேட்டாள். "மாமா! நீ... நீ... என்ன சொல்றே?"

"ஆமாம்டா கண்ணு. உன் உடம்பு எரியும்போது நீயும் நானும் எப்படித் துடிச்சோமோ அதே மாதிரி அவனுங்களும் துடிச்சிருப்பானுங்க..."

"மாமா!"

"இதோ பார். இனிமே நீ அழக்கூடாது. இன்னும் ஒருத்தன்தான் பாக்கி. அவனையும் அனுப்பிட்டு நாம ஊருக்குப் போகலாம்."

"கொன்னுட்டியா மாமா. உன் கையாலேயே கொன்னியா?"

"இல்லடா... உனக்கு நீயே கொள்ளி வெச்சிகிட்ட மாதிரி அவனுங்களே அவனுங்களுக்கு வெச்சிகிட்டானுங்க..."

"மாமா... மாமா... உன் கையைக் கொடு மாமா. கண்ணில ஒத்திக்கணும்."

"திரையை விலக்கினா நர்ஸம்மா திட்டுவாங்கடா!"

"மாமா! வலிக்குது மாமா...!"

"அழாதேடா. எல்லாம் சரியாகிடும். என் கண்ணு இல்ல... அழாதேம்மா!"

"உடம்பெல்லாம் எரியுது மாமா."

"ஏன்டா இப்படிப் பண்ணினே? இப்படித் துடிக்கிறியே? கொளுத்திக்கிறதுக்கு முன்னால எங்களையெல்லாம் நினைச்சிப் பார்த்தியா நீ?"

"மாமா! உங்க முகத்தில முழிக்க முடியாமத்தானே இப்படிப் பண்ணினேன்?"

"எங்கிட்ட சொல்லியிருந்தா மூணுபேர் தலையையும் அறுத்து உன் காலடியில போட்டிருப்பேனே... மறைச் சிட்டியே... எங்கிட்ட மறைச்சிட்டியே...!"



"எப்படி மாமா சொல்லுவேன்? எதைச் சொல்லுவேன்? அவன் நீ பார்த்து வெச்ச மாப்பிள்ளை ஆச்சே?"

"மன்னிச்சிடும்மா. நான்தான் பாவி. தப்புப் பண்ணிட்டேன். யோசிக்காம என் தங்கத்தைத் தவற விட்டுட்டேன்!" உடல் குலுங்க அழுதான்.

"நான் சொன்னேனில்ல மாமா. நீயே என்னைக் கட்டிக்கன்னு... கேட்டியா?"

"தப்புத்தாம்மா... இப்பத்தான் புரியுது. அப்போ புரியலையே...?"

"மாமா! என்னை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டுப் போ மாமா. போற உசுரு உன் மடியில போகட்டும். இங்கே இருந்தா உன்னை எம் பக்கத்தில கூட வரவிடமாட்டேங் கிறாங்க..!"

"ஒரு ரெண்டு நாள் பொறுத்துக்கடா. ஜெகன் எப்படியோ தப்பிச்சிட்டான். அவனைத் தேடி முடிச்சிட்டுத்தான் நான் ஊருக்குக் கிளம்புவேன். அதுவரைக்கும் அமைதியா இரும்மா."

"அவன் எங்கே போயிருப்பான் மாமா?"

"எங்கே போயிருப்பான்? இங்கேதான் எங்கேயாவது பதுங்கியிருப்பான்."

"கண்டுபிடிச்சிடுவியா மாமா?"

"நிச்சயமா. அவனை விடமாட்டேன் சுசீ. என் ரோசாப்பூவை இப்படித் தீயில் கருக வெச்சானே அவனை விட்டுடுவேனா...!"

"என்னால உனக்கு ரொம்ப கஷ்டம். இல்ல மாமா...!"

"ஏன்டா இப்படியெல்லாம் பேசுறே?"

"மாமா! நீ என் பக்கத்திலேயே இரு மாமா. நீ இருந்தா எனக்கு வலி தெரியல்ல!"

"அதெப்படி? உன்னை மாதிரி மத்தவங்களுக்குக் கூசாதா? உம் மாமனும் ஆம்பிளைதானே! உன் தொந்தரவு தாங்காமத்தான் உள்ளே விட்டேன். டாக்டருக்குத் தெரிஞ்சா என்னைத்தான் திட்டுவாரு. எப்பா! பேசினது போதும். போப்பா...!" நர்ஸ் சொன்னதும் தலையசைத்தான்.

"நர்ஸம்மா... உங்க கஷ்டம் புரியுது எனக்கு. நீங்க இதே மாதிரி எத்தனையோ உடம்பைப் பார்த்திருப்பீங்க. ஆனா எனக்கு இவ குழந்தைதாம்மா... தயவுசெய்து கோபப்படாம பார்த்துக்கங்கம்மா... உங்களுக்குப் புண்ணியமாப் போகும்."

"ஏம்ப்பா...! நானும் மனுஷிதாம்ப்பா... எங்களுக்கும் மனசாட்சி இருக்கு.

நோயாளிங்க ஒத்துழைச்சாத்தானே குணப்படுத்த முடியும். அதுக்காக சில சமயம் கோபப்படுவோம். ஆனா நோயாளிகளை வெறுக்க மாட்டோம்ப்பா....!"

"ரொம்ப நன்றிம்மா.. பொத்திப் பொத்தி ஒரு பூச்சு பொட்டுகூட தீண்டாம வளர்த்திட்டோம். இன்னிக்கு இவ்வளவு பெரிய ரணத்தைத் தாள முடியாம துடிக்கிறா!"

"ஏம்மா சுசீலா... இவங்களையெல்லாம் விட்டுட்டுப் போகணும்னா நினைச்ச? எப்படி மனசு வந்தது உனக்கு?



உன் அம்மா பொட்டுத்தண்ணி கூட குடிக்காம வெளியே தவம் கிடக்குது. உன் மாமன் கண்ணில தண்ணியப் பாரு...!"

"என்னால இவங்க எல்லாம் கஷ்டப்படக் கூடாதுன்னு தான் இப்படிப் பண்ணினேன். இந்தப் பாவியோட உசிரு போகலையே!"

"சுசி! இப்படியெல்லாம் பேசக்கூடாதுன்னு சொன்னேனே... இதுக்கா பகலிரவா கண்விழிச்சு இங்க காத்துக்கிடக்கோம். நீ பிழைச்சி வரணும்மா...!"

"பிழைச்சி என்ன மாமா பண்ணப் போறேன். என்னால நடமாட முடியுமா? ஒரு வாய் சாப்பிட முடியுமா? உழைக்க முடியுமா? என் முகத்தைக் கண்ணாடியில பார்க்க முடியுமா? நான் எதுக்குப் பொழைக்கணும்? என்னை இப்படியே விட்டுடுங்க மாமா!"

"அப்படியெல்லாம் சொல்லாதேடா....!"

"உண்மை இதுதானே மாமா. காலம் முழுக்க இந்தக் கரிக்கட்டையைப் பார்த்து நீயும் அம்மாவும் அழணுமா?"

"தம்பி! நீங்க வெளியே போங்க. இவ இப்படித்தான் பேசிட்டே இருப்பா. ரொம்பப் பேசக்கூடாது. நீங்க கிளம்புங்க."

"பார்த்துக்கங்க நர்ஸம்மா...!"

"நான் பார்த்துக்கிறேன். போப்பா... பாவம் அந்த அம்மா. கொலைப்பட்டினியா இருக்கு. அதுக்கு ஏதாவது சாப்பாடு வாங்கிக் கொடுப்பா..."

"சரிங்கம்மா... வர்றேன் சுசீ."

"அம்மாவைப் பார்த்துக்க மாமா. அழ வேண்டாம்னு சொல்லு."

"ம்..." தலையசைத்து வெளியேறினான். வாசலருகே தவிப்போடு நின்று கொண்டிருந்த ஈஸ்வரி, தம்பியைப் பற்றிக் கொண்டாள்.

"தம்பி! எப்படிப்பா இருக்கா? பேசினாளா? ஏதாவது சாப்பிட்டாளாமா?" பரிதவிப்பாய்க் கேட்டவளைப் பார்த்து உடைந்து போய் அழ ஆரம்பித்தான் சுப்பிரமணி. இதுவரை தேக்கி வைத்திருந்த கண்ணீர் உடைப்பெடுத்துப் பெருக, சுவரில் சாய்ந்து அப்படியே தரையில் அமர்ந்தான்.

ஈஸ்வரி பதறினாள். "எய்யா! ராசா. ஏன்யா அழறே? எம்புள்ள பொழைக்க மாட்டாளா? உன்கிட்டப் பேசலையா?"

"பேசினாக்கா... அவளால பேச மட்டும்தானே முடியுது. சாப்பிடவோ தூங்கவோ எழுந்து நடமாடவோ முடியலியே... என்னாலதானே... என்னாலதானே... இப்படி ஆச்சு? நான்தானே என் ரோசாப்பூவை தீயில போட்டுட்டேன். என் பச்சைக் கிளியை சிதைய விட்டுட்டேன்..." தலையில் அடித்துக் கொண்டு அழுதான்.

"எய்யா! நீ என்ன வேணும்ன்னா பண்ணுன? அவளை நல்லா வாழவெக்கணும்னு தானே ஆசைப்பட்ட?"

"அவ ஆசையை ஒத்துக்கலையே... நீயே கட்டிக்க மாமான்னு சுத்தி சுத்தி வந்து கேட்டாளே... அப்பல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழிச்சிட்டேனே... இப்ப... என் கண் முன்னால... கிடந்து துடிக்கிறாளே...!"



"எய்யா! இன்னிக்காவது சொன்னாளா?"

"எ... என்னக்கா? எதைக் கேட்கிற?"

"பாவிமக.... ஏன் இப்படிப் பண்ணினாளாம்?"

"அதான்... ஏற்கெனவே சொன்னேனேக்கா... அந்த... மாப்பிள்ளையைப் பிடிக்கலன்னுதான்..."

"இல்லப்பா! அவ நம்மகிட்ட எதையோ மறைக்கிறா?"

"அக்கா! நீ என்ன சொல்றே?"

"மாப்பிள்ளையைப் பிடிக்கலன்னா நம்மகூட சண்டை தான் போடுவா. இப்படியெல்லாம் பண்ணமாட்டா. நமக்குத் தெரியாம ஏதோ... ஏதோ நடந்து இருக்கு. அவ மறைக்கிறாப்பா...!"

"அப்படியெல்லாம் இருக்காதுக்கா...!" சுப்பிரமணி தடுமாறினான்.

"நான் அவளைப் பெத்தவடா... எனக்குத் தெரியாதா? நிச்சயமா அவ வேற எதுக்கோதான் இப்படிப் பண்ணியிருக்கா... தம்பி! என்னைத்தான் உள்ளே விடமாட்டேங்கிறாங்களே.. நீயாவது கேளேன்."

"என்ன கேட்கணும்?"

"எதுக்காக இப்படிப் பண்ணினான்னு கேளுடா. என் வயிறு எரியுதுடா. செம்பருத்திப் பூ மாதிரி இருந்த புள்ள இப்படிக் கரிக்கட்டையா கிடக்குறாளே... அவ துடிக்கும் போதெல்லாம் என் நெஞ்சு வெடிச்சிடுற மாதிரி இருக்குதே...!" பரிதாபமாய்த் தேம்பியவளைத் தன் தோளோடு சாய்த்துக் கொண்டான்.

"அக்கா! என்னவென்று சொல்வேன்? மாப்பிள்ளை பிடிக்காமல் சுசீ தீக்குளிக்கவில்லை அக்கா. அந்த நாய் தன் நண்பர்களுக்கெல்லாம் நம் பெண்ணைப் பங்கிட்டுக் கொடுத்திருக்கான் அக்கா. அந்த அவமானத்தைத் தாள இயலாமல்தான் இப்படிச் செய்திருக்கிறாள். இதைச் சொன்னால் உன்னால் தாங்க முடியுமா?

உன் இதயம் வெடித்துவிடுமே! உன்னையும் இழந்து விடுவேனே! என்னை மன்னித்து விடு அக்கா. கடைசி வரை இது உனக்குத் தெரிய வேண்டாம். உனக்கு மட்டுமில்ல... யாருக்கும் தெரியக்கூடாது. தெரியவிடமாட்டேன். அவனை... அந்த நயவஞ்சகனை உயிரோடு விடமாட்டேன்." சுப்பிரமணியின் கண்கள் இரத்தமெனச் சிவந்தது.

## 4

இங்கு நீயொரு பாதி நானொரு பாதி
இதில் யார் பிரிந்தாலும் வேதனை பாதி
காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்
காதலின் முன்னே நீயும் நானும் வேறல்ல!

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருக்க, தூக்கம் வராமல் உட்கார்ந்திருந்தான் சுப்பிரமணி. மங்கலான வெளிச்சம் மட்டுமே இருந்த வராந்தாவில் சுவரோரமாய் சுருண்டிருந்தாள் ஈஸ்வரி. அவ்வப்போது கைகளையும் கால்களையும் சொறிந்து கொண்டிருந்தாள்.

கொசுக்களின் படையெடுப்பு இன்று அதிகமாகவே இருந்தது. சுப்பிரமணி எழுந்து சுவரோரமாய் இருந்த கூடையில் கொசுவர்த்தி சுருள் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்து ஈஸ்வரியின் தலைமாட்டில் வைத்தான்.



பழக்கமற்ற நெடி நாசியில் நுழைந்து இருமலை வரவழைத்தது. நள்ளிரவின் அமைதியில் தன் இருமல் ஒலி உறங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்பிவிடக் கூடாதே என வாயை மூடிக்கொண்டு வராந்தாவின் வாசலருகே வந்து நின்றான்.

கண்கள் இயல்பாகவே அறையின் வாசலைப் பார்த்தன. கதவு சாத்தப்பட்டிருக்க ஏதோ மெல்லிய முனகல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. சுசீயாக இருக்குமோ? சற்று நேரத்திற்கு முன் வந்த பெண்ணாக இருக்குமோ?

இரவான பிறகே ஒரு பெண்ணை எரிந்த உடலோடு தூக்கி வந்தார்கள். அந்தப் பெண்ணின் அலறலில் மருத்துவமனையே அதிர்ந்தது. அவளுக்கு என்ன கஷ்டமோ வேதனையோ?

உயிரைப் போக்கிக் கொள்ள நெருப்பில் குளித்திருக்கிறாள். கிட்டத்தட்ட முழுவதும் கருகிய நிலையில் மற்றவர்கள் பார்த்துக் கொண்டு வந்து சேர்த்திருந்தனர். உறவென்று யாரும் இல்லையா? இருந்தும் வரவில்லையோ? ஆனால் ஒருவரும்கூட இருக்கவில்லை.

சேர்த்துவிட்டுப் போனதோடு சரி. இந்த முனகல்கூட அந்தப் பெண்ணுடையதாகத்தான் இருக்கும். கடவுளே! இந்தப் பெண்களின் நிலை மாறவே மாறாதா?

முந்தைய காலத்தில் கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறியே ஆகவேண்டும் என்று நெருப்பில் குளிப்பாட்டினர். பிறகு வந்த காலத்தில் பெண்ணின்

கற்பைத் தூய்மையைப் பரிசோதிக்கத் தீயில் இறக்கினர். பிறகும்கூட ஆண்களின் சந்தேகத் தீயில் பொசுங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மாமியார்களால், கணவன்களால், புகுந்த வீட்டினரால் கொளுத்தப்பட்டார்கள். ஸ்டவ் வெடித்தது என்றார்கள். நேற்றுகூட ஒரு பெண்ணின் சடலம் வந்ததே... முழுவதும் கருகி கரிக்கட்டையாய்க் கொண்டு வந்தார்களே!

பிடிக்காத மனைவியுடன் வாழ விருப்பம் இன்றி கணவனே தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறான். அந்தப் பெண் எப்படித் துடித்திருப்பாள்? கதறியிருப்பாள். அக்னி சாட்சியாய் மாலையிட்டுக் கரம் பிடித்தவன் அந்த அக்னிக்கே தாரை வார்த்து விட்டான்.

ஆதிகாலத்தில் தொடங்கிய நெருப்பு எத்தனையோ பெண்களின் உயிரைக் குடித்தும் இன்னும் அணைய வில்லை. மேலும் காவு வாங்கிக் கொண்டேதான் இருக்கிறது. ஏதாவது ஒரு சூழல் வழியாகப் பெண்களைப் பொசுக்கிக் கொண்டேதான் இருக்கிறது.

இதோ என் சுசீலாவைப் போல... நான்கு நாட்களுக்கு முன்பு வரை பட்டாம்பூச்சியாய் கரிசல்பட்டி முழுவதும் பறந்து திரிந்தவள். ஒரே நாள்... சில மணித்துளிகளில் நேர்ந்துவிட்ட தவறால்... தன்னைத் தானே கொளுத்திக் கொண்டு... நினைக்கையில் நெஞ்சம் விம்மியது.

கொலுசின் ஓசையோடு ஓடிய கால்கள் இன்று கரிந்து போயிருந்தது. கண்ணாடி வளையல்கள் சப்திக்கும் பொன் நிறக் கைகள் தோல் உரிந்து சதை தெரிய விகாரமாய்



மாறியிருந்தது. இடையைத் தாண்டி நீண்டிருந்த கருங் கூந்தல் பொசுங்கி கழுத்து வரை மட்டுமே மீதமிருந்தன.

பொத்திப் பொத்திப் பாதுகாத்த உடம்பை நெருப்பின் கோரக்கரங்களுக்குக் கொடுத்து விட்டதில் முகம் மட்டுமே மிஞ்சியிருந்தது. அதிலும்கூட பட்டுக் கன்னங்களில் காயம் பட்டிருந்தது.

பாதத்தில் பற்றிக்கொண்ட நெருப்பு கழுத்தை நெருங்கும் முன் தடுத்து விட்டிருந்தான் சுப்பிரமணி. அப்படியும் பொசுங்கிய பகுதியை ஒன்றும் செய்ய முடிய வில்லை. உயிரையாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று ஒவ்வொரு மருத்துவமனையாக ஏறி இறங்கி கடைசியில் இங்கு வந்து சேர்த்தாயிற்று.

மருத்துவர்களோ காப்பாற்றிவிடலாம் என்றும் சொல்ல வில்லை. முடியாது என்றும் சொல்லவில்லை. வருகிறார்கள்; பார்க்கிறார்கள்; செல்கிறார்கள். ஏதாவது ஒரு வார்த்தை பேசி நம்பிக்கையூட்டுவார்கள் என எதிர்பார்த்து ஏமாறுவதே வழக்கமானது.

இதில் மருந்தைப் போட விடமாட்டேன் என்று அடம் பிடிக்கிறாள் சுசீ. எப்படிக் காயம் ஆறும்? எப்படிப் பிழைப்பாள்?

"பிழைச்சு என்ன மாமா பண்ணப் போறேன்?" சுசீலாவின் கேள்வி செவியில் அறைந்தது.

உண்மைதான். நியாயமான கேள்விதான். பிழைத் தாலும் அவளால் எழுந்து நடமாட முடியுமா? வெந்து போன

வயிற்றில் சாப்பாடு இறங்குமா? நல்லது நடக்குமா அவள் வாழ்வில். அவளால் என்ன செய்ய முடியும்?

அதற்காக அப்படியே விடமுடியுமா? அவளைக் காப்பாற்ற வேண்டும். அவளது ஆசையை நிறைவேற்ற வேண்டும். தன் நிழலில் அவளைப் பாதுகாக்க வேண்டும். அவளது ஆசை... நான் ஏன் ஏற்றுக் கொள்ளாமல் போனேன்?

தன்மீதே கோபம் வர, வாசலருகே போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தான். சில்வண்டுகளின் சத்தமும் கொசுக்களின் ரீங்காரமும் காதை அடைத்தன. மருத்துவ மனை முழுக்க அரையிருளில் மூழ்கியிருந்தது.

எங்கும் மருந்துகளின் வாடை. முகத்தைச் சுளித்தான். மீண்டும் சுசீலாவின் குரல் காதில் மோதியது.

"மாமா! எனக்கு எந்த நோய் வந்தாலும் ஆஸ்பத்திரிக்கு மட்டும் கூட்டிட்டே போகாதே மாமா."

"ஏன்? பிறகெப்படி குணமாகும்?"

"அம்மாவோட கைவைத்தியமே எனக்குப் போதும். ஆஸ்பத்திரிக்கு வரவே மாட்டேன்."

"ஆஸ்பத்திரின்னா அவ்வளவு பயமா சுசீ?"

"பயமில்ல மாமா. வெறுப்பு... ஆஸ்பத்திரி பக்கமா போனாலே எப்படி நாறுது? உவ்வே... எனக்கு வாந்தியே வந்திடும்."

"உனக்குக் கல்யாணமாகி நாளைக்குப் புள்ளை பெத்துக்க ஆஸ்பத்திரிக்கு போகணுமில்ல? அப்போ என்ன பண்ணுவே?"



"ம்ஹூம். ஆஸ்பத்திரிக்குப் போக மாட்டேன். வீட்லயே பெத்துப்பேன்."

"அதெல்லாம் ஆபத்து சுசீ. ஆஸ்பத்திரிக்குத்தான் போகணும். மாசாமாசம் போய் காட்டணும். தடுப்பூசி போடணும்."

"ஐயோ! வேண்டாம்ப்பா... நான் புள்ளையே பெத்துக்க மாட்டேன்...!" பயமாய் கண்களை மூடிக் கொள்வாள். அவளது வார்த்தை இன்று உண்மையாகிப் போனது.

இனி குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது? ஆஸ்பத்திரி பக்கமே போக விரும்பாதவள் இன்று நாள் முழுக்கக் கிடந்து தவிக்கிறாள். எல்லாம் யாரால்? என்னால் தானே... என்னால்தானே... ஜாதகம், ஜோஸியம் என நான் நம்பியதால்தானே...!

கண்களில் சூடாய் கண்ணீர் வழிந்தது. எத்தனை முறை மறுத்தாள்?

"வேண்டாம் மாமா... எனக்கு வேறு மாப்பிள்ளை பார்க்காதே... நீதான் வேணும். வேற எவனையும் தேடி அலையாதே. நான் கட்டிக்க மாட்டேன்!" என்று அடம் பிடித்தாளே...

அவள் குழந்தை என்று நான்தானே அவளது ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டேன். இப்படி யெல்லாம் நடக்கும் என்று நினைக்கவில்லையே... அந்த ஜெகனும் இப்படியெல்லாம் மாறியிருப்பான் என்று நினைத்துப் பார்க்கவில்லையே நான்...

பெருமூச்சுடன் இருக்கையில் சாய்ந்து கண்களை மூடினான் சுப்பிரமணி. மூடிய விழிகளுக்குள் சுசீலாவின் பஞ்சுபோன்ற பாதங்கள் தெரிந்தது.

ஊர்முழுக்கச் சுற்றியலைந்த பாதங்கள். ஓரிடத்தில் நிற்க மாட்டாள். கொலுசு அணிந்த பாதங்களின் ஜல்ஜல் ஓசையை வைத்தே அது சுசீலாவின் நடை என்று கண்டு பிடித்து விடுவான் சுப்பிரமணி.

சுப்பிரமணியின் உடன்பிறந்த சகோதரி ஈஸ்வரி. சீரும் சிறப்புமாக திருமணமாகிச் சென்றவள் சுசீலாவின் மூன்றாவது வயதிலேயே கணவனை எமனுக்குத் தாரை வார்த்துவிட்டுக் கையில் குழந்தையோடு வந்து நின்றாள்.

வரிசையாய் ஏழு பிள்ளைகளைப் பெற்று அதில் ஐந்தை இழந்து, இரட்டைப் பிள்ளைகளை மட்டுமே வைத்து நிம்மதியடைந்த தேனம்மாவிற்கு இது பெரிய இடியாக இருந்தது.

ஒரே பெண் பிள்ளை. அதுவும் வாழவேண்டிய வயதில் பூவையும் பொட்டையும் இழந்து நின்றதில் இடிந்து போனாள் அம்மா.

மூத்த மகள் ஈஸ்வரி. கடைக்குட்டி சுப்பிரமணி. நடுவில் பிறந்த பிள்ளைகள் இறந்தபோதுகூட அம்மா இப்படி இடிந்து போகவில்லை.

இரண்டு நாள் அழுது சொட்டுத் தண்ணீர் அருந்தாமல் பித்துப்பிடித்தாற் போலிருப்பாள். பிறகு மற்றக் குழந்தைகள் பசியில் அழுதவுடன் பதறியெழுந்து சமைத்துப் பசி போக்குவாள்.



அம்மா கடுமையான உழைப்பாளி. உழைத்து இறுகிய உடம்பு. நாள் முழுக்க வயலில் கழனியில் உழைத்துப் பொருள் சேர்த்தவள். அப்பாவிற்கு காடுகழனி தவிர வேறெதும் கண்ணில் படாது. காடுதான் அவரது இருப்பிடம்.

குடும்பத்தைத் தூணாய் தாங்கிய அம்மா மகளின் நிலை கண்டு குமைந்து சீக்கிரமே கண் மூடிவிட்டாள். மனைவியின் இழப்பைத் தாங்க முடியாத அப்பாவும் பிள்ளைகளை அநாதையாய் விட்டுவிட்டு மனைவியுடன் போய்விட, பிள்ளைகள் இருவரும் திண்டாடிப் போயினர்.

அப்போது ஈஸ்வரிக்கு இருபத்தி மூன்று வயது. சுப்பிரமணிக்கு பதினைந்து வயது. பள்ளி சென்… கொண்டிருந்த சிறுவன். இருவரும் ஒருவரையொரு… பார்த்துக் கொண்டு அழ, அப்போது தெய்வமா… வந்தவள்தான் அன்னம்மா பாட்டி.

அப்பாவின் சித்தி. குழந்தைகள் இல்லாத அன்னம்… பாட்டி மூவரையும் தன் பிள்ளைகளாக ஏற்றுக் கொ… அவர்களோடே தங்கிவிட, அவளது உண்மையான அன்… பரிவில் இதமான கவனிப்பில் இருவருமே தங்க… இழப்பை மறக்கத் துவங்கினர்.

அன்றிலிருந்து அவர்களின் வாழ்வே அன்ன… பாட்டிதான். பாட்டி வீட்டையும் தோட்டத்தையும் கவ… இயலாமல் திண்டாட, அக்காவையும் குழந்தை… வீட்டில் விட்டு பாட்டியோடு தோட்ட வேலையில் இறங்கி… சுப்பிரமணி.

படிக்கும் விருப்பத்தை நசுக்கிவிட்டு உ… துவங்கினான். பெற்றவர்கள் விட்டு வைத்துப்…

நிலத்தை உழுது புதப்படுத்தி விதவிதமாய் பயிரிட்டு அறுவடை செய்து அக்காவையும் சுசீலாவையும் கவனிப்பதிலேயே கருத்தாய் இருந்துவிட, திருமண எண்ணமே இல்லாமல் போனது.

வளர்ந்து நின்ற சுசீலாவை நல்ல இடமாய்ப் பார்த்து வாழ வைக்க வேண்டும் என்ற ஆசை மட்டுமே மேலோங்கி நின்றது. ஆனால் அப்போதுதான் சிறகு முளைக்கத் துவங்கியிருந்த சுசீலாவிற்கு மாமா மட்டுமே உலகமாகிப் போனான். அவளைப் பொறுத்தவரை மாமாதான் எல்லாம்.

மாமாவைப் போல் அழகன் அந்த ஊரிலே கிடையாது என்பாள். அவன் அன்பு மட்டும்தான் உண்மையானது. பரிசுத்தமானது. அவனால் மட்டுமே தன்னைக் கடைசி வரை சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியும் என்பதில் உறுதியாக இருந்தாள்.

மாமாவின் தேவைகளைத் தானே கவனிப்பாள். அன்னம்மா பாட்டியையோ ஈஸ்வரியையோ நெருங்க விடமாட்டாள்.

"என் மாமனுக்கு சாப்பாடு போட எனக்குத் தெரியும். நீங்க உங்க வேலையைப் பாருங்கள்!" என்று விரட்டுவாள்.

சுப்பிரமணிக்கும் சுசீலாவின் மீது அதீதமான அன்பு என்பதால் சிரித்து விட்டுச் சாப்பிடுவான். இப்படித்தான் இனிமையாய் இதமாய் நாட்கள் சென்று கொண்டிருந்தன. சுசீலாவின் பதினெட்டு வயது வரை... அதற்குப் பிறகுதான் எல்லாம் மாறிப் போனது.



வீட்டில் வயது வந்த பெண் இருந்தால் பெண் கேட்டு வருவது இயல்புதானே! அப்படி வந்தவன்தான் ஆனந்தன். கோவில் திருவிழாவில் சுசீலாவைப் பார்த்து விட்டு நேரிடையாய் சுப்பிரமணியிடம் வந்து நின்றான் ஆனந்தன்.

அப்போது பருத்தி பயிரிட்டு அதிலேயே உழன்று கொண்டிருந்த நேரம். வெள்ளை வேட்டி, சட்டையில் வந்து நின்ற ஆனந்தனைப் பார்த்து புருவம் சுருக்கினான் சுப்பிரமணி.

"யாரு நீங்க? என்ன வேணும்?"

"சுப்பிரமணி அண்ணே! உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்..." தயக்கமாய் வரப்பில் நின்று கொண்டிருந்தான் ஆனந்தன்.

"முக்கியமான விஷயமா? என்ன விஷயம்?"

"நீங்க வேலையை முடிச்சிட்டு வாங்கண்ணே. நான் வெயிட் பண்றேன்."

"களத்து மேட்டுல உட்காருங்க. கை அலம்பிட்டு வர்றேன்!" என்றவாறு பம்ப் செட் நீரில் கைகால் அலம்பிவிட்டு வரும் வரை ஆனந்தன் தவிப்பாய் நின்று கொண்டிருந்தான்.

"சொல்லுங்க! என்ன விஷயம்?" நேரிடையாகவே விஷயத்திற்கு வந்தான் சுப்பிரமணி.

"அண்ணே! உங்களைவிட நான் சின்னப்பையன் தான். அதனால சும்மா வா... போ...ன்னே பேசுங்கண்ணே!"

"இதுதான் முக்கியமான விஷயமா?"

"ஐயோ! இல்லண்ணே."

"இதோ பாருப்பா. எனக்கு நிறைய வேலையிருக்கு."

"தெரியும்ணே. நான் உங்க நேரத்தை வீணாக்க மாட்டேன். சொல்லிடுறேன்."

"சொல்லுப்பா..."

"அண்ணே! பக்கத்தூர் கம்மாப்பட்டிதான் எனக்கு. எங்க அப்பா பேரு துரைராசு."

"அட! துரைராசு மகனா நீ? என்னப்பா இவ்வளவு தூரம்?"

"அப்பாவைத் தெரியுமாண்ணே உங்களுக்கு?"

"பத்துப் பதினைஞ்சு வருஷப் பழக்கம்ப்பா..."

"ரொம்ப நல்லதாப் போச்சு. அண்ணே! என் பேரு ஆனந்தன். ப்ளஸ் டூ வரை படிச்சிருக்கேன். இப்போ தனியா கோழிப்பண்ணை வெச்சிருக்கேன். எனக்கு ரெண்டு அண்ணன். ரெண்டு பேருக்குமே கல்யாணம் ஆயிடுச்சு."

"சரி. இதெல்லாம் எதுக்குப்பா என்கிட்டே..."

"சொல்றேண்ணே... போன வாரம் தெக்கூர் திருவிழாவில சுசீலாவைப் பார்த்தேன்."

சுப்பிரமணி நிமிர்ந்தான். கோபமாய் வாயைத் திறக்கும் முன் கைகளைக் கூப்பினான் ஆனந்தன்.

"அண்ணே! முழுசும் சொல்லி முடிச்சிடுறேண்ணே. எனக்கு சுசீலாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. வீட்ல எனக்குப்



பொண்ணு பார்த்திட்டு இருக்காங்க. எனக்கு சுசீலாவைக் கட்டித் தருவீங்களா?"

சுப்பிரமணி வியப்பாய் அவனை ஏறிட்டான். சின்னப் பையன். எத்தனை தைரியமாய் வந்து பெண் கேட்கிறான். சற்றும் பயமோ தயக்கமோ இல்லை அவனிடம். பார்ப்பதற்கு அழகாகவும் கம்பீரமாகவும் களையாகவும் இருந்ததால் சட்டென மறுக்க முடியாமல் யோசித்தான் சுப்பிரமணி.

"அண்ணே! எனக்கு எந்தக் கெட்டப்பழக்கமும் கிடையாது. சிகரெட் வாடைகூடப் பிடிக்காது. ரொம்ப ஒழுக்கமாய் வளர்ந்தவன். உங்களுக்குச் சந்தேகம்னா எங்க ஊர்ல வந்து யார்கிட்ட வேணா விசாரிங்க. அப்புறம்! வெட்டித் தனமா ஊர்சுத்த மாட்டேன். இன்னொரு கோழிப்பண்ணை ஆரம்பிக்க உங்க ஊர்லகூட இடம் பார்த்து அட்வான்ஸ் கொடுத்து வெச்சிருக்கேன்.

என்னை நம்பி தைரியமா பொண்ணு கொடுக்கலாம் அண்ணே! சுசீலாவை உள்ளங்கையில வெச்சுப் பார்த்துப்பேன். காலம்பூரா ஒரு கஷ்டமும் வராம அவளுக்கு நல்ல புருஷனா இருப்பேன். என்னை நம்புங்க அண்ணே!"

சுப்பிரமணி புன்னகைத்தான். "ம். நல்லா பேசுறியே... ஆமா இப்போ நீ இங்க வந்தது உன் அம்மா அப்பாவுக்குத் தெரியுமா?"

"தெரியாதுண்ணே. ஆனா நீங்க சம்மதிச்சதும் வீட்ல போய் சொல்லிடுவேன்."

"என்னன்னு?"

"தரிசப்பட்டியில சுசீலான்னு ஒரு பொண்ணு இருக்கு கட்டினா அதைத்தான் கட்டுவேன். போய் பேசி முடிங்கன்னு சொல்வேன்."

"சாமர்த்தியசாலிதான். ஆனா நான் அவசரப்பட்டுச் சம்மதம் சொல்ல முடியாதுப்பா. வீட்ல பேசணும். முதல்ல சுசீகிட்ட பேசணும்...."

"தாராளமாப் பேசுங்க அண்ணே. அதுக்கு முன்னால உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?"

"உன் பேச்சு, செய்கை, தைரியம் எல்லாமே பிடிச்சிருக்குப்பா."

"இது போதும்ணே. எப்படியும் எல்லாரும் சம்மதிச் சுடுவாங்க."

"அது எப்படிப்பா அவ்வளவு உறுதியாச் சொல்றே?"

"நீங்க என்ன சொன்னாலும் சுசீ கேட்பாங்களாமே?"

"தப்புப்பா. அவ சொல்றதைத்தான் நான் கேட்கணும். அதுதான் நடக்குது."

"அண்ணே! அப்போ என்னைப் பிடிக்காதா சுசீக்கு?"

"சேச்சே! முதல்ல அவகிட்ட நான் பேசுறேன். அவளுக்குச் சம்மதம்னா உங்க வீட்ல வந்து பேசுறேன். பிறகு பெண்பார்க்க வாங்க."

"அதுக்கு அவசியமே இல்லை!" - சுசீலாவின் குரல் அழுத்தமாய் ஒலித்தது.



# 5

உன்னைவிட சொந்தம் எது
அன்பைவிட சொர்க்கம் எது
உன்னை அன்றி என் ஜீவன்தான்
எங்கே வாழப்போகின்றது!

கையில் சாப்பாட்டுக் கூடையோடு ஆத்திரமாய் நின்றுகொண்டிருந்தாள் சுசீலா. ஆனந்தன் சற்றே மிரண்டு நிற்க, சுப்பிரமணி லேசாய் சிரித்தவாறே அவளை நெருங்கினான்.

"வந்துட்டியா சுசி இவர் பேரு ஆனந்தன். நம்ம...."

"எல்லாம் கேட்டேன். நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்."

"நல்லதாப் போச்சு. மாப்பிள்ளையைப் பாரு. உனக்குப் பிடிச்சிருக்கா?" இயல்பாய்க் கேட்ட சுப்பிர மணியைக் கோபமாகப் பார்த்தாள் சுசீலா.

"ஏன் மாமா இப்படி இருக்க? ஆள்தான் வளர்ந்திருக்கியே தவிர உனக்கு மூளை இன்னும் வளரவே இல்லை."

"என்ன சுசீ! இப்படியெல்லாம் பேசுற?"

"வேற எப்படிப் பேசுறதாம்? இவன்தான் அறிவில்லாம பெண் கேட்டு வந்து நிற்கிறான்னா உனக்கு எங்கே போச்சு புத்தி?" அவள் கோபமாகவே கேட்க, துணுக்குற்றான் ஆனந்தன்.

பண்ணிக்கலாம் மாமா. இல்லன்னா... இப்படித்தான் எவனாவது வந்திட்டே இருப்பான்."

"விளையாடாதே சுசீ. நீ சின்னப்பெண். உனக்கு எதுவும் தெரியாது."

"இப்படியே சொல்லாதே மாமா."

"உண்மைதாம்மா. இன்னும் குழந்தையாவே இருக்கியே... மாமா வயசென்ன? உன் வயசென்ன?"

"வயசு ஒரு பெரிய பிரச்சனையா மாமா? அப்படிப் பார்த்தா அன்னம்மா பாட்டியோட தாத்தாவுக்கு பாட்டியைவிட இருபத்தி நாலு வயசு அதிகம். அவங்க சந்தோஷமா வாழவில்லையா?"

"அந்தத் தாத்தா இறக்கும்போது பாட்டிக்கு என்ன வயசுன்னு தெரியுமா உனக்கு?"

"என்ன வயசு?"

"முப்பது வயசு. முப்பது வயசுல ஒரு பொண்ணு வாழ்க்கைத் துணையை இழக்கிறது எவ்வளவு கொடுமை தெரியுமா? அதை நான் கண்முன்னே அனுபவிச்சவன்."

"மாமா! தாத்தா குடிகாரர். சீக்கிரமே செத்திருப்பார். நீயேன் அதுக்கும் இதுக்கும் முடிச்சுப் போடுறே?"

"இல்லை சுசீ. நான் சும்மா சொல்லல்ல. உன் அம்மாவை விட இருபது வயசு மூத்தவர் உன் அப்பா. உன் அப்பாகூட அக்கா வெளியே போனா ரெண்டாம்தாரமா, உங்க மகளான்னு கேட்பாங்க."



"ஆனா நாம போனா அப்படிக் கேட்க மாட்டாங்க மாமா. நான்தான் உன் தோள்வரை வளர்ந்திட்டேனே... உனக்குப் பொருத்தமா இருப்பேன் மாமா!"

"சுசி உன்கிட்ட என்ன சொல்லிப் புரிய வைக்கிறது. இது... இதெல்லாம் சரிப்படாதும்மா."

"ஏன் சரிப்படாது?"

"சொந்தத்துக்குள்ளே கல்யாணம் பண்ணினா பொறக்கிற குழந்தை ஊனமா பொறக்குமாம். எல்லாரும் பேசிக்கிறாங்க."

"போ மாமா! அதெல்லாம் சும்மா. நம்ம ஊர்ல யாராவது வெளியூர்ல பொண்ணைக் கட்டிக் கொடுக்கிறாங்களா? அக்கா பொண்ணு, மாமன் பொண்ணுன்னு சொந்தம் விட்டுப் போயிடக் கூடாதுன்னு சொல்லிக் கல்யாணம் பண்றாங்களே...!

எல்லாரும் நல்ல ஆரோக்கியமான குழந்தைதானே பெத்திருக்காங்க. நீதான் பார்க்கிறியே..."

"அது இல்லம்மா..."

"மாமா! நீ எத்தனை காரணம் சொன்னாலும் சரி. உன்னைத் தவிர வேற யாரையும் கட்டிக்க மாட்டேன். நான் சொன்னா சொன்னதுதான்."

"அப்போ.... என்னை... என் வார்த்தையை மதிக்க மாட்டே?"

"மாமா! நான் அப்படிச் சொல்லல்ல..."

"பாரு சுசீ. கிராமத்திலயே பொறந்து காடுகழனின்னு உழல்றவன் நான். என்னைக் கட்டிட்டு நீ ஏன் கஷ்டப் படணும். உனக்கு நல்லாப் படிச்சவனா வெளியூர்ல வேலை பார்க்கிறவனா நான் மாப்பிள்ளை பார்ப்பேன். அவனைத்தான் கட்டிக்கணும்."

"மாமா..."

"ஷ் தத்துபித்துன்னு எதையாவது பேசிட்டுத் திரியாதே. ஊர்ல உள்ளவங்க தப்பாப் பேசுற மாதிரி நடந்துக்கக் கூடாது."

"அப்போ நீ என் ஆசையைப் பார்க்க மாட்டியா?"

"நீ குழந்தைம்மா. இப்போ உன் கண்ணுக்கு நான் அழகாத் தெரியலாம். இன்னும் ஒரு பத்து வருஷத்தில எனக்குத் தலை நரைச்சிடும். நீ பூத்துக் குலுங்கும் பூந்தோட்டம் மாதிரி இருப்பே... நம்மைச் சேர்த்துப் பார்க்கிறவங்க ஏதாவது ஒரு வார்த்தை சொன்னா உன் மனசு வாடிப்போகும்.

அதைப் பார்த்து நான் வருத்தப்படணும். இது தேவையா? நான் உனக்கேத்த பையனா அழகானவனாப் பார்க்கிறேன். நீ மறுக்காம சம்மதிக்கணும். அப்பத்தான் என்னை நீ மதிக்கிறதா அர்த்தம்."

"மாமா! எனக்கு உன்னைத் தவிர வேற யாரையும் பிடிக்காது மாமா!"

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. ஊருக்குள் ளேயே இருக்கிறதால உனக்கு வேற எதுவும் தெரியலை. எவ்ளோ அழகான ஆம்பிளைங்க இருக்காங்க தெரியுமா?"



"எனக்கு நீ மட்டும்தான் மாமா அழகு. வேற யாரும் வேண்டாம் மாமா."

"சொன்னதையே சொல்லக்கூடாது. இப்போ வந்தானே ஒரு பையன். அவன் எப்படி இருந்தான்? உனக்குப் புடிச்சிருக்கா?"

"என் பேச்சைக் கேட்டுட்டு ஓடினவன்தான். இனிமே இந்தப் பக்கமே வரமாட்டான். இவன் மட்டுமில்ல... இனி யார் வந்தாலும் இப்படித்தான் விரட்டுவேன். கடைசியில நீதான் என்னைக் கட்டிக்கணும்."

"சுசீ."

"வேணாப் பாரு மாமா. நான் சொல்றதுதான் நடக்கும். நீதான் என் கழுத்தில தாலி கட்டுவ. அப்படி எதுவும் நடக்கலைன்னா என் உடம்பிலே உசுர் இருக்காது."

"பைத்தியம் மாதிரிப் பேசாதே. நான்..."

"நான் என் முடிவைச் சொல்லிட்டேன். இனிமே அதைப்பத்தி எதுவும் பேச வேண்டாம். வா சாப்பிடலாம். சாப்பாடு ஆறிடும்."

"பேச்சை மாத்தாதே."

"மாமா. நெத்திலி கருவாட்டுக் குழம்பும் பருப்புத் துவையலும் கொண்டு வந்திருக்கேன். உட்காரு மாமா."

"இல்ல. எனக்குப் பசிக்கல்ல. அப்புறம் சாப்பிட்டுக் கிறேன்."

"என்மேல உள்ள கோபத்தை சாப்பாடு மேல காட்டாதே. வா... சாப்பிடு."

"அதான் வேணாங்கிறனில்லே..." குரலை உயர்த்தினான்.

"இப்ப ஏன் உனக்கு இவ்வளவு கோபம் வருது. எப்பவும் சாப்பிடுற நேரம்தானே. பிறகேன் பசிக்கல்ல."

"பசிக்கல்ல... அவ்வளவுதான் நீ போ."

"மாமா! எப்பவும் நீ என் கையாலதான் சாப்பிடணும். நான் இங்கேயே உட்கார்ந்திருக்கேன். நீ போய் வேலையைப் பாரு. பசிக்கும்போது வா."

"எனக்குச் சாப்பாடே வேண்டாம். வீட்டுக்கு எடுத்திட்டுப் போ."

"ஏன் மாமா இப்படிப் பிடிவாதம் பிடிக்கிற? அப்படியென்ன கோபம் உனக்கு?"

"நீ பிடிவாதம் பிடிக்கல்ல... தகப்பன் இல்லாது வளர்ந்த புள்ளன்னு கொஞ்சம் செல்லம் கொடுத்தா நீ எதையும் யாரையும் மதிக்கிறதில்ல... உன் மாமன் உனக்கு என்ன கெடுதலா நினைப்பேன்?"

"மாமா! நீ நல்லதுதான் நினைப்ப... ஆனா நான் சின்ன வயசுல இருந்து உன்னை மட்டும்தான் மாமா நினைச்சிட்டு இருக்கேன். நீதான் மாமா என் உலகம்!"

"பார்த்தியா! நீ என்னை மட்டுமே பார்த்து வளர்ந்தா அப்படித்தான் தோணும். உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைஞ்சு பட்டணத்துக்குப் போய் வாழப் போவியே... அப்பத்தான் உனக்குத் தெரியும்... உலகம் எவ்வளவு பெரிசுன்னு... அப்போ நான் ஒரு தூசி மாதிரி தெரிவேன்."



"நான் எங்கே போனாலும் எவ்வளவு ஆம்பிளைங்களைப் பார்த்தாலும் எனக்கு உன்னை மட்டும்தான் பிடிக்கும். உனக்கு என்னைப் பிடிக்கலையா மாமா?"

"சுசீக்கண்ணு! நீ என் செல்லம்டா. ஆனா என்னைக் கட்டிட்டு உன் வாழ்க்கையை வீணாக்கிடக் கூடாது. உனக்கு நல்லாப் படிச்ச பெரிய இடத்து மாப்பிள்ளையாப் பார்க்கிறேன். நீ மறுக்காம ஒத்துக்கணும். சரியா?"

"சரி மாமா. மத்ததெல்லாம் இப்ப பேச வேண்டாம். முதல்ல சாப்பிடு."

"நீ சம்மதம்னு சொல்லு. நான் சாப்பிடுறேன்."

"மாமா! எனக்கு இப்போ பதினெட்டு வயசுதானே ஆகுது. கொஞ்ச நாள் போகட்டும் மாமா. அதுக்குள்ள ஒருவேளை என்னை உனக்குப் பிடிக்குமில்ல..."

"ஏய்!"

"அப்படிப் பிடிக்கலேன்னா நீ காட்டுற மாப்பிள்ளையை நான் ஏத்துக்குறேன்."

"ம். நீ நான் வளர்த்த பெண்ணாச்சே... சுசீ இனிமே யாரையும் மரியாதை இல்லாம பேசக்கூடாது சரி,யா?"

"சரி மாமா."

"மரியாதையாப் பேசணும். அடக்கமா நடந்துக்கணும்."

"சரி மாமா. ஆனா உன்னை இப்படித்தான் கூப்பிடுவேன்."

வெள்ளையாய் சிரித்தான் சுப்பிரமணி. "மூணு வயசில இருந்தே இப்படித்தானே கூப்பிடுற. இனிமேலா மாறப் போறே. இப்படியே கூப்பிடு!"

"வா மாமா. சாப்பிடு. எனக்கும் பசிக்குது."

"இரு. இலை பறிச்சிட்டு வர்றேன்!" என்றவாறே கத்தியை எடுத்துக் கொண்டு வாழை மரம் இருந்த பகுதிக்கு அவன் செல்ல, சாப்பாட்டுக் கூடையோடு மோட்டார் ரூம் தாழ்வாரத்தில் சென்று அமர்ந்தாள்.

கொடிக்கயிற்றில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த சுப்பிரமணியின் சட்டையை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். முத்தமிட்டு நுகர்ந்தாள். இதமான மணம் உயிர் வரை சென்று பரவியது.

நினைவு தெரிந்த நாளாய்ப் பார்த்துப் பழகிய ஒரே ஆண் மாமாதான். இவன்தான் உன் மாமன். உன்னைக் கட்டிக்கப் போறவன்.

முறைமாமன் என்றெல்லாம் அன்னம்மா பாட்டி அடிக்கடி சொல்லியே வளர்த்தாள். அதில் உண்டான பிடிப்பு இது.

பாட்டி விளையாட்டாய் சொன்னாளோ அன்றி வினையாய் சொன்னாளோ ஆனால் வளரும் போதே நேசமும் பாசமும் மனதோடு வேரூன்றி வளர்ந்து இன்று மனம் முழுக்க மாமா வியாபித்திருந்தான். திருமண வயதானதும் மாமாவையே திருமணம் செய்து கொள்வேன் என்ற எண்ணத்தில் சுப்பிரமணியைப் பற்றிக் கவலைப்பட வில்லை.



ஆனால் இன்று மாமா ஏன் இப்படிச் சொல்கிறார்? என் மனதில் உள்ள ஆசை ஏன் அவரிடம் இல்லை. என்னை எப்படி இன்னொருவன் கையில் ஒப்படைக்க முடிவு செய்தார். நான் சம்மதிப்பேன் என்று எப்படி நினைத்தார்?

"மாமா! இப்போதைக்கு உன்னைச் சாப்பிட வைக்க உன் கோபத்தைக் குறைக்கத்தான் நான் இறங்கி வந்திருக்கேன். மற்றபடி இந்த உடம்பில் உயிர் இருக்கும் வரை நீயும் உன் நினைவுகளும் என்னுடனே இருக்கும். இந்த உடம்பும் உயிரும் உனக்கே உனக்கு மட்டுமே சொந்தம். உன்னைத் தவிர இன்னொருவன் என்னைத் தீண்டினால் அடுத்த கணம் இந்த உடம்பில் உயிர் தங்காது. இது சத்தியம்!" - சுப்பிரமணியின் சட்டையை அவனாகவே நினைத்து அவள் சத்தியம் செய்ய, வாழை இலையோடு வந்த சுப்பிரமணி உறைந்து நின்றான்.

## 6

வைகறையில் வைகைக் கரையில்
வந்தால் வருவேன் உன் அருகில்
உன் நினைவில் நெஞ்சம் வான்வெளியில்
நாளும் நடத்தும் ஊர்வலங்கள்!

வீட்டின் முன் பரந்து விரிந்து நின்ற வேப்பமரத்தின் சில்லென்ற காற்று உடலை இதமாய் வருட, உறக்கம் வராமல் விழித்திருந்தான் சுப்பிரமணி. கிராமத்திற்கே உரிய அமைதி. எங்கோ குரைக்கும் நாயின் சத்தத்தைத் தவிர வெகு அமைதி.

வெளித்திண்ணையில் அமர்ந்திருந்தான். வீடு அமைதியாக இருந்தது.

சுசீலா தூங்கி விட்டாள் என்று புரிந்தது. விழித்திருந்தால் சும்மா இருக்க மாட்டாள். வம்பிழுத்துக் கொண்டோ டி.வி.யைக் குடைந்து கொண்டோ இருப்பாள். இன்று சீக்கிரமாகவே தூங்கியிருக்கிறாள்.

மணபாரத்தை மாமாவிடம் இறக்கி வைத்ததில் ஏற்பட்ட நிம்மதியாக இருக்கலாம். ஆனால் தன்மீது ஏறிய பாரத்தை யாரிடம் இறக்கி வைப்பதெனப் புரியாமல் தவித்துக் கொண்டிருந்தான் சுப்பிரமணி.

வாசல் கதவைச் சாத்த வந்த ஈஸ்வரி, தம்பி உறங்காமல் அமர்ந்திருப்பதைப் பார்த்து வியந்தாள். "என்ன தம்பி உட்கார்ந்திருக்க? தூங்கலியா?" என்றவாறே அவனருகே வந்தாள்.

"வாக்கா! உட்கார்." திண்ணையைக் காட்டினான்.

"என்னய்யா? முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு. உடம்பு எதுவும் சரியில்லையா?" அவசரமாய்த் தம்பியின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லக்கா. பதறாதே!"

"அப்புறம் ஏம்ப்பா தூங்காம உட்கார்ந்திருக்க? பகலெல்லாம் உழைக்கிறியே... படுத்தவுடனே தூங்கிடுவியே...!"

"தூக்கம் வரல்ல அக்கா. மனசெல்லாம் ஒரு மாதிரி இருக்கு."



"தம்பி! என்னய்யா எதுவும் பிரச்சனையா?" கேட்டவாறே தம்பியின் அருகே அமர்ந்தாள்.

"அக்கா! இன்னிக்கு நம்ம சுசீயைக் கேட்டு ஒரு பையன் வந்து என்கிட்ட பேசினான்."

"ஆமா! மத்தியானம் சாப்பாடு கொடுத்திட்டு வந்தவுடனே இவ தைதைன்னு குதிச்சாளே...!"

"எல்லாம் சொல்லிட்டாளா?"

"சொன்னாப்பா... நான்கூடத் திட்டினேன். என்னைப் பிடிபிடியென்று பிடித்து விட்டாள்."

"என்ன சொன்னாள்?"

"மாமாவைத் தவிர வேற யாரையும் கட்டிக்க மாட்டேன். எவனாவது பெண் பார்க்கவென்று வந்தால் துடைப்பக்கட்டையால அடித்தே விரட்டுவேன் என்கிறாள்!" - என்றாள் ஈஸ்வரி பெருமூச்சோடு.

"அவளது பேச்சுதான் என்னைத் தூங்க விடல்ல அக்கா. எத்தனை விதமாய் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்க மாட்டேன்கிறா. நானும் வயசு வித்தியாசம், ஊனமுற்ற குழந்தை பிறக்கும், அது இதென்று சொல்லிப் பார்க்கிறேன். அவள் கேட்பதாக இல்லை."

"தம்பி! பேசாமல் அவள் மனசுப்படியே நடந்துக்கப்பா."

"அக்கா!"

"ஆமாம்ப்பா! நானும் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்துட்டேன். நீயும் சொல்லியிருக்க. ஆனா அவ கேட்கலையே!"

"அதுக்காக அவளையே பலி கொடுக்கச் சொல்றியா? என் உயிரே போனாலும் இதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன்."

"தம்பி! நான் சொல்றதைக் கேளுப்பா."

"வாயை மூடுக்கா. பெண்ணைப் பெற்றவ மாதிரியா பேசுற? பெத்த பெண்ணை வாழவெச்சுப் பார்க்க ஆசைப் படுறவதான் தாய்."

"அது எனக்கும் தெரியும்ப்பா."

"தெரிஞ்சுமா இப்படிப் பேசுற?"

"தம்பி! எங்க காலத்திலதான் ஜாதகம், ஜோசியம்னு பார்த்துக் கல்யாணம் பண்ணினோம். அதுலயும் எத்தனை கல்யாணம் நிலைச்சது?"

"அது சரிக்கா. ஆனா நாம பார்க்காம இருந்திருக் கணும். பார்த்து அதுல சிக்கல் இருக்குன்னு தெரிஞ்சபிறகு எப்படிக்கா?"

"நான்தான் மடைச்சி. பேசாம கல்யாணத்தைப் பண்ணி வெக்காம ஜாதகத்தைத் தூக்கிட்டுப் போனேன். ச்சே! அதுதான் வம்பாப் போச்சு."

"இல்லக்கா! ஒருவேளை அப்படிப் பார்க்காம விட்டிருந்தா கல்யாணமாகி என்... என்னோட சுசீயை இழந்திருப்பேனே... ஐயோ! என்னால முடியாதுக்கா... சுசீயோட பேச்சைக் கேட்காம அவ சிரிப்பைப் பார்க்காம சத்தியமா என்னால வாழ முடியாது."

"தம்பி! பேசாம அந்த ஜோஸியரைப் பார்த்து இதுக்கு ஏதாவது பரிகாரம் இருக்கான்னு கேட்டுப் பார்ப்போமா?"



"அதெல்லாம் நானே கேட்டேன். ம்ப்ச்! ஒண்ணும் பண்ணமுடியாதாம். ஆடும் புலியும் சேர்ந்து வாழ முடியாது. உன் தோஷம் அவளை அடிச்சிடும். கல்யாணம் பண்ணினா ஆறுமாதம்கூட வாழ முடியாதுன்னு அடிச்சிச் சொல்லிட்டார்."

"தம்பி! இதை... இந்த விஷயத்தை சுசீகிட்ட சொல் லிட்டா என்ன?"

"காரியமே கெட்டுடும். ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் மாமா. சந்தோஷமா வாழ்ந்திட்டுப் போய்ச் சேர்ந்திடுறேன்னு சொல்வாளே தவிர வேற ஒரு கல்யாணத்திற்கு சம்மதிக்கவே மாட்டா. அதனால அவளுக்கு இந்த விஷயம் தெரியக் கூடாது. நீ சொல்லிடாதே."

"இல்லப்பா... சொல்லிட்டா..."

"அக்கா! அவளோட பிடிவாதம் உனக்குத் தெரியாதா? இதை எக்காரணம் கொண்டும் அவகிட்ட சொல்லக் கூடாது. சொல்லாமலே அவ கல்யாணத்தை நடத்தணும். அதான் யோசிச்சிட்டு இருக்கேன்."

"தம்பி! இதையே அவ நிலையில இருந்து நினைச்சுப் பாரு. வேற யாரையோ கட்டிக்க விரும்பாம இந்தப் பொண்ணு ஏடாகூடமா எதையாவது பண்ணிட்டா... நாம என்ன செய்ய முடியும்?"

"அக்கா! அப்படியெல்லாம் பேசாதே."

"இல்லய்யா. ஒரு பேச்சுக்குச் சொல்றேன். அப்படி ஏதாவது நடந்துடாம அவ மனசுப்படியே உன்னைக் கல்யாணம் பண்ணி கொஞ்ச நாள் என்றாலும் உன்கூட சந்தோஷமா வாழ்ந்துட்டுக் கண் மூடட்டுமே... நிம்மதியாய்ப் போய்ச் சேருவாளே!"

"அக்கா! தயவுசெய்து இப்படியெல்லாம் பேசாதே. அவ... அவ என் உசுரு. அவளை அப்படி அல்பாயுசுல போக விடமாட்டேன். அவ... நம்ம வீட்டு மகாராணி. அவ சந்தோஷமா நூறு வருஷம் வாழணும்."

"நாம சொல்லலாம். ஆனா... அவ கேட்கணுமே...!"

"கேட்பா அக்கா! உன் நாத்தனார் பையன் ஜெகன் இப்ப எங்கே இருக்கான்?"

"மெட்ராஸ்லதான் இருக்கானாம். ஏம்ப்பா?"

"அக்கா! உன் நாத்தனார் தன்னோட பையனுக்குத் தான் உன் பொண்ணுன்னு சொல்லிட்டு இருந்தாங்களே... ஞாபகம் இருக்கா?"

"அதெல்லாம் முன்னாடிப்பா. இப்போ கொஞ்சம் வசதி வந்ததும் இங்கே வர்றதே குறைஞ்சு போச்சே... பையன் நல்லா சம்பாதிக்கிறான்னு கேள்விப்பட்டேன். அதனால பெரிய இடமாப் பார்க்கலாம்னு இருப்பாங்க."

"ஏன்? நாம என்ன குறைஞ்சா போயிட்டோம். நம்ம சொத்து முழுக்க சுசீக்குத்தானே...!"

"தம்பீ..."

"ஆமாக்கா... எல்லாமே அவளுக்குத்தான். அவங்க எவ்வளவு கேட்டாலும் செய்திடலாம். நீ நாளைக்கே போய் பேசுறியா?"

"நானா? நீயும் வாயேன் தம்பி."

"இல்லக்கா. பருத்தியெல்லாம் வெடிக்க ஆரம்பிச் சிருச்சு. நாளைக்கு ஆள்விட்டுப் பறிக்கணும். ரெண்டு மூணு நாள் என்னால எங்கேயும் நகர முடியாது."



"அப்போ ஒரு வாரம் கழிச்சிப் போவோம் தம்பி."

"அக்கா! நாம ரெண்டு பேரும் புறப்பட்டுப் போனா சுசீ சந்தேகப்படுவா. அவளுக்குத் தெரியாம நீ மட்டும் போயிட்டு வா. அவங்களுக்குச் சம்மதம்னா பிறகு இவகிட்ட சொல்லிக் கலாம்."

"இவ ஒத்துப்பாளா? சமாளிக்க முடியுமா?"

"நான் ஒத்துக்க வைக்கிறேன். ஒரு நல்லது நடக்கணும்னா சில பொய்கள் சொல்ல வேண்டியிருக்கும். சுசீ மனசை மாத்தணும்னா ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லித்தான் ஆகணும். அப்பத்தான் அவளுக்கு எம்மேல வெறுப்பு வரும்."

"தம்பி! நீ என்ன சொல்றே?"

"முதல்ல நீ போய் பேசுக்கா... அவங்களுக்கும் விருப்பம்னா அதுக்குப் பிறகு என்ன செய்யலாம்னு யோசிப்போம். ஆமா அந்தப் பையன் எப்படி? நல்லவன் தானே!"

"நல்ல பையன்தானப்பா. படிச்சிருக்கான். இப்ப ஏதோ பெரிய கம்பெனியில இருக்கானாம். நிறைய சம்பாதிக் கிறானாம்."

"சரி, நீ பேசு. நான் ஒரு நாள் அவன் வேலை பார்க்கிற இடத்துல போய் விசாரிக்கிறேன். அக்கா! எல்லாம் முடிவாகிற வரைக்கும் அவகிட்ட எதுவும் சொல்லிக்க வேண்டாம். நானே பொறுமையாய்ச் சொல்கிறேன்."

"சரிப்பா. எதுக்கும் ஒருமுறை யோசி தம்பி!"

"எதை?"

"நீயே கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தி..."

"சேச்சே! இனிமே இந்தப் பேச்சை எடுக்காதே. நான் வளர்த்த குழந்தையை எனக்கே காவு கொடுப்பதா? வேண்டாம். என் சுசீ நீண்ட காலம் சந்தோஷமா வாழணும். அதை நான் பார்க்கணும்."

ஈஸ்வரியின் கண்கள் கலங்கின. "எப்படிப்பட்ட பிள்ளை நீ. உன்கூட வாழ எம்பொண்ணுக்கு கொடுப்பினை இல்லாமப் போச்சே...!"

"அக்கா! இனிமே நடக்கப்போறதைப் பத்திப் பேசு."

"தம்பி! உனக்கு... சுசீ மேல பிரியம் இல்லையா?"

"என்னக்கா கேட்கிற நீ! அவ மேல பிரியம் இல்லாமலா நீ கேட்டதும் சம்மதிச்சேன். நாள் குறிக்கத் தானே ஜோசியர்கிட்டே போனோம். அவரு இப்படித் தலையில இடியை இறக்குவார்னு தெரியாமப் போச்சே...!"

"தம்பி! இந்த ஜாதகம், ஜோசியம் எதையும் நம்ப வேண்டாம். பேசாம வர்ற முகூர்த்தத்தில், உங்க கல்யாணத்தை முடிச்சிடலாம்."

"அக்கா! ஆபத்துன்னு தெரிஞ்சே விஷப்பரீட்சையில இறங்கலாமா? எந்த நிமிஷம் அவளுக்கு என்ன ஆகுமோன்னு பயந்து சாகணுமா? ஒருவேளை... சுசீக்கு ஏதாவது ஆகிட்டா... நான் கொலைகாரனா ஆகிடுவேனே...!"



"தம்பி!"

"பார்த்துப் பார்த்து வளர்த்த பிள்ளையை என் விருப்பத்திற்காகக் கொல்லச் சொல்றியே... எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அந்தப் பாவம் என்னை விடுமா? அவளை வாழ வைச்சுப் பார்க்கத்தானே இத்தனை பாடுபடுறோம்!"

"அது சரிப்பா. ஆனா அவ மனஸையும் நாம புரிஞ்சுக்க வேண்டாமா?"

"அவ குழந்தைக்கா. உலகம் தெரியாத குழந்தை. தன் கையில உள்ள பொம்மையைவிட அழகான புது பொம்மையைக் கொடுத்தா அது பழைய பொம்மையைத் தூக்கிப் போட்டுடும். புதுப் பொம்மையை விடாம வெச்சுக்கும். அதே மாதிரிதான் சுப்பிரமணிங்கிற பழைய பொம்மையை தூக்கி எறிய ஜெகன்கிற புது பொம்மையைக் கொடுக்கப் போறோம்."

"இது... இதெல்லாம் சரியா வருமா தம்பி?"

"அக்கா! உன் பொண்ணு பூவும் பொட்டுமா நீண்ட நாள் வாழணும்னு ஆசைப்படுறியா இல்லையா?"

"ஒரு தாய்க்கு அதைவிட வேற என்னய்யா ஆசை இருக்கும்?"

"அப்போ... நான் சொல்ற மாதிரி செய். எதையும் நினைச்சுக் குழம்பாதே. நாளைக்கு மொத பஸ்ஸைப் புடிச்சி குளத்தூருக்குப் போ. சரியா?"

"சரி தம்பி!" அரைமனதாய் தலையாட்டினாள் ஈஸ்வரி.

"இப்பப் போய்ப் படு. நாளைக்குக் காலையில சுசீ விழிக்கிறதுக்குள்ள கிளம்பிடு. ஆயிரம் கேள்வி கேட்பா. நீ எதையாவது உளறிடுவ!"

"விழிச்சதும் தேடுவாளே?"

"நான் எதையாவது சொல்லிச் சமாளிச்சுப்பேன். போய்ப் படு."

ஈஸ்வரி யோசனையாய் எழுந்து வீட்டினுள் போய் கதவைச் சாத்திக் கொள்ள, திண்ணையில் நீட்டிப் படுத்தான் சுப்பிரமணி. தன் மனதில் குடியிருப்பவள் தன்னை விட்டுப் போகிறாள் என்கிற வேதனையைவிட பெரிய வாழ்க்கை வாழப்போகிறாள் என்ற சந்தோஷமே அதிகமாய் இருந்தது.

இந்தச் சந்தோஷம் உனக்கு அதிக நாள் நீடிக்காது என விதி அவனைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தது.

# 7

பூவுகூட நாறுபோல பூமிகூட
நீருபோல மாமன்கூட சேர்ந்திருப்பேன்
மதுரை வீரன் பொம்மி போல – சேலையோட
நூல்போல சேர்ந்திருக்கும் சொந்தம்தான்!

வெண்ணிற நுரைகளாய்ப் பருத்திப் பஞ்சு மலைபோல் குவித்து வைத்திருக்க, நான்கைந்து பெண்கள் அமர்ந்திருந்து பஞ்சிலிருந்து விதைகளைத் தனியே பிரித்துப் பஞ்சை ஒருபுறமாய் ஒதுக்கிக் கொண்டிருந்தனர்.

சுத்தப்படுத்திய பஞ்சைக் கோணிகளில் அடைத்து சணல் நூலால் தைத்துக் கொண்டிருந்தான் சுப்பிரமணி.



சற்றுத் தள்ளி நின்றிருந்த சுசீலா பொறுமையின்றி அவனை நெருங்கினாள்.

"மாமா! மணி என்ன ஆகுது? இப்படிச் சாப்பிடாம உழைச்சு யாருக்குச் சேர்க்கப் போற?"

"உனக்குத்தான் சுசீ. சீக்கிரமே கல்யாணப் பொண்ணாகப் போற. சீர்செனத்தி, கல்யாணச் செலவுன்னு எவ்வளவு செலவு இருக்கு."

"மாமா! ஏற்கனவே நான் கடுப்புல இருக்கேன். நீ வேற இன்னும் கடுப்பேத்தாதே. பேசாம சாப்பிட வா."

"வெச்சிட்டுப் போம்மா. உனக்குத் தூசி ஆகாது. தும்மல் வரும். நீ போ. நான் சாப்பிட்டுக்கிறேன்."

"இது என்ன புதுப்பழக்கம்? நான் பரிமாறித்தான் நீ சாப்பிடுவ?"

"எல்லாம் பழகிக்கணும்மா..."

"ஏன்? அதுக்கு என்ன அவசியம்?"

"சுசீ! எத்தனை நாள்தான் எனக்குப் பரிமாறிட்டு இருப்பே... நாளைக்கே கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்டா..."

"மாமா! நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன். மறந்திடாதே!"

"நான் சொன்னதையும் நீ மறக்கக்கூடாது. மாமா எது செய்தாலும் உன் நல்லதுக்குத்தான் செய்வேன்."

"மாமா! இன்னிக்கு உன் பேச்சே சரியில்ல... என்கிட்ட எதையோ மறைக்கிற! சொல்லு... அம்மா எங்கே?"

"அதான் சொன்னேனே... கோவிலுக்குப் போயிருக்கா...!"

"நான் நம்பமாட்டேன். அம்மா கோவில், குளம்னு சுத்துற ஆளில்லை..."

"சாதாரணமா சுத்தமாட்டாதான்... ஆனா பொண்ணுக்குக் கல்யாண வயசு வந்ததும் நல்ல மாப்பிள்ளை அமையணுமே... பொண்ணு நல்லபடியா வாழணுமேன்னு வேண்டிக்கிறது வழக்கம்தானே!"

"எந்தப் பேச்சை எடுத்தாலும் ஏன் கல்யாணத்தில வந்து நிறுத்துற?"

"நடக்கப் போறதைத்தான் சொல்றேன்."

"மாமா! ஏன் வீணா என் கோபத்தைக் கிளறுற?"

"சுசீ எனக்கு நிறைய வேலை இருக்குடா. நீ வீட்டுக்குப் போம்மா."

"நானும் வேலை செய்யறேன். வீட்ல உட்கார்ந்து என்ன பண்றது?"

"சமையல் கத்துக்கோ. நாளைக்குப் போற இடத்துல சமைக்கணுமே...!"

"கடவுளே! மாமா உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிருக்கு. இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நின்னேன்... நானும் பைத்தியமாயிடுவேன். நீ சாப்பிட்டா சாப்பிடு. இல்லன்னா... பட்டினி கிட. நான் போறேன்!" கோபமாய் திரும்பி நடந்தவளை சற்றே வேதனையோடு பார்த்தான் சுப்பிரமணி.



"இனி இதுபோல் ஏதேனும் பேசி அவளைத் தன்னிடம் இருந்து விலகச் செய்ய வேண்டும். அதுதான் அவளது எதிர்காலத்திற்கு நல்லது!" பெருமூச்சுடன் வேலையைத் தொடர்ந்தான்.

மாலை மங்கிய வேளையில் நேராகத் தோட்டத்திற்கே வந்து நின்றாள் ஈஸ்வரி. அக்காவைப் பார்த்ததும் மலர்ந்தான் சுப்பிரமணி.

"வாக்கா! இப்பத்தான் வர்றியா?"

"பஸ்ஸை விட்டு இறங்கி நேரே இங்கேதான் வர்றேன். சுசீ இல்லையா?"

"அவளை வீட்டுக்கு அனுப்பிட்டேன். நீ மருதூர் கோவிலுக்குப் போயிருக்கன்னு சொல்லி வெச்சிருக்கேன். நீயும் அப்படியே சொல்லிடு. சரி! நீ போன காரியம் என்னாச்சு?"

"தம்பி! மாப்பிள்ளை மெட்ராஸ்லதான் தங்கியிருந்து வேலை பார்க்கிறானாம். மாரியம்மா மதினி மட்டும்தான் ஊர்ல இருக்காங்க. இன்னும் கொஞ்ச நாள்ல அவங்களும் மகன்கூட மெட்ராஸ் போயிடுவாங்க."

"அது இருக்கட்டும். கல்யாண விஷயம் பேசுனியா?"

"ம்... பேசினேன். சரியா பிடி கொடுக்கல்ல..."

"ஏன்?"

"பையன் இப்போ பெரிய வேலையில இருக்கான். கிராமத்துப் பொண்ணுன்னா என்ன சொல்வானோன்னு யோசிக்கிறாங்க."

"அவனும் கிராமத்தான்தானே. நாலு எழுத்துப் படிச்சிட்டு வெளியூருக்குச் சம்பாதிக்கப் போனா கிராமத்தான் இல்லைன்னு ஆயிடுமா?"

"மதினிக்கு இஷ்டம் இருக்குப்பா. என் மாமியார் சாகுறப்போ தம்பி மகளை எம்பேரனுக்குக் கட்டி வெச்சிடு. எம் மருமகளை அப்படியே விட்டுடாதேன்னு மககிட்ட சொன்னாங்களாம். அதனால சுசீயை விட அவங்களுக்கு மனசில்லை."

"சரி. கடைசியா என்ன சொன்னாங்க?"

"அடுத்த மாசம் ஜெகன் ஊருக்கு வர்றானாம். நம்ம சுசீயோட போட்டோ இருந்தா தரச் சொன்னாங்க. போட்டோ பார்த்து பிடிச்சுப் போனா மாப்பிள்ளையைக் கூட்டிட்டு வந்து நிச்சயம் பண்ணிடலாம்னு சொன்னாங்க."

"நீ என்னக்கா சொன்னே?"

"என் தம்பிகிட்ட பேசிட்டுப் போட்டோ கொடுத்தனுப்புறேன்னு சொன்னேன்."

"உனக்கு இந்த இடம் பிடிச்சிருக்கா அக்கா. பேசி முடிச்சிடலாமா? இல்லே... அந்த கம்மாபட்டி பையனைப் பேசலாமா?"

"வேண்டாம் தம்பி! எப்படியும் உனக்கு இல்லைன்னு ஆயிடுச்சி. அசல்ல ஏன் கொடுக்கணும். சொந்தத்துக்குள்ளயே கொடுத்திடலாம். சொந்தமும் விட்டுப் போகாது. ஒரு நல்லது கெட்டதுன்னா ஒன்னாக் கூடிக்கலாம்."

"அப்போ இதையே பேசி முடிச்சிடலாமா?"



"ஆமா தம்பி! உன் மச்சான் உசுரோட இருந்த வரைக்கும் எம்மவ என் தங்கச்சி மகனுக்குத்தான்னு சொல்லிட்டே இருப்பார். என் மதினியும் அப்பவே சம்பந்தம் பேசி முடிச்சிட்டாக. இது சின்ன வயசுலயே போட்ட முடிச்சு."

சுப்பிரமணி பெருமூச்சு விட்டான். "மச்சான் உயிரோட இருந்திருந்தா நீ அந்த வீட்லயே இருந்திருப்ப. ரெண்டு பேரும் ஒன்னா வளர்ந்து ஒருத்தர் மேல ஒருத்தர் அன்பை வளர்த்திருப்பாங்க. இப்போ நான்தான் நடுவுல இடைஞ்சலா நிக்கிறேன்."

"தம்பி! அப்படியெல்லாம் பேசாதய்யா. இந்தப் புள்ள உம்மேல பைத்தியமா இருக்கான்னுதான் நீயே கட்டிக்கன்னு சொன்னேன். அதுக்கும் தடை வந்திடுச்சி. சரி உறவுக் காரங்கள்ல கொடுத்திடலாம்னு..."

"நான் எதுவும் தப்பா சொல்லல அக்கா.... சுசீயை சம்மதிக்க வைக்கணுமே... அதுக்குத்தான் சொல்றேன்."

"வெடுக் வெடுக்குன்னு பேசுவாளே தவிர நீ எது சொன்னாலும் அவ கேட்பா தம்பி. முதல்ல போட்டோ பிடிச்சிக் கொடுப்போம். அவங்களுக்குப் பிடிச்சிருந்தா பிறகு இவகிட்ட நீதான் பேசி சம்மதிக்க வைக்கணும்."

"அதைப் பிறகு பார்ப்போம். முதல்ல இவ போட்டோ பிடிக்க சம்மதிக்கணுமே... ஆயிரம் கேள்வி கேட்பாளே! அதான் யோசிக்கிறேன்..." என்றான் யோசனையாய்.

அவன் சொன்னது போலவே ஆயிரம் கேள்வி கேட்டாள் சுசீலா.

பட்டுடுத்தி தலைநிறைய மல்லிகை சூடி, வீட்டிலிருந்த நகைகளைப் போட்டுக் கொண்டு உற்சாகமாகக் கிளம்பியவள் சுப்பிரமணி கூட்டிச் சென்ற இடத்தைப் பார்த்ததும் தயங்கி நின்றாள். முன்னே நடந்து சென்ற சுப்பிரமணியின் கரத்தைப் பற்றி நிறுத்தினாள்.

"மாமா! இங்கே ஏன் கூட்டிட்டுப் போறே?" ஸ்டுடியோவைப் பார்த்து சற்றே மிரட்சியாய்க் கேட்டாள்.

"போட்டோ பிடிக்கத்தான். வா...!"

"நில்லு மாமா. நீ .தெக்கூர் கோயிலுக்குத்தானே போகணும்னு கூப்பிட்ட. இப்ப ஏன் இங்கே கூட்டிட்டு வந்தே?"

"சுசீ. என்னவோ தெரியல்ல. உன்னை இப்படி அலங்கரிச்சு ஒரு போட்டோ எடுத்து வீட்ல மாட்டணும்னு ஆசை. அதான் வந்தேன் வா."

"இதை ஏன் நீ வீட்லயே சொல்லல?" சந்தேகமாக சுசீலா கேட்க, சமாளிப்பாய் சிரித்தான்.

"அது... ஒரு இன்ப அதிர்ச்சியா இருக்கட்டுமேன்னு தான்..."

சுப்பிரமணியை உற்றுப் பார்த்தாள் சுசீலா. "மாமா! நீ எனக்குத் தெரியாம ஏதோ பண்றே?"

"என்ன நீ இப்படியெல்லாம் பேசுற? அப்படியெல்லாம் எதுவும் இல்ல..."

"பொய் சொல்லாதே மாமா. இப்பல்லாம் நீ என்கிட்ட முன்ன மாதிரிப் பேசமாட்டேங்கிற. சந்தைக்குப் போனா



மல்லிப்பூ வாங்கிட்டு வரமாட்டேங்கிற. நான் கிட்ட வந்தாலே ஏதாவது பேசி என்னைக் கோபமூட்டி அனுப்பிடுறே...!"

"மண்டு... மண்டு... இதெல்லாம் ஒரு பிரச்சனையா? மாமனுக்கு வேலை அதிகம்மா. அதனால பூ வாங்கிட்டு வர மறந்திருப்பேன்..."

"எப்பவுமே உனக்கு வேலைதான். ஆனா இதுக்கு முன்னே நீ மறந்ததே இல்லையே...!"

"சரி. இனிமே தினமும் வாங்கித் தர்றேன். இப்ப வாம்மா. ஒரே ஒரு போட்டோ எடுத்திடுவோம்."

"உண்மையைச் சொல்லு மாமா. இப்போ போட்டோ எதுக்கு?"

"அதான் சொன்னேனே... வீட்ல மாட்டி வைக்கிறதுக்கு. மாமா மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"இருக்கு மாமா. நிறைய இருக்கு. அந்த நம்பிக்கையில இப்போ போட்டோ பிடிக்க வர்றேன். ஆனா ஒன்னு..."

"என்னடா?"

"நீயும் அம்மாவும் நாலுநாளா கூடிக்கூடி ரகசியம் பேசுறீங்களே... அப்படி எனக்குத் தெரியாம ஏதாவது சதி செய்தே... இப்ப பிடிக்கிற போட்டோவில மாலை போட்டுத் தான் நீ என்னைப் பார்க்க வேண்டியதிருக்கும்!" உறுதியாய்ச் சொல்லிவிட்டு ஸ்டுடியோவிற்குள் நுழைந்தாள் சுசீலா.

பதறிய இதயத்தோடு அவளைத் தொடர்ந்த சுப்பிரமணியின் முகம் வெளுத்திருந்தது. இத்தனை உறுதியாய் இருப்பவள் சம்மதிப்பாளா? ஒருவேளை அவசரப்பட்டு உயிரை மாய்த்துக் கொண்டால்...

தன் கையால் தாலி வாங்கினால்தானே அல்பாயுசில் போய் விடுவாள் என்றது ஜாதகம். தன் தாலி கிடைக்காமல் ஆயுளை முடித்துக் கொண்டால்...

அப்போதும் நான்தானே கொலைகாரனாய் நிற்பேன்.

அவசரப்பட்டு இவளை எமனிடம் கொடுத்துவிடக் கூடாது என்றுதானே மனதைக் கல்லாக்கிக் கொண்டு வேறு மாப்பிள்ளை பார்க்கச் சம்மதித்தேன். ஆனால்... சுசியின் உறுதி பயமுறுத்தியது.

ஜாதகத்தில் உள்ள தோஷத்தைச் சொன்னால் நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டாள். ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் மாமா என்பாள். ஆனால் அவளை இழக்கத் தன்னால் முடியாது. எங்கேயோ ஓரிடத்தில் உயிரோடு வாழ்கிறாள் என்ற இன்பமே போதும். அதற்காகத்தானே இத்தனை பாடுபடுகிறேன்.

என்ன செய்யலாம்? என்ன சொன்னால் இவளது மனம் மாறும்? யோசனையாய் நின்றவனைத் தொட்டு அசைத்தாள் சுசீலா.

"மாமா! போட்டோக்காரர் கூப்பிடுறார் பாரு?"

திடுக்கிட்டு அசைந்தான். "ம்... என்ன?"

"போட்டோ எடுத்தாச்சு ஸார். நாளைக்கு வந்து வாங்கிக்கங்க."

"சரி. பணம் எதுவும் தரணுமா?"

"அம்பது ரூபா கொடுங்க."



ரூபாயை எண்ணிக் கொடுத்துவிட்டு ரசீதைப் பெற்றுக் கொண்டு அமைதியாகவே வெளியேறி நடக்க, அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே வந்தாள் சுசீலா.

"என்ன மாமா? முகமெல்லாம் வேர்த்திருக்கு!"

"சு...சுசீ... நாம எங்காவது கொஞ்சநேரம் உட்கார்ந்திட்டுப் பேசலாமா?"

"சரி மாமா. ஆனா... இந்தக் கடைவீதியில எங்கே உட்கார்றது?"

"இங்கே வேண்டாம். நடந்து போவோம். ஆத்தோரமா ஆலமரம் இருக்குல்ல... அங்கேதான் அமைதியா இருக்கும். கொஞ்சநேரம் பேசுவோம்."

வியப்பாய் விழிகளை விரித்தாள். "மாமோய்! என் கிட்டப் பேசணுமா? மழைதான் வரப்போகுது பார்."

"நிறையப் பேசணும் சுசி. வீட்ல நேரமே கிடைக்கிறதுல்ல..."

"பேசு மாமா. எவ்ளோ நேரம் வேணுமோ பேசு. காலம்பூரா உன் பேச்சைக் கேட்டுட்டு உன் முகத்தைப் பார்த்துட்டு இருந்தா போதும் எனக்கு...!"

"சரி வா..." சைக்கிளை உருட்டிக் கொண்டே அவன் நடக்க, கூடவே இணைந்து நடந்தாள் சுசீலா. நடையில் துள்ளல் கூடியிருந்தது. மனமகிழ்ச்சி முகத்தில் உற்சாகத்தை மலரச் செய்தது.

இனிய புன்னகையோடு கடைவீதிகளைப் பார்த்துக் கொண்டே வந்தவள் ஓரிடத்தில் நின்றாள். "மாமா... மாமா!

கண்ணாடி வளையல் கடை மாமா. வா மாமா... வளையல் வாங்கித் தா மாமா...!"

"அதான் கைநிறைய கிடக்குதே!"

"ம்ஹூம். பச்சைக் கலர் வளையல் இல்ல... எனக்கு வேணும். வா மாமா. வாங்கித்தா மாமா!" கையைப் பற்றி இழுத்தாள்.

"இந்தா... கையை விடு. யாரும் பார்க்கப் போறாங்க."

"பார்த்தா என்ன? என் மாமன் கையை நான் பிடிச்சா யாருக்கு என்ன?"

"சரி. நீ போய் வளையலை வாங்கு. நான் இப்படி ஓரமா நிற்கிறேன்."

"உள்ளே வா மாமா!"

"வேண்டாம்மா. நீயே பாரு. உனக்குப் பிடிச்சதை வாங்கிக்க. இந்தா காசு!" காசை நீட்டினான்.

"நீ எப்பவுமே இப்படித்தான் மாமா. உன்னை நிறைய மாத்தணும். கல்யாணம் மட்டும் முடியட்டும். பிறகு பாரு...!" என்றவாறு கடைக்குள் சுசீலா நுழைய, அந்த அவகாசத்தில் அவசரமாய் யோசித்தான் சுப்பிரமணி.

இன்று எப்படியும் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். ஜெகன் ஊருக்கு வர இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. சுசீயை எப்படியும் அவனுக்குப் பிடிக்கும். நிச்சயம் செய்வதற்குள் மனதை மாற்ற வேண்டும்.

அதே நேரம் அவசரப்பட்டு எந்த முடிவையும் அவள் எடுத்துவிடக்கூடாது. அந்த எண்ணமே வராத அளவிற்கு



எதையாவது சொல்லி அவளை சம்மதிக்க வைக்க வேண்டும்.

என்ன சொன்னால் மாறுவாள்? தன் பேச்சையும் கேட்க வேண்டும். தன் மீதுள்ள பிரியமும் மாற வேண்டும். மனதிற்குள் வேகமாகத் திட்டம் மலர அவளிடம் என்னென்ன பேச வேண்டும் என்பதை ஒத்திகை பார்த்துக் கொண்டான்.

சுசீலாவின் கொலுசொலி அவள் வருகையை அறிவிக்க, சட்டென உஷாராகி கண்களைச் சுழல விட்டான். அவனது திட்டத்திற்கு இப்போது ஒரு பெண் தேவை.

தேடிய அவனது கண்களில் அந்தப் பெண் கிடைத்தாள். பச்சைநிறப் புடவையில் சற்றே வயதான ஒரு மனிதருடன் பேசிக் கொண்டே அவள் நடந்து செல்ல, அவளுக்குக் கேட்காத தொனியில் சைகையால் ஏதோ பேசினான்.

அவனை நெருங்கிய சுசீலா புருவம் சுருக்கியவாறு நின்றாள்.

"மாமா! என்ன பண்றே? யார் அது?" சந்தேகமாக அவள் கேட்க, அப்போதுதான் அவள் வந்ததை உணர்ந் தவன்போல் அசடு வழிந்தான்.

"வா சுசீ வளையல் வாங்கிட்டியா?"

"நான் கேட்டதற்குப் பதில் சொல்லு. யார் அவ?"

"யாரு?"

"அதான் அந்தப் பச்சைக் கலர் சேலைக்காரி. அவகிட்டதானே ஜாடை பண்ணினே?"

போலியாய் அதிர்ந்தான். "நீ... நீ பார்த்தியா?"

"எல்லாம் பார்த்தேன். சொல்லு...!" கோபமாய் அவள் கேட்க, சுப்பிரமணி தூரமாய்ப் போய்விட்ட அந்தப் பெண்ணைப் பார்த்து கையசைத்தான்.

'அப்புறம் பார்க்கலாம்...' என சைகை செய்ய, சுசீலாவின் முகம் கலவரமானது. அவசரமாய்த் திரும்பிப் பார்க்க, அந்தப் பெண் போய் விட்டிருந்தாள்.

"யார் அவ? என் முன்னாடியே கையைக் காலை ஆட்டிட்டுப் பேசுற?"

"சுசி உன்கிட்ட பேசணும்னு சொன்னேனே... அது... இதைப் பத்தித்தான்..." சுப்பிரமணி தயக்கமாய்ச் சொல்ல, சுசீலாவின் உற்சாகம் சுத்தமாய் மறைந்தது. மனதிற்குள் ஏதோ பிசைய சொல்ல முடியாத வேதனை உடல் முழுக்கப் பரவியது.

## 8

தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை
தெருவினிலே விழலாமோ – தெருவினிலே
விழுந்தாலும் வேறோர் கைபடலாமா – ஒரு
மனதில் ஒருமுறைதான் மலரும் உறவல்லவா?

சில்லென்ற காற்றோடு கதை பேசிக் கொண்டே ஓடிய ஆற்றின் சலசலப்பைத் தவிர வேறெந்த சப்தமும் இன்றி அமைதியாக இருந்தது அந்த இடம்.

ஒரு திருமண விருந்தையே தன் நிழலில் வைத்துக் கொள்ளும் அளவிற்குப் பரந்து விரிந்து தன்னுடைய



விழுதுகளைப் பெரிய தூண்களாய் இறக்கியிருந்தது அந்த ஆலமரம். உலர்ந்த சருகுகளும் ஏராளமான பழங்களும் உதிர்ந்து நிறைந்து கிடந்தது.

கிளிகளும் மைனாக்களும் தங்கிச் செல்வதை உணர்த்திய எச்சங்கள். பறவைகளின் கூடுகள். காற்றில் ஊஞ்சலாடிய இளம் விழுதுகள். காற்றிலாடும் கிளைகள். இலைகளின் சலசலப்பு என சுப்பிரமணி ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டிருக்க பொறுமையின்றி அமர்ந்திருந்தாள் சுசீலா.

"மாமா! எவ்வளவு நேரம்தான் இந்த மரம் மட்டையைப் பார்த்துக் கொண்டிருப்பாய்? நான் அவஸ்தைப்படுவது உனக்குத் தெரியலியா?"

"எப்படிச் சொல்றதுன்னு யோசிக்கிறேன் சுசீ."

"எதுவா இருந்தாலும் சொல்லு மாமா."

"ம்... சொல்லணும். சொல்லித்தான் ஆகணும். ஆனா அதைக் கேட்டு நீ மனசு நோகக்கூடாது. அதான் தயங்குறேன்."

சுசீலாவிற்கு உடல் மொத்தமும் ஆட்டம் கண்டது. "நான்... நான் ஏன் மாமா மனம் நோகப் போறேன். சும்மா சொல்லு..."

"சுசி இன்னிக்குப் பார்த்தோமே அந்தப் பொண்ணு பேரு வசந்தி. ஊர் குளத்தூர்!" சொல்லியவாறே சுசீலாவின் முகத்தைப் பார்த்தான். கண்களில் கலவரத்துடன் தவிப்போடு இருந்தவளைப் பார்க்கையில் மனம் பதைத்தது.

"சுசி முதல்ல எனக்கொரு சத்தியம் பண்ணிக் கொடு!" என வலது கை உள்ளங்கையை நீட்டினான்.

"ஏ... எதுக்கு?"

"சொல்றேன்... சத்தியம் பண்ணு!"

"நீ விஷயத்தைச் சொல்லு. நான் சத்தியம் பண்றேன்."

"சுசி நான் சொல்றதைக் கேட்டுட்டு நீ எந்தத் தவறான முடிவும் எடுத்திடக் கூடாது. அதற்குத்தான் கேட்கிறேன்."

சுப்பிரமணியின் பூடகமான வார்த்தைகளே அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை உணர்த்திவிட நொறுங்கிய மனதை வெளிக்காட்டாமல் அவனைப் பார்த்தாள்.

"மாமா! ஏன் இவ்வளவு பீடிகை போடுறே... பட்டுன்னு சொல்லிடு!"

"வந்து... சுசி! நான் வசந்தியை அஞ்சாறு வருஷமா விரும்புறேன். அவளும்தான்...!"

உலகமே தன் இயக்கத்தை நிறுத்திவிட்டதைப் போல் உணர்ந்தாள் சுசீலா. ஓடிக் கொண்டிருந்த ஆறும் வீசிக் கொண்டிருந்த காற்றும் ஆலமரத்து இலைகளும் விழுதுகளும் சுசீலாவிற்காக மௌனவிரதம் இருந்து அவளது துக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டது.

கோபமோ ஆவேசமோ பதிலோ இல்லாமல் உறைந்து போயிருந்தவளைப் பார்த்துவிட்டு சுப்பிரமணி தன் கட்டுக்கதையைத் தொடர்ந்தான்.



"இந்த விஷயம் அவங்க வீட்டுக்குத் தெரியும். நம்ம தோட்டத்தில விளையுற பயிர் எல்லாம் அவங்ககிட்டதான் மொத்தமா கொடுப்பேன். அவங்க அப்பா தானியங்களை வாங்கி விற்கும் மொத்த வியாபாரி."

இப்போதும் சுசீலாவிடம் எந்த அசைவும் இல்லை.

"அப்போ போய் வந்து இருந்ததுல எங்களுக்குப் பழக்கம் ஆயிடுச்சி. அவங்க வீட்ல எல்லாருக்கும் சம்மதம். நம்ம வீட்ல கூட அன்னம்மா பாட்டிக்கு, அக்காவுக்கு எல்லாருக்கும் சம்மதம்தான்."

ஆவேசமாய்க் குறுக்கிட்டாள். "பொய் சொல்லாதே மாமா!"

"என்ன? பொய்யா?"

"ஆமாம் பொய்தான். நான் இதை நம்ப மாட்டேன். உன்னைப் பற்றி எனக்குத் தெரியும்?"

"சுசி! நான் சொல்றது உண்மை."

"பொய். நீ எதுக்கோ என்கிட்ட பொய் சொல்றே. மாமா! சின்ன வயசுல இருந்தே உன்னைப் பார்த்து வளர்ந்தவ நான். உன் ஒவ்வொரு அசைவும் எனக்குத் தெரியும்."

"என்ன தெரியும் உனக்கு. என் மனம்... அதில் உள்ள ஆசையைத் தெரிந்து கொள்ள முடியுமா உன்னால்?" கோபமாய்க் கேட்ட சுப்பிரமணியின் வார்த்தையில் அதிர்ந்து போனாள்.

"மா... மாமா!"

"நீ சின்னப் பொண்ணுன்னு உனக்குத் தெரியா... எத்தனை வருஷமா என் ஆசையை மனசுக்குள்ளயே பூ... வெச்சிருக்கேன் தெரியுமா?"

"மாமா!"

"இதோ பார். நான் ஆம்பிளை. எத்தனை வருஷ... வேணும்னாலும் காத்திருப்பேன். ஆனா வசந்தி... அவளுக்... அடுத்து இன்னும் ரெண்டு தங்கைங்க இருக்காங்க."

"அதுக்கு... நான் என்ன பண்ணணும்?"

"நீ இப்படி குழந்தைத்தனமா சுத்துறத விட்டுட்... சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கணும்."

சுசீலா புன்னகைத்தாள். "நினைச்சேன். இதுக்குத்... தானே அவ்வளவு பெரிய பொய்யைச் சொன்னே!"

"அறிவிருக்கா உனக்கு? நிலைமை புரியாமப்... பேசாதே!"

"மாமா!"

"இன்னிக்கு வசந்தியும் அவங்க அப்பாவும் எதுக்காக என்னைப் பார்க்க வந்தாங்கன்னு தெரியுமா?" சரளமாய் வந்த பொய்யில் மிரண்டு போனாள் சுசீலா.

"என்ன? உன்னைப் பார்க்க வந்தாங்களா?" கேட்கும்போதே தொண்டை அடைத்தது.

"ஆமா. அதான் வளையல் கடைக்கு நான் வரல்ல...."

"என்ன?" சுசீலாவின் உடல் ஒருமுறை அதிர்ந்தது.

"ஆமா! ஊர்ல அரசல் புரசலா உன்னையும் என்னையும் பத்தித் தப்பாப் பேச்சு அடிபடுதாம். அது அவங்க காதுக்கும் போயிருக்கு."



"என்ன? எப்படி?"

"நீதான் ஊர் முழுக்கச் சொல்லிட்டு அலையுறியே.... என் மாமனைத்தான் கட்டிக்கப் போறேன்னு...!"

"மாமா... நான்..."

"பேசாதே. நீ விளையாட்டுக்குச் சொல்றியோ வினையாச் சொல்றியோ... ஆனா உன்னால என் வாழ்க்கையே பறிபோயிடும் போலிருக்கு!" வேறுபுறமாய் திரும்பிக் கொண்டு சற்றே கடுப்பாய் அவன் சொல்ல, சுசீலா நிலைகுலைந்து போனாள்.

கால்கள் துவள மெல்ல எழுந்து நின்றாள்.

"மாமா! நீ... நீ என்ன சொல்றே?"

"ஆமா! தகப்பன் இல்லாத புள்ளன்னு கொஞ்சம் செல்லம் கொடுத்து வளர்த்திட்டோம். அதுக்காக அடுத்தவங்க மனசைப் புரிஞ்சுக்காமப் புண்படுத்துவியா?"

"நானா? நானா மாமா...!"

"பின்னே! வசந்தியோட அப்பா ஒரு மாசம் கெடு தந்திருக்காரு. அதுக்குள்ள உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டா வசந்தியை எனக்குக் கல்யாணம் பண்ணித் தருவாராம்."

"இது எந்த ஊர் நியாயம்? அவர் பெண்ணைக் கொடுக்க நான் ஏன் கல்யாணம் பண்ணிக்கணும்?"

"பைத்தியம் மாதிரி பேசாதே. அவருக்கு உம்மேல நம்பிக்கை இல்ல...!"

இன்னும் பலமாய் அதிர்ந்தாள். "என்ன? எம்மே[ல] நம்பிக்கை இல்லையா? ஏன்?"

"எம்மேல உள்ள ஆசையில ஏதாவது பண்ணி எ[ன்] மனசை மாத்திடுவியாம். நீ கல்யாணம் பண்ணி[க்கிட்டு] போயிட்டா நிம்மதியா அவர் பொண்ணைத் தருவாராம்...!" உண்மை போலவே சுப்பிரமணி சொல்ல, சுசீலா பேச்சற்று[ப்] போனாள்.

"பெண்ணைப் பெத்தவர் பயப்படறது நியாயம்தானே... எப்பவோ எங்க கல்யாணம் நடக்க வேண்டியது... உனக்கு[ம்] கல்யாண வயசாகட்டும்னுதான் பொறுத்திருந்தோம்."

"இப்போ... நான்தான் தடையா இருக்கேனா?"

"அப்படின்னு நான் சொல்லல...!"

"சரி மாமா. நானும் அம்மாவும் வீட்டை விட்டுப் போயிடுறோம். நீ தாராளமா கல்யாணம் பண்ணிக்க...!" சுசீலாவின் பதிலில் ஆடிப் போனான் சுப்பிரமணி.

பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாகிவிடும் போல் இருக்கே... பதறிய மனதை அடக்கிக் கோபமாய் அவளைப் பார்த்தான்.

"நீ என்ன? என்னை நிம்மதியா வாழவைக்கக் கூடாதுன்னு முடிவே பண்ணிட்டியா?"

"மாமா!"

"உங்க ரெண்டுபேரையும் தெருவில போக விட்டுட்டு நான் எப்படி சந்தோஷமா வாழ முடியும்? கூடப்பொறந் தவளையும் பொம்பளைப் பிள்ளையையும் அநாதரவா



தெருவில விட்டுட்டான் சுப்பிரமணின்னு எல்லாரும் சொல்லணுமா?"

"ஐயோ! ஏன் மாமா இப்படிச் சொல்றே?"

"நீ பண்றதும் அப்படித்தான் இருக்கு. இத்தனை வருஷம் உன்னைக் கண்ணா வளர்த்ததற்கு நல்ல கைம்மாறு செய்துவிட்டாய்."

"மாமா!"

"நான்கூட ரொம்பப் பெருமையாய்ச் சொல்லி அனுப் பினேன். என் சுசீலா என் பேச்சைத் தட்டமாட்டாள். சீக்கிரமே அவ கல்யாணத்தை முடிச்சிட்டு வர்றேன்னு வசந்திக்கு தைரியம் சொன்னேன்."

"மாமா! நான் உன் சுசீ மாமா!"

"நீ என் அக்காவின் மகள். அவ்வளவுதான்!" சுப்பிரமணி அழுத்தமாய்ச் சொல்ல, அவனை நம்ப முடியாமல் பார்த்தாள் சுசீலா.

"அ... அவ்வளவுதானா மாமா?"

"அவ்வளவுதான். வேறென்ன?"

"வேற எதுவுமே இல்லையா? என்னைப் பத்தி உன் மனசில..."

"நிறைய ஆசை இருக்கு. கற்பனை இருக்கு. உன்னை அமோகமா வாழ வைக்கணும்னு..."

"ஆனா... என் மனசுல என்ன இருக்குன்னு பார்க்க மாட்டியா?"

"நீ குழந்தை. இந்த வயசுல பார்க்கிறதெல்லாம் உனக்குப் பிடிக்கும். ஆனா நல்லது எது கெட்டது எதுன்னு எங்களுக்குத்தான் தெரியும்."

"மாமா!"

"இதோ பார். உன் அம்மா சிறுவயதிலேயே வாழ்க்கையை இழந்தவள். அவளுக்கு இருக்கும் ஒரே ஆறுதல் நீதான். உன்னை வாழவைத்துப் பார்க்க அவ ஆசைப்பட மாட்டாளா?"

"நீங்க ஆசைப்படுறது நியாயம். ஆனா நான் ஆசைப்பட்டா மட்டும் தப்பா?"

கோபமாய் அவள் புறம் திரும்பினான். "இப்படியே கூடக்கூடப் பேசி என்னைச் சாகடி. கடைசி வரை உங்களுக்கு உழைச்சுக் கொட்டிட்டே தனிமரமா இருந் திடுறேன். அதுதானே உன் ஆசை."

சுப்பிரமணியின் இந்த ஆயுதத்திற்குப் பலன் இருந்தது. திகைப்பாய் அவனைப் பார்த்த சுசீலாவின் கண்கள் கலங்கியது.

"வேண்டாம் மாமா. உன் உழைப்பில நாங்க இதுவரை சாப்பிட்டதே போதும். கடைசிவரை எங்களுக்காக நீ கஷ்டப்பட வேண்டாம்."

சலிப்போடு உச் கொட்டினான். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சுசீலா.

"மாமா! உன் விருப்பம் போலச் செய்."



"என்ன?"

"என் கல்யாணம் நடந்தாத்தான் நீ சந்தோஷமா வாழ்வேன்னா என் கல்யாணம் நடக்கட்டும்!" என்றாள் மரத்த குரலில்.

"சுசி! நிஜமாவா சொல்றே?"

"இதுக்கு மேலயும் உனக்குத் தடையா இருக்க மாட்டேன்."

"சேச்சே! மாமா ஒரு கோபத்தில அப்படிப் பேசிட்டேன். நீ எதையும் மனசில வெச்சுக்காதேடா."

"மாமா!"

"என்னடா?"

"எனக்கொரு உதவி செய்றியா?"

"சொல்லுடா. உனக்குச் செய்யாம யாருக்குச் செய்வேன்?"

"இனிமே என்கிட்ட பேசும்போது கோபமாவே பேசு."

"சுசீ."

"நீ அன்பா பேசினா என்னால உன்னை விட்டுப் போக முடியாது."

"சுசி! இப்படிப் பேசாதேடா?"

"நான் போறேன் மாமா!" காலில் செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டாள். பதட்டமாய்க் குறுக்கே வந்தான்.

"எங்கேம்மா போறே?"

"வீட்டுக்குத்தான்."

"தனியா ஏன் போகணும்? வா... நானும் வர்றேன்."

"வேணாம் மாமா. தனியா இருந்து பழகிக்கிறேன்."

"சுசி ஏன்டா இப்படிப் பேசுற?"

"இனிமே பேசுறதையும் குறைச்சுக்கிறேன் மாமா!" ... நடந்தாள்.

"சுசி நில்லும்மா..."

"பயப்படாதே மாமா! நிச்சயமா தற்கொலை பண்ணிக்க மாட்டேன். ஏற்கனவே என் உசிர் போயிடுச்சி மாமா."

"சுசி!"

"எப்போ உன் மனசில நான் இல்லேன்னு தெரிஞ்சதோ அப்பவே நான் செத்துட்டேன் மாமா. இப்ப நான் வெறும் பொணம்தான்."

"சுசி! தயவுசெய்து என்னைக் கொல்லாதே."

"நீ கொன்னுட்டியே மாமா. என்னை... என் ஆசையை... என் நேசத்தை... நீ கொன்னுட்டியே மாமா."

"சுசீ...!"

"இல்ல மாமா. இனிமே இப்படிப் பேச மாட்டேன். நீ யாரைக் கைநீட்டுறியோ அவனுக்கு இந்தப் பொணம் கழுத்தை நீட்டும்."



"அவன் யாரா இருந்தாலும் சரி. ஆனா கொஞ்சம் தொலைவான இடமா இருக்கட்டும். உன் கண்ணில படாம ஒதுங்கிப் போயிடுவேன்."

"சுசி! ஏன்டா இப்படிப் பேசுற? நீ சந்தோஷமா வாழுறதை நான் பார்க்க வேண்டாமா?"

"வேண்டாம் மாமா. நீ நினைக்கிறது நடக்காது."

"சுசி"

"நீ இல்லாம நான் சந்தோஷமா வாழமாட்டேன். ஆனா நீ சந்தோஷமா இருக்க நான் தடையா இருக்க மாட்டேன்."

"சுசிம்மா!"

"நீ நாளைக்கே மாப்பிள்ளையோட வந்தாலும் சரி... எனக்குச் சம்மதம்தான். நான் போறேன்!" விடுவிடுவென நடந்தவளைக் கண்களில் பொங்கிய கண்ணீரோடு தவிப்பாய்ப் பார்த்தான் சுப்பிரமணி.

இதயம் இருந்த இடம் வெறுமையாய் ஆனதைப் போல் இருந்தது. தன் கண்மணியிடம் கடிந்து பேசிய நாக்கை அறுத்தெறிய வேண்டும் போல் தோன்றியது.

அவளது கண்ணீரைத் துடைக்காத கைகளை மரத்தில் ஓங்கிக் குத்தினான். கைகள் வலித்தது.

அதைவிட மனம் வலித்தது.

# 9

தெய்வங்கள் சிலநேரம் தவறாக
நினைக்கின்றது பொருந்தாத
இருநெஞ்சை மணவாழ்வில்
இணைக்கின்றது கல்யாணமே
அன்பின் ஆதாரம்தான்!

அதுநாள் வரை கூவித் திரிந்த குயில் அதன் பிறகு ஊமையாகிப் போனது.

பெற்றவளிடமோ தூக்கி வளர்த்த பாட்டியிடமோ உள்ளங்கையில் தாங்கிய மாமனிடமோ ஒரு வார்த்தையும் பேசவில்லை சுசீலா.

தன் அறையை விட்டு எதற்கும் வெளியே வரவே இல்லை. முதலில் அவளை நினைத்துக் கலங்கியவர்கள் மாப்பிள்ளை வீட்டார் அனுப்பிய தகவலில் உற்சாகமாயினர்.

போட்டோவைப் பார்த்தே பெண் பிடித்து விட்டதாகவும் நான்கே நாட்களில் நிச்சயதார்த்தம் என மாரியம்மாள் தகவல் அனுப்பியிருந்தாள்.

அந்தச் சந்தோஷத்தில் மகளின் அறைக்குள் நுழைந்து மகளது முகத்தை வழித்து நெட்டிமுறித்தாள் ஈஸ்வரி. அப்போதும் கூட மகளிடம் அசைவில்லை.

"ராசாத்தி! மாப்பிள்ளைக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்காம். வர்ற வியாழக்கிழமையே நிச்சயம் பண்ணிடலாம்னு உன் அத்தை சொல்லி அனுப்பி யிருக்காக...!"



தாயின் குரல் காதிலே விழாததுபோல் ஜன்னல் வழியே வெளியே வெறித்துக் கொண்டிருந்தாள் சுசீலா.

"கண்ணு! மாப்பிள்ளையை நீ பார்க்கணுமே... முன்ன மாதிரி இல்லை. ரொம்ப மாறியிருக்கான். ச்சே! மருமகனாச்சே... இனி மரியாதையாப் பேசணும். சினிமாவில் வர்ற ஹீரோ மாதிரி இருக்காரு."

இப்போதும் மகளிடம் அசைவின்றிப் போனதும் கலக்கமாய் மகள் அருகே அமர்ந்தாள் ஈஸ்வரி.

"இதோ பாரும்மா... இந்த இடம் அமையணுமேன்னு நானும் உன் மாமனும் ரொம்பக் கஷ்டப்பட்டோம். என்னவோ நம்ம நல்ல நேரம் எல்லாம் கூடிவந்திருக்கு. இந்த நேரத்தில நீ இப்படி இருந்து காரியத்தைக் கெடுத்திடாதம்மா."

சுசீலா மௌனமாய்த் தாயைப் பார்த்தாள்.

"என்னம்மா பார்க்கிற? இது எல்லாம் உன் நல்லதுக்குத்தான் பண்றோம். இப்போ உனக்குப் புரியாது. கல்யாணமானதும் நீயே புரிஞ்சுப்ப."

வெறுப்பாய் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் சுசீலா. ஈஸ்வரிக்குக் கோபம் வந்தது.

"இதோ பாருடி. இப்படியே இருந்து கடைசி நேரம் ஏதாவது ஏடாகூடம் பண்ணினே... அப்புறம் என்னையோ உன் மாமனையோ உசுரோட பார்க்க முடியாது சொல்லிட்டேன்.

ஒழுங்கா தலைவாரி சுத்தமா சிரிச்ச முகமா இரு- கல்யாணப் பேச்சு முடிவானது தெரிஞ்சு உறவுக்காரங்க வர

ஆரம்பிச்சிடுவாங்க. நல்ல விதமா பேசிச் சிரிச்சி கலகலப்பா இரு.

இல்லேன்னா ஆளாளுக்குக் கதை கட்டி விட்டுடுவாங்க. என்ன புரியுதா?" என்றவாறு எழுந்து கொண்ட அன்னையை திரும்பியும் பார்க்கவில்லை சுசீலா.

கலங்கும் மனதோடு தம்பியைத் தேடிச் சென்றாள். அவசரமாய் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான் சுப்பிரமணி.

"தம்பி! வெளியில போறியா?"

"ஆமாக்கா. மதுரை வரை போகணும்."

"மதுரையா? எதுக்குத் தம்பி?"

"நிச்சயதார்த்தத்தில என்ன விருந்து வைக்கலாம்? எத்தனை பேர் வருவாங்கன்னு கேட்கிறதுக்குப் போனேன் இல்லை!"

"ஆமா."

"மாப்பிள்ளையையும் பார்த்தேன். அவரு பெரிய பட்டியலே போட்டுட்டார்."

"என்னவாம்?"

"அக்கா! மாப்பிள்ளையோட நண்பர்கள் நிறைய பேர் வர்றாங்களாம். அவங்களுக்கு நம்ம ஊர் சாப்பாடு பிடிக்காதாம்."

"என்ன?"

"ஆமாக்கா. அவுக டவுன்காரவுகல்ல. ராத்திரிக்கு டிபனுதான் சாப்பிடுவாங்களாம். சப்பாத்தி, பரோட்டா அப்புறம்



ஏதோ நூடுல்ஸ்னு சொன்னாங்க. இதை எல்லாம் செய்யணுமாம்."

ஈஸ்வரி வாயைப் பிளந்தாள்.

"தம்பி! இதையெல்லாம் யார் செய்யறது? நம்மூரு சமையல்காரங்க சாப்பாடு, வடை, பாயாசம் தவிர வேற செய்யமாட்டாங்களே?"

"அதான்க்கா மதுரைக்குப் போறேன். நம்ம பரமசிவன் இருக்கான் இல்ல... அவனைப் பார்த்து பேசி சமையல் ஆளைத் தேடி அட்வான்ஸ் கொடுக்கணும்."

"அதுக்கா... இப்பவே போற?"

"சமையல் ஆள் கிடைக்கிறதே கஷ்டம். இதுல தாமதமாப் போனா சரிப்படுமா? அப்புறம் ஏதோ சொன்னாரே?"

"என்னய்யா...!"

"அதான்க்கா.... கல்யாணப் பொண்ணுக்கு அலங்காரம் பண்ணுவாங்களாமே... அவங்களையும் பார்க்கணும்."

"அது யாருடா?"

"எனக்கு என்னக்கா தெரியும்? மாப்பிள்ளைதான் சொன்னார். அவங்க வந்துதான் சுசீயை அலங்கரிக்கணுமாம்..."

"ஏன்டா தம்பி! இவனுங்க என்ன சீமையிலயே பொறந்து வளர்ந்தானுங்களாமா? நம்ம ஊர் முறைப்படி தோழிப் பொண்ணுங்கதானே அலங்காரம் பண்ணணும்?"

"நான் சொன்னேன். ஆனா அவர் என்ன சொல்றார் தெரியுமா?"

"என்ன சொன்னார்?"

"நம்ம ஊர் பொண்ணுங்க எண்ணெய்த் தேய்ச்சு படியவாரி ரிப்பன் கட்டிவிடுவாங்களாம். அது அசிங்கமா இருக்குமாம். கூடவர்றவங்க எல்லாம் கேலி பண்ணு வாங்களாம்..."

"இது என்ன அநியாயம்?"

"அக்கா! நமக்குத்தான் இது தெரியல்ல... மதுரையில இப்படி அலங்காரம் பண்றதுக்கே நிறைய கடை இருக்குதாம். ஒரு மணிநேரத்துக்கு ரெண்டாயிரம் ரூபாயாம்..."

"அடப்பாவி! தம்பி இதெல்லாம் வேண்டாம்டா."

"என்னக்கா நீ? மாப்பிள்ளை சொல்லியும் நாம கேட்கலன்னா தப்பாகிடாதா?"

"தம்பி! நிச்சயத்திற்கே இப்படி செலவை இழுத்து வைக்கிறாங்களே... அப்போ... கல்யாணத்திற்கு?"

"நீ ஏன்க்கா பயப்படுற? நம்ம சுச்க்குத்தானே செய்றோம்."

"அதில்லடா..."

"அக்கா! நீ கண்டதையும் போட்டுக் குழப்பாதே. எனக்கு நேரமாகுது. வரட்டுமா?"

"தம்பி! வந்து..." தயக்கமாய் இழுத்தாள் ஈஸ்வரி.

"என்னக்கா?"



"தம்பி! நாம எதுவும் தப்பு பண்றோமோ?"

"அக்கா! என்னாச்சி உனக்கு?"

"இல்ல தம்பி! ரொம்ப அவசரப்படுறமோன்னு தோணுது."

"ஏன் அப்படிச் சொல்றே?"

"பின்னே என்னடா? இவ என்னன்னா இடி விழுந்த மாதிரி ஒரே இடத்தில இருக்கா. ஒரு பேச்சு, சிரிப்பு எதுவும் இல்ல..."

"அதெல்லாம் கல்யாணமானா சரியாகிடும். பயப் படாதே!"

"சரியாகிடுமா தம்பி?"

"என்னக்கா நீ?"

"இல்ல தம்பி! என்னன்னு தெரியல்ல... எனக்கு நெஞ்செல்லாம் படபடப்பா இருக்கு. வயிறெல்லாம் பிசையுற மாதிரி..."

"அக்கா! பொண்ணைப் பெத்த எல்லா அம்மாவுக்கும் இருக்கிற பதட்டம்தான் இது."

"இல்ல தம்பி! இது வேற மாதிரி இருக்கு...!"

"வேற மாதிரின்னா?" புரியாமல் கேட்டான் சுப்பிரமணி.

"தம்பி! உன் மச்சான் இறப்பதற்கு முந்தைய நாள் இப்படித்தான் இருந்தது. அப்புறம் நம்ம அம்மா சாகும்போது கூட இதே மாதிரிதான்...!"

"அக்கா! எந்த நேரம் என்ன பேசுற?"

"ஆமா தம்பி! எனக்கு அப்படித்தான் இருக்கு. இவ ஏதாவது பண்ணித் தொலைச்சிடுவாளோன்னு ரொம்ப பயம்மா இருக்குப்பா."

"வீணாப் பயப்படாதே. நான் அவகிட்ட எல்லாம் பேசிட்டேன். ஒருநாளும் நம்ம சுசீ அப்படி எதுவும் பண்ணமாட்டா. போ... போய் வேலையைப் பார். நான் கிளம்புறேன்!" - ஈஸ்வரிக்குத் தைரியம் சொல்லி விட்டாலும் சுப்பிரமணியின் மனதிற்குள் அந்த அச்சம் இருக்கத்தான் செய்தது.

ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்பதான படபடப்பு... பய உணர்வு அவனை ஆட்டிப் படைத்தது.

இந்த நிச்சயம் நல்லபடியாய் முடியுமா என்ற பயம் தோன்றி இம்சித்தது. ஓடியாடி வேலை பார்த்தாலும் மனம் அரித்துக் கொண்டேதான் இருந்தது.

ஆனால் நிச்சயதார்த்த நாளில் ஊர் முழுக்கக் கூடியிருக்க, விசேஷ அலங்காரிப்பில் ஜொலித்த சுசீலாவை மாப்பிள்ளை ஜெகனுடன் ஒன்றாய் சேர்த்து நிறுத்திப் பார்த்தபோது அனைத்து பயமும் பாரமும் விலகிப் போனது.

நெற்றிச்சுட்டி, கம்மல், ஜிமிக்கி, வளையல், ஒட்டியாணம் என முழுக்க முத்துச்சரங்களால் அலங்கரித் திருந்தாள் அந்த அழகு நிலையப் பெண்.

சந்தனநிறப் பட்டில் முத்து அலங்காரத்தில் பார்ப்ப வர்களை வாய்பிளக்க வைத்தாள் சுசீலா.



குனிந்த தலையை நிமிர வைக்க மாப்பிள்ளையும், உடனிருந்த நண்பர்களும் பெரும்பாடுபட்டுத் தோற்றனர். இறுதியில் அலட்சியமாய்த் தோளைக் குலுக்கினான் ஜெகன்.

"இந்த ஊர் சுத்தப் பட்டிக்காடுடா... இங்க எல்லாக் கல்யாணத்திலயும் பொண்ணுங்க இப்படித்தான் இருப் பாங்க."

ஜெகன் சொன்னதும் உடனிருந்தவர் ஏதேதோ சொல்ல, கலகலவென சிரித்தது அந்த நண்பர்கள் கூட்டம். அப்போதும் அசையாமல் பதுமை போல் நின்றிருந் தவளைத் தூரமாய் நின்று கண்கள் கசிய பார்த்துக் கொண்டான் சுப்பிரமணி.

இரண்டு ஊர் ஜனங்களும் கூடியிருக்க, நிச்சயம் முடிந்து விருந்து தொடங்கும் போது மணி பத்து. ஒருவர் ஒருவராய் விசேஷமாய்க் கவனித்து பரிமாறி விருந்து முடியும்போது மணி நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டியது.

உறவுப் பெரியவர்கள் ஒன்றாய்க் கூடி, "நடுச்சாமம் ஆகிப் போச்சு. இப்பப் புறப்பட்டா குடும்பத்துக்கு ஆகாது. அதனால இங்கேயே தங்கிட்டு விடிஞ்சதும் போவோம்!" என்றார்கள்.

"அது எப்படி? பொண்ணு வீட்ல தங்குறது முறையில்லயே...!" ஒரு வயதான பெண்மணி தொடங்க,

"ஆமாம். இது நம்மூரு வழக்கமில்லையே...!" என ஒருவர் அதை ஆமோதித்தார்.

"அதெல்லாம் சரிப்பா. இப்பவே நேரம் கடந்து போச்சு. இனிமே கிளம்பிப் போறது சரியில்லப்பா... ரெண்டு சுடுகாடு தாண்டிப் போகணுமே...!"

"நாம மட்டும்னா பரவாயில்லை. ஆனா மாப்பிள்ளையும் இருக்கானே... பூவாசத்தோட வெளியே போறப்போ ஏதாவது ஆயிடுச்சின்னா..."

"ஏய்! ஆமாப்பா. இது யோசிக்க வேண்டிய விஷயம் தான்."

"கல்யாணம் நடக்கிற வரை காத்து கறுப்பு படாம இருக்கணும். மாப்பிள்ளே இங்கேயே தங்கிட்டுப் போகட்டும்."

"ஏய்! புரியாமப் பேசாதப்பா... மூணு பஸ், நாலு டக்கர், ரெண்டு கார் முழுக்க ஆட்கள் இருக்காங்க. அவ்வளவு பேரையும் எங்கே தங்க வெப்பே?"

"இடம்தான் பிரச்சனையா? அப்போ மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மட்டும் தங்கட்டும். நாங்க கிளம்பறோம்."

"இது நல்ல யோசனை. அப்படியே செய்திடலாம்."

ஆளாளுக்குப் பேசி முடிவெடுக்க, அந்த முடிவிற்கு அனைவரும் கட்டுப்பட்டு மாப்பிள்ளை வீட்டாரை விட்டு மற்றவர்கள் புறப்பட, ஜெகன் தன் நண்பர்களை நெருங்கினான்.

"டேய்! எல்லாரும் போயிட்டா எனக்குப் போரடிக்கும்டா. யாராவது ரெண்டு பேராவது நில்லுங்க."

"ஜெகன்! இந்த ஊர்ல எல்லாம் எங்களால ஸ்டே பண்ண முடியாதுடா. ஆளை விடு!" என மற்றவர்கள் நழுவிவிட, கிஷோரும் சுரேந்திரனும் சம்மதித்தனர்.

"நாங்க இருக்கோம் மாப்பிள்ளை. ஜமாய்ச்சிடுவோம்."



"தேங்க்ஸ்டா!"

"கார்ல எல்லாம் இருக்கில்ல..." ஆங்கிலத்தில் கேட்டான் கிஷோர்.

"நிறைய இருக்கு. திரும்பிப் போகும்போது ஆரம்பிக்கலாம்னு இருந்தோம். இப்போ இந்த ஊர்லயே ஆரம்பிச்சிட வேண்டியதுதான்."

"இப்படின்னு தெரிஞ்சா எவனும் போயிருக்க மாட்டான். நமக்கு லக்தான்!" மூவரும் ஆங்கிலத்திலேயே உரையாட, மாரியம்மாள் அவர்களை நெருங்கினாள்.

"ஜெகன்! நானும் அப்பாவும் இங்கே படுத்துக்கிறோம்."

"அப்போ நாங்க?"

"டேய்! இது கிராமம்டா. கல்யாணத்துக்கு முன்னால மாப்பிள்ளை பெண் வீட்ல தங்கக்கூடாது."

"அப்போ நாங்க கிளம்பவா?"

"இல்லடா. இவங்க தோட்டத்து வீட்டுல தங்கிக்கச் சொல்றாங்க."

"என்ன? மோட்டார் ரூம்லயா? நான்சென்ஸ். எங்களைப் பார்த்தா எப்படித் தெரியுது?"

சுப்பிரமணி பதறினான். "மாப்பிள்ளே. நீங்க தப்பா நினைச்சிட்டீங்க."

"என்னய்யா மாப்பிள்ளை... மண்ணாங்கட்டின்னு... என் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் ராயல் ஃபேமிலி. எனக்காகத் தான் இந்த ஊருக்கே வந்தானுங்க. இவங்களை மோட்டார் ரூமில தங்க வெக்கணுமா?"

"இல்ல மாப்பிள்ளை. தோட்டத்து வீடு இதே மாதிரி ஒட்டு விடுதான். கட்டில், தலையணை எல்லாமே இருக்கு."

"ஃபேன்?"

"அது எதுக்கு மாப்பிள்ளை? ஜன்னலைத் திறந்துவிட்டா காத்து அள்ளி வீசுமே... சுத்திலும் மரத்தோட்ட குளிர்ச்சி. நெல்மணம். அருமையா இருக்கும் மாப்பிள்ளை."

"ஜெகன். போலாம்டா! நமக்கு எந்த இடைஞ்சலும் இருக்காது."

"ஓ.கே. போலாம்." - அரைமனதாய் ஒப்புக் கொண்டு சுப்பிரமணியோடு புறப்பட்டனர்.

தோட்டத்திற்குள் நுழைந்து வீட்டின் கதவைத் திறந்ததும் ஜெகன் முகம் சுழித்தான். அறை முழுக்கக் கேழ்வரகு மூட்டையும் தேங்காயும் நிறைந்து கிடந்தன.

"என்ன இது வீடா... குடோவுனா?"

"இருங்க மாப்பிள்ளை. பத்தே நிமிஷத்தில சுத்தம் பண்ணிடுறேன்."

"கிளீன் பண்ணிட்டுக் கூப்பிடுங்க. நாங்க காரை எடுத்திட்டு வர்றோம்."

"கார் தோட்டத்துக்குள்ள நுழையாது மாப்பிள்ளை."

"தோட்டத்துக்கு வெளியே நிறுத்திடுறோம். வேலையைப் பாருங்க!" என அவர்கள் புறப்பட்டுச் செல்ல, ஒற்றை ஆளாய் நின்று அனைத்துப் பொருட்களையும் வெளியே உள்ள தாழ்வாரத்தில் அடுக்கினான் சுப்பிரமணி.



அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்து ஜன்னல்களைத் திறந்து வைத்தான். சுவரோரமாய்ச் சாய்த்து வைத்திருந்த நார்க்கட்டிலைத் தட்டிப் போட்டான். தலையணை, பாய் என எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு நிமிர்ந்தபோது அவர்கள் கையில் பார்சலோடு உள்ளே நுழைந்தனர்.

அறையைப் பார்த்ததும் விசிலடித்தான் கிஷோர். "வாவ்! சரியான வேலைக்காரன்யா நீ. ரொம்ப சுறுசுறுப்பா இருக்கே...!"

"கிஷோர்! இவர் வேலைக்காரன் இல்ல... பெண்ணோட தாய்மாமன்!" என்றான் ஜெகன்.

"எந்த மாமனா இருந்தா என்ன ஜெகன்! வேலை முடிஞ்சதில்ல... வெளியே அனுப்பு!" அவசரப்படுத்தினான் சுரேந்திரன்.

"ஓ.கே. நீங்க கிளம்புங்க."

"மாப்பிள்ளை நான் வெளியே படுத்திருக்கேன். எதுவும் அவசரம்னா எழுப்புங்க."

"நோ... நோ... நாங்க தூங்க மாட்டோம். ஜாலியா பேசிச் சிரிப்போம். உங்க தூக்கம் கெட்டுடும். நீங்க வீட்டுக்குப் போங்க..."

"பரவால்ல மாப்பிள்ளை... நான் இருக்கேன்."

"ஹலோ! சொன்னாப் புரியாதா? கிளம்புங்க..."

"மாப்பிள்ளை..."

"யோவ்! கிளம்பேன்யா. எங்க அவசரம் புரியாம கழுத்தறுக்கிறியே..." சுரேந்தர் புலம்பியவாறே பாட்டிலை வெளியே எடுக்க, சுப்பிரமணி மிரண்டு போனான்.

"மாப்பிள்ளை! நீ... நீங்க குடிப்பீங்களா?"

"யோவ்! எந்தக் காலத்திலய்யா இருக்க நீ. கேள்வி கேட்கிறான் பாரு! கிஷோர்... இவனை வெளியே தள்ளி கதவைச் சாத்துடா."

"வே... வேணாங்க.... நான்... நான் போயிடுறேன்!" சுப்பிரமணி வெளியேறியதும் கதவு அறைந்து சாத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து உற்சாகக் கூக்குரல் அந்த அமைதியான நள்ளிரவில் எதிரொலித்தது.

'தப்புப் பண்ணிவிட்டோமோ!' என முதன்முறையாய் யோசித்தான் சுப்பிரமணி. ஆனால் மாப்பிள்ளையை அங்கே தங்க வைத்ததுதான் பெரிய தப்பு என அப்போது அவன் உணரவில்லை. கால்கள் தொய்ய வீட்டை நோக்கி நடந்தான். ஓய்வைக் கேட்டு உடல் கெஞ்சியது.

## 10

ஆழ்கடலில் தத்தளித்து – நான்
எடுத்த முத்து ஒன்றை விதியவன்
பறித்தது ஏன் உற்சவத்து சிலை
இதன் பூச்சரங்கள் உதிர்ந்ததும்
பூஜையதும் கலைந்தது ஏன்?

முற்றத்தில் போடப்பட்டிருந்த பந்தலுக்குள் பெண்வீட்டு உறவினர்கள் வரிசையாய் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்க, சுவரோரமாய் கிடைத்த இடைவெளியில் படுத்துக் கால்களை நீட்டிக் கொண்டான் சுப்பிரமணி.



ஒரு வாரமாய்த் தூக்கமின்றி அலைந்த அலுப்பும் களைப்பும் சேர படுத்த மறுநிமிடமே தூங்க ஆரம்பித்தான். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபோது அந்தச் சலசலப்புக் கேட்டது.

"ஏய் மாப்பிள்ளை! எழுந்திருப்பா...!" யாரோ தன்னைப் பற்றி உலுக்கியதைப் போலிருந்தது.

கண்ணைத் திறக்க இயலாமல் முனகினான். "ம்...?"

"ஏய் மாப்பிள்ளே! மாப்பிள்ளை வீட்டுக்காரங்க அவசரமா கிளம்புறாங்க. சீக்கிரம் எழுந்துரு!" பொன்ராஜ் மாமாவின் குரலில் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான் சுப்பிரமணி.

'விடிந்துவிட்டதா? அவ்வளவு நேரமா தூங்கினேன்...' எனக் கண்களைக் கசக்கியவன் அதிர்ந்தான். சுற்றுப்புறம் இன்னும் இருட்டாகவே இருந்தது.

"மாமா! இன்னும் விடியலியே?" என்றவாறே எழுந்தான்.

"மாப்பிள்ளே! இந்த ஜெகன் பயலும் கூட்டாளிகளும் சேர்ந்து ஏதோ திருட்டுத்தனம் பண்ணியிருக்காங்க. அவனுங்க முகமே சரியில்ல..."

"எங்கே மாமா அவங்க?" வேகமாய் எழுந்து வாசலை அடையும் முன் இரண்டு கார்களும் சீறிப் பாய்ந்து புறப் பட்டது.

பதட்டமாய்ப் பின்னால் ஓடினான் சுப்பிரமணி. "மாப்பிள்ளே! ஏன் இப்படிச் சொல்லாமக் கொள்ளாமக் கிளம்பிட்டீங்க... மாப்ளே!"

அதற்குள் கார் வெகு தூரம் சென்று விட்டிருக்க, தூக்கம் கலைந்த கண்களில் கலவரமாய் பொன்ராஜை திரும்பிப் பார்த்தான்.

"மாமா! என்ன இது? ஏன் இப்படி விடியுமுன்னே ஓடுறாங்க...?"

"எனக்கும் அதுதான் புரியல்ல மாப்பிள்ளே... முத வண்டியில கிளம்பணும்னு நான் சீக்கிரம் எழுந்தேனா? அந்தப் பயலுக ரகசியமா வந்து மாரியம்மாளையும் அவ புருஷனையும் எழுப்பினாங்க."

"ஏதாவது சொன்னாங்களா?"

"மாரியம்மா ஏதோ கேட்டாப்பா... இங்கே நிற்கக் கூடாது. உடனே போகணும். வா...ன்னு கூட்டிட்டுப் போனாங் கப்பா. அந்தப் பயலுக முகமெல்லாம் வேர்த்துப் போய் இருந்தது. ஏதோ தப்பு நடந்திருக்கு! குடிச்சிருப்பானோ?"

"நேத்து நைட்டே குடிச்சானுங்க மாமா!"

"குடிகாரப் பயலா அவன்? மாப்பிள்ளே! நீ பார்த்தியா?"

"ஆமா மாமா. என்னை வெளியே போகச் சொன்னானே..."

"அப்போ குடிச்சிட்டுச் சும்மாதானே இருந்திருப்பானுங்க. ஏன் இப்படி ஓடணும்?"

"அதான் மாமா எனக்கும் புரியல்ல!" புரியாமல் கேசத்தைக் கோதினான்.



"சரி! முதல்ல ஈஸ்வரிகிட்ட சொல்லுவோம்."

"வேண்டாம் மாமா. அவங்கள்லாம் தூங்கட்டும். இப்பவே எழுப்பிச் சொன்னா பதறிப் போவாங்க. நாளைக்குக் காலையில சொல்லிக்கலாம்."

"அப்படியா சொல்றே?"

"ஆமா மாமா. இவங்க போனது நம்மோட இருக் கட்டும். நான் விடிஞ்சதும் குளத்தூர்ல போய் நேர்ல பார்த்துப் பேசிக்கிறேன்."

"சரி மாப்பிள்ளை! எனக்கு நாலரைக்கு முத பஸ் வந்திடும். நான் போயிட்டு வரட்டுமா?"

"சரி மாமா. போயிட்டு வாங்க. நான் எதுக்கும் தோட்டம் வரைக்கும் போயிட்டு வர்றேன்."

"சரி மாப்பிள்ளே!" பொன்ராஜ் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொள்ள, குழப்பமான யோசனையோடு வீட்டை விட்டு சற்றே ஒதுங்கியிருந்த மரக்கதவைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்தான்.

ஒற்றையடிப் பாதையை விட்டு விலகி தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்த வரப்பில் ஏறும்போது கண்கள் இயல்பாய் தோட்ட வீட்டிற்குப் போகத் திடுக்கிட்டான்.

ஏராளமான புகையோடு தீ கொளுந்துவிட்டு எரிய, பதறியடித்து ஓடினான் சுப்பிரமணி.

"குடிகாரப்பய சிகரெட் எதுவும் பிடிச்சிட்டு சாக்குமூட்டை மேல வீசிட்டானுங்களா? தீப்பிடிச்சதும் பயந்து ஓடிட்டானுங் களா?" மூச்சுவாங்க ஓடிப்போனவன் இன்னும் அதிர்ந்தான்.

தாழ்வாரத்தில் அடுக்கி வைத்திருந்த மூட்டைகள் அப்படியே இருக்க, நெருப்பு அறைக்குள் எரிந்து கொண்டிருந்தது. வெறுமனே சாத்தியிருந்த கதவை படாரெனத் திறந்து கொண்டு நுழைந்தவன் அதிர்ந்து துடித்துப் போனான்.

உடல் முழுக்க தீப்பற்றி எரிந்து கொண்டிருக்க, துளியும் அசையாமல் அலறாமல் துடிக்காமல் நின்று கொண்டிருந்தாள் சுசீலா.

சர்வமும் ஆடிப்போக, "சுசி! என்னம்மா இப்படிச் செய்துட்டே!" என வீறிட்டவாறே கட்டிலில் கிடந்த போர்வையை எடுத்து ஓடிச் சென்று எரியும் உடலைப் போர்த்திக் கொண்டான்.

கண்களை இறுக மூடிக்கொண்டிருந்த சுசீலா சுப்பிரமணியின் குரலில் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள். தன்னைப் போர்வையால் அணைத்தவனை உதறித் தள்ளினாள்.

"என்னைத் தொடாதே மாமா! போ... வெளியே போ."

"சுசி ஏம்மா! ஏம்மா இப்படிப் பண்றே?"

"விடு மாமா. என்னைத் தொடாதே. இது... இது பாவப்பட்ட உடம்பு மாமா. களங்கப்பட்டுப் போச்சு."

"சுசீ...!"

"வெளியே போ மாமா. என்னை விடு!" சுப்பிரமணியை உதறியதில் அவளது உடம்பு சதைகள் பிய்ந்து விழ, வீறிட்டான் சுப்பிரமணி.



"ஐயோ! என் கண்ணே! உடம்பெல்லாம் இப்படிக் கருகுதே... என் கண்ணம்மா! உனக்கு வலிக்குமே..." கதறினான். போர்வையோடு அவளைத் தூக்கி வெளியே கொண்டு வந்தான்.

"யாராவது வாங்களேன்! கருப்பா...! தெய்வானை... யாராவது ஓடி வாங்க..." அந்த அதிகாலை வேளையில் சுப்பிரமணியின் குரல் திசை எங்கும் எதிரொலித்தது.

தோல் உரிந்த கையால் சுப்பிரமணியின் வாயை மூடினாள் சுசீலா. "வேண்டாம் மாமா! யாரையும் கூப்பிடாதே. என்னை இந்தக் கோலத்தில் யாரும் பார்க்க வேண்டாம்."

"சுசீம்மா... நீ ஏன்டா கண்ணு இங்கே வந்தே? என்னம்மா ஆச்சு. மாப்பிள்ளை வீட்டுக்காரனுங்க ஏம்மா ஓடினாங்க?"

"வேண்டாம் மாமா. உனக்கு எதுவும் தெரிய வேண்டாம். நான் போயிடுறேன்!" மூச்சுவாங்கச் சொன்னாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதேடா... எனக்கு நீ வேணும். உன்னை இழக்க மாட்டேன்! முதல்ல ஆஸ்பத்திரிக்குப் போவோம்."

"நான் வேண்டாமின்னுதானே ஒரு குடிகாரனுக்கு... பொம்பளைப் பொறுக்கிக்கு என்னைக் கொடுத்தே?"

"அப்படி இல்லடா கண்ணு. எனக்கு இவனைப் பத்தி எதுவுமே தெரியாமப் போச்சே...!"

"அவன்.. அவன் நல்லவன் இல்ல மாமா. என்னை... என்னை..."

"சொல்லுடா கண்ணு! நீ ஏன் இங்க வந்தே?"

"மாமா! தூக்கம் வராம புழக்கடையில உட்கார்ந்திருந்தேன். அப்போ அவன் வந்தான்."

"யாரு?"

"அவன்தான்... ஜெகன்."

"அவன் ஏன் அங்கே வந்தான்?"

"நீ அதிகமா குடிச்சிட்டு விழுந்து கிடக்கிறன்னு சொன்னான். என் பேரைச் சொல்லிப் புலம்புறதாச் சொன்னான்."

"நான் முற்றத்திலதானம்மா படுத்திருந்தேன்."

"எனக்குத் தெரியாதே மாமா. நிறைய பேசி முடிவு பண்ணனும். நீ மட்டும் தோட்டத்திற்கு வான்னு கூப்பிட்டான்."

"ஐயோ! தனியாவா வந்தே?"

"ஆமா மாமா. அம்மாவுக்குக் கூடத் தெரியாம வந்தேன்."

"என்னம்மா நீ? இப்படியா யோசிக்காம வருவே?"

"எனக்குப் புத்தி பிசகிப் போச்சு மாமா. எதையும் யோசிக்கல்ல. நீ குடிச்சதா சொன்னதும் பதறிப் போயிட்டேன். பின்பக்க வழியா இங்கே வந்தேன். வந்த பிறகுதான் எல்லாம் பொய்யின்னு தெரிஞ்சது."

"உடனே வீட்டுக்குத் திரும்பியிருக்கலாமே...!"

"கதவைப் பூட்டிட்டானுங்க மாமா. நிறைய குடிச்சிருந்தானுங்க மாமா. எம்மேல எல்லாம் தெளிச்சி விளையாடுனாங்க..."



"ஐயோ கடவுளே! கடவுளே...!" மனம் தாளாமல் விம்மி அழுதான்.

"மாமா! நான் ரொம்பப் போராடினேன் மாமா. ஆனா... என்னால முடியல்ல... மாமா... மூனு பேருமே... என்னை...!" பேச முடியாமல் திணறியவளை மார்போடு அணைத்துக் கொண்டான் சுப்பிரமணி.

"ஐயோ! என் கண்மணை நானே தோண்டி நெருப்பில போட்டுட்டேனே... என் ரோசாப்பூவை சிதைச்சிட்டானுங்களே...!" வாய்விட்டுக் கதறினான்.

"அழாதே மாமா! இது அவனுங்க தொட்ட உடம்பு. இது கருகட்டும்."

"ஆண்டவா! என்னைக் கட்டிக்கிட்டாத்தானே அல்பாயுசில போயிடுவான்னு அவன் சொன்னான். ஆனா இப்படி... என் கண்ணு முன்னாடி பொசுங்கிப் போய்த் துடிக்கிறாளே...!" தலையில் அடித்துக் கொண்டான்.

"மாமா! நீ... என்ன சொல்றே மாமா?"

"அதெல்லாம் பிறகு சொல்றேன். முதல்ல... முதல்ல உன்னைக் காப்பாத்தணும்...!" அவசரமாகப் போர்வையால் பொதிந்து தூக்கிக் கொண்டு ஓடினான்.

"மாமா! வேண்டாம் மாமா! நான் இனிமே வாழக் கூடாது மாமா!"

"அப்படிச் சொல்லாதம்மா. என் உசிரைக் கொடுத்தாவது உன்னைக் காப்பாத்துவேன். நான் இருக்கேன் உனக்கு...!" மூச்சிரைக்க ஓடிவந்து அவன் போட்ட கூச்சலில் ஊர் முழுக்க விழித்துக் கொண்டது.

செய்தி ஊர் முழுவதும் காட்டுத்தீயாய் பரவ, உறவினர் கூட்டம் வாழைத் தண்டை அறுத்துக் கொண்டு வந்து சாறைப் பிழிந்து விட்டனர்.

மருத்துவமனைக்கு ஓடினர். வண்டியில் ஏற்றினர், அழுதனர். துடித்தனர்.

ஈஸ்வரி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறினாள்.

ஊரார் கூடி வெட்டரிவாளோடு குளத்தூருக்குக் கிளம்பினர். ஜெகன் குடும்பம் ஊரை விட்டே ஓடிப் போயிருக்க, வீட்டை அடித்து நொறுக்கிவிட்டு வந்தனர்.

"அவங்க மேல எந்தத் தப்பும் இல்லை. மாப்பிள் ளையைப் பிடிக்காமத்தான் சுசீ இப்படிப் பண்ணிகிட்டா. இவ கொளுத்தினதைப் பார்த்திட்டுத்தான் அவனுங்க பயந்து போயிருக்கானுங்க...!" சுப்பிரமணி சொல்ல மற்றவர்கள் நம்பிக்கையின்றிப் பார்த்தனர்.

"என்னப்பா சொல்றே நீ?"

"ஆமாம். மாப்பிள்ளையைப் பிடிக்கலைன்னு எங்கிட்டயே சொன்னா... நாங்கதான் தப்புப் பண்ணிட்டோம்."

"அட என்னப்பா நீ... இத்தனை வருஷமா பூப்போல வளர்த்திட்டு இப்படி தீக்கு கொடுத்திட்டியே...!"

"நீயே கட்டியிருக்கலாமில்ல... அக்கா மகளைக் கட்டிக்கிறது நம்மூரு வழக்கம்தானே...!"

"அந்தப் பொண்ணு இவனைத்தான் கட்டிக்கணும்னு சொல்லிட்டுத் திரிஞ்சது. சுப்பிரமணிதான் ஒத்துக்கல்ல!"



"இப்பப் பாரு. இப்படித் தீய்ஞ்சுபோய் கிடக்குதே... இனிமே என்ன பண்ணப் போற?" ஊரார் கூடிக் கேட்க, ஈஸ்வரி கத்தினாள்.

"வாயை மூடுங்கய்யா... என் தம்பிக்கு எம் புள்ளன்னா உசிர். அவங்க கல்யாணத்தைப் பண்ணிவெக்க ஜாதகம் பார்க்கப் போனோம்..." எனத் தொடங்கி அழுதவாறே அனைத்தையும் சொல்லி முடிக்க, சுசீலா மாமனின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"தப்புப் பண்ணிட்டியே மாமா!"

"ஆமான்டா கண்ணு. எங்கே உன்னை இழந்திடு வேனோன்னு பயந்து இல்லாத கதையெல்லாம் சொல்லி... உன்னை நம்ப வெச்சு... உன்னோட இந்த நிலைக்கு நானே காரணமாயிட்டேனே!"

மருத்துவர் வந்தார். "இதோ பாருங்க. இப்படிக் கூட்டம் போட்டுக் கத்தாதீங்க. இந்த ஆஸ்பத்திரியில முதலுதவி மட்டும்தான் பண்ண முடியும். உடம்பு பாதிக்கு மேல எரிஞ்சு போச்சு. பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக ஏற்பாடு பண்ணுங்க."

அதன்பிறகு ஒவ்வொரு இடமாக அலைந்து கடைசியில் சென்னைக்கே வந்து சேர்த்தபின்தான் அந்த எண்ணம் தோன்றியது. மூவரையும் எப்படியும் பழிவாங்கியே தீரவேண்டும் என்ற வெறி தோன்றியது.

வலியால் துடிக்கும் சுசீலாவைப் பார்க்கையில் அந்த வெறி அதிகரித்தது. இரவு பகல் என சோர்ந்து, அமராமல் தேடி அலைந்ததில் மற்ற இருவரையும் காவு கொடுத் தாயிற்று.

'எஞ்சியிருப்பவன் ஜெகன் மட்டுமே. அவனையும் முடிக்கும் வரை இங்கிருந்து நகரக்கூடாது.' - பெருமூச்சுடன் கண்களைத் திறந்தான் சுப்பிரமணி.

விடியத் துவங்கியிருந்தது. உறக்கத்தைத் தொலைத்த கண்கள் தீப்பற்றியது போல் எரிந்தது.

சோம்பல் முறித்தவாறே எழுந்தவன் லேசாய் அதிர்ந்தான்.

டாக்டர்களும் நர்ஸ்களும் அவசரமாக அறைக்குள் நுழைவதும் வெளிவருவதுமாக இருக்க, பதட்டமாய் வராந்தாவிற்கு ஓடினான்.

ஈஸ்வரி சுவரில் சாய்ந்து அமர்ந்து புடவைத் தலைப்பால் வாயைப் பொத்தி அழுது கொண்டிருக்க, சுப்பிரமணியின் இதயம் துடிக்க மறந்தது.

## 11

உன்னோடுதான் என் ஜீவன்
ஒன்றாக்கினான் நம்தேவன்
நீதானம்மா என்தாரம்
மாறாதம்மா எந்நாளும்!

திகைத்த பார்வையுடன் தள்ளாடிய நடையுடன் ஈஸ்வரியை நெருங்கினான். பேச்சு வராமல் நாக்கு ஒட்டிக்கொண்டது.

தம்பியைக் கண்டதும் எழுந்தாள் ஈஸ்வரி. "தம்பி! அந்தப் பொண்ணு செத்துப்போச்சுப்பா."



"எ... எந்தப் பொண்ணுக்கா?"

"அதான்... நேத்து ராத்திரி கொண்டு வந்தாங்களே..." என்றதும் மனதின் ஓரமாய் ஒரு நிம்மதி பரவியது. மறுகணமே மனம் பாரமாகிப்போனது.

எந்தத் தாய் பெற்ற பிள்ளையோ? கட்டிய கணவனால் உயிரோடு எரியூட்டப்பட்டு இரவெல்லாம் வலியில் துடித்து... இதோ அடங்கியும் விட்டது.

இனி இந்த உடலை அறுத்துக் கூறுபோட்டு பொட்டலமாய்க் கட்டி அந்தத் தாயிடம் ஒப்படைக்கும்போது பெற்றவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா? கண்களில் நீர் சுரந்தது.

"எ... எப்படிக்கா?"

"விடியக்காலமே ரொம்பக் கத்திச்சிப்பா. டாக்டர் எல்லாம் வந்தாங்க. பார்த்தாங்க. இப்பத்தான் சத்தம் நின்னது. செத்துப் போச்சுன்னு சொல்றாங்க."

வேதனையாய் கண்களை மூடிக்கொண்டான். தம்பியை நெருங்கி மெல்லிய குரலில் கேட்டாள்.

"த... தம்பி! நாம... உங்க ஊருக்கே போயிடுவோமா?"

சட்டெனக் கண்களைத் திறந்தான். "ஏங்கா?"

ஈஸ்வரியின் கண்கள் தளும்பியது.

"தம்பி! இந்த இடம் வேணாம்யா. தினம் ஒரு சாவு விழுதுப்பா. என்னால பார்க்க முடியல்ல..."

"அக்கா..."

"எம்புள்ள பக்கத்திலயும் என்னை விடமாட்டேங் கிறாங்க. இப்படியே வெளியே காத்துக்கிடந்திட்டு சாவு செய்தி கேட்கும் போதெல்லாம் அது நம்ப புள்ளையா இருக்குமோன்னு நான் துடிக்கிற துடிப்பு..."

"அக்கா! அழாதே. உன் கஷ்டம் எனக்குப் புரியுது"

"அதான் தம்பி சொல்றேன். நாம நம்ம வீட்டுக்கு கூட்டிட்டுப் போயிடுவோம். போற உசிரு நம்ம வீட்ல நிம்மதியாப் போகட்டும்."

"அக்கா! அவளை சாகவிடக்கூடாதுன்னு நான் போராடிட்டு இருக்கேன். நீ என்னன்னா?"

"தம்பி நாம ஆசைப்படலாம். ஆனா?"

"ஆனா என்ன?"

"நேத்து டாக்டர் பேசினதை நானும் கேட்டேன். கால், கை எல்லாம் கருகிப்போச்சு. வயிறெல்லாம் வெந்து போச்சி. இனிப் பிழைப்பது கஷ்டம்னு சொன்னாரே..."

"அக்கா! அவங்க வேற யாரையாவது சொல்லி யிருப்பாங்க..."

"என்கிட்ட மறைக்காதய்யா. இவ மருந்து போட விடமாட்டேன்னு கத்தும் போதுதான் சொன்னார். நான் கேட்டேன்."

நீண்ட பெருமூச்சோடு சுவரில் சாய்ந்து கொண்டாள். உண்மையும் அதுதானே. பிழைப்பதற்கு வாய்ப்பு மிகக்



குறைவு என தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்களே! மீண்டும் கண்கள் கசிந்தன.

"தம்பி! பெரிய டாக்டர்கிட்டே கேளுப்பா. நம்ம புள்ளைய வீட்டுக்கு கூட்டிட்டுப் போயிடுவோம்."

"ம்... முதல்ல இந்தக் கேசைப் பார்க்கட்டும். பிறகு வரும்போது கேட்போம்" சுப்பிரமணி சொல்லிக் கொண் டிருக்கும் போதே அறைக்குள் இருந்து ஸ்ட்ரெச்சர் வெளியே வந்தது.

முழுவதும் வெள்ளைத் துணியால் போர்த்தப் பட்ட உடம்பை மருத்துவமனை ஊழியர்கள் கொண்டு செல்ல, வராந்தாவில் நின்றிருந்தவர்கள் மனம் கசிந்து பார்த்தனர்.

பலரின் கண்களில் கண்ணீர். மருத்துவர்களின் முகம்கூட இறுகிப் போய்த் தெரிந்தது. எத்தனை மரணங் களைக் கண்டிருந்தாலும் அவர்களின் இதயம் இரும்பல்லவே.

மரணத்தைக் கண்டு மனம் வருந்துவது இயல்பு தானே. இறந்தது யாரென்றே தெரியாமல் இதோ இத்தனை பேர் வருந்துகிறோம். கண்ணீர் வடிக்கிறோம்.

ஆனால்... அவன் எப்படி ஓடினான். நிச்சயம் முடிந்து விட்டால் முக்கால் மனைவி என்பார்களே. குடிவெறியில் தன் எதிர்கால மனைவியை நண்பர்களுக்குப் பங்கிட்டு... தானும் சிதைத்து...

அந்த வேதனையை, அவமானத்தை, அசிங்கத்தைத் தாங்க முடியாமல் மோட்டார் அறையில் இருந்த டீசலை எடுத்துவந்து தன் உடலில் ஊற்றி பற்ற வைக்கும்வரை அதை எப்படித் தடுக்காமல் இருந்தான்?

ஊரைவிட்டு ஓடினானே? ஒரு வார்த்தை சொல்லி விட்டு ஓடினானா?

எப்படியும் எரிந்து சாகட்டும் என்றுதானே போனான். அவன் இதயம் என்ன கல்லா?

கிராதகன். மனித உணர்வுகளே இல்லாத அரக்கனுக்கா என் கண்மணியைத் தாரை வார்த்துக் கொடுத்தேன்? எப்பேர்ப்பட்ட பிழையைச் செய்துவிட்டேன்.

மருத்துவமனைக்குக் கொண்டு வரும் வழியில் தன் காதிற்குள் சுசீலா கிசுகிசுத்த வார்த்தைகள் இரத்தத்தைக் கொதிக்க வைத்தன.

பீரை பீய்ச்சியடித்திருக்கிறான் ஒருவன். மற்றவன் அதிலே குளித்திருக்கிறான். ஒன்றுமறியாத குழந்தைப் பெண்ணை ஒருவர் மாற்றி ஒருவராக...

தலையை உதறிக் கொண்டான் சுப்பிரமணி. சிவந்திருந்த கண்களை வருத்தமாய்ப் பார்த்தாள் ஈஸ்வரி.

"தம்பி! நேத்தும் தூங்கலையா நீ?"

"ம்ப்ச்! இவ முனகல் சத்தம் கேட்கும் போது எப்படிக்கா தூக்கம் வரும்?"

"தம்பி! இன்னிக்கு வெளியே எங்கேயும் போகாதே"

"ஏங்கக்கா?"

"பத்து மணிக்கா பெரிய டாக்டர் வருவாருல்ல. அப்போ கேட்போம்."

"சரிக்கா. ஆனா விடுவாரா என்னன்னு தெரியலையே?"



"வேற ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போறோம்னு சொல்லுவோம்"

"மாமா! எரியுது மாமா" - சுசீலாவின் குரலில் பதறி வாசலருகே சென்றான்.

அறைக்குள் எட்டிப் பார்த்தான். நர்ஸைக் காண வில்லை. வேகமாய் உள்ளே சென்று சுசீலாவை நெருங்கினான்.

"சுசீம்மா! என்னடா?"

"மாமா! எரியுது மாமா. ரொம்ப வலிக்குது மாமா"

"டாக்டரைக் கூப்பிடவா?"

"வேண்டாம் மாமா. என்னை வீட்டுக்குக் கூட்டிட்டு போ மாமா..."

"உடம்பு குணமாகட்டும்டா. போலாம்..."

"வேண்டாம் மாமா. எனக்கு இந்த இடமே பிடிக்கல்ல. பயமா இருக்கு..."

"பயப்படாதே கண்ணு"

"மாமா! எனக்கு ஏதாவது ஊசி போட்டுக் கொன்னுடச் சொல்லு மாமா..."

"என்னடா தங்கம்? இப்படியெல்லாம் பேசக்கூடாது நீ..."

"என்னால முடியல்ல மாமா. கண்ணை மூடினா அந்த ஞாபகம் தான் வருது. எந்த ஆம்பிளையப் பார்த்தாலும் அவனைப் பார்த்த மாதிரியே இருக்கு..."

கண்ணீர் பெருக்கெடுத்தோட அவளது தலையை வருடினான்.

"அதையெல்லாம் மறந்திடும்மா..."

"எப்படி மாமா? என்னால முடியல்ல மாமா?"

"என்னை... என்னை நினைச்சுக்க கண்ணு..."

"மாமா..."

"எனக்காக நீ பொழைச்சு வரணும். நான்... நான் உன் கழுத்தில தாலி கட்டுவேன்"

"மாமா" - சுசீலாவின் கண்கள் ஒளிர்ந்தது. உடனே அந்த ஒளி மறைந்தது.

"வேணாம் மாமா. நான் அசிங்கம். நான் வேண்டாம் உனக்கு"

"இல்லடா தங்கம். நீ எப்பவும் என் சுசீதான்"

"நான் எதுக்கு மாமா உனக்கு? என்னால... உனக்கு என்ன பிரயோசனம்"

"சுசீ...!"

"உனக்கு விதவிதமா சமைச்சுப் போடணும். உங்கையக் கோர்த்துக்கிட்டு ஊரையே சுத்தி வரணும். உன்னை மாதிரி அழகு அழகா நிறைய குழந்தை பெத்துக்கணும்னு எவ்வளவு கனவு கண்டேன். இப்போ... இதுல ஒண்ணைக் கூட என்னால... செய்யமுடியாதே மாமா" - கண்ணீர் வழிந்தது.

பரிவோடு அவளது கண்ணீரைத் துடைத்தான் சுப்பிரமணி "நீ சொல்றது மட்டும் வாழ்க்கை இல்லடா.



அதைவிட அன்பான பிரியமான வாழ்க்கை இருக்கு. அது ஆத்மார்த்தமான வாழ்க்கை."

"மாமா..."

"ஆமாடா கண்ணு... நாம அப்படித்தான் வாழப் போறோம்."

"ஆனா... எனக்குக் கூசுமே மாமா..."

"மறந்திடு கண்ணு. ஏதோ கெட்ட கனவு. அதையே நினைக்காம அந்த நினைவுகளை அழிச்சிடு."

"எப்படி மாமா?"

"எனக்காக... நமக்காக..."

"மாமா..."

"என்னடா?"

"என் தலைய உன் மடிமேல வைச்சுக்கிறியா?"

"ஏன்டா தங்கம்?"

"இந்த நிமிஷமே. உன் மடியில என் உசுரு போயிடணும் மாமா"

பதறி அவளது வாயை மூடினான். "நான் வாழுறதைப் பத்திப் பேசுறேன். நீ என்ன தங்கம் இப்படிப் பேசுறே?"

"மாமா! உனக்கு எம்மேல உண்மையாவே பிரியம் இருக்கா?"

"இது என்னடா கேள்வி? நீ உயிர்டா."

"அப்போ... அந்த வசந்தி?"

"அதெல்லாம் பொய்யின்னு சொன்னேனே..."

"மாமா! நீயே என்னைக் கல்யாணம் பண்ணியிருக் கலாம்."

"அதுக்கென்னடா? நீ குணமாகி வா. கல்யாணம் பண்ணிக்கலாம்."

"நான்... நான் பழைய சுசீ இல்லையே மாமா."

"ஆனா நான் அதே சுப்பிரமணிதான் கண்ணு."

"மாமா" - கரிந்துபோன கைகளை திரைக்கு வெளியே நீட்டி சுப்பிரமணியின் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

கண்களில் கண்ணீரோடு அவளது கரத்தை மென்மையாய்ப் பற்றி லோசய் ஊதிவிட்டான். வாசலில் நிழலாட பதட்டமாய் திரும்பினான்.

பழக்கமற்ற நர்ஸ் வந்து கொண்டிருந்தாள். "ஏய்! யார் மேன் நீ? ஏன் உள்ளே வந்தே?" - சிடுசிடுத்தாள்.

"நர்சும்மா! இது சுசி. வலி தாங்காமக் கத்தினா... அதான்..."

"அதுக்காக நீ பாட்டுக்கு உள்ளே வந்திடுவியா? வெளியே போ."

"சரிங்கம்மா..."

"மாமா! சீக்கிரம் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடு மாமா."

"சரிடா. டாக்டர்கிட்ட கேட்கிறேன். மாமா, வெளியே நிக்கறேன்."



"கையை உள்ள எடும்மா. இன்பெக்ஷன் ஆகிடும்" - நர்ஸ் போட்ட அதட்டலில் கைகளை உள்ளே இழுத்துக் கொண்டாள் சுசீலா.

மௌனமாய் வெளியேறினான் சுப்பிரமணி. ஆவலாய் தம்பியை நோக்கினாள் ஈஸ்வரி.

"தம்பி! எப்படிய்யா இருக்கா? வலி குறைஞ்சிருக்கா?"

"இருக்காக்கா..."

"எதுவும் பேசினாளா?"

"ம். வீட்டுக்கு போகணும்னு சொல்றா..."

"நாம போயிடுவோம் தம்பி. உடம்பு காந்தமா இருக்க. புண் ஆற ஏதாவது கைமருந்து போட்டுக்கலாம்"

"அக்கா!"

"என்னம்மா?"

"வீட்டுக்குப் போனதும் நாம ஒரு காரியம் பண்ணணும்.."

"என்ன செய்யணும்?"

"சுசீயோட கழுத்தில... நான் தாலி கட்டணும்..."

பலமாய் அதிர்ந்தாள் ஈஸ்வரி. "த... தம்பி! நீ... நீ என்ன சொல்றே?"

"ஆமாக்கா."

"விளையாடாதே தம்பி! இப்பவோ அப்பவோன்னு இழுத்திட்டு இருக்கிறவளைக் கட்டிட்டு என்ன பண்ணுவே?"

"சுசீ கண்ணை மூடும்போது என் மனைவியாத்தான் மூடணும்."

"தம்பி!"

"ஆமாக்கா. ஒருவேளை நான் தாலி கட்டிய சந்தோஷத்தில் அவள் பொழைச்சிடலாம் இல்லியா?"

"தம்பி"

"அப்படி நடக்கலன்னா... ஆசைப்பட்டவனோட கையால தாலி வாங்கின சந்தோஷத்தில உயிர் நிம்மதியாப் பிரியட்டுமே..."

"இதைத்தானேடா நான் அப்பவே சொன்னேன்..."

"இப்படியெல்லாம் நடக்கும்னு நான் நினைக் கலியேக்கா..."

"தம்பி! உன் வாழ்க்கையாவது நல்லபடியா அமைய வேண்டாமா?"

"இல்லக்கா. சுசீயோட இந்த நிலைக்கு நான்தான் முழுக் காரணம். அதனால நான்தான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்."

"தம்பி!"

"இது பரிகாரமோ, பாவ விமோசனமோ இல்லக்கா. என் மனசில எப்பவும் சுசீதான் இருக்கா. அவ நல்லா ரொம்பக் காலம் வாழணும்னு தான் மறுத்தேன்.

ஆனா அதுவே அவள் உயிரைக் குடிக்கும்னு நான் நினைக்கல்ல. இதை ஒரு தத்து கழிஞ்சதா நினைச்சுப்போம். இந்த ஜென்மத்தில சுசீதான், சுசீ மட்டும்தான் மனைவி."



கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள் ஈஸ்வரி.

"தம்பி! இது போதும்யா. இனி எம்மக நிம்மதியா... கண் மூடுவா."

"அக்கா! நல்லதையே நினைப்போம். நீ தைரியமா யிரு... நான் போய் டாக்டரைப் பார்த்துப் பேசிட்டு வர்றேன்."

"சரிப்பா..."

வராந்தாவை விட்டு விலகி பிரதான கட்டிடத்தை நோக்கிச் சென்றான் சுப்பிரமணி.

பிரேத பரிசோதனை அறையைக் கடக்கும்போது ஐந்தாறு குடும்பங்கள் கதறிக் கொண்டிருந்தன.

இறந்து போன பெண்ணின் உறவினர்களாக இருக்குமோ என்ற நினைப்போடு அவர்களைக் கடந்து செல்ல, கூட்டத்தில் இருந்த ஒரு பெண் அவனை அடையாளம் கண்டுகொண்டாள்.

"அட! இது நேற்று என் மீது வந்து மோதியவ னாயிற்றே. இங்கே எப்படி?" - யோசனையோடு கூட்டத்தை விட்டு விலகி சுப்பிரமணியைப் பின் தொடர்ந்தாள் திலோத்தமா. சோகத்தையும் மீறி குழப்பமானாள்.

தன் பின்னால் வருபவளை கவனிக்காமல் நடந்தவன் எதிரே வந்தவனைக் கண்டு சற்று வியப்பாய் நின்றான்.

சற்றே சோர்வாய் எதிரே வந்த ஆனந்தன் சுப்பிர மணியைக் கண்டதும் கண்களால் சைகை செய்தவாறே ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிக்குச் செல்ல... அவனைத் தொடர்ந்தான் சுப்பிரமணி.

# 12

உன்னை நீங்கி எந்நாளும்
எந்தன் ஜீவன் வாழாது
உந்தன் அன்பில் வாழ்வதற்கு
ஜென்மம் ஒன்று போதாது!

புருவம் சுருக்கியவாறே நின்றாள் திலோத்தமா.

யார் இவன்? இவனுக்கும் அண்ணனின் மரணத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமா?

ஒன்று மட்டும் நிச்சயம். அண்ணன் கண்டிப்பாக தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவசரமாக வெளியே புறப்பட்டவன் திடீரென எப்படிக் கடிதம் எழுதி வைத்து விட்டுத் தீக்குளிப்பான்?

அப்படி நண்பர்கள் அனைவருமாய் சேர்ந்து என்ன பாவத்தைச் செய்தார்கள்? கிஷோர் இறந்தது விபத்தா? தற்கொலையா? கொலையா?

இவன் எந்த விதத்தில் இதில் சம்பந்தப்பட்டான்? எதிர் வீட்டுக்காரர் சொன்னாரே. "திலோ! நீ கடைக்குப் போய் கொஞ்ச நேரத்தில வெள்ளை வேட்டி சட்டையோடு கொஞ்சம் உயரமா ஒரு ஆள் உன் வீட்ல இருந்து வெளியே போனதை நான் பார்த்தேன்" - என்றாரே.

அந்த ஆள் இவனாக இருக்குமோ? தன் தெருவில் இருந்துதான் வேகமாய் வந்து மோதினான். விளையாட்டாய் திருடனா எனக் கேட்டதற்கு விழித்தானே.



சரி. எதற்கும் அவன் முன்னே சென்று நிற்போம். தன்னைக் கண்டதும் எப்படி அவன் முகம் மாறுகிறது என்பதை வைத்துக் கண்டு கொள்ளலாம் என்ற நினைவுடன் தான் யாரிடமும் சொல்லாமல் நழுவி சுப்பிரமணியைப் பின்தொடர்ந்தாள் திலோத்தமா.

ஆனால் எதிரே வந்தவன் கண் அசைவிற்குக் கட்டுப்பட்டு இவனும் ஒதுங்கியதும் ஏனோ அவளுக்கு சந்தேகம் வலுத்தது. தன் தாயின் அருகே வந்து, அழுது கொண்டிருந்த அன்னையைத் தொட்டாள்.

"அம்மா..."

அழுது சிவந்த விழிகளோடு திரும்பியவளிடம் மெதுவாய் கிசுகிசுத்தாள்.

"அம்மா! ஒரு பத்து நிமிஷம் என்னைத் தேடாதீங்க."

"ஏன்டி. எங்கே போற?"

"ஒரு சின்ன டவுட். கிளியர் பண்ணிட்டு வந்திடுறேன்."

"என்னடி பொண்ணு நீ. மார்ச்சுவரியில கிடக்கிறது உன் அண்ணன் பொணம். இப்பக்கூட உன் வேலைதான் பெரிசாப் போச்சா..."

"இல்லம்மா! இதுவேற. வந்து சொல்றேன்."

"நில்லுடி. உன் அப்பாவையும் காணோம். நீயும் போனா எப்படி?"

"டாக்டர்ஸ் வர இன்னும் நேரம் இருக்கும்மா. மொத்தம் மூணு பாடிங்க இருக்கு. எப்படியும் லேட்டாகும். நான்

உடனே வந்திடுறேன்" - தாயின் பதிலுக்குக் காத்திராமல் கூட்டத்தை விட்டுவிலகி நடந்தாள்.

பார்வையைச் சுழற்றியவளின் விழிகளில் சற்றுத் தூரமாய் தெரிந்த பெரிய வேப்பமரத்தின் அடியில் போடப்பட்டிருந்த சிமெண்ட் இருக்கையில் அமர்ந்திருந்த இருவரும் கண்ணில் பட, அவர்களைக் குறிவைத்து நடந்தாள்.

சுப்பிரமணியின் கண்கள் தெறித்துவிடுவதைப் போலிருக்க, ஆனந்தை நோக்கினான்.

"ஆனந்தா! நீ சொல்றது உண்மையா? நல்லாத் தெரியுமா?"

"சத்தியமாச் சொல்றேண்ணே. நான் பார்த்தேன்."

"நல்லாப் பார்த்தியா? அவன்தானா?"

"அண்ணே! அவனை எனக்குத் தெரியாதா? பனிரெண்டாவது வரை எங்கூடத்தான் படிச்சான். அதோட என் அம்மா வழியில சொந்தம். அன்னிக்கு நிச்சய தார்த்தத்தில பார்த்தேனே..."

"பேசினியா? எதுவும் தெரியுமா?"

"அண்ணே! அவன் வீட்டை விட்டு வெளியே வர்றதில்ல. ஆனா அவனுக்கு எல்லாமே தெரிஞ்சிருக்கு. இப்ப நீங்க சென்னையில இருக்கிறது வரை தெரிஞ்சு வெச்சிருக்கான்."

"ஓ! அதான் இங்கே இருந்து ஓடி சொந்த ஊர்ல ஒளிஞ்சு இருக்கானா? விடமாட்டேன் அவனை" - சுப்பிர மணியின் பற்கள் அரைபட்டன.



"அதனாலதான் நான் கிளம்பி வந்தேண்ணே. சொல்லுங்க. என்ன பண்ணலாம்?"

"ஆனந்தா! ரொம்ப நன்றிப்பா. நான் அவனை இங்கேயே தேடிட்டு இருந்தேனே தவிர ஊர்ல வந்து பதுங்கியிருப்பான்னு யோசிக்கவே இல்ல..."

"அவனும் அந்த ஐடியாவில தான் அங்கே வந்திருக்கான். இப்போ என்ன பண்ணலாம் அண்ணே!"

"ஆனந்தா! நீ ஊருக்குப் போ. அவனை கவனிச்சிட்டே இரு. நாங்களும் இன்னிக்கு இல்லேன்னா நாளைக்குக் கிளம்பி வந்திடுவோம்."

"அண்ணே! நீங்க... எப்படி? சுசீலாவை இந்த நிலையில எப்படிக் கூட்டிட்டு வருவீங்க?"

"இல்லப்பா! அக்காவுக்கும் சுச்கும் இங்கே இருக்கப் பிடிக்கல்ல. வீட்டுக்குப் போகணும்னு சொல்லிட்டே இருக் காங்க."

"எப்படிண்ணே? நம்ம ஊர்ல ஆஸ்பத்திரிகூட இல்லையே..."

"ம்ப்ச்! மருந்து மாத்திரையால அவளைக் குணப்படுத்தி நடமாட வைக்க முடியாதுப்பா."

"அண்ணே!"

"அவளுக்குத் தேவை நிம்மதியான மரணம்..."

"அப்படிச் சொல்லாதீங்கண்ணே" - பதறினான் ஆனந்தன்.

"அவ துடிக்கிறதைக் கண்கொண்டு பார்க்க முடியலப்பா. டாக்டர், நர்ஸ் யாரைப் பார்த்தாலும் கத்துறா."

ஆனந்தனின் கண்களும் கலங்கின "அப்போ... ஊருக்கு வரப் போறீங்களாண்ணே..."

"ஆமாம்பா. அது விஷயமா டாக்டர்கிட்ட பேசத்தான் வந்தேன்"

"சரிண்ணே. அப்பா நானும் வர்றேன். சேர்ந்தே போலாம்"

"வீட்ல என்ன சொல்லிட்டு வந்தே?"

"வேலை விஷயமா ஒருத்தனைப் பார்க்கணும்னு சொல்லிட்டு வந்தேன்"

"ரொம்ப நன்றிப்பா. உன் உதவி இல்லன்னா அவனுங்க ரெண்டு பேரையும் காவு கொடுத்திருக்க முடியாது. நன்றி தம்பி"

"சும்மா இருங்கண்ணே. அவனுங்க செய்த வேலைக்கு நம்ம கையால கொன்னு போட்டிருக்கணும். கதறக் கதற வெட்டி எறிஞ்சிருக்கணும்"

"எனக்கு அது பெரிய வேலை இல்லப்பா. ஆனா... என் சுசீ எப்படித் துடிக்கிறாளோ அதே மாதிரி பொசுங்கிச் சாகணும்னுதான் அவனுங்களையே கொளுத்திக்க வெச்சேன்.

அவங்க குடும்பத்தைப் பொறுத்தவரை அவனுங்க தற்கொலை செய்ததா இருக்கட்டும். பழி வாங்கின திருப்தி நமக்கு. அதான் இப்படிப் பண்ணினேன்"



"அண்ணே! ஜெகனை என்ன பண்ணப் போறோம்?"

"அவனுக்கு சாதாரண சாவு கிடையாது ஆனந்தன். ரொம்ப விசேஷமான மரணமா இருக்கணும்" - சுப்பிரமணியின் குரலில் வெறி இருந்தது.

"விசேஷம்னா? எப்படி?"

"என் சுசீயோட கண் முன்னால அவனைக் கொளுத்தணும். அவன் எரிஞ்சு சாம்பலாகிறத அவ பார்க்கணும். அப்பத்தான் அவ மனசுல இருக்கிற காயம் ஆறும்."

"செய்துடலாண்ணே..."

"ஆனந்தா... இது... இந்த விஷயம் வேற யாருக்கும் தெரியாதே!"

"இல்லண்ணே! மாப்பிள்ளையைப் பிடிக்காமத் தான் இப்படி பண்ணிட்டா என்றுதான் ஊரெல்லாம் பேசிக்கிறாங்க."

"அப்படியே பேசட்டும். வேற எதுவும் தெரிய வேண்டாம்."

"தெரியாதுண்ணே! ஏன்னா சுசீய நானும் விரும்பி யிருக்கேன். அவளுக்கு ஒரு களங்கம் வரவிடுவேனா?"

"உன்னை விட்டுட்டு அந்தத் தெரு நாயைத் தேர்ந்தெடுத்திட்டேனே. என்னை மன்னிச்சிடுப்பா."

"அண்ணே! எனக்குத் தர வேண்டாம். சுசீ ஆசையை நீங்களே நிறைவேத்தியிருக்கலாம்."

"அதுக்கான தண்டனையைத்தான் இப்படி அனுபவிச்சிட்டு இருக்கேன். அவ ஒவ்வொரு முறையும் எரியுது மாமான்னு சொல்லும்போது என் உயிரே போயிடுது" - கண்கள் கசிய சொன்னவனைப் பரிதாபமாய்ப் பார்த்தான் ஆனந்தன்.

"வருத்தப்படாதீங்கண்ணே! இனி ஆகப் போறதைப் பார்ப்போம்."

"ஆமாம். இனி ஆகப் போறதைத்தான் பார்க்கணும். அந்த ஜெகனைத் துடிக்க துடிக்க எரிக்கணும். அது... அது மட்டும்தான் என் வேலை."

"அது நடக்காது. நான் நடக்க விடமாட்டேன்" - திடீரெனக் கேட்ட பெண் குரலில் இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப, முகம் முழுக்கக் கோபமாய் நின்றாள் திலோத்தமா.

ஆனந்தன் புரியாமல் பார்க்க, சுப்பிரமணியின் முகம் மாறியது. இவளா? இவள் எப்படி இங்கே வந்தாள்? எப்போது வந்தாள்.

"என்ன மிஸ்டர் முழிக்கறே? அப்பாவி மாதிரி முகத்தை வெச்சிக்கிட்டு எவ்வளவு கொடிய வேலையெல்லாம் செய்திருக்க? உன்னை..."

"ஹலோ! யாருங்க நீங்க?" - ஆனந்தன் ஆத்திரமாய்க் கேட்க சுப்பிரமணி அமைதியாய் பதில் சொன்னான்.

"சுரேந்திரன் தங்கை."

"என்ன?" - அதிர்ச்சியாய் கேட்டான் ஆனந்தன்.



"பரவாயில்லையே. நினைவு இருக்கா? நான் அறிமுகம் செய்யணுமோனு நினைச்சேன்."

"வேண்டாம்மா. எனக்கு ஞாபக சக்தி ரொம்ப அதிகம்."

"எனக்கும் தான். பார்த்தியா உன்னை எவ்வளவு ஈஸியா கண்டுபிடிச்சிட்டேன்னு..."

"சரி. இப்போ என்ன வேணும்?"

"யூ ராஸ்கல். என்ன அலட்சியம் உனக்கு? என் அண்ணனை உயிரோடு எரித்து மார்ச்சுவரியில் கிடத்திவிட்டு இங்கே அடுத்த கொலை செய்ய கூட்டுச் சதி செய்கிறாயா?" ஆவேசமாய்க் கேட்டாள்.

"மன்னிக்கணும். உன் அண்ணனை நான் கொல்லவில்லை..."

"பின்னே?"

"அவனே தற்கொலை செய்திருக்கான். லட்டர் கூட..."

"வாயை மூடு. நீ சொல்றதைக் கேட்க நான் ஒண்ணும் முட்டாள் இல்லை."

"நீ அறிவாளியாய் இருக்கலாம். ஆனால் நான் பொய் சொல்லவில்லை."

"ந்நோ... பொய். பொய் சொல்லாதே. என் அண்ணன் ஒன்றும் கோழை அல்ல தற்கொலை செய்ய..."

"தற்கொலை செய்ய கோழையாய் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சூழ்நிலை காரணமாய் இருக்கலாம்."

"அது என்ன சூழ்நிலை என்று எனக்குத் தெரி
வேண்டும்?"

"அதை உன் அண்ணனிடம் போய்க் கேள்"

"ஏய்! இந்த நக்கல் பேச்செல்லாம் எங்கிட்ட வேணாம்
எனக்கு இப்பவே உண்மை தெரிஞ்சாகணும். இல்லேன்னா"

"இல்லேன்னா?"

"இப்பவே போலீசுக்குப் போன் பண்ணிடுவேன்
ஏற்கனவே உம்மேல எனக்கு சந்தேகம்தான். இப்போ உ
பேச்சையும் கேட்டுட்டேன்."

"என்ன கேட்டே?"

"நீதான் என் அண்ணனையும் அவன் ஃபிரெண்
டையும் கொன்னே..."

"மறுபடியும் சொல்றேன். நான் கொல்லல்ல. ரெண்டு
பேருமே செய்த தப்பை எண்ணி பயந்து தற்கொலை
பண்ணிக்கிட்டாங்க."

"அப்படி என்ன தப்புச் செய்தாங்க?"

"அதை உன்கிட்டச் சொல்ல வேண்டிய அவசியமில்ல.
வழியை விடு."

"ஓஹோ. எங்கிட்ட சொல்மாட்டே. போலீஸ்கிட்டதான்
சொல்வியா?"

"என்ன பூச்சாண்டி காட்டுறியா? இதுக்கெல்லாம் நான்
பயப்படமாட்டேன்."



"கொலை செய்யுறதை சர்வ சாதாரணமா நினைக்கிற உனக்கு எப்படி பயம் இருக்கும்?"

"தெரியுதில்ல. கிளம்பு."

"ஹேய்! உனக்கு என்னைப் பத்தித் தெரியாது... என் அண்ணனோட உடம்பை வாங்குறதுக்கு முன்னால உன்னை உள்ளே தள்ளவில்லையென்றால் எம்பேர் திலோத்தமா இல்ல" – ஆத்திரமாய் சொல்லிவிட்டு தன் செல்போனை எடுத்தாள்.

சுப்பிரமணி அசராமல் நிற்க. ஆனந்தன் பதறினான்.

"என்ன பண்றீங்க?"

"ம்? உங்க ரெண்டு பேரையும் மாமியார் வீட்டுக்கு அனுப்பப் போறேன்."

"அவசரப்படாதீங்க..."

"ஏன்? ஜெகனைக் கொல்ற வரை வெயிட் பண்ணணுமா?"

"ப்ளீஸ்... நான் சொல்றதைக் கேளுங்க."

"ஆனந்தா. நீ சும்மா இரு. இவ நம்மை பயமுறுத்திப் பார்க்கிறா..."

"நீங்க இருங்கண்ணே. நான் பேசுறேன்."

"என்ன பேசப்போறே?" – கோபமாய்க் கேட்டாள் திலோத்தமா.

"உண்மையைப் பேசப் போறேன்."

"உண்மையா? என்ன உண்மை?"

"இறந்துபோன ரெண்டு பேரும் இறக்கப் போகிற ஜெகனும் பெரிய உத்தமர்கள் இல்லை. ஏன்? மனிதர்களே இல்லை."

"என்ன?" - கொதித்துப் போனாள் திலோத்தமா.

"யாரைப் பற்றி யாரிடம் பேசுகிறாய்? என் அண்ணனைப் பற்றி என்ன தெரியும் உனக்கு?"

"எல்லாம் தெரியும்ங்க. உங்களுக்குத்தான் எதுவும் தெரிய, தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை."

"என்ன உளர்ற?"

"சொல்றேன். ஆனா அதுக்கு முன்னால எங்ககூட கொஞ்சம் வர முடியுமா?"

"எ... எங்கே?"

"இங்கேதான்... அதோ அந்த வார்டுக்கு..." - ஆனந்தன் கை காட்டிய திசையைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

"அ... அங்கேயா? எ... எதுக்கு?"

"உண்மைகளை வாயால சொன்னா நம்பமாட்டீங்க. கண்ணால பார்த்தாத்தான் அந்த வலியோட ஆழம் புரியும்."

திலோத்தமா திகைப்பாய் சுப்பிரமணியைப் பார்க்க, அவனது முகம் இறுகிப் போயிருந்தது. மீண்டும் ஆனந்தனை ஏறிட்டாள்.

"அ... அங்கே... யார் இருக்காங்க?"

"வாங்க காட்டுறோம். பார்த்த பிறகு மற்றதைப் பேசுவோம். மணி அண்ணே! வாங்க போவோம்" - என்றவாறு ஆனந்தன் முன்னே நடக்க, திகிலுடன் அவனைத் தொடர்ந்தாள் திலோத்தமா.



தீ விபத்து சிகிச்சைப் பிரிவை நெருங்கியதும் இருவரும் நின்றனர். சுப்பிரமணி வாய் திறந்தான்.

"மொத்தமா உள்ளே போகக்கூடாது. நீ மட்டும் உள்ளே போய் வாசல்ல இருந்து மூணாவது பெட்ல ஒரு பொண்ணு படுத்திருப்பா. பார்த்திட்டு வா" - என்றான் மரத்த குரலில்.

"நா... நானா?"

"நீதானே உண்மை தெரிய வேண்டும் என்று குதித்தாய். போ. போய்ப் பார்."

எச்சில் விழுங்கினாள். "அது... அங்கே இருக்கிறது யாரு?"

"சுசீலா. என் அக்காவின் மகள்."

"அவங்க... எப்படி... இங்கே?"

ஆத்திரமாய் அவள் புறம் திரும்பினான் சுப்பிரமணி. "உன் அண்ணன் பெரிய உத்தமனாயிற்றே. அந்த உத்தமனும் அவனுடன் சேர்ந்த எச்சில் நாய்களும் செய்த வேலையால் இங்கே வந்திருக்கிறாள்."

"நீ... நீங்க என்ன... சொல்றீங்க?"

"எல்லாம் சொல்றோம். முதல்ல பார்த்திட்டு வாங்க. அப்பத்தான் நாங்க சொல்றதை உங்களால உணர முடியும்" - என்றான் ஆனந்தன்.

இருவரையும் தயக்கமாய் ஒருமுறை பார்த்
விட்டு உள்ளே சென்றவள் இரண்டே நிமிடத்தில் பெரி
வீறிடலோடு ஓடிவந்தாள்.

சுவரில் மோதி தடுமாறி வெளியே வந்து மூச்சு வாங்
தள்ளாடி நின்றவளின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது
முகம் வெளுத்திருந்தது. பேச இயலாமல் திணறியவளை
மரத்தடி நிழலில் அமர வைத்தான் ஆனந்தன்.

"பார்த்தீங்களா?"

"ம்.ம்..." - நடுக்கமாய் பதில் வந்தது.

"இதுக்கு யார் காரணம்னு தெரியுமா?"

"யா... யார்?"

"ஜெகன், கிஷோர், சுரேந்திரன்" - ஆனந்தன் சொல்ல
பலமாய் அதிர்ந்தாள்.

## 13

துள்ளித் திரிந்த பெண் ஒன்று
துயில் கொண்டதேன் இன்று
தொடர்ந்து பேசும் கிளி ஒன்று
பேச மறந்ததேன் இன்று!

"நோ! நான் நம்பமாட்டேன்" - பலமாய் தலையாட்டி மறுத்தாள் திலோத்தமா.

"ஏன்? உன் கண் முன்னால இப்பத்தானே பார்த்திட்டு வந்தே" - ஆத்திரமாய்க் கேட்டான் சுப்பிரமணி.



"இல்ல... இந்தப் பொண்ணு வேற ஏதோ ஒரு காரணத்திற்காகக் கூட இப்படிப் பண்ணியிருக்கலாமே..."

"உன்னிடம் நாங்கள் ஏன் பொய் சொல்ல வேண்டும்?"

"என்னிடம் இருந்து தப்பிக்க. உங்கள் தவறை நியாயப்படுத்த என் அண்ணனை பலிகடா ஆக்குறீங்க."

"உன் பத்திரிக்கைகாரப் புத்தியை ஓரம் கட்டி வைத்துவிட்டு நிதானமா யோசி. உனக்கே புரியும்."

"இல்ல. நான் நம்பவே மாட்டேன். ஏன்னா... இது சாத்தியமே இல்ல..."

"ஏன்?"

"நீங்க சொல்றதை நான் நம்புறதாவே வெச்சுக்கு வோம். இது எப்போ நடந்தது?"

"போன வாரம் வியாழக்கிழமை... நடுராத்திரிக்குப் பிறகு..."

"இல்ல... அப்படி நடந்திருக்க வாய்ப்பு இல்ல" - உறுதியாய் மறுத்தவளை வியப்பாய் பார்த்தனர் இருவரும்.

"அதெப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றே?"

"ஏன்னா... போன ஸண்டே மார்னிங்தான் எனக்கும் ஜெகனுக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது. எங்க வீட்ல வெச்சி" - திலோத்தமாவின் பதிலில் இருவரும் வெகுண்டனர்.

"என்ன? என்ன சொன்னே?"

"ஆமாம். என் அண்ணன்தான் எம் பேரண்ட்ஸ்கிட்டே பேசினான். எனக்கும் ஜெகனைத் தெரியும்ன்றதால நானும் ஒத்துக்கிட்டேன்."

"நிச்சயதார்த்தம் எங்கே நடந்தது?"

"சொந்தக்காரங்க ஊர்ல இருக்காங்க. கல்யாணத்தை கிராண்டா பண்ணிக்கலாம். இப்போ சிம்பிளா நிச்சயம் பண்ணிக்கலாம்னு ஜெகன்தான் சொன்னார்.

அதனால எங்க வீட்லயே பண்ணிட்டோம். எங்க பேமிலியும் ஜெகனோட பேமிலியும் மட்டும்தான் இருந்தோம். கிஷோரும் இருந்தார்."

சுப்பிரமணியின் இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. எத்தனை நெஞ்சழுத்தம் அவனுக்கு. ஒரு பெண்ணை அதுவும் தனக்கு ஊர் அறிய நிச்சயித்தப் பெண்ணை நாசமாக்கிவிட்டு கண் முன்னே அவள் எரிவதையும் பார்த்து விட்டு, இங்கே வந்து ரகசியமாய் இன்னொரு பெண்ணை நிச்சயித்தார்களா?

ஜெகன்... இந்த நிமிடம் நீ மட்டும் என் எதிரில் நின்றால்... உன் குரல் வளையைக் கடித்துக் குதறி யிருப்பேன்... உன்னை...

"என்ன அமைதியாயிட்டீங்க? நீங்க சொல்ற மாதிரி தப்பு பண்ணினவங்க எப்படி ஸார் என்னைக் கட்டிக்கத் துணிவாங்க?"

"அப்போ... அந்த ஜெகனை நம்புற?"

"நிச்சயமா. என்னோட வருங்காலக் கணவரை நான் எப்படி நம்பாம இருக்க முடியும்?"

"இதோ பாரும்மா. நீ யாரோ எவரோ... இருந்தாலும் உன் நல்லதுக்காகச் சொல்றேன்... கேளு. அவன் உனக்கு வேண்டாம்"



"என்னைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். முதலில் உங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமா என்று பாருங்கள்."

"என்ன?"

"ஆமா. என் அண்ணனை... அவன் நண்பனைக் கொன்ற உங்களைச் சும்மா விடுவேனா?"

"அப்படியா? சரி. உன் ஜெகன் இப்போ எங்கே?"

"ஏன்? ஏன் கேட்கிறீங்க?"

"சும்மா சொல்லும்மா..."

"கல்யாண வேலையா அவங்க சொந்த ஊருக்குப் போயிருக்காரு..."

"அப்படின்னு அவன் சொன்னானா?"

"ஆமாம்."

"அவனுக்கு... உன் அண்ணன் இறந்தது தெரியுமா?"

"தெரியாது."

"நீ சொல்லவில்லையா?"

"அவர் செல்லுக்கு ட்ரை பண்ணினேன். கிடைக்கலே..."

"சரி. இப்ப நான் சொல்ற நம்பருக்கு போன் பண்ணு."

"யாருக்கு?"

"உன் ஜெகன் வீட்டுக்குத்தான். வீட்லயும் போன் இருக்கு."

"என்ன? நிஜமாவா?"

"பண்ணும்மா. பேசிப்பாரு..."

"எ... என்ன பேசணும்?"

"இங்கே நடந்த சாவைப் பத்தி எதுவும் சொல்லாம சுசீலான்னு ஒரு பொண்ணு எங்க வீட்டுக்கு வந்திருக்குன்னு சொல்லு."

"சொன்னா?"

"உன் ஜெகன் வாயால மத்த உண்மைகள் வந்திடும்."

"என்ன? எ... எப்படி?"

"முதல்ல நீ போன் பண்ணும்மா" – என்றவாறு சுப்பிரமணி எண்களைச் சொல்ல, வேகமாக எண்களை அழுத்தி காதில் வைத்தாள் திலோத்தமா.

எதிர்முனை எடுக்கப்பட்டதும் பேசினாள். "ஹலோ! நான் திலோத்தமா பேசறேன்... ஜெகன் இருக்காரா?"

மாரியம்மாள் சிரிப்பாய் விசாரித்தாள். "நல்லா இருக்கியாம்மா. வீட்ல எல்லோரும் சௌக்யமா?"

"ம். நல்லா இருக்கோம். ஜெகன் இருக்காரா?"

"இருக்கான்மா. இதோ கொடுக்கிறேன்" – ரிஸீவர் கைமாறியது. ஜெகனின் குரல் கேட்டது.

"ஹலோ!"

"ஜெகன்! நான் திலோத்தமா."

"சொல்லு திலோ. ஆமா இந்த நம்பர் உனக்கு எப்படிக் கிடைச்சது?"

"அ... அண்ணன்தான் தந்தான்."



"சுரேன் எப்படி இருக்கான்?"

"ம்... ஜெகன் இங்கே ஒரு பிரச்சனை..."

ஜெகனின் குரலில் கலவரமும் பதட்டமும் தொனித்தது. "என்ன? பிரச்சனையா? என்ன பிரச்சனை?"

"ஒரு பொண்ணு வந்து பிரச்சனை பண்றா?"

"பொண்ணா?"

"ஆமா! அவளுக்கும் உங்களுக்கும் ஏற்கனவே கரிசப்பட்டின்ற கிராமத்தில வெச்சு எங்கேஜ்மெண்ட் முடிஞ்சிடுச்சாம். நீ எப்படி அவனைக் கட்டிக்க முடிவு பண்ணலாம்னு கேட்டு சண்டை போடுறா?"

ஜெகனின் கையிலிருந்த ரிஸீவர் நழுவியது. உடல் மொத்தமும் வியர்த்துக் கொட்டியது. பேச இயலாமல் தடுமாறினான்.

"என்ன ஜெகன்? ஒண்ணும் பேசாம இருக்கீங்க?"

"யாரு? யார் அவ?"

"சுசீலாவாம்..."

"என்ன?" – இடி இறங்கினாற்போல் அதிர்ந்தான்.

"ஆமா! இங்கதான் இருக்கா. பேசுறீங்களா?"

"இல்ல... வேண்டாம். திலோ... அவ... எப்படி இருக்கா?"

"எப்படின்னா?"

"இல்ல... அவ முகம்... உடம்புல ஏதாவது... காயம்?"

"என்ன கேட்கிறீங்க? எனக்குப் புரியல்ல..."

"திலோ! அவளைப் பார்த்தா எப்படி இருக்கு? விபத்துல இருந்து தப்பிச்சு வந்த மாதிரி இருக்காளா?"

திலோத்தமாவின் முகம் கடுத்தது. கண்களில் அனல் தெறித்தது.

"அப்போ... அவ சொன்னதெல்லாம் உண்மைதானா?"

"திலோ! ப்ளீஸ்! அவ சொல்றதை நம்பாதே. நாங்க எந்தத் தப்பும் செய்யல்ல."

"இதை நான் நம்பணுமா?"

"ப்ளீஸ் திலோ. நான் சொல்றதைக் கேளு. நாங்க வேணும்னே பண்ணல்ல. அவ... அவ எப்படி அங்கே வந்தா?"

"அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். எனக்குத் தேவை உண்மையான பதில்..."

"அவ... வேற என்ன சொன்னா?"

"எல்லாம் சொல்லிட்டா. அவளோட மாமனுக்குப் பயந்துதான் நீ ஊர்ல ஒளிஞ்சிட்டு இருக்கிறதையும் சொல்லிட்டா."

"நீ... நீ நம்பிட்டியா திலோ...?"

"நம்பாம இருக்க முடியுமா?"

"நம்பாதே திலோ... அந்தப் பொண்ணோட கேரக்டர் சரியில்ல... அது எங்களுக்குத் தெரிஞ்சு போனதால அவளை வேண்டாம்னு சொல்லிட்டோம். எங்களை மிரட்டுறதுக்காகத்தான் நிச்சயமான அன்னிக்கே தீக்குளிச்சா..."



"வாயை மூடுடா. ஒரு தப்பை மறைக்க எத்தனை பொய் சொல்வே. தப்பை நீ செய்துட்டு ஒரு பொண்ணைக் குறை சொல்லியா. ராஸ்கல்."

"திலோ. ப்ளீஸ் அவசரப்படாதே."

"ஆமாம். நான் தான் அவசரப்பட்டேன். மொத்தமா ஊர் சுத்திட்டு திரும்பி வந்தபிறகு சுரேன் பேயறைஞ்ச மாதிரிதான் இருந்தான். அப்பவே நான் விசாரிச்சிருக்கணும். தப்புப் பண்ணிட்டேன்."

"திலோ...!"

"ரெண்டே நாள்ல நிச்சயம் பண்ணணும்னு சொன்னியே. அப்ப யோசிச்சிருக்கணும். அவசரப் பட்டுட்டேன்."

"திலோ! நான்... நான் சுரேன்கிட்ட பேசிக்கிறேன்."

"அவன்கிட்ட பேச முடியாது."

"ஏன்? வீட்ல இல்லையா?"

"உலகத்திலேயே இல்ல. மேலே போயிட்டான்."

"தி... திலோ! நீ... நீ என்ன சொல்றே?"

"ஆமா! நீங்க மூணு பேரும் செய்த காரியத்தை நினைச்சு அந்தப் பயத்தில தற்கொலை பண்ணிக்கிட்டான்."

"எ... என்ன? எ... எப்படி?"

"நீங்க எப்படி அவளைக் கொளுத்தினீங்களோ... அதே மாதிரி அவனே கொளுத்திக்கிட்டான்."

"ஐயோ! திலோ! நாங்க அவளை எரிக்கல்ல... அவளேதான் கொளுத்திக்கிட்டா... எங்களால தடுக்க முடியல்ல..."

"அவ எரியும்போது வேடிக்கை பார்த்தீங்களா?"

"இல்லே... பயந்து ஓடி வந்திட்டோம். திலோ! தெரியாமப் பண்ணிட்டோம் திலோ. ராத்திரி நேரம். மூணு பேருமே நிறைய குடிச்சிருந்தோம். அவ தனியா வெளியே நின்னதும்... கொஞ்சம் புத்தி தடுமாறிட்டோம்."

"ச்சி உனக்கு வெட்கமா இல்ல. சுயநினைவு இழக்கிற வரைக்கும் குடிக்கிற குடிகாரனா நீ. நிச்சயித்துப் பெண்ணை வேட்டையாடிக் கொன்னுட்டு இரண்டே நாள்ல இன்னொரு பெண்ணை நிச்சயம் பண்ணியிருக்கியே. நீ மனிதனா? மிருகத்தைவிடக் கேவலமானவன்."

"நான் இல்ல திலோ. சுரேன்தான் கல்யாணப் பேச்சை எடுத்தான்."

"ஒண்ணாச் சேர்ந்து பாவம் செஞ்சிருக்கீங்களே. இப்படி ஒண்ணுக்குள்ள ஒண்ணா சேர்ந்துக்கிட்டா ஒருத்தனை ஒருத்தன் காட்டிக் கொடுக்க முடியாதுன்னு பார்த்திருப்பான்."

"அப்படி இல்ல திலோ...!"

"பேசாதே! ஒரு குடிகார காமவெறியனுக்கு, கொலை காரனுக்கு தன் கூடப் பொறந்தவளை பேசி முடிச்சானே அவனும் நீயும் ஒண்ணுதான். அவனுக்காக அழுததை அசிங்கமா நினைக்கிறேன்."

"திலோ!"



"சுரேன் மட்டுமில்ல ஜெகன், கிஷோரும் போயாச்சு. இனி நீதான்."

"என்ன?"

"பாவத்தின் சம்பளம் மரணம்தானே. உனக்கும் அது சீக்கிரமே வந்திடும்."

"திலோ! நீ என்ன சொல்றே?"

"தயவு செய்து இனி என் கண்ணில் பட்டுவிடாதே. பட்டால் உன் எமன் நான்தான்." - என்றவாறு போனைக் கட் பண்ணினாள். சற்று நேரம் பெருமூச்சைவிட்டு தன் ஆவேசத்தைக் குறைத்துக்கொண்டாள். சிலகண நேரம் அமைதியாய் இருந்துவிட்டு சுப்பிரமணியை ஏறிட்டாள்.

"நான் கிளம்பறேன்" - என்றவாறு எழுந்தாள்.

"ஒண்ணுமே சொல்லாமப் போறீங்களே..."

"என்ன சொல்றது? நானும் ஒரு பெண்தானே. உள்ளே படுத்திருக்கும் சுசீலாவின் வலியை உணர்றேன். உங்க வேலையை நீங்க பாருங்க. நான் கிளம்பறேன்."

"இந்த விஷயம்... வெளியே யாருக்கும்..."

"தெரியாது. இந்தப் பாவத்தைச் செய்தவனோட தங்கைன்னா வெளியே சொல்ல முடியும்? சுரேன் தற்கொலை செய்ததாகவே இருக்கட்டும். இத்தனை வேதனையிலும் என் வாழ்க்கையைக் காப்பாத்தி இருக்கீங்க. அதுக்காக ரொம்பத் தேங்க்ஸ்" - இரு கரங்களையும் கூப்பி விடை பெற்றுவிட்டு திரும்பியும் பாராமல் நடந்தாள் திலோத்தமா.

ஆனந்தனும் சுப்பிரமணியும் நிம்மதியாய் மூச்சு விட்டனர்.

# 14

இணைந்தபுறா பிரிந்ததென்ன
இமைகளைக் கண்ணே மறந்ததென்ன
நடந்த கதை நினைவில்லையோ
நான் உனைச்சேர வழியில்லையோ!

ரிஸீவரை வைத்துவிட்டுத் தளர்ந்து போய் அமர்ந்தான் ஜெகன். சுசீலாவை சூறையாடிய மூவரில் இருவர் உயிரோடு இல்லை. எஞ்சியிருப்பது தான் மட்டுமே என்ற பயத்தில் பாதி உயிர் போயிற்று.

கிஷோர் வீட்டிற்கு போன் செய்து பேசியதில் அவனும் கடிதம் எழுதி வைத்துவிட்டுத்தான் கேஸை திறந்து வைத்து தற்கொலை செய்திருக்கிறான்.

சுரேனும் அதே நாளில் பெட்ரோல் ஊற்றி தன்னையே எரித்து உயிரை விட்டிருக்கிறான். அதே மாதிரி கடிதம்.

ஏன்? ஏன் இப்படிச் செய்தார்கள்? தைரியமாகத்தானே இருந்தார்கள். பிறகேன் இந்த முடிவை எடுத்தார்கள். யார் மீது உள்ள பயத்தால் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்கள்.

திலோத்தமாவிற்கு எல்லாமே தெரிந்திருக்கிறது. எப்படி? யார் சொன்னது? சாவதற்கு முன் பயத்தில் சுரேன் உளறியிருப்பானோ. அதை வைத்துத்தான் என்னிடம் கேட்டாளோ?

நானே பயத்தில் மொத்தமாய் உளறிவிட்டேனே. சுசீலா வந்ததாகச் சொன்னது பொய். நிச்சயம் அவளால் போயிருக்க முடியாது. உடல் முழுக்க வெந்தவளால் எப்படிப் போய் சண்டை போடமுடியும்?



இந்த எண்ணம் தோன்றிய உடனே தன் தலையில் பட்டென்று அடித்துக்கொண்டான். ச்சே! திலோ போன் பண்ணும்போது எப்படி இதைப் பற்றி யோசிக்காமல் விட்டேன்.

சுசீலா என்ற பெயரைக் கேட்டதும் பதட்டத்தில் உளறிவிட்டேனே. இனி திலோத்தமா சும்மா இருக்கமாட்டாள். நிச்சயம் போலீசுக்குப் போவாள்.

இல்லை. போகமாட்டாள். போனால் அவள் அண்ணனும் தானே மாட்டுவான். ஆனால்... சுரேன் இப்போது உயிரோடு இல்லையே...

இறந்துவிட்டாலும் தன் அண்ணனின் பெயர் வெளியாகி தன் குடும்பத்திற்குக் கெட்ட பெயர் வருவதை விரும்புவாளா என்ன? முதலில் இந்த மணியை மட்டும் நினைத்து பயந்தோம்.

இப்போ... யாருக்காகவெல்லாம் பயப்படுவது. ஆத்திரமாய் மேசைமீது குத்தினான். மேசை மேல் ஓரமாய் வைத்திருந்த சில புத்தகங்கள் கீழே விழ, அது வெளியே வந்தது.

குனிந்து எடுத்தான் ஜெகன். பெண் வீட்டினர் கொடுத்தனுப்பி இருந்த போட்டோ அது. பட்டுப்புடவையில் தலைநிறைய மல்லிகையுடன் புன்சிரிப்போடு ஜொலித்தாள் சுசீலா.

அன்று போட்டோவைப் பார்த்தவுடன் சுரேந்திரன் விசிலடித்தான்.

"வாவ்! ஜெகன். இதுவா பொண்ணு? நீ ஏதோ ஒரு ஊர் பேர் சொன்னதும் அருக்காணியோ, அலமேலு வோன்னு நினைச்சேன். சும்மா சொல்லக்கூடாது பொண்ணு அமர்க்களமா இருக்கா..."

"இந்தப் பொண்ணைக் கட்டுறதுக்கா தயங்குற. நானா இருந்தா யோசிக்கவே மாட்டேன். இந்நேரம் தாலியைக் கட்டி ஹனிமூன் கொண்டாடிட்டு இருப்பேன்" - என கிஷோர் ஒருபுறம் சொல்ல, ஜெகன் அப்போதுதான் அந்த போட்டோவை நிதானமாய்ப் பார்த்தான்.

சிரிக்கும் கண்களோடு, லேசாய் குழி விழுந்த கன்னத்தோடு மிக அழகாய்த் தான் இருக்கிறாள். சாயம் பூசப்படாத உதடுகள் ரோஜா நிறத்தில் மின்னியது. கூர்மையான நாசியில் ஒற்றைக்கல் மூக்குத்தி.

படிய வாரியிருந்த போதும் அழகாய் இருந்தது முகம். சிறிய நெற்றி. சின்னதாய் பொட்டு. காதுகளில் முத்தும் கற்களும் பதித்த ஜிமிக்கி. பொன்னிறம்... கருகருவென சுருண்ட கேசம்.

"ம்... நல்லாத்தான் இருக்கிறாள்" - என்றான் பார்வையை விலக்காமலேயே.

"அடப்பாவி! போட்டோவையே இப்பத்தான் பார்க்கிறியா நீ?"

"ம்... ஆமாம்."

"பிறகேன்டா தயங்குற?"

"இல்லடா. கிராமத்தில பொறந்தாலும் நான் இங்கேயே வாழ்ந்து பழகிட்டேன். அதனால இங்கேயே ஏதாவது ஒரு பொண்ணைப் பார்த்திடலாம்னு நினைச்சேன்."



"அதான் தினமும் பார்க்கிறோமே. ஆனால் இது ஸம்திங் ஸ்பெஷல்டா. இந்தப் பொண்ணு கண்ணைப் பறிக்கிறா" - கொஞ்சமும் விவஸ்தை இல்லாமல் சுரேந்தர் வழிய, பெருமையாய் புன்னகைத்தான் ஜெகன்.

"அப்படின்ற? அப்போ ஓ.கே. பண்ணிடலாமா?"

"டபுள் ஓ.கே சொல்லிடு."

நண்பர்களின் தூண்டுதலில் சம்மதித்த பிறகுதான் நிச்சயதார்த்த ஏற்பாடுகள் நடந்தன. பெண்ணை நேரில் பார்த்தே ஆக வேண்டும் என குதித்த நண்பர்களை அழைத்து வந்தது முதல் தவறு.

மணப்பெண் அலங்காரத்தில் வந்து நின்றவளை ஆங்கிலத்தில் சற்றே முகம் சுளிக்கும் விதமாய் அவர்கள் வர்ணித்தபோது அலட்சியமாய் ஏற்றுக் கொண்டது அடுத்த தவறு.

மிதமிஞ்சிய போதையில் அவளைக் கண்டது பேசியது, பொய் சொல்லி தோட்ட வீட்டிற்கு அழைத்துச் சென்றது என எல்லாமே தவறாகிப் போனது.

அதன் பிறகு நடந்ததை நினைத்துப் பார்க்க விரும்ப வில்லை. வீட்டின் மேல்சுவரில் செருகியிருந்த கட்டையை உருவி தாறுமாறாய் அடித்துவிட்டாளே...

சுரேந்திரனின் உதடு கிழிந்து இரத்தம் வழிந்ததும் வெறிவந்தாற்போல் மூவரும் சூழ்ந்து கொண்டனர்.

என்னதான் சீறினாலும் தன்னைக் காத்துக் கொள்ளப் போராடினாலும் வேங்கையிடம் மாட்டிக்கொண்ட மானால் தப்பிக்க முடியுமா?

அதுவும் அவள் சின்னஞ்சிறிய புள்ளிமானாயிற்றே. ஆனாலும் துணிச்சல்காரிதான். இறுதிவரை போராடினாளே.

தன் வலக்கையை உயர்த்திப் பார்த்தான். போராட்டத்தின் போது மணிக்கட்டைக் கவ்விக் கடித்துக் குதறிவிட்டாள். இன்றுவரை அதற்கு ஊசி போட்டுக் கொண்டுதான் இருக்கிறான். பெரிய கட்டோடு இருந்த மகனைக் காட்டி புலம்பித் தீர்த்தாள் மாரியம்மாள்.

"சிவனேன்னு இருந்தவளை வீடு தேடி வந்து எம்மவளுக்கு உன் மகனைக் கொடுன்னு கேட்டாளே. அப்பவே நான் உஷாரா இருந்திருக்கணும்."

ஒரு நாளும் இல்லாத திருநாளா வீடு தேடி வந்து சம்பந்தம் பேசுறாளே. என்ன விஷயம்னு ஆராய்ஞ்சிருக் கணும். புத்தி கெட்டவ! அப்படியே விட்டுட்டேனே..."

மாரியம்மாள் கதையளக்க எதிரே இருந்த பெண்மணிகள் வாயில் கை வைத்துக் கேட்டுக் கொண் டிருந்தனர்.

ஜெகனுக்கு அலுப்பாய் இருந்தது. ஊரில் ஒரு நாளுக்கு மேல் தங்காதவன் சுப்பிரமணியின் கண்ணில் பட்டுவிடக்கூடாது என்று பதுங்கினால் வருவோரிடமும் போவோரிடமும் அம்மா பேசியே கொன்றாள்.

தினமும் நான்கு பேராவது வந்து விடுகிறார்கள் துக்கம் விசாரிக்க. அவர்களிடம் அம்மா அளப்பதைக் கேட்கப் பொறுமை இருக்காது. ஆனால் வேறு வழி? எங்கும் செல்ல முடியாமல் அடைந்து கிடக்கிறானே.



பற்களைக் கடித்துக்கொண்டே அமர்ந்திருந்தான் ஜெகன். வந்திருந்த பெண்மணிகளில் ஒருத்தி கேட்டாள்.

"ஏன் மாரியம்மா! இம்புட்டு அழகான புள்ளையையா வேணாம்னு சொன்னா அவ..."

"அட ஆமாங்கிறேன். ஈஸ்வரியோட தம்பி ஒருத்தன் கட்டுமுட்டா வீட்டோட கிடக்கிறானே. அவனைத்தான் கட்டிக்கணும்னு சொல்வாளாம்."

"பிறகேன் ஈஸ்வரி உம் பிள்ளையைக் கேட்டா?"

"பெத்தவளாச்சே. ஆயிரம் தான் இருந்தாலும் படிக்காத தற்குறிப் பயலுக்குத் தன் மகளைக் கொடுப்பாளா? எம்புள்ளை படிச்சவன். பெரிய வேலையில இருக்கான்."

"அதோட பட்டிணத்தில இருக்கான்."

"ஆமாம். கார் பங்களாவில தன் மக சொகுசா வாழ ணும்னு ஆசைப்பட்டு என் புள்ளையோட வாழ்க்கையைக் கெடுத்திட்டா..."

"ஆமா! நடுசாமத்தில அந்தப் புள்ள ஏன் உம் மகனைத் தேடிப் போனா? அதுவும் தோட்டத்து வீட்டுக்கு?"

"எ... என்னைக் கேட்டா? நானும் அவ ஆத்தா கூடத்தான் படுத்திருந்தேன். எல்லாருக்குமே அசதி. கண் அசந்திட்டோம். இவ எப்போ போனான்னே யாருக்கும் தெரியலை..."

"ஏன் போனாளாம்?"

"அதான். இந்த சினிமாவில எல்லாம் வருதே. அந்த மாதிரி மாப்பிள்ளையை நேர்ல பார்த்து எனக்கு இந்தக் கல்யாணத்தில விருப்பம் இல்ல. நான் எம்மாமனைத்தான் கட்டிக்கப் போறேன்னு சொல்லி அழுதாளாம்."

"அப்படியா?"

"ம். நான் சொன்னதைக் கேட்காம எங்க வீட்ல உங்களை நிச்சயம் பண்ணிட்டாங்க. நீங்கதான் இந்தக் கல்யாணத்தை நிறுத்தணும்னு எம் மகன் கால்ல விழுந்து கெஞ்சினாளாம்."

"பிறகு?"

"எம்புள்ள தங்கமாச்சே. இதோ பாரு! எது பேசுறதா இருந்தாலும் என் அம்மாகிட்ட பேசிக்க. இப்போ வீட்டுக்குப் போயிடுன்னு சொல்லிட்டான்."

"ம்?"

"ம். உடனே அவளுக்கு கோபம் வந்திடுச்சாம். உங்களையெல்லாம் நம்ப முடியாது. நான் தற்கொலை பண்ணிக்கிட்டா என்ன பண்ணுவீங்கன்னு கேட்டு மோட்டருக்கு வெச்சிருந்த டீசலை எடுத்து ஊத்திக்கிட்டாளாம்."

"ஐயோ!"

"எம்புள்ளையும் கூட்டாளிப் பசங்களும் தடுத்தாங்களாம். அவங்களையெல்லாம் தாறுமாறா அடிச்சிருக்கா. எம்புள்ளை கையைக் கடிச்சி வெச்சிருக்கா..."

"ஐயோ! வெறி பிடிச்ச பெண்ணா இருந்திருப்பாளோ?"

"ஆமாக்கா. ஊரைவிட்டு ஓடிப் போயிடுங்கடா. இல்லன்னா உங்களையும் சேர்த்துக் கொளுத்திடுவேன்னு



மிரட்டியிருக்கா. எம்புள்ளையும் பதறிப்போய் ஓடி வந்திட்டான்."

"அதெல்லாம் சரி மாரியம்மா. ஆனா ஓடி வந்தவுக பொண்ணு வீட்டுக்காரனை எழுப்பிச் சொல்லிட்டு வந்திருக்கலாமில்ல..."

"அதானே! நீங்க திருட்டுத்தனமா ஓடி வந்ததால தானே அந்த ஊர்க்காரங்க கோபத்தில உன் வீட்டை நொறுக்கினாங்க."

மாரியம்மா சிலிர்த்துக் கொண்டாள். "பொசகெட்ட பயலுக. வீட்டுப் பொண்ணை ஒழுங்கா வளர்க்கத் துப்பில்ல. இங்கே வந்திட்டானுங்க வீரத்தைக் காட்ட..."

"சரி. உம்பிள்ளை நம்ம ஊருக்கு வந்தா ஒருநாள் கூட தங்கமாட்டானே. இப்ப என்ன? வீட்டுக்குள்ளேயே அடைஞ்சிக் கிடக்கான். வேலைக்குப் போகலையா?" - ஒரு பெண்மணி சந்தேகமாய் இழுக்க சட்டென உஷாரானாள் மாரியம்மாள்.

"எம்புள்ளைக்கும் வேதனை இருக்காதா? தானுண்டு தன் வேலை உண்டுன்னு இருந்த புள்ளைய நான்தான் கட்டாயப்படுத்தி இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைச்சேன். ஹூம். அது இப்படிப் பாதியில நின்னு போச்சே! இப்போ வேலைக்குப் போனா எல்லாரும் துக்கம் விசாரிக்கிறாங்களாம். அதான் எம்புள்ளை மன நிம்மதிக்காக ஊருக்கு வந்திருக்கான். எல்லாம் எங்க தலையெழுத்து!"

"அப்படியா சொல்ற மாரியம்மா?"

"ஆமா! வேறென்ன?"

"ஆனா! ஊருக்குள்ளே வேற மாதிரியில்ல பேசிக்கிறாங்க."

"என்னவாம்?"

"அந்தப் பொண்ணு தங்கமான பொண்ணாம். உம்புள்ளையும் கூட வந்தானுங்களே அஞ்சாறு தடிப்பசங்க. அவங்கள்லாம் சேர்ந்து ஏதோ பண்ணிட்டாங்கன்னு..."

"வாயை மூடுங்க. எம்புள்ளையைப் பத்தி எவ அப்படிப் பேசுவா?"

"ஊரே பேசுது. அதோட இன்னொரு விஷயம் தெரியுமா?"

"எ... என்ன?" - மாரியம்மாளின் குரல் இடறியது.

"அந்தப் பையன் சுப்பிரமணி இருக்கானே. அவன் எதுக்கும் அஞ்சாத வீரனாம்."

"அதுக்கு?"

"தன் அக்கா மகளை அப்படி வளர்த்தானாம். இப்போ அந்தப் புள்ளைய இப்படிப் பார்க்க முடியாம கொதிச்சுப் போயிருக்கானாம். உன் மகனைப் பார்த்தா உசுரோட விடமாட்டான்னு பேசிக்கிறாங்க" - அந்தப் பெண்மணி கொஞ்சம் மிரட்டலாகவே சொல்ல மாரியம்மா விக்கித்துப் போனாள்.

அறைக்குள் அமர்ந்திருந்த ஜெகனின் உடல் சில்லிட்டுப் போனது. உடல் வெடவெடத்தது. பயமாய் எச்சில் விழுங்கினான்.



"இவர்கள் சொல்வதைப் பார்த்தால் தன் நண்பர்களை மணிதான் கொன்றிருப்பானோ? சுசீலா எல்லாவற்றையும் சொல்லி இருப்பாளா? அப்படியென்றால்... அடுத்தது நான்தானா?"

மாரியம்மாள் மறுப்பாய் தலையசைத்தாள்.

"எம்புள்ளை எந்தத் தப்பும் செய்யல்ல. அவனுக்குப் பொண்ணு கொடுக்க ஆயிரம் பேர் ரெடியா இருக்காங்க. அவன் வீட்டுப் பொண்ணு மேலே தப்பை வெச்சிக்கிட்டு எம்புள்ளைய வெட்டுவானா? நான் சும்மா இருப்பேனா? வகுந்திடமாட்டேன்."

"என்னவோ மாரியம்மா! நீ உன் பிள்ளை தப்பு பண்ணலன்னு சொல்றே. ஊர்ல வேறுமாதிரிப் பேசுறாங்க. உண்மை எதுன்னு அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்."

"நீ பேசறதப் பார்த்தா எம்புள்ளைய சந்தேகப்படுற மாதிரில்ல இருக்கு."

"சந்தேகப்படல்ல. ஆனா நடந்தது என்னன்னு தெரியாம ஒரு வயசுப் பொண்ணைப் பத்தி தப்பாப் பேசக்கூடாதில்ல. பெண் பாவம் பொல்லாதது மாரியம்மா."

"ம்க்கும். இதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தியாக்கும்?"

"என்னவோ என் மனசுப் பட்டதைச் சொன்னேன். நீ தப்பா எடுத்துக்காதே!"

"சரி. சரி. கிளம்புங்க. எனக்கும் வேலை இருக்கு?"

"சரி. ஆமா, உன்புள்ள கை எப்படி இருக்கு?"

"காயம் பெரிசாத்தான் இருக்கு. சண்டாளி! எப்படிக் கடிச்சு வெச்சிருக்கா. அத்தனை பல்லும் பதிஞ்சிருக்கு."

"ஆஸ்பத்திரிக்குப் போனீங்களா?"

"ம்.ம். நாய்க்கடிய விட இதுதான் விஷமாம். தினம் ஊசி போட்டு மருந்து வெச்சி கட்டிட்டுத்தான் வர்றான்."

"சரி. பார்த்துக்க. நாங்க கிளம்புறோம்."

"ம். ம்..."

"எதுக்கும் உன் புள்ளைய தனியா வெளியே அனுப்பாதே..."

"ஏன்?"

"சுப்பிரமணி ரொம்பக் கோபமா இருக்கானாம். எப்போ எது நடக்கும்னு சொல்ல முடியாதில்லே. அதான் சொல்றேன்."

"அவன் ஊருக்கு வந்திட்டானாமா?"

"இன்னும் இல்ல... அந்தப் பொண்ணு உயிரோட இருக்கணுமேன்னு சாமிய வேண்டிக்க..."

"ஏன்? நான் ஏன் வேண்டிக்கணும்?"

"அங்கே சாவு விழுந்தா அவன் சும்மா இருப்பானா? உம் மகனை பலி போட்டுடமாட்டான்?"

ஜெகனின் இரத்தம் உறைந்துபோனது. தன் நண்பர்களின் இறப்பைவிட, திலோத்தமாவின் உதாசீனத்தைவிட,



தன் கையிலிருந்த காயத்தைவிட, சுப்பிரமணியின் கோபம் பற்றிய பயம் உலுக்கி எடுத்தது.

பெண்பாவம் சும்மாவிடுமா என்ற மிரட்டல் காதில் ஒலிக்க சர்வமும் நடுங்கினான்.

# 15

ஒன்றோடு ஒன்றாக உயிர்
சேர்ந்த பின்னே உலகங்கள்
நமையன்றி வேறேதுமில்லை!

தன் முன் அமர்ந்திருந்தவர்களைச் சற்றே கோபமாய் பார்த்தார் மருத்துவர்.

"என்னய்யா விளையாடுறீங்களா ரெண்டு பேரும்? சுய நினைவோடுதானே இருக்கீங்க?" - சந்தேகமாகக் கேட்டார்.

சுப்பிரமணி தயக்கமாய்க் கேட்டான். "ஏன் சார் இப்படிக் கேட்கிறீங்க?"

"வேற எப்படிக் கேட்கிறது? அந்தப் பொண்ணு எந்த நிலைமையில இருக்கான்னு தெரிஞ்சும் இப்படிக் கேட்டா..."

"இங்கேயே இருந்தா குணமாகிடுவாளா ஸார்?"

"இப்படிக் கேட்டா நான் என்ன சொல்றது?"

"பரவாயில்ல ஸார். இதே மாதிரி நீங்க எத்தனையோ பேரைப் பார்த்திருப்பீங்க. உங்களுக்குத் தெரியாம இருக்காது. எதுவா இருந்தாலும் வெளிப்படையாச் சொல்லிடுங்க ஸார்!"

"அது... வந்து..."

"தயங்காமச் சொல்லுங்க ஸார். நான் தாங்கிப்பேன்" - பணிவாய் பரிதாபமாய் நின்றவனை இரக்கமாய்ப் பார்த்தார் மருத்துவர்.

"இதோ பாருப்பா. அந்தப் பெண்ணோட உடம்புல பல பாகம் வெந்து போச்சு. இனிமே... அதை ஒண்ணும் செய்ய முடியாது."

"ஸார்!"

"லேசான காயம்னா காயத்தை ஆற வைச்சு பொழைக்க வைக்கலாம். ஆனா இந்தப் பெண்ணோட உடம்பு முழுக்க ரணமாகிப் போச்சு. முகம் மட்டும்தான் லேசான காயத்தோட தப்பியிருக்கு."

சுப்பிரமணியின் கண்களில் நீர் சுரந்தது. உதடு கடித்து கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

"இதுவே அந்தப் பொண்ணு தலையில ஊத்திக்கிட்டு கொளுத்தியிருந்தா எப்பவோ போயிருப்பா. இந்த அளவு பேசவும் முடிஞ்சிருக்காது. ஆனா... இப்போ..."

"சொ... சொல்லுங்க ஸார்!"

"ம்... உண்மையான நிலைமையைச் சொல்லித்தான் ஆகணும். அந்தப் பொண்ணு பிழைக்க சான்ஸ் இல்லப்பா..."

கண்களில் தேங்கி நின்ற நீர் இறங்கி வழிந்தது. "ஸ... ஸார்...!"

"அப்படியே பொழைச்சாலும் ம்ப்ச்! நோ யூஸ்."



"ஸார்!"

"கால்கள் முழுக்க வெந்ததால இனிமே நடக்க முடியாது. வயிறு, மார்பு எல்லாமே பொசுங்கியதால நரம்புகள் எல்லாம் சிதைந்து..."

"வேண்டாம் ஸார். இவ்வளவு விளக்கம் வேண்டாம். முடிவை மட்டும் சொல்லுங்க..." கைகூப்பிக் கண்ணீரோடு மன்றாடினான்.

"ஸாரிப்பா! எந்த நேரம்னு சொல்ல முடியாது. ஆனா எப்போ வேணா உயிர் போகலாம்."

"எப்படியும் உயிர் போகப் போகுது. அது ஏன் ஸார் இங்கே போகணும். எங்க வீட்ல என் மடியில போகட்டும். எங்களை அனுப்பிடுங்க."

"எதையும் யோசிக்காமப் பேசாதீங்க மிஸ்டர்!"

"நான் எல்லாத்தையும் யோசிச்சுத்தான் சொல்றேன் டாக்டர்."

"என்ன யோசிச்சீங்க? இப்பவே அந்தப் பொண்ணோட உடம்புல இருந்து கெட்ட நீர் வடிய ஆரம்பிச்சிடுச்சு. துர்நாற்றம் வீசும். ஊசி, மருந்து இல்லாம எப்படி வீட்ல கொண்டு போய் வெப்பீங்க."

"ஸார்! எனக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான மருந்து மட்டும் தந்து விடுங்க ஸார். என் சுசீயை நான் பார்த்துக்கிறேன்."

"சொன்னாக் கேளுங்க! தூசி, ஈ, எறும்பு எதுவும் படாம பார்த்துக்கணும். இல்லேன்னா கஷ்டமாயிடும்."

"நான் பார்த்துக்கிறேன் ஸார். என்னை மீறி அவளை எதுவும் நெருங்காது" - உறுதியாய்ச் சொன்னவனைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டார் மருத்துவர்.

"என்ன சொன்னாலும் புரிஞ்சிக்க மாட்டீங்களா?"

"ஸார்! உங்களுக்குத்தான் எங்க வேதனை புரியல்ல. என் சுசீ இவ்வளவு சிதைஞ்சதே போதும் ஸார். அவளை அறுத்துப் பொட்டலமாக் கட்டித் தந்திடாதீங்க. எனக்கு... அவ... முழுசா வேணும்."

"அவ ஆசையை நான் நிறைவேத்தணும். என் கடமையை நான் செய்யணும். அதுக்கு அவ வேணும். அவ கண் மூடுறதுக்குள்ள எங்க கல்யாணம் நடக்கணும்."

"என்ன? கல்யாணமா?" - அதிர்ச்சியாய்க் கேட்டார்.

"ஆமா ஸார். அவளோட ஒரே ஆசை அதுதான். அதை நான் நிறைவேத்தணும். அதுக்காகத் தான் உங்ககிட்டக் கேட்க வந்தோம்."

"என்னப்பா... நீ? உன் வாழ்க்கை?"

"என் வாழ்க்கையே என் சுசீதான் ஸார். சாகும்போது என் சுசீ வலியோட சாகக்கூடாது ஸார். நிம்மதியா அமைதியா மனநிறைவோடு கண் மூடணும்."

மருத்துவர் சில கணம் கண்களை மூடி யோசித்தார். அவர் முகத்திலும் கவலை ரேகைகள் தெரிந்தது. தீவிர யோசனைக்குப் பின் கண்களைத் திறந்தார்.

"சரிப்பா! நான் அனுப்புறேன்."

"ஸார்! ஸார்... ரொ... ரொம்ப நன்றி ஸார்!"



"ஆனா... வீட்டுக்குப் போறதா யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். மதுரை ஹாஸ்பிட்டலுக்கு எழுதித் தர்றேன். அப்படியே சொல்லிட்டுக் கிளம்பு."

"சரிங்க ஸார்!"

"கார் வேண்டாம். ஆம்புலன்ஸ்லயே கொண்டு போயிடுங்க. தூசி எதுவும் படாம இருக்கணும்."

"சரி ஸார்!"

"மருந்து, மாத்திரை தர்றேன். போட்டுவிடு. ஜாக்கிரதையா பார்த்துக்கோ..."

"நான் பார்த்துக்கிறேன் ஸார்!"

"வலி தாளாம கத்தினா என்னப்பா பண்ணுவ?"

"நான் பக்கத்தில இருந்தா அவளுக்கு வலிக்காது ஸார்!"

வருத்தமாய்ப் புன்னகைத்தார். "இத்தனை அன்பா இருக்கிற உன்னை விட்டுப் போக அவளுக்கு எப்படி மனம் வந்தது? புவர் கேர்ள்."

"இல்ல ஸார். தப்புப் பண்ணியது நான். அதற்கான தண்டனையைத் தான் அவ அனுபவிக்கிறா. அவ மேல எந்தத் தப்பும் கிடையாது."

"சரிப்பா. நீங்க கிளம்புங்க. நான் நர்ஸ்கிட்ட எழுதித் தந்து அனுப்புறேன். பார்த்துப் போங்க."

"ரொம்ப நன்றி ஸார்!"

"இருக்கட்டும்ப்பா! அவளைக் காப்பாத்தி உன்கூட அனுப்பினா சந்தோஷப் பட்டிருப்பேன்."

"நீங்க இப்போ அனுப்பினதே பெரிய உதவி ஸார்!"

"சரிப்பா. நீங்க கிளம்புங்க."

மீண்டும் நன்றியுரைத்துவிட்டு மருத்துவரின் அறையை விட்டு வெளியேறிய போது சுப்பிரமணியின் மனம் லேசாகி யிருந்தது.

"ஆனந்தா. ஆம்புலன்ஸ்க்கு ஏற்பாடு பண்ணுவோமா?"

"நீங்க போய் அவங்களை ரெடி பண்ணுங்க அண்ணே! நான் ஆம்புலன்ஸ்சோட வர்றேன்."

"ஆனந்தா. ஒரு சின்ன விஷயம்."

"என்ன அண்ணே?"

"வந்து... சுசீயோட நிலை எனக்கு மட்டும்தான் தெரியும். அக்காகிட்டக் கூட சொல்லல நான்."

"சரிண்ணே..."

"உனக்குத் தெரிஞ்சதா யார்கிட்டேயும் காட்டிக்க வேண்டாம்."

"சேச்சே! யாருக்கும் தெரியவிட மாட்டேன் அண்ணே."

"அன்னிக்கு ஆம்புலன்ஸ்ல நீயும் என் பக்கத்துல இருந்தது சுசீக்குத் தெரியாது. அவ எங்கிட்டதான் பேசுறதா நினைச்சி எல்லாத்தையும் சொன்னா."

"அண்ணே! நிச்சயதார்த்தத்தில சுசீலாவையும், ஜெகனையும் பார்த்து நான் சந்தோஷம்தான் பட்டேன். ஏன்னா என்னைவிட ஜெகன் அதிகம் படிச்சிருக்கான், அழகாவும் இருக்கான். இவங்க ஜோடிப் பொருத்தம் அம்சமா இருக்குன்னு பெருமைப்பட்டேன்.

ஆனா எப்போ சுசீலா எரியுற செய்தி வந்ததோ அந்த நிமிஷமே நொறுங்கிட்டேன். கடைசியா ஒரு முறையாவது அவளைப் பார்த்திடலாம்னுதான் ஓடி வந்தேன்."

"நீ வரலன்னா நானும் ரொம்பக் கஷ்டப்பட்டிருப் பேன்ப்பா. எனக்கு எங்கே போகணும், யார்கிட்ட பேசணும்னு எதுவும் தெரியாது. முன்னே பின்னே ஆஸ்பத்திரிக்குப் போய் பழக்கம் இல்லையே..."

"ஆமாண்ணே! ஏதோ என்னால முடிஞ்ச உதவியைச் செய்ய முடிஞ்சதேன்னு எனக்கு ஓர் திருப்தி. ஆனா... சுசீலா பேசினதைக் கேட்டதும் வெறியே வந்திடுச்சு."

"அதே வெறிதான் எனக்குள்ள எரிஞ்சிட்டு இருக்கு ஆனந்த். ஜெகனோட மரணத்தைப் பார்த்த பிறகுதான் அது அடங்கும்."

"நிச்சயமாண்ணே..."

"ஆனந்த். நாம ஊருக்குப் போனதும் எப்படியும் அவனுக்கு சேதி போகும். அவன் எங்கேயும் போயிடாம நீதான் பார்த்துக்கணும்."

"அதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்கண்ணே. இனிமே அந்த ஜெகனோட நிழல்கூட என்னைக் கேட்காம அசையாது."

"எப்படி... எப்படி அவனைக் கண்காணிப்ப?"

"அவன் ஊருக்கும், எங்க ஊருக்கும் ரெண்டு கிலோமீட்டர் தூரம்தான். அதோட அவன் வீட்டுக்கு அடுத்த வீடு என் சித்தி வீடு."

"அப்போ உன் சித்தி வீட்டுக்குப் போயிடுறியா?"

"சரிண்ணே. சித்தப்பா கொஞ்சம் சுகமில்லாம இருக்காங்க. கூடமாட ஒத்தாசை செய்த மாதிரியும் ஆச்சு, ஜெகனைக் கண்காணிச்ச மாதிரியும் ஆச்சு."

"அவனைத் துல்லியமா கண்காணிக்கணும் ஆனந்த். எந்த நிமிஷமும் அவன் எஸ்கேப் ஆயிடக்கூடாது."

"சான்ஸே இல்லண்ணா. ஏன்னா சென்னையில அவன் பதுங்கிற இரண்டு ப்ரெண்ட் வீட்லயும் இனிஅவன் நுழைய முடியாது. இவன் மேட்டர் தெரிஞ்ச யாரும் இவனைச் சேர்த்துக்கவும் மாட்டாங்க."

"நீ அவன் நண்பனாச்சே. பழைய மாதிரியே பேசு."

"சரிண்ணே..."

"கோபத்தையோ, வெறுப்பையோ காட்டிடாதே. உஷாராயிடுவான்."

"சரிண்ணே!"

"நீ என்னைப் பார்க்க வர்றது அவனுக்குத் தெரிய வேண்டாம். எங்களைப் பத்தி விசாரிச்சாலும் தெரியாதுன்னு சொல்லிடு."

"அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். அண்ணே! நாம போற வழியில முக்கியமான பொருள் எல்லாம் வாங்கணும்."



"என்ன பொருள்?"

"கல்யாணம் பண்றதுன்னு முடிவாகிடுச்சு. தாலி வாங்கணுமே..."

"ஆமாம். வாங்கிடலாம். அதுக்கு முன்னால அக்கா கிட்ட இதைப் பத்திச் சொல்லிடணும்."

"சரிண்ணே! நீங்க போய் அவங்களை ரெடியா இருக்கச் சொல்லுங்க. நான் ஆம்புலன்ஸக் கூட்டிட்டு வர்றேன்."

"சரிப்பா" - என்றவாறு சுசீலா இருந்த வார்டை நோக்கிச் சென்றான். அதற்குள் டாக்டரின் ரிப்போர்ட்டோடு நர்ஸ் ஈஸ்வரியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

"இதோ! என் தம்பி வந்திட்டான். அவன்கிட்ட கேளுங்கம்மா" - ஈஸ்வரி சொல்ல, நர்ஸ் சுப்பிரமணியிடம் திரும்பினாள்.

"ஏம்பா! சுசீலாவை டிஸ்சார்ஜ் செய்யச் சொல்லி டாக்டர் சொல்லிட்டார். இந்தா! இது மதுரை ஹாஸ்பிட்டல்ல கொடுக்க வேண்டிய ரிப்போர்ட். பத்திரமா வெச்சுக்க."

"சரிங்க நர்சம்மா."

"வண்டி ரெடியா? என்ன வண்டியில போகப் போறீங்க?"

"இப்போ ஆம்புலன்ஸ் வந்திடும்மா."

"இதோ பாருப்பா. தொட்டுத் தூக்க முடியாது. படுக்கையோட சேர்த்துதான் தூக்கணும். வண்டி வந்ததும் சொல்லு. வார்டு பாயை அனுப்பறேன்."

"சரிங்கம்மா..."

"இந்தா! இந்தச் சீட்டை மருந்து வாங்குற இடத்தில கொடுத்து மருந்தெல்லாம் வாங்கிக்க."

"சரிம்மா" – என்றவாறு வாங்கிக்கொண்டான்.

"இதோ பாருப்பா. கூட்டிட்டுப் போறது சரி. பத்திரம். போற வழியில கூட எதுவும் ஆயிடலாம். கவனமா பார்த்துக்க."

"சரிங்கம்மா. நான் சுசீலாவைப் பார்க்கணுமே."

"ம். பாரு. கால்ல அந்த உறைய மாட்டிக்க."

"சரிங்கம்மா" – என்றவாறு செருப்பைக் கழற்றிவிட்டு துணியால் ஆன உறைக்குள் காலை நுழைத்துவிட்டு அறைக்குள் நுழைந்தான்.

சுசீலாவின் படுக்கையை நெருங்கியதும் நின்றான். சுசீலாவிடம் அசைவில்லை. மிக மிக மெதுவாய் சுவாசம் வந்து போய்க் கொண்டிருந்தது.

மருத்துவரும், நர்சம்மாவும் சொன்னது உண்மை தான். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். ஆனால் அதற்கு முன் நடக்க வேண்டியவை நடந்தே ஆக வேண்டும்.

ஜெகன்! சுசீலாவின் உயிர் உடல் கூட்டை விட்டுப் பிரியும்போது இந்த பூமியில் நீ இருக்கக்கூடாது. இருக்க விடமாட்டேன்.

சுப்பிரமணியின் முகம் அந்திச் சூரியனாய் மாறியது.



# 16

பாதையோ தூரம் நானொரு
பாரம் என்னை உன் எல்லைவரை
கொண்டு செல்வாயா – உடலுக்குள்
இருக்கும் உயிர் ஒரு சுமையா
பெண்ணே உன்னை நானும்
விட்டுச் செல்வேனா? கண்ணே!

ஆம்புலன்ஸ் சீரான வேகத்தில் சென்று கொண்டிருக்க, ஓட்டுநரின் அருகே ஆனந்தன் அமர்ந்திருந்து வழிகாட்டிக் கொண்டிருந்தான்.

பின்புற இருக்கையின் சீட்டின் நடுவே போடப் பட்டிருந்த படுக்கையில் சுசீலா படுக்க வைக்கப்பட்டிருக்க, தலைமாட்டின் அருகே சுப்பிரமணி அமர்ந்திருந்தான்.

கொஞ்சம் ஒதுங்கி அமர்ந்திருந்த ஈஸ்வரியின் கண்களில் நீர் நிற்காமல் வழிந்து கொண்டே இருந்தது. துடைக்கவும் தோன்றாமல் வாயை மூடியபடியே சத்தமின்றி அழுது கொண்டிருந்தாள்.

சுப்பிரமணியின் கண்களில் வெறுமை குடி கொண்டிருந்தது.

ஒருவாரமாய் மழிக்கப்படாத தாடியும், வாரப்படாத தலையும், சிவப்பேறிய கண்களும் சற்றே மெலிந்த தேகமுமாய் நிறைய மாறிப் போயிருந்தவனை விழிகள் நோகப் பார்த்துக்கொண்டே இருந்தாள் சுசீலா.

கழுத்துவரை பிளாஸ்டிக் பேப்பரால் மூடப்பட்டு அதற்குமேல் துணியால் போர்த்தப்பட்டிருந்த உடலை வேதனையாய் பார்த்துக் கொண்டிருந்தான் சுப்பிரமணி.

"மா... மாமா! நாம எங்கே போறோம்?" - உலர்ந்த குரலில் சுசீலா கேட்க. அவளது முகத்தைப் பார்த்து லேசாய் புன்னகைத்தான்.

"வீட்டுக்குப் போறோம்டா."

"வீட்டுக்கா?" - விழிகளில் கலவரம் தெரிந்தது.

"ஆமாம்டா. நீதானே போகணும்னு சொன்னே..."

"ம். சொன்னேன். ஆனா..."

"என்னம்மா?"

"மாமா! நாம வீட்டுக்குப் போனா எல்லாரும் என்னைப் பார்க்கன்னு வருவாங்களே. எனக்கு... எனக்கு அசிங்கமா இருக்குமே..."

"யார் வந்தாலும் அம்மா பேசி அனுப்பிடுவா. உன் பக்கத்தில யாரும் வரமாட்டாங்க."

"நீ? நீ... இருப்பியா மாமா என்கூட?"

"அதைவிட வேறென்னம்மா வேலை எனக்கு? கண்டிப்பா உன் பக்கத்திலேயே தான் இருப்பேன்."

"கடைசி வரை இருப்பியா?"

"ம். இருப்பேன்" - தொண்டை அடைத்தது.

"மாமா! எனக்கு... என்னவோ ஆயிடுச்சி."



திடுக்கிட்டான். "என்னம்மா? எதுவும் பண்ணுதா?"

"இல்ல மாமா எதுவுமே பண்ணமாட்டேங்குதே..."

"என்னடா சொல்றே?"

"மாமா! என்.. என் கால் இருக்குதா?" - கால்களை அசைத்தவாறே கேட்டாள் சுசீலா.

"இருக்குதுடா. நல்லா இருக்குதே. ஏன்டா கேக்கிற?"

"இல்ல மாமா. கால் இருந்த இடமே எனக்கு உணர்வில்லையே" - லேசான பதட்டத்தோடு சுசீலா சொல்ல, அக்காவும் தம்பியும் துல்லியமாய் அதிர்ந்தனர்.

"என்ன?"

"ஆமாம் மாமா. கால்... வயிறு எதுவுமே இருந்த மாதிரி தெரியலையே. ரொம்ப வலிச்சதே. இப்போ வலிக்கலியே..."

ஈஸ்வரியின் அழுகை அதிகரிக்க, அவளைப் பார்வையால் அடக்கினான். சமாளிப்பாய் சுசீலாவைப் பார்த்தான்.

"அது... அது வேற ஒண்ணுமில்லடா கண்ணு வலி தெரியாம இருக்க மருந்து கொடுத்தாங்கல்ல. அதான் அப்படி இருக்கும்."

"இல்ல மாமா. எத்தனை மருந்து கொடுத்தாலும் எரியுமே. வலிக்குமே இப்ப எப்படி வலிக்கலே?"

"இல்லடா. ஒரு வாரமாகிப் போச்சே. புண் ஆற ஆரம்பிச்சிருக்கும். கொஞ்சம் கொஞ்சமா சரியாகிடும்."

"அப்படியா சொல்றே?"

"ஆமான்டா கண்ணு."

"இல்ல மாமா. என் உடம்புல ஒவ்வொரு பாகமா செத்துப்போகுதுன்னு நினைக்கிறேன்."

அவசரமாய் அவளது வாயை மூடினான் "அப்படி யெல்லாம் பேசாதே கண்ணு" – குரல் கம்மியது.

"சரி மாமா."

"நீ அமைதியாத் தூங்கும்மா. வீடு போய்ச் சேர நேரமாகும்."

"மாமா. உன் முகம் ஏன் இப்படி இருக்கு?"

"எப்படி இருக்கு?"

"முள்முள்ளா தாடியெல்லாம் வளர்ந்திருக்கு. தலைகூட வாரலையா?"

"வீட்ல போய் வாரிக்கலாம்."

"ஏன் மாமா இப்படி இருக்கு?"

"கண்ணு... அது ஆஸ்பத்திரியில ஒரே கொசுக்கடி. ராத்திரி தூங்கவே இல்லை. அதான் அப்படியிருக்கு."

"என்னால உங்களுக்கெல்லாம் ரொம்பக் கஷ்டம். இல்ல மாமா."

"உன் கஷ்டத்தை விடவா?"

"மாமா! ஏன் திடீர்னு இருட்டாயிடுச்சி. லைட் போடு மாமா."



வயிற்றுக்குள் எதுவோ பிசைய பார்வையை வெளியே வீசினான். மதிய வெயில் சுள்ளென அடிக்க பளீரென வெளிச்சம் வீசிக் கொண்டிருந்தது.

தவிப்பாய் தமக்கையை ஏறிட்டான். அவள் முகமும் வெளிறிப் போயிருந்தது.

"தம்பி! என்ன இது... இப்படிச் சொல்றாளே" – நடுக்கமாய்க் கேட்டாள்.

"ஷ். சும்மாயிரு" – என அதட்டியவாறே சுசீலாவிடம் குனிந்தான்.

"என்னடா கண்ணு. தூக்கம் வருதா?"

"இல்ல மாமா. ராத்திரி ஆயிடுச்சா. ஏன் இவ்வளவு இருட்டா இருக்கு."

"மகமாயி! எம்புள்ளையக் காப்பாத்து தாயி! நான் என்ன பண்ணுவேன்" – ஈஸ்வரி பெருங்குரலில் அழ ஆரம்பிக்க, வண்டி மெதுவானது.

"என்னாச்சு அண்ணே!" – பதட்டமாய்க் கேட்டான் ஆனந்தன்.

"ஆனந்த்! கொஞ்சம் இங்கே வாயேன்" – சுப்பிரமணி பதட்டமாய்ச் சொல்ல, கண்களை மலர்த்தினாள் சுசீலா.

"யாரு மாமா அது?"

"அது... ஆனந்தன்... கம்மாப்பட்டி மாப்பிள்ளை."

"அவன் ஏன் இங்கே வந்தான்?"

"ஹாஸ்பிடல்ல இருந்து வர்றதுக்கு உதவி செய்தாம்மா. ரொம்ப நல்லப் பையன்."

"என்ன மாமா! எதுவும் பேசமாட்டேங்கிற?"

"என்ன ஆச்சு அண்ணே" - என ஆனந்தன் நெருங்கி வர, பதட்டமாய் அவனைப் பார்த்தான் சுப்பிரமணி.

"ஆனந்து! கால் கையெல்லாம் மரத்துப் போச்சுன்றா. இருட்டா இருக்குதுன்னா. இப்போ... நான் பேசறதும் கேட்கல்ல போலிருக்கு."

"அண்ணே! அப்படின்னா..."

"இல்ல! அப்படியெல்லாம் எதுவும் ஆகக்கூடாது. நாம நினைச்சது நடக்கிற வரைக்கும் எதுவும் ஆகிடக்கூடாது."

"இப்போ... என்ன அண்ணே செய்யலாம்?"

"ஏதாவது ஆஸ்பத்திரி வருதா பாரேன். கூட்டிட்டுப் போலாம்."

"அண்ணே! இது என்ன சாதாரண நோயா? எல்லா ஹாஸ்பிட்டல்லயும் எடுக்க மாட்டாங்கண்ணே."

"அப்போ! என்ன பண்றது?"

"டாக்டர் கொடுத்த மருந்தைக் கொடுப்போம்."

"ம். சரி. அக்கா! மருந்து பாட்டிலை எடு."

பதட்டத்தோடு கண்ணீரைத் துடைத்தவாறே மருந்து பாட்டிலை எடுத்து நீட்டினாள். இரண்டு மூடி மருந்தை அவளது வாயில் புகட்டினான் சுப்பிரமணி.



மறுக்காமல் குடித்துவிட்டு கண்களை மூடிக் கொண்டாள் சுசீலா. மூவரும் தவிப்பாய் பார்த்துக் கொண்டிருக்க லேசாய் முனகினாள்.

"மாமா! தூக்கமா வருது மாமா."

"தூங்குடா கண்ணு. அமைதியாத் தூங்கு" - பரிவாய் தலையை வருடினான். லேசான முனகலோடு தூங்க ஆரம் பித்தாள். சீரான சுவாசம் மட்டுமே வந்து கொண்டிருக்க, சற்று நேரம் அமைதியாய் இருந்தான்.

கலங்கியிருந்த கண்களைத் துடைத்தவாறே, "ஆனந்த்! நீ முன்னால போய் உட்காரு. எந்தக் கடையில தாலி கிடைக்குமோ அங்க வண்டிய நிறுத்தச் சொல்லு. தாலி வாங்கணும்."

"தம்பி!"

"வெறும் மஞ்சக்கயிறு கிடைச்சாலும் போதும். இப்பவே சுசீ என்னோட மனைவியாகணும். அவ ஆசையை நான் நிறைவேத்தியே ஆகணும்."

"சரிண்ணே! டிரைவரண்ணே வண்டிய எடுங்க."

மீண்டும் புறப்பட்டுச் சென்ற அரைமணி நேரத்தில் வண்டியை ஓரமாய் நிறுத்தச் சொன்னான் ஆனந்தன். வண்டி நிற்க, சுப்பிரமணி வெளியே எட்டிப் பார்த்தான்.

சாலையோரமாய் சற்றே பெரிதாய் அமைந்திருந்த அந்த வேம்புலி அம்மன் கோயில்.

வரிசையாய் வாகனங்கள் நின்றிருக்க, கோயிலில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

வரிசையாய் இருந்த கடைகளில் மாலைகள். ரகம் ரகமாய் பூச்சரங்கள். அர்ச்சனைத் தட்டுகள், எண்ணெய் விளக்குகள். தேங்காய் பழம், வெற்றிலைப் பாக்கு என அனைத்தும் இருந்தன.

ஆனந்தன் வேகமாய் இறங்கி அந்தக் கடையை நெருங்கினான்.

"ஏம்மா! மஞ்சக்கயிறு கிடைக்குமா?"

"ம். இருக்குதுப்பா!"

"ஒன்னு கொடுங்கம்மா."

"கயிறு மட்டும் தனியா இல்லப்பா. மஞ்சள், குங்குமம் மஞ்சள் கயிறோட இருக்கு. பாக்கெட் அஞ்சு ரூபா."

"சரி, கொடுங்க."

அந்த அம்மாள் எடுத்துக் கொடுக்க, ஆனந்தன் கோயிலைப் பார்த்தவாறே கேட்டான்.

"இன்னிக்கு எதுவும் விசேஷமா? கூட்டம் நிறைய இருக்கே..."

"ஆமாப்பா. இன்னிக்கு அம்பது ஏழைப் பெண் களுக்கு இலவசமா கல்யாணம் பண்றாங்க."

"என்ன? இன்னிக்கு முகூர்த்தமா?"

"ம். ரொம்ப விசேஷமான முகூர்த்தம். வளர்பிறை முகூர்த்தம். அதோடு இது கார்த்திகை மாசமில்ல. இந்த மாசத்துல இதுதான் கடைசி முகூர்த்தம்! இந்த அம்மன் ரொம்ப சக்தி வாய்ந்தவ. இங்க கல்யாணம் செய்தா ரொம்ப நல்லது. "அப்படியா? கல்யாணம் முடிஞ்சிடுச்சா?"



"மணி பனிரெண்டு ஆயிடுச்சா?"

வாட்ச்சைத் திருப்பிப் பார்த்தான். "இன்னும் பத்து நிமிஷம் இருக்கு."

"அப்ப... தாலி கட்டுற நேரம்தான்." – அவள் சொல்லும் போதே கோயிலுக்குள் மேளதாளங்கள் முழங்கத் தொடங்கின.

"கொஞ்சம் சீக்கிரம் கொடுங்கம்மா."

"மரத்தில கட்டுறதுக்குத்தானே. இந்தா! இந்த மஞ்சளை கயித்திலே முடிஞ்சிக் கட்டு."

"தேங்க்ஸ்மா" - பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பியவன் பூக்கடையை நெருங்கினான்.

"பத்து ரூபாய்க்கு மல்லிப்பூ கொடுங்கம்மா. சீக்கிரம்."

"தம்பி! பத்து ரூபாய்க்கு ஒரு முழம்தான் வரும். இன்னிக்கு முகூர்த்த நாளாச்சே."

"சரி! மூணு முழம் கொடுங்க. நேரமாகுது... சீக்கிரம்."

பூக்கார அம்மாள் வேகமாய் அளந்து பூவை அவனிடம் நீட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு ஓடிச் சென்று வண்டியில் ஏறினான்.

வண்டி நின்றதில் தூக்கம் கலைந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் சுசீலா. பூவைப் பிரித்துக் கொஞ்சமாய் உதிர்த்துக் கொண்டாள்.

"அண்ணே! இந்தாங்க. இந்தப் பூவை சுசீலாவிற்கு வையுங்க. இந்தாங்க தாலி." - என பூவைக் கொடுத்துவிட்டு, மஞ்சள்கயிறை பிரித்து மஞ்சள்கிழங்கை முடிந்து வைத்தான். ஈஸ்வரியின் கையில் உதிரிப்பூக்கள் கொஞ்சம் கொடுத்தான்.

கண்களில் சுரந்த கண்ணீரோடு படுக்கையில் இருந்த சுசீலாவின் தலையில் லேசாய் பூவைச் சொருகினான் சுப்பிரமணி.

"அண்ணே! இன்னிக்கு நல்ல முகூர்த்தமாம். கோயில்ல இப்போ அம்பது ஜோடிக்கு கல்யாணம் நடக்கப் போகுது. உங்க கல்யாணத்தையும் சேர்த்து ஐம்பத்தி ஒண்ணா நடக்கட்டும்."

"எப்போ?"

"இப்போ தான். மேளச் சத்தம் கேட்குது. கிளாஸை இறக்கிடுவோம். சுசி காதிலயும் விழட்டும். கெட்டிமேளம் கொட்டினதும் தாலியைக் கட்டுங்க" - தந்தி வேகத்தில் ஆனந்தன் சொல்ல, சுசீலா கண்களை மலர்த்தினாள்.

"மாமா! என்ன நடக்குது இங்கே?"

"நம்ம கல்யாணம் நடக்கப் போகுது கண்ணு."

"எ... என்ன? நிஜமாவா?"

"ஆமா! இதோ பார் தாலி. வேம்புலி அம்மன் சாட்சியா உன் கழுத்தில தாலி கட்டப் போறேன்."

சுசீலாவின் கண்கள் நீரால் நிறைந்தன. "மாமா! நீ... நீ சொல்லும் போது... என் ஆறுதலுக்காக... சும்மா சொல்றேன்னு நினைச்சேன் மாமா."



"கல்யாண விஷயத்துல சும்மா சொல்லுவேனா?"

"அப்போ... நிஜமாவே என்னைக் கட்டிக்கப் போறியா?"

"ம்... இதோ... இப்பவே..."

கோயிலில் கெட்டிமேளம் உச்சஸ்தாயில் முழங்க, "ம். தாலியக் கட்டுங்க. டிரைவரண்ணே! நீங்களும் வாங்க" - என ஓட்டுநரை அழைத்து அவர் கையில் சில உதிரிப் பூக்களைக் கொடுத்துவிட்டு தானும் ரெண்டை வைத்துக் கொண்டான்.

சுசீலா இன்னும் நம்ப முடியாத பார்வையோடு இருக்க, அவளது தலையை மெதுவாய்ப் பற்றி தன் மடியில் வைத்து, கண்களில் நீர் நிறைய, நடுங்கும் கரங்களால் மஞ்சள் கயிறைக் கட்டினான் சுப்பிரமணி.

மற்றவர்கள் மனம் கசிய பூக்களைத் தூவி வாழ்த்த, அங்கே எளிமையான நிறைவான திருமணம் நடந்தேறியது. ஓட்டுநர் கூட கசிந்த தன் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

ஈஸ்வரியின் கண்ணீரால் புடவைத் தலைப்பு நனைந்தது. மூன்று முடிச்சுகளையும் போட்டு நிமிர்ந்த போது சொல்ல முடியாத வேதனையும் நிம்மதியும் இணைந்து வந்தது.

கண்ணீரோடு பார்த்த சுசீலாவின் நெற்றியில் குனிந்து முத்தமிட்டான் சுப்பிரமணி. கண்ணீரோடு சிரித்தாள் சுசீலா.

"போதும் மாமா. இதுபோதும் எனக்கு... இது போதும்."

"அண்ணே! இந்தாங்க குங்குமம். வெச்சி விடுங்க" - ஆனந்தன் குங்கும டப்பாவைத் திறந்து நீட்ட, வலக்கர

மோதிர விரலால் தொட்டு சுசீலாவின் வெறுமையான நெற்றியில் வைத்தான்.

"மாமா! வகிட்டில வெச்சுவிடு மாமா."

"ம்." - புன்னகையோடு வைத்தான். கழுத்தில் தொங்கிய தாலியை எடுத்து நீட்டினாள்.

"இதுலயும் வை மாமா!" வைத்தான்.

"மாமா! உன் காலைக் காட்டு மாமா."

"ஏன்டா?"

"உன் கால்ல விழ முடியாது. தொட்டுக் கும்பிடுறேனே..."

"அதெல்லாம் வேண்டாம் கண்ணு."

"கும்பிடணும் மாமா. எனக்காக... ப்ளீஸ்!"

அவள் தலைமீது தன் கைகளை வைத்து ஆசிர்வதித்தான். "நீ... நல்லா இருக்கணும்மா. மனசு போல வாழணும்" - இந்த வாழ்த்து பலிக்குமா வேதனையோடு சொன்னவனை அண்ணாந்து பார்த்தாள்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு மாமா. அம்மா! எங்களை ஆசிர்வதிம்மா!"

கண்ணீரோடு பேச்சின்றி கை உயர்த்தி ஆசிர்வதித்தாள் ஈஸ்வரி.

"போலாமா?" - ஓட்டுநர் கேட்டார்.

"ஒரு நிமிஷம்ணே" - என்ற ஆனந்தன் சுப்பிரமணியை ஏறிட்டான்.



"மணி அண்ணே! இந்த அம்மன் ரொம்ப சக்தி வாய்ந்த அம்மனாம். எல்லாம் நல்லபடியா நடக்கணும்னு வேண்டிக்கங்க. நாம கிளம்பலாம்."

'எல்லாம்' - என அவன் அழுத்திச் சொன்னதன் அர்த்தம் புரிய கோயிலை நோக்கித் திரும்பி கைகூப்பி, மனம் உருகி வேண்டிக் கொண்டான். முழுதாய் ஐந்து நிமிடம் கழித்தே கண்களைத் திறந்தான்.

"போலாமா?"

"ம். போலாம் ஸார்."

"கண்ணாடிய மூடிடுங்க ஸார்" - என்றவாறு வண்டியை இயக்க சுப்பிரமணி கண்ணாடியை மூடினான்.

சுசீலாவின் அருகே அமர்ந்துகொண்டான்.

சுசீலாவின் முகம் தெளிவாய் இருந்தது. பிரகாசமாய் மின்னியது. வாடி வதங்கிய வதனத்தில் இத்தனை மலர்ச்சி எப்படி வந்தது?

இந்தப்பூ, குங்குமம், மஞ்சள் கயிறால் வந்த மகிமையா? இதை நான் ஏன் முன்பே கொடுக்கவில்லை. இன்று... தன் இறுதி நாளில் கொடுக்கத் தான் என் திருமணத்திற்கு ஜாதகம் என்ற தடை வந்ததா?

முதலில் அந்த ஜாதகத்தை எடுத்துக் கொளுத்த வேண்டும். முகம் கடுத்தவனைப் பார்த்துப் புன்னகைத்தாள் சுசீலா.

அந்தப் புன்னகையில் மற்றதெல்லாம் மறந்து தானும் புன்னகைத்தான் சுப்பிரமணி.

# 17

இதமாய் சாய்ந்து இமைகள்
மூடு இதுவே இன்பம் வேறேது
இறக்கும் போதும் இதுவே போதும்
இனிமேல் பிறவி வேண்டாமே!

"மாமா!"

"ம்?"

"இது... இதெல்லாம் கனவில்லையே..."

"நிஜம்மா. என்மேல நம்பிக்கை இல்லையா?"

"அப்படியில்லே மாமா... என்னால... இன்னும் நம்ப முடியல்ல."

"ஏன்டா?"

"மாமா! உனக்கு... என்னைப் பார்த்தா வெறுப்பா இல்லையா?"

"சீச்சீ என்ன கேட்கிற நீ?"

"இல்ல மாமா... நான்... நான் கெட்டு..."

"சுசீ! உங்கிட்ட ஆஸ்பத்திரியிலேயே எல்லாம் சொன்னேன்ல: இனிமே இப்படி எதையும் பேசக் கூடாதுன்னு..."

"சொன்னே மாமா. ஆனா?"

"இனிமேலும் எதையும் பேசக்கூடாது. அப்படிப் பேசினா நீ என்னை மதிக்கலன்னு அர்த்தம். வேதனைப் படுத்துறன்னு அர்த்தம்."



"அச்சோ! அப்படிப் பேசாதே மாமா. ஏற்கனவே உன்னை ரொம்ப வேதனைப்படுத்திட்டேன். இனிமே அப்படிப் பேசமாட்டேன்."

"சரி. தூக்கம் வந்தாத் தூங்கு."

"வேண்டாம் மாமா."

"தூக்கம் வரலையா?"

"வேண்டாம் மாமா. தூக்கம் வரவே வேண்டாம்."

"ஏன்டா?"

"தூங்குறதுக்காகக்கூட நான் கண்ணை மூடக்கூடாது. உன்னைப் பார்த்திட்டே இருக்கணும்."

"சுசீ"

"இன்னும் எத்தனை நாள் பார்க்கப் போறேனோ. அதுவரை நல்லா பார்த்துக்கிறேனே..."

ஈஸ்வரி வாயைத் திறந்தாள். "அப்படியெல்லாம் பேசாதம்மா. இனி உனக்கு ஒண்ணும் ஆகாது. நீ பிழைச்சி எழுந்திடுவ."

"அம்மா!"

"ஆமாண்டி. இந்தத் தாலி உன்னைக் காப்பாத்திடும்."

"மாமா! நான்... நான் பிழைச்சிடுவேனா?"

"ஆமான்டா கண்ணு."

"மாமா! இப்ப... இந்த நிமிஷத்தில எனக்கு வாழணும்ற ஆசை வந்திருக்கு மாமா. நான் பிழைப்பேனா?"

"ம். ஊர்ல போய் வைத்தியம் பார்த்தா பிழைச்சிடுவ?"

"மாமா! உங்கூட வாழ்ந்து என்னால பிள்ளக்குட்டி பெத்துக்க முடியாதே. உன்னை சந்தோஷமா வெச்சுக்க முடியாதே. அப்போ... நான் பிழைச்சும் ஒரு பயனும் இல்லையே மாமா."

"எது சுசீ சந்தோஷம்?"

"மாமா!"

"நீ என்கூட வாழுற. என் கண் முன்னாடி உசுரோட இருக்கேன்ற சந்தோஷமே எனக்குப் போதும். அதைத்தான் உண்மையான சந்தோஷமா நினைக்கிறேன் நான்."

"மாமா! தப்புப் பண்ணிட்டேன் மாமா. நான் தப்புப் பண்ணிட்டேன்."

"என்னடா சொல்றே?"

"உன்னை விட்டுட்டுப் போக நினைச்சேனே. நீயும் அம்மாவும் எப்படித் தவிப்பீங்கன்னு யோசிக்காமப் பண்ணிட்டேனே..."

"இப்பவாவது சொல்லுடி. ஏன் இப்படிப் பண்ணினே? தோட்ட வீட்டுக்கு ஏன் போனே?" - ஆற்றாமையாய் ஈஸ்வரி கேட்க, அதட்டினான் சுப்பிரமணி.

"அக்கா! எதை மறக்க நினைக்கிறோமோ அதைப் பத்தி பேசக்கூடாது. வாயை மூடு."

"பெத்தவளாச்சேடா. எனக்குத் தலையே குழம்புதுடா."

"அக்கா! சும்மா இரு."

"இல்லய்யா. நீதான் வேணும்னா நம்மக்கிட்ட சண்டை போட்டு அதுல சாதிச்சிருப்பா. ஏன்? ஏன் இப்படிப்



பண்ணினான்னு நினைச்சு எனக்குப் பைத்தியமே பிடிச்சிரும் போலிருக்கே..."

"அம்மா! அழாதேம்மா. நான் சொல்லிடுறேன்."

"சுசி" - அதட்டினான் சுப்பிரமணி.

"பயப்படாதே மாமா. உன் வார்த்தையை மீற மாட்டேன்."

"பின்னே? என்ன... எப்படி?"

"அம்மா! மாப்பிள்ளைக்கிட்டே போய் நான் மாமாவைத்தான் கட்டிக்க விரும்புறேன்னு சொல்லத்தான் போனேம்மா. ஆனா அவர் கேட்கலே. அதனால தற்கொலை பண்ணிடுவேன்னு மிரட்டிப் பார்த்தேன்."

"ஏன்டி?"

"அப்படி மிரட்டினா அவர் ஓடிடுவார்ன்னுதான் லேசா டீசலை ஊத்தினேன். அவரும் பயந்து ஓடிட்டாரு. ஆனா தீ பிடிச்சதும் என்னால எதுவும் செய்ய முடியல்ல. உடம்பெல்லாம் பத்திக்கிச்சு."

"அடிப்பாவி! பாவி! நெருப்பை வெச்சா மிரட்டுவ. ஏன் விடிஞ்சதும் பேசிப் பார்த்திருக்கலாமே..."

"விடிஞ்சா மாப்பிள்ளை போயிடுவாரில்ல?"

"அதுக்காக... பொட்டப்புள்ள இப்படி அர்த்த ராத்திரி வீட்டை விட்டுப் போகலாமா? ஏதாவது தப்பு நடந்திருந்தா..."

"அக்கா!"

"ஆமா தம்பி! நான் இத்தனை நாளா இப்படி நினைச்சி பயந்து தான் குமைஞ்சிட்டு இருந்தேன். இவ என்னன்னா அவனை மிரட்டி நெருப்பைக் கொளுத்தி யிருக்கா. இப்போ... யாருக்கு நஷ்டம்?"

"அம்மா! இப்படி உடம்பெல்லாம் எரியும்னு நினைக்கலம்மா..."

"நீ எரியுது எரியுதுன்னு துடிக்கும் போது நாங்க பட்டபாடு..."

"இப்போ எரியல்லம்மா. வலிக்கல்ல!"

"இனிமே வலிக்காது சுசீ. டாக்டர் வேற மருந்து தந்திருக்காரு."

"அப்போ! நான் பிழைச்சிடுவேனா மாமா."

"கண்டிப்பா. ஆனா இப்படி பேசிட்டே இருந்தா எப்படி ஓய்வெடுப்ப?"

"மாமா! எனக்கெதுக்கு ஓய்வு?"

"இல்லடா! தொடர்ந்து பேசினா மருந்தோட பவர் போயிடுமாம். உடனே வலிக்க ஆரம்பிச்சிடும். அதனால ரொம்பப் பேசாதே."

"ம்."

"அமைதியா படுத்துக்கோ. தூங்கு."

"தூக்கம் வரல்ல மாமா!"

"கண்ணை மூடிட்டு உனக்குப் பிடிச்ச ஏதாவது ஒரு விஷயத்தை நினை. நல்லாத் தூக்கம் வந்திடும்."

"நிசமாவா?"



"ம். நீ கண்ணை மூடிப் பாரேன்."

"சரி" - புன்னகையோடு கண்களை மூடிக்கொண்டாள் சுசீலா.

ஒரு நீண்ட பெருமூச்சோடு இருக்கையில் சாய்ந்து கண்களை மூடினான் சுப்பிரமணி. அவனுக்கு இப்போதைய தேவை அமைதி. அந்த அமைதியில் தான் என்ன செய்ய வேண்டும் என திட்டமிட முடியும்.

மற்ற நினைவுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஜெகனை நினைவில் நிறுத்தினான். அலட்சியமான பார்வையோடு மிடுக்கான உடையோடு தெரிந்த ஜெகன் மீது வெறி எழுந்தது.

என்னிடம் இருந்து தப்பிக்க ஊரில் வந்து பதுங்கியிருக்கிறாயா? வர்றேன்டா. உன்னை சம்ஹாரம் பண்ண வந்திட்டே இருக்கேன்.

புதுசா பூத்த பூவாட்டம் நின்ன பெண்ணை நெருப்பில் பொசுங்க வைத்துவிட்டு ஓடினாயே. உன்னை விட்டு விடுவேனா? நீ எங்கு சென்று ஒளிந்தாலும் உனக்கு நான்தான் எமன்.

உன்னுடன் வந்து என் கண்மணியைத் தீண்டிய வர்களைத் தீக்கு இரையாக்கிவிட்டேன். ஆனால் இது அத்தனைக்கும் காரணமான நீ என்னிடம் இருந்து தப்பிவிடலாம் என்று நினைத்தாயா?

ஒருத்தியைத் தீயிலிட்டு மறுநாளே இன்னொருத்தியிடம் கல்யாணம் முடிவு செய்தாயா? உனக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்தவன் இப்போது நரகத்திற்குப் போய்விட்டான்.

உன்னையும் அனுப்பி விடுகிறேன். நீங்கள்தான் இணை பிரியாத நண்பர்களாயிற்றே. இப்போதும்கூட சுப்பிரமணியால் நம்ப முடியவில்லை.

கிஷோரும் சுரேந்திரனும் தன்னைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இருவரில் ஒருவனுக்குக்கூட தன்னை அடையாளம் தெரியவில்லையே.

ஏற்கனவே தண்ணியடித்திருந்தார்களா? நிச்சயதார்த்தத்தில் தன்னைப் பார்க்கவில்லையா? தோட்ட வீட்டில் வைத்துப் பார்த்தது கூடவா நினைவில் இல்லை.

ஹூம். அவர்களது நினைப்பு முழுக்க பாட்டில் மீது தானே இருந்தது. மாலையில் சுசீயின் மீது இருந்திருக்கும். ஊர் கூடி இருக்கும் போதே இப்படி அலைந்தவர்கள், எப்படி யோக்கியமானவர்களாக இருக்க முடியும்?

இவனை நம்பி நம் பெண்ணைத் தாலிகட்டி அனுப்பியிருந்தால்... அங்கு போய் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால்... நினைப்பே பயமுறுத்தியது.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியாய்த் தெரிந்தது. மூவருமே படித்திருக்கலாம். வசதியாக வாழலாம். ஆனால் அடிப்படையில் மூவரும் அடி முட்டாள்கள். அதனால்தான் தன் காரியம் சுலபமாய் முடிந்தது.

மற்றவர்களை விடவும் ஜெகன் அடிமுட்டாள். இல்லையென்றால் என்னிடம் இருந்து தப்பிக்க தன் சொந்த ஊருக்கே வந்து நிற்பானா? சென்னை தனக்குப் பழக்கப் படாத இடம்.

அங்கே ஏதேனும் ஓர் மூலையில் பதுங்கியிருக்கலாம். நானும் கண்டுபிடிக்க முடியாமல் தேட இயலாமல் திணறி



யிருப்பேன். முட்டாள்! அதை விட்டுவிட்டு இந்தா! என்னைப் பிடித்துக்கொள் என்று தலையை நீட்டுகிறானே.

"வருகிறேன்! ஜெகன்! உன்னையும் அனுப்பி வைக்க வருகிறேன்" சுப்பிரமணியின் முகம் ஆத்திரமாய் சிவக்க, ஆம்புலன்ஸ் மதுரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

வெயில் தாழ்ந்து மாலை மங்கிக் கொண்டிருந்தது. முன் இருக்கையில் இருந்த ஆனந்தன் அழைத்தான்.

"மணி அண்ணே!"

"ம்? என்னப்பா?"

"சுசீலா தூங்கியாச்சா?"

சுப்பிரமணி சுசீலாவைப் பார்த்தான். சீராக சுவாசம் வந்து கொண்டிருக்க, அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

"ம். தூங்கிட்டாப்பா..."

"கொஞ்சம் இந்தப் பக்கம் வாங்களேன்" - ஆனந்தன் மெல்லியக் குரலில் அழைக்க, ஓசைப் படாமல் எழுந்து ஆனந்தனின் பின்புறமாய் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

"ம். சொல்லுப்பா. என்ன விஷயம்?"

ஆனந்தன் பின்புறமாய் திரும்பினான். "அண்ணே! நாம ரொம்ப நல்ல நாளாப் பார்த்துதான் புறப்பட்டு வந்திருக்கோம்."

"என்னப்பா சொல்றே?"

"இப்பத்தான் காலண்டரைப் பார்த்தேன். நாளைக்கு என்ன நாள் தெரியுமா?" - என்றவாறே முன்புறமாய் தொங்கிய சிறிய காலண்டரைக் காட்டினான் ஆனந்தன்.

"என்ன நாளு?"

"கார்த்திகை தீபம்."

"தீபமா? ம்ப்ச். அதையெல்லாம் கொண்டாடுற மன நிலையிலா இருக்கோம் நாம?"

"அண்ணே! நான் சொல்ல வந்த விஷயமே வேற!"

"என்ன?"

"நாளைக்கு கரிசப்பட்டி திடல்ல வெச்சுத்தான் மொத்த ஊரும் கூடி சொக்கப்பனை கொளுத்துவோம்."

"ஆமா."

"எல்லா ஊர் சனமும் ஒண்ணாக் கூடி நிற்கும்."

"ஆமா."

"உங்க வீட்ல இருந்து பார்த்தா அந்தத் திடல் தெரியுமில்ல?"

"ம். நல்லாத் தெரியும். எங்க ஊருப் பொண்ணுங் கள்லாம் நம்ம வீட்டு முன்னால நின்னுதான் பார்ப்பாங்க."

"நாளைக்கு சுசீலாவும் பார்ப்பாள். இல்லையா?"

"என்ன ஆனந்த் நீ. சுசீயால எப்படி எழுந்து..."

"படுக்கையில வெச்சே நீங்க காட்டணும்..."

"ஆனந்து! நீ என்ன சொல்றே?"

"நாளைக்கு எரிக்கப் போறது சொக்கப்பனை மட்டுமில்லே" - ஆனந்தனின் குரலும் முகமும் மாறிவிட, சுப்பிரமணி புருவம் சுருக்கினான்.



"பின்னே?"

"சொக்கப்பனைக்குள்ள அரக்கனும் இருப்பான்."

"அரக்கனா?"

"ம். எரிய வேண்டிய ஒரே ஒரு அரக்கன். மிச்சமுள்ள அரக்கன்."

"ஆனந்தா" - விழிகளை விரித்தான் சுப்பிரமணி.

"ஆமாண்ணே! நான் முடிவு பண்ணிட்டேன். எதை எப்படிச் செய்யணும்னு ப்ளான் பண்ணிட்டேன்."

"எ... எப்படி?"

"ஊர்ல போய் பேசுவோம். ஊரை நெருங்கிட்டோம். டிரைவரண்ணே! வண்டிய வலது பக்கமாத் திருப்புங்க" - என்றதும் ஆம்புலன்ஸ் திரும்பி வீட்டை நெருங்கியது.

## 18

கண்ணுக்குள் ஜீவனைத் தேக்கி
காலம் கழித்திருப்பேன் - உலகம்
அழிகின்ற போதும் - நான்
உன்னை நினைத்திருப்பேன்!

அறை முழுக்க இருட்டாய் இருக்க, "விளக்கைக் கூட போடாம என்ன பண்ணிட்டு இருக்கான் இவன்" - என்ற வாறே உள்ளே வந்து விளக்கைப் போட்டாள் மாரியம்மாள்.

மேஜை முன் அமர்ந்து நெற்றியை விரல்களால் பற்றிக் கொண்டிருந்தான் ஜெகன். தாயின் வருகையை உணர்ந்து எரிச்சலாய்த் திரும்பினான்.

"இப்ப ஏம்மா லைட்டைப் போட்டே?"

"ஏன்டா! விளக்கு வைக்கிற நேரத்தில வீட்டை இருட்டாப் போடலாமா? ஏன்டா இப்படி இருட்டுல உட்கார்ந்திருக்க?"

"ம்ப்ச்! ஒண்ணுமில்ல..."

"டேய்! இன்னும் எத்தனை நாள்தான் அலறக்குள்ளேயே அடைஞ்சி கிடப்பே."

"ஏன் கேட்குற?"

"இல்லடா. இப்பவே ஊர்ல ஒருமாதிரிப் பேசுறாளுக. நீயும் வேலை வெட்டிக்குப் போகாம இப்படியே இருந்தா எப்படி?"

"அம்மா! வேலைக்குப் போனா கேட்கிறவங்களுக்கு பதில் சொல்ல முடியலன்னுதானே இந்தப் பட்டிக்காட்டுல வந்து முடங்கிக் கிடக்கிறேன்."

"சரிடா! எத்தனை நாள்தான் இப்படியே இருப்ப? எப்படியும் ஒருநாள் போய்த்தானே ஆகணும்."

"போகணும்."

"அப்பவும் கேள்வி கேட்கத்தானே செய்வாங்க?"

"இப்ப ஏம்மா சும்மா நொய் நொய்ன்ற?"

"டேய் ஜெகன்! நல்ல நாளும் அதுவுமா நீ இப்படியே இருந்தா எப்படிடா?"

"என்ன நல்ல நாளு?"

"விடிஞ்சா திருக்கார்த்திகை. ஊர் முழுக்க விசேஷமா இருக்கும். ராத்திரியில சொக்கப்பனை கொளுத்துவாங்க. ஊர் முழுக்க ஜெகஜோதியா இருக்கும்."



"அதுக்கு நான் என்ன பண்ணணும்?"

"இப்படி இடிஞ்சுபோய் உட்காராம கலகலப்பா சுத்திவா. சொக்கப்பனை செய்யுறதுக்காக விடிஞ்சதுல இருந்தே உன்னை மாதிரி வயசுப் பையன்க விறகை அடுக்க ஆரம்பிச்சிடுவாங்க."

"நான் போகல்ல..."

"அப்படிச் சொல்லாதடா. நீயும் நாலு பேரோட பேசினாத் தானே வருத்தம் குறையும்?"

"எனக்கு யாரோடவும் பேசப் பிடிக்கல்லம்மா."

"ஏன்பா இப்படிப் பேசுற? அவ என்ன ஊர்ல இல்லாத அழகியா? அவ வேண்டாம்னு சொன்னதுக்கா இப்படி இடி விழுந்த மாதிரி இருக்கே."

"அம்மா! சும்மா இரு."

"ஏன்? நான் ஏன் சும்மா இருக்கணும். அப்படி எம்புள்ளகிட்ட என்ன குறையக் கண்டா அவ? ராசாவாட்டம் இருந்த புள்ளைய இப்படி இடிஞ்சு போய் உக்கார வெச்சிட்டாளே. சண்டாளி."

"அம்மா! தயவு செய்து அவளைப் பத்திப் பேசாதே."

"ஏன்டா?"

"எனக்கு... ரொம்ப பயமா இருக்கும்மா."

"ஏய்யா? நீ ஏன் பயப்படுற?"

"அம்மா... ஒருவேளை... அவ... செத்திடுவாளா?"

"நம்மளையே வேண்டாம்னு சொன்னவ. இருந்தா என்ன? செத்தா என்ன? நீ ஏன் பயப்படணும்?"

"அம்மா... அவ செத்திட்டா நம்ம மேல தானே பழி விழும்."

"என்னடா உளர்ற? நாம என்ன செய்தோம்?"

"இல்ல, நாம ஒண்ணும் பண்ணல்ல. ஆனா... அது யாருக்கும் தெரியாதே. அவளுக்கு ஏதாவது ஆயிடுச்சின்னா நம்மளைத் தானே சொல்வாங்க."

"டேய்! தப்பு அவங்க மேல இருக்கிறதாலதான் இதுவரை ஈஸ்வரியோ, அவ தம்பியோ நம்மைத் தேடி வரல்ல. இல்லேன்னா இந்நேரத்துக்கு இங்கே வந்து உண்டு இல்லன்னு பண்ணியிருக்கமாட்டான் அவன்?"

"அம்மா! மணி... அவ்வளவு கோபக்காரனா?"

"அவன் கோபக்காரனா இருந்தா நமக்கென்னடா? நியாயமாப் பார்த்தா நாமதான் அவன்மேல கோபப்படணும்."

"எதுக்கும்மா?"

"அவன் நினைப்புல பைத்தியமாத் திரிஞ்சவளை நமக்கு ஏன்டா சம்பந்தம் பேசினான். அதனாலதானே இவ்வளவு பிரச்சனை?"

ஜெகனிடம் பதிலில்லை.

"என்னடா? நான் சொல்றது சரிதானே?"

"ம்... ம்..."

"சரி. போனதை விட்டுத்தள்ளு. அன்னிக்கு அந்தப் பொண்ணு பேசினாளே. என்ன சொன்னா?"



"எந்தப் பொண்ணு?"

"அதான்டா. இப்ப நிச்சயம் பண்ணினோமே. பேர் என் வாயில நுழைய மாட்டேங்குதே..."

"திலோத்தமாவா?"

"ஆமாம். என்ன சொன்னா?"

"இல்ல. சும்மா தான் பேசியிருக்கா."

"அந்தப் பொண்ணுக்காகவும் தான் சொல்றேன்டா. நீ பாட்டுக்கு ஊரோட இருந்தா அவளுக்குச் சந்தேகம் வராதா? இங்க உள்ள பிரச்சனையெல்லாம் அவளுக்குத் தெரிய வேண்டாம்."

"ஆதி முதல் அந்தம் வரை தெரிந்து வைத்திருக்கிறாள் அவள்..." என சொல்ல முடியாமல் தடுமாறினான் ஜெகன்.

"எல்லாம் காரணமாத்தான்டா சொல்றேன். இதெல்லாம் பொண்ணு வீட்டுக்காரங்களுக்குத் தெரிஞ்சா வீணான சந்தேகம் கிளம்பும்."

"ம்... ம்..."

"உன் சிநேகிதக்காரப்பய எதுவும் சொல்லிட மாட்டானே..."

"அ... அவன் சொல்ல மாட்டாம்மா."

"அதானே! எல்லாப் புள்ளையுமே தங்கமான புள்ளைங்கதான்டா." - மாரியம்மாள் பெருமையாய்ச் சொல்ல, ஜெகனின் வயிற்றுக்குள் பிரளயம் தோன்றியது.

அம்மா கறாராய் பேசினாலும் நியாய அநியாயங் களுக்குக் கட்டுப்பட்டவள். அநியாயம் என்றால் யாராய்

இருந்தாலும் விடமாட்டாள். தன் பிள்ளையை உத்தமன் என்று எண்ணியதால் இத்தனைப் பொறுமையாய் பேசுகிறாள்.

அன்று தோட்ட வீட்டில் என்ன நடந்தது என்று தெரிந்தால் மகன் என்று பார்க்கமாட்டாள். சுப்பிரமணியின் கையில் அரிவாளைக் கொடுத்து இவளே வெட்டச் சொல்லுவாள்.

அதனால் எது நடந்தாலும் சரி. அம்மாவிடம் உண்மையை மட்டும் சொல்லவே கூடாது. வாயை இறுக மூடிக்கொண்டான் ஜெகன்.

"ஏலேய்! எங்கிட்ட எதையும் மறைக்கிறியா?" - தாய் கேட்ட கேள்வியில் உடம்பு உதறிக் கொண்டது.

"எ... என்னம்மா?"

"இல்ல. எங்கிட்ட எதையேனும் மறைக்கிறியான்னு கேட்டேன்."

"இ... இல்லையே. ஏன் அப்படிக் கேட்கிற?"

"சுசீலா கொளுத்திக்கிட்ட பிறகுதானே அந்தப் பொண்ணை பேசி நிச்சயம் பண்ணினோம்."

"ஆ... ஆமா."

"அப்பல்லாம் நீ நல்லாத்தானே இருந்தே? இப்ப மட்டும் ஏன் இப்படி இருக்க?"

"அ... அது... வந்தும்மா..." - பதில் சொல்லத் திணறினான்.

"என்னடா? சும்மா சொல்லு."



"அது... என் கல்யாணம் நின்னதுல நான் வருத்தப் படக்கூடாதுன்னு தான் சுரேன் அவன் தங்கையை எனக்குக் கொடுக்கச் சம்மதிச்சான். நானும் ஒத்துக்கிட்டேன்."

"பிறகென்னடா?"

"அம்மா! என்னதான் மேலோட்டமா நான் சிரிச்சாலும் எம் மனசு பதறிக்கிட்டே இருக்குதும்மா."

"ஏன்டா?"

"அது... அந்தப் பொண்ணு சுசீலா திடீர்னு அப்படிப் பண்ணுவான்னு நினைக்கல்ல. சும்மா பேசிட்டுத்தான் இருந்தா. ஆனா... நாங்க எதிர்பாராத நேரம் அவ அப்படிப் பண்ணிட்டா."

"அதையே நினைச்சிட்டு இருக்கியா?"

"மறக்க முடியலம்மா. கண்ணை மூடினா அவ எரியுற மாதிரி இருக்கு. கண்ணை மூடவே பயம்மா இருக்கு."

"தப்புப் பண்ணினாத்தான்டா பயப்படணும்."

"இல்லம்மா. நேர்ல பார்த்தேனே. அதை... என்னால மறக்க முடியலம்மா..."

"அதான் சொல்றேன். நீ கிளம்பி ஊருக்குப் போயிடு. எல்லாம் தானா மறந்திடும்."

"ம். போகணும். பார்த்துதான் கிளம்பணும்."

"சரி சரி பொழுதாகிப் போச்சு. வா சாப்பிட்டுட்டுப் படு."

"இல்லம்மா. பசிக்கல்ல..."

"வயசுப்புள்ள. இப்படி சாப்பிடாமக் கிடந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும். வா சாப்பிடு."

"சரி. நீ போம்மா. வர்றேன்" - ஜெகன் சொல்லிக் கொண்டிருந்தபோது வெளியே கதவைத் திறக்கும் ஓசை கேட்டது.

இருவரும் வெளியே எட்டிப் பார்க்க, தோளில் போட்ட துண்டோடு சிவனேசன் வந்து கொண்டிருந்தார்.

"அப்பா வந்தாச்சு! வா! சேர்ந்தே சாப்பிடுங்க. எனக்கு வேலை முடியும்" - மகனிடம் சொல்லியவாறு கணவனை நெருங்கினாள்.

"என்ன? சீக்கிரம் வந்திட்டீக? நேரமாகும்னு சொல்லிட்டுப் போனீங்க."

"மாரி! ஒரு முக்கியமான சங்கதி" - என்றவாறே மேல் துண்டால் வியர்வையை ஒற்றிக் கொண்டார்.

"என்ன? என்ன சங்கதி?"

"உன் அண்ணன் மகளை ஊருக்கு கூட்டியாந்துட்டாங்க."

"என்ன?" - தாயை விடவும் மகன் அதிர்ந்தான். இதயம் வேகமாய்த் துடித்தது.

"என்னாங்க சொல்றீங்க?"

"ஆமாம் மாரி. இப்பத்தான் எனக்கு தகவல் கிடைச்சது ஊரே கூடியிருக்குதாம்."

"பொழைச்சிட்டாளா?"



"என்னவோ தெரியல்ல. லேசான காயமாத்தான் இருந்திருக்குமோ. இல்லன்னா இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு அனுப்பமாட்டாங்களே..."

"அதானே!"

"சரி வா! நாம ஒருநடை பார்த்திட்டு வந்திடுவோம்."

"எதுக்குப்பா?" - பதறி குறுக்கே வந்தான் ஜெகன்.

"இது என்னடா கேள்வி? அது உன் அம்மாவோட அண்ணன் பொண்ணு."

"இருக்கட்டுமே. நாமதான் வேண்டாம்னாளே. பிறகேன் நாம போகணும்?"

"பைத்தியக்காரன் மாதிரி பேசாதேடா. நல்லதுக்கு மட்டும் சொந்தம் இல்லை. நல்லது கெட்டது எல்லாத்துக்கும் சொந்தம் வேணும்."

"ஏனுங்க! நாம போனா அங்கே மரியாதை இருக்குமா?"

"எப்படி இருக்கும்? நாம தப்பு பண்ணியிருக்கோம் மாரி. அதை எப்படி அவங்க மறப்பாங்க?"

"நாம என்ன தப்பு பண்ணினோம்?"

"அன்னிக்கு அதிகாலையில நம்ம புள்ளை எழுப்பி அவசரப்படுத்தின உடனே என்னவோ ஏதோன்னோ பதறி கார்ல ஏறி வந்திட்டோமே. அது எவ்வளவு பெரிய தப்பு?

என்ன விஷயம்னு அங்கேயே சொல்லியிருந்தா நாமளே அவங்களை எல்லாம் எழுப்பி கூட்டிட்டுப் போய் அந்தப் பொண்ணைக் காப்பாத்தி இருக்கலாம்.

சொன்னானா உன் மகன்? வீட்டுக்கு வந்தப் பிறகுதானே சொன்னான். அப்போ அவங்க நம்மளைப் பத்தி என்ன நினைச்சிருப்பாங்க?"

"அப்பா! நான் ஏதோ பயத்துல ஓடி வந்திட்டேன். என்னவோ நான் தப்பு பண்ணிட்டு ஓடிவந்த மாதிரி பேசுறீங்க?"

"தப்புத் தான்டா. நாம செய்தது பெரிய தப்பு. இப்பக் கூட போய்ப் பார்க்கலன்னு வெச்சுக்க நம்ம ஊர்க்காரனே நம்மைக் காரித் துப்புவான்."

"சரி விடுங்க! இன்னிக்கு நேரமாகிப் போச்சு. நாளைக்கு விடிஞ்சதும் போவோம்" - மாரியம்மாள் சொன்னதும் ஜெகன் ஆடிப் போனான்.

அவனது மூளை அவசரமாய் சிந்தித்தது. நாளை அம்மாவும், அப்பாவும் போனால் நிச்சயமாய் நமது குட்டு உடைந்துவிடும். விஷயத்தைக் கேள்விப்பட்டு அம்மாவே தன்னைக் கொன்றாலும் ஆச்சர்யமில்லை.

அப்பாவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். என்ன செய்யலாம்? இவர்கள் போய்விட்டுத் திரும்பும் முன் நாம் வெளியேறிவிட வேண்டும். இங்கு இருந்தால் பெற்றவர்களாலேயே நமக்கு ஆபத்து.

மணிக்கு பயந்துதானே இங்கே வந்தோம். அவனே இங்கு வந்த பிறகு நமக்கு என்ன பயம்? பேசாமல் சென்னைக்கே கிளம்பிவிட்டால் என்ன? இந்த எண்ணம் தோன்றிய உடன் தாயைப் பார்த்தான்.

"அம்மா! நான் காலையில ஊருக்குக் கிளம்பறேன்."



"என்னடா திடீர்னு?"

"போகலன்னா ஏன் போகலன்ற? கிளம்பினா ஏன்னு கேட்கிற. உன்னோட பெரிய ரோதனையாப் போச்சு."

"ஏன்டா கோபப்படுற இப்போ?"

"பின்னே என் பேச்சுக்கு என்ன மரியாதை இருக்கு இந்த வீட்ல? நான் போன பிறகு நீங்க எங்க வேணாப் போங்க."

"என்னங்க! இவன் இப்படிச் சொல்றான்?"

"சரி. போகட்டும் விடு. நாம நாளைக்குப் போகலாம்."

"வேண்டாங்க. நாளைக்கு கார்த்திகை தீபம். ஊரெல்லாம் விசேஷமா இருக்கும். நம்ம புள்ள நாளைக்கி இருந்துட்டு அடுத்தநாள் போகட்டும். நாம இன்னொரு நாள் கரிசப்பட்டிக்கு போலாம்."

"என்ன சொல்ற நீ?"

"ஆமாங்க! நல்ல நாளும் அதுவுமா புள்ள வீட்ல இருக்கட்டும். பலகாரம் எல்லாம் பண்ணணும். நாளை மறுநாள் அனுப்புவோம்."

"என்னவோ செய்." - என்றவாறு வீட்டினுள் சென்று விட்டார்.

மகனைப் பார்த்தாள் மாரியம்மாள்.

"தம்பி! நீ வா சாப்பிடு. நாளைக்கு விசேஷம் முடியட்டும். அதுக்குப் பிறகு ஊருக்கு போ. சரியா?"

"ம்... ம்... அப்படி என்னதான் விசேஷமோ?"

"நாளைக்கு நீயே பாரேன். எல்லார் வீட்டு முன்னாலயும் நிறைய தீபம் ஏத்துவாங்க. கோவில்ல விசேஷ பூஜை இருக்கும். சொக்கப்பனை எரியுறதப் பார்க்கவே எட்டூரு சனம் கூடும்."

"தெரியும்மா. நானும் இங்கே பொறந்து வளர்ந்தவன் தானே!"

"நீ பாத்து ஏழெட்டு வருடம் ஆச்சேப்பா. நாளைக்குப் பாரு. நீயே அசந்திடுவே. அப்படி ஒரு அம்சமா இருக்கும்."

"பார்ப்போம்?" எனக்கென்னவோ இங்கே இருக்கவே பிடிக்கலை யாராவது ஏதாவது கேட்டு இம்சை பண்ணிட்டே இருக்காங்க."

"இத்தனை நாள் இருந்திட்ட. நாளைக்கு ஒருநாள் மட்டும் இருந்திட்டுப் போய்யா. பிறகு உன்னைய தடுக்கமாட்டேன்" - மாரியம்மாள் பதமாய்க் கேட்க, அரை மனதோடு தலையாட்டினான் ஜெகன்.

அவன் நாளைவரை மட்டுமே இருப்பான் என்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை.

# 19

அந்த வானத்தைப் போல - மனம்
படைச்ச மன்னவனே - பனித்
துளியைப் போல குணம் படைச்ச
தென்னவனே மஞ்சளிலே ஒரு நூல்
எடுத்து விண்ணுக்கும் மண்ணுக்கும்
சம்பந்தம் உண்டுன்னு சொன்னது யாரு?



வானில் நிலா ஒளியை அள்ளி வீசிக் கொண்டிருக்க, வீட்டின் முன் இருந்த திண்ணையில் படுத்திருந்தான் சுப்பிரமணி. மனம் முழுக்கக் கொதித்துக் கொண்டிருந்தது.

வீட்டினுள்ளே சுசீலாவின் முனகல் கேட்டுக் கொண்டே இருந்தது. அன்னம்பாட்டியின் மெல்லிய விசும்பல் ஒலியும் கேட்டது.

"இவ இப்படித் துடிக்கிறதப் பார்க்கவா நான் இன்னும் உசுரோட இருக்கேன்... மகமாயி!"

"ஆஸ்பத்திரியிலயும் இப்படித்தான் துடிச்சா. என்னையும் உள்ளே விடல்ல. தனியாவே கிடந்து கத்திட்டு இருந்தா. அதைக் காண முடியாமத்தான் கூட்டியாந்தோம்."

"என் ராசா! தாலியெல்லாம் கட்டியிருக்கானே. அப்பா! மணி! உன் பொஞ்சாதி வலியில துடிக்கிறது உனக்குக் கேட்குதா?"

"நம்மையெல்லாம் விட அவன்தான் ரொம்ப வேதனையில இருக்கான். ஒரு நிமிஷம்கூட தூங்கவே இல்ல. அவன் தூங்கட்டும்"

அக்காவின் குரல் மெலிதாய் கேட்க விரக்தியாய் புன்னகைத்தான். "தூக்கமா? எனக்கா? சுசீலாவை இந்த நிலையில் வைத்துக்கொண்டு உறங்க முடியுமா? வாழ்நாள் முழுக்க உறங்க வேண்டிய தூக்கத்தை மொத்தமாய் பறித்துக்கொண்டு போய்விட்டானே அவன்.

இதே திண்ணையில் எத்தனையோ நாள் மணிக்கணக்காய் இருந்து பேசியிருக்கிறாள் சுசீலா. அப்போதெல்லாம் காற்றில் பறப்பதுபோல், சுகந்தமான

குளிர்ச்சியான மலர்வனத்தில் அமர்ந்திருப்பதைப் போல் அத்தனை சுகமாய் இருக்கும்.

சிறுவயதில் இருந்தே மாமனின் மீது கொள்ளைப் பிரியம் சுசீலாவிற்கு. சுப்பிரமணியின் இருபத்தி மூன்றாவது வயதில் அவனுக்கு பெண் கொடுப்பதாகச் சொல்லி வந்திருந்தார் தூரத்து உறவினர் ஒருவர்.

அவரை உண்டு இல்லை என்று ஆக்கி ஓடஓட விரட்டியடித்தாள் சுசீலா. இதோ இந்த இடத்தில் வைத்துத்தான் அது நடந்தது.

"யோவ்! உங்கிட்ட நாங்க பொண்ணு கேட்டோமா? எம்மாமனுக்குத் தான் நான் இருக்கேனே. நான் பொறந்ததே எம்மாமாவுக்காகத்தான். எவனாவது பொண்ணு குடுக்கிறேன், புடலெங்காய் கொடுக்கிறேன்னு வந்தீங்க காலை வெட்டிப் புடுவேன். ஓடிப்போ" - என விரட்டினாள்.

அந்தப் பெரிய மனிதரின் முகம் சுருங்கிப் போனது "என்னம்மா! சின்னப் பொண்ணா இருந்துகிட்டு இப்படி யெல்லாம் பேசுறே?"

"யாருய்யா சின்னப் பொண்ணு! பதினாலு வயசாகுது எனக்கு இன்னும் நாலஞ்சு வருஷத்தில எனக்குக் கல்யாணம்."

"என்ன தம்பி! இந்தப் பொண்ணு என்னென்னவோ பேசுது?"

"யோவ்! அங்கே என்ன பேச்சு? என் மாமாவுக்கு விபரம் பத்தாது. அதனால இந்த வீட்ல நான் சொல்றது தான் சட்டம்."



"ஹூம். நல்ல குடும்பம்."

"எங்க குடும்பம் நல்ல குடும்பம் தான். எங்களுக்குத் தெரியும் கிளம்பு. கிளம்பு" - அவள் விரட்ட சுப்பிரமணி குரல் கொடுத்தான்.

"சுசி! பெரியவங்களை இப்படி மரியாதை இல்லாம பேசக்கூடாது. தப்பு."

"நீ சும்மா இரு மாமா. உனக்கு ஒண்ணும் தெரியாது. வாட்ட சாட்டமா ஒரு ஆம்பிளை இருந்தாப் போதுமே. உடனே வந்திடுவாங்க ஒரு மஞ்சப் பையை தூக்கிக்கிட்டு..."

"சுசி!"

"நான் மட்டும் வீட்ல இல்லன்னா இந்நேரம் வெத்தல, பாக்கு மாத்தியிருக்க மாட்டீங்க. நல்ல காலம்.. இன்னிக்கு பள்ளிக்கூடம் லீவு."

அந்தப் பெரியவர் எழுந்து நின்று தலைக்குமேல் கைகளைத் தூக்கி கும்பிடு போட்டார்.

"தாயீ போதும்மா. உம்மாமனை நீயே கட்டிக்க. நான் வர்றேன்."

"என்னது? வர்றீங்களா?"

"இல்லம்மா. கிளம்புறேன். அம்மாடி! என்ன வாயி!" என்றவாறு அவர் விலகிச் சென்றுவிட, சுப்பிரமணியை உலுக்கி எடுத்துவிட்டாள்.

"மாமா! இனிமே எவனாவது இப்படி வந்தான்னு வை. உனக்குத் தான் பூசை நடக்கும். பார்த்துக்கோ..."

"நான் என்ன பண்ணினேன்?"

"நீ சும்மா கண்ட கண்ட இடத்திற்கெல்லாம் போகாதே."

"ஏம்மா?"

"அப்படிப் போறதாலதானே உன்னைப் பார்க்கிறவங்க உம்மேல ஆசைப்பட்டு மாப்பிள்ளை கேட்டு வர்றாங்க."

ஈஸ்வரி மகளின் முகத்தில் இடித்தாள். "வயசுப் பெண்ணா லட்சணமா இல்லாம நீ ஊர் சுத்துற, வீட்டு ஆம்பிளை அவன் வெளியே எங்கேயும் போகக் கூடாதா?"

"தனியா போகக்கூடாதுன்னு சொல்றேன். என்னையும் கூட்டிட்டுப் போகட்டும். சரியா மாமா?"

"சுசி நீ சின்னப் பொண்ணுடா. இப்படியெல்லாம் பெரிய பேச்சு பேசக்கூடாது."

"மாமா! எனக்கு எத்தனை வயசானாலும் இப்படித்தான் பேசுவேன். நீ எப்பவும் எனக்கு மட்டும்தான்."

"சரி! அதெல்லாம் பிறகு பார்க்கலாம்."

"இந்த சப்பைக் கட்டெல்லாம் வேண்டாம். எனக்கு பதினெட்டு வயசானதும் நம்ம கல்யாணம் நடக்கணும்."

"இருபத்தி ஒண்ணு ஆகட்டும்."

"ஆனா அதுக்குள்ள உனக்கு வயசாகிடுமே..."

"வயசானா வேண்டாம்னு சொல்லிடுவியா?"

"சேச்சே! உன் தலையெல்லாம் நரைச்சிப் போனாலும் நம்ம சுந்தரமூர்த்தி தாத்தா மாதிரி கம்பு ஊன்றி நடந்தாலும் நான் உன்னைத்தான் கட்டிப்பேன்."

"சரி. இப்போ படிப்பு மேலதான் கவனம் இருக்கணும்."



"சரி மாமா. ஆனா ஒண்ணு!"

"என்ன?"

"இந்தப் பொண்ணு வீட்டுக்காரன் மட்டுமல்ல எவ்வளவு பெரிய கோடீஸ்வரன் வந்தாலும் நீ என்னைத் தவிர வேற யாரையும் கட்டிக்கக் கூடாது."

"மாட்டேன்."

"நிஜம்மா?"

"நிஜம்மா."

"மாமான்னா மாமா தான்" - தோளில் தொங்கிக் கொண்டு இரு கன்னங்களிலும் முத்தமிட்டு ஓடிச் சென்றதும் இதே இடம்தான்.

சுப்பிரமணியின் கைகள் அனிச்சையாய் கன்னத்தைத் துடைத்தது.

இன்றுதான் இப்போதுதான் நடந்தது போல் கன்னம் குளிர்ச்சியாய் இருந்தது.

அன்றிலிருந்து வேறு எவரும் மாப்பிள்ளை கேட்டு வந்ததில்லை. வரவிடவும் இல்லை. மாரியம்மாள் வந்து அவ்வப்போது தன் மகனுக்குத்தான் சுசீலா என ஜாடை மாடையாய் பேசினாலும் ஈஸ்வரி வார்த்தை எதையும் விடமாட்டாள்.

மகளின் மனம் புரிவது ஒருபுறம். தம்பியைத் தவிர வேறு யாராலும் தன் மகளைப் பொன்னாய் பாதுகாக்க முடியாது என்ற நம்பிக்கையும் ஒருபுறம் இருந்திருக்கலாம்.

எல்லாம் நன்றாய்த் தானே இருந்தது. மனமொத்து போனபின் ஜாதகம், நல்ல நேரம் எல்லாம் தேவையா? என அன்னம்மா பாட்டிகூடக் கேட்டாளே.

ஈஸ்வரிதான் உறுதியாய் இருந்தாள். 'என் வாழ்க்கை தான் ஆரம்பமே முடிவாகிப் போச்சு. எம் மகளும் தம்பியும் தீர்க்காயுசா வாழணும்னு ஆசைப்படுறேன். கண்டிப்பா ஜாதகம் பார்க்கணும்' - என்றாள்.

சந்தோஷமாய்த் தான் போனார்கள். அவர் எடுத்த எடுப்பினிலே தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டார். ஆனாலும் ஈஸ்வரிக்கு மனம் கேட்கவில்லை.

பரிகாரம் அது இதென்று கோயில் கோயிலாய் ஏறி இறங்கினாள். இறுதியில், 'என்னைப் போல் மொட்டையாய் நில்லாமல் என் மகள் பூவும் பொட்டுமாய் போய்ச் சேர்ந்தாலும் பரவாயில்லை. வாழும் வரை உன்னோடு சந்தோஷமாய் வாழ்ந்துவிட்டுப் போகட்டும்!' - என்றாள் தம்பியிடம்.

இத்தனை வருடமாய் பொத்திப் பாதுகாத்து தங்கமாய் தாங்கி வளர்த்தவளை எமனுக்குக் கொடுப்பதா? நான் தாலி கட்டினால் தானே பொசுக்கென போய்விடுவாள்.

கண்டிப்பாய் அந்தத் தவறை ஒரு போதும் செய்யமாட்டேன் என பிடிவாதமாய் நின்று அதில் சாதித்து. கடைசியில் தோற்றும் போய் நிற்கிறேனே என்ற எண்ணம் வந்ததும் கண்களில் நீர் கசிந்தது.

மருத்துவமனையை விட்டுப் புறப்படும் முன் மருத்துவர் எச்சரித்து அனுப்பியிருந்தார். "இதோ பாருப்பா.



நான் ரொம்ப ரிஸ்க் எடுத்துத்தான் உங்களை அனுப்புறேன். அந்தப் பெண்ணோட நிலமை ரொம்ப மோசமா இருக்கு. எப்பவும் எதுவும் நடக்கலாம்.

நம் கையில் எதுவும் இல்லை. உடல் பகுதி மரத்துப் போற மாதிரி இருந்தாலோ பார்வை மங்கிப் போகிற மாதிரி இருந்தாலோ... அதுதான் இறுதி நேரம்.

நான் மருந்து தர்றேன். கொடுங்க. நாலு நாள் என்பதை ஒரு வாரமாய் நீட்டிக்க முயற்சிக்கலாம். மற்றபடி எதுவும் சொல்ல முடியாது. எதுக்கும் அந்தப் பொண்ணுக்கு என்ன செய்யணும்னு நினைக்கிறியோ அதை சீக்கிரமாப் பண்ணு. சரியா?"

அவரது எச்சரிக்கை நினைவு வர எழுந்து அமர்ந்தான் சுப்பிரமணி. சுசீலாவின் ஒரே ஆசையை நிறைவேற்றிவிட்டேன். இனி என் கடமை ஒன்றுதான் பாக்கி. அதையும் முடித்துவிட்டால்... என் சுசியை நிம்மதியாய் வழியனுப்பி வைத்துவிடலாம்.

அவளைத் தொலைத்துவிட்டு என்னால் இந்த உலகில் வாழ முடியுமா? வாழ்ந்து எதை சாதிக்கப் போகிறேன். பார்க்கலாம். முதலில் கடமையை முடிக்கலாம்.

பிறகு எத்தனை நிமிஷம் இருக்கிறாளோ அதுவரை அவளுடனே இருந்து என்னால் முடிந்த நிம்மதியைக் கொடுக்கலாம். பெருமூச்சுடன் வீட்டினுள் எட்டிப் பார்த்தான்.

சுசீலாவின் முனகல் இன்னும் கேட்டது. அன்னம்மா பாட்டி தரையில் படுத்திருந்தாள்.

ஈஸ்வரி சுவரில் சாய்ந்த நிலையில் உறங்கிக் கொண்டிருக்க, மெல்ல எழுந்து வீட்டிற்குள் சென்றான்.

படுக்கையை நெருங்கினான். அவனது அசைவை வைத்தே கண்டு கொண்ட சுசீலா கண்களைத் திறவாமலே, "மாமா" என்றாள்.

"என்னடா கண்ணு?" - மண்டியிட்டு அமர்ந்தான்.

"நாளைக்கு பௌர்ணமியாமே?"

"ஆமான்டா. அதோட நம்ம ஊர் கார்த்திகை தீபம்."

"பட்டம்மா பாட்டி என்னைப் பார்க்க வந்தாங்க மாமா."

"அப்படியா?"

"நாளைக்கு கனத்த நாளு. அதுவரை தாங்காதுன்னு சொன்னாங்க..."

"சேச்சே! கிழவி என்ன டாக்டரா? கடவுளா?"

"மாமா! அப்புறம் இன்னொன்னும் சொன்னாங்க மாமா?"

"என்னவாம்?"

"நான்தான் போகப் போறேனே. எனக்கு எதுக்கு தாலின்னு கேட்டாங்க. நான் உன் வாழ்க்கையையும் கெடுத்திட்டேனாம்."

"அப்படியே வாய் மேல ஒண்ணு போட வேண்டியது தானே!"

"மாமா! நான் உன் வாழ்க்கையைக் கெடுத்திட்டேனா?"

"என் வாழ்க்கையே நீதானே கண்ணம்மா. அடுத்தவங்க ஆயிரம் சொல்வாங்க. நீ ஏன் அதையெல்லாம் காதுல வாங்குற?"



"மாமா! நான் ஒண்ணு சொன்னாக் கேட்பியா?"

"சொல்லு கண்ணு."

"நான்... நான் போனப்புறம்... நீ வேற யாரையாவது கட்டிக்க..."

"ஏன் சுசீ என்னை வேதனைப்படுத்துற?"

"மாமா!"

"இந்த ஜென்மத்தில நீ மட்டும்தான் என் மனைவி. வேற யாருக்கும் எம் மனசில இடம் கிடையாது. முதல்ல அதைப் புரிஞ்சிக்க."

"மாமா!"

"இனி ஒருமுறை இப்படியெல்லாம் பேசாதே. கஷ்டமா இருக்கு."

"மாமா! இத்தனை உசுரா இருக்கியே. உன்னை விட்டுட்டுப் போகப் போறேனே."

"நீ எங்கயும் போகமாட்டே. இங்க வாழ்ந்திட்டுதான் இருப்ப. என் கடைசி மூச்சு வரைக்கும்" - தன் இதயத்தைத் தொட்டுக் காட்டினான்.

உணர்ச்சிப் பெருக்கில் கண்கள் கசிந்தது.

'மாமா! இன்னொரு ஜென்மம் இருந்தா அப்பவும் நீதான் எம் மாமனாப் பொறக்கணும். அந்தப் பிறவியிலாவது நாம சேர்ந்து வாழணும்."

"அதெல்லாம் வாழலாம். நீ ஏன்டா தூங்காமலே இருக்கே?"

"தூக்கமே வரல்ல மாமா."

"ஏன்டா கண்ணு?"

"மாமா! ஊருக்கு வந்ததும் அவன்... அவன் நினைப்பும் அதிகமா வருது மாமா"

"சுசி"

"மாமா! நல்லவங்களுக்கு காலமே இல்லையா மாமா? கெட்டவங்க தான் சந்தோஷமா வாழ்வாங்களா?"

"அப்படி இல்லடா?"

"எந்தத் தப்புமே செய்யாத நான் கஷ்டப்படுறேன். என்னைப் பார்த்து நீ வேதனைப்படுற. ஆனா... அவன்...?"

"சுசி! இனி அவன் எந்த ஆட்டமும் போட முடியாது. அவனது ஆட்டம் அடங்குற நேரம் வந்திடுச்சி..."

"மாமா!"

"ஆமாங் கண்ணு! இன்னிக்குத் தான் அவனுக்கு கடைசி நாள். நாளைக்கு அவன் இருக்கமாட்டான்" - சுப்பிரமணியின் இறுகிய குரலில் மிரண்டு போனாள் சுசீலா.

## 20

வைகறையில் வைகைக் கரையில்
வந்தால் வருவேன் உன் அருகில்
உன் நினைவில் நெஞ்சம் வான்வெளியில்
நாளும் நடத்தும் ஊர்வலங்கள்!



காலையில் இருந்தே ஊர் விழாக்கோலம் பூண்டிருந்தது. அனைத்து வீட்டு முற்றத்திலும் பெரிது பெரிதாய் கோலங்கள். விருந்தினர் வருகை. கோயில்களில் விசேஷ பூஜை என ஊர் களைகட்டியிருந்தது.

ஜெகன் தாமதமாய் எழுந்து வேண்டாவெறுப்பாய் குளித்து முடித்தபோது ஆனந்தன் வந்து நின்றான்.

"ஆனந்த்! வா! என்னடா ரெண்டு நாளா ஆளையே காணோம்."

"வேலை விஷயமா வெளியூர் போயிருந்தேன் ஜெகா. ஆமா! உங்க அம்மா எங்கே?"

"கோவில்ல மாவிளக்குப் போடணும்னு போயிருக்காங்க."

"அப்பா?"

"வெளியே போனாங்க. என்னடா?"

"ரொம்ப நல்லதாப் போச்சு. கிளம்பு எங்கூட. சீக்கிரம்!"

"எங்கேடா? இப்படி அவசரப்படுத்தற?"

"விஷயம் ரொம்ப முக்கியமானது. இங்கே வெச்சுப் பேச வேண்டாம். வா. வெளியே போயிடலாம்."

ஜெகனின் முகம் கலவரமானது. "என்ன சொல்றே ஆனந்த்?"

"உன் உயிருக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம். இனி இந்த வீட்ல ஒரு நிமிஷம் கூட இருக்காதே."

"என்ன?"

"ஆமாம். மணி அண்ணன் அவுக ஊர் ஆளுங்களோட அரிவா கம்போட உன் வீட்டுக்குத்தான் வந்திட்டு இருக்காங்க."

ஜெகனின் முகம் வெளிறியது. "என் வீட்டுக்கா? எ... எதுக்கு?"

"முதல்ல கிளம்பு. வெளியே எங்கேயாவது போய் பேசலாம். நான் உங்கூடப் பேசறது தெரிஞ்சா என்னையும் வெட்டி வீசிடுவாங்க."

"ஆனந்த்! இப்போ நாம எங்கே போறது?"

"நீ வீட்டைப் பூட்டிட்டு வா. நான் பாதுகாப்பான இடத்துக்குக் கூட்டிட்டுப் போறேன்."

"அ... அம்மா வந்தா தேடுவாங்களே..."

"இன்னிக்கு ராத்திரி வரை மறைஞ்சிருந்தா போதும். அதற்குப் பிறகு உங்க அம்மாகிட்ட சொல்லிக்கலாம். வா. அவங்க எந்த நிமிஷமும் வந்துடலாம்." - ஆனந்தனின் அவசரம் ஜெகனையும் தொற்றிக் கொண்டது.

வேகமாக வீட்டிற்குள் சென்று வேறு ஆடையை மாற்றிவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டான்.

"ஜெகா! நான் சைக்கிள்ல தான் வந்திருக்கேன். கொஞ்ச தூரம் யாருக்கும் சந்தேகம் வராதபடி நடந்தே போவோம்."

"என்ன சந்தேகம் வரும்?"

"நீ என்கூட வர்றதைப் பார்த்துட்டு யாராவது நான்தான் உன்னைத் தப்பிக்க வெச்சேன்னு சொல்லிக் கொடுத்திடக் கூடாதில்ல."



"யாருகிட்ட?"

"மணி அண்ணன் கிட்டத்தான்."

"அவங்க ஏன் என்னைத் தேடுறாங்க ஆனந்த்?"

"கொஞ்ச நேரம் பேசாம வா. ஊரைத் தாண்டின பிறகு பேசலாம்" - ஆனந்தன் ரகசியமாய்ச் சொல்ல, ஜெகன் வாயை மூடிக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்தான்.

மனதிற்குள் பயமும் குழப்பமும் பின்னிப் பிணைந்தது.

என்னைத் தேடிக் கொண்டு ஊரையே திரட்டிக் கொண்டு வருகிறான் என்றால் சுப்பிரமணிக்கு எல்லாமே தெரிந்துவிட்டது என்று தானே அர்த்தம்.

அப்படியென்றால் கிஷோரையும் சுரேனையும் கொன்றது இவன்தான். நானும் மாட்டியிருந்தால் என்னையும் அனுப்பியிருப்பான்.

இவன் கண்ணில் படாமல் இங்கு வந்து பதுங்கியதால் தப்பித்தேன். அதையும் மோப்பம் பிடித்து வந்துவிட்டானே.

ச்சே! நேற்று இரவே புறப்பட்டிருக்க வேண்டும்.

அம்மாவின் பேச்சைக் கேட்டு இங்கே தங்கியது பெரும் தவறு. ஊர் முழுக்கத் திரட்டியவன் எப்படி உண்மையைச் சொல்லியிருப்பான். அது அவன் குடும்பத்திற்கும் அவமானம் தானே.

மான அவமானத்திற்கு பயந்து வாழ்பவர்கள். தன் குடும்பத்துப் பெண் மற்றவர்களால் சீரழிக்கப்பட்டாள் என

வெளியே சொல்ல அஞ்சுவார்கள் என்ற தைரியத்தில் தானே அலட்சியமாய் இருந்துவிட்டேன்.

இப்போது என்ன சொல்லி எல்லோரையும் கூட்டிக் கொண்டு வருகிறான். அவன் என்ன சொன்னாலும் சரி. ஊரார் கையில் சிக்கினால் எலும்புகூட மிஞ்சாது.

அடித்து துவைத்து கிடைத்த பாகத்தை அவனவன் தோட்டத்து தென்னை மரங்களுக்கு உரம் வைத்துவிடுவான். இது கொலை வழக்காகவும் மாறாது. பாவக் கணக்கிலும் சேராது.

தம் ஊர்ப் பெண்கள் மீது எவனையும் கைவைக்கவே விடமாட்டார்கள். ஆயிரம் பகை இருந்தாலும் அதை ஒட்டு மொத்தமாய் மறந்து துண்டு துண்டாக்கி விடுவர்.

நான் என்னடாவென்றால் அவன் ஊரிலேயே அவன் வீட்டிலே என் நண்பர்களோடு அந்தப் பெண்ணை நாசமாக்கியிருக்கிறேன். இதுநாள் வரை தெரியாத விஷயம் சுப்பிரமணி ஊருக்கு வந்ததும் தெரிந்திருக்கிறது.

இனி விடுவார்களா என்னை? ஒருவன் கண்ணிலும் படாமல் தப்பித்தால்தான் உண்டு. இல்லையென்றால் எனக்கும் சங்கு ஊதிடுவான் சுப்பிரமணி.

நல்லவேளை! ஆனந்தன் என் உறவுக்காரனாய் இருந்தான். பள்ளிக்கூட நட்புங்கூட. ஆனந்தன் திறமைசாலி! புத்திசாலி! எப்படியும் என்னைக் காப்பாற்றி விடுவான்.

ஊரை விட்டு வெளியேறினால் போதும். எங்காவது கண்மறைவாய் போய்விடலாம். நம் ஊர் திசைக்கே திரும்பி வரக்கூடாது.



பலவித எண்ணங்களோடு வெகுதூரம் வந்து விட்டிருந்தான் ஜெகன். கால் வலித்த பிறகே நடப்பதை நிறுத்திக் களைப்பாய் நின்றான்.

முன்னே சென்ற ஆனந்தனை அழைத்தான். "ஆனந்த்! ரொம்ப தூரம் வந்திட்டோமே... இன்னும் எங்கே போகணும்?"

"இன்னும் ஒரு பத்து நிமிஷ நடைதான். அதோ தெரியுது பார். அதுதான் என்னோட கோழிப்பண்ணை. அங்கே போயிடலாம் வா."

"இது... உன் ஊர் இல்லையே ஆனந்த்?"

"இல்ல... இது கரிசப்பட்டியோட எல்லை." - ஆனந்தன் சொல்ல, விதிர்விதிர்த்துப் போனான் ஜெகன். நாக்கு உலர்ந்து போனது.

"ஆனந்த்! என்ன சொல்றே நீ?"

"ஆமா ஜெகா! இது இப்போ புதுசாத் தொடங்கின கோழிப்பண்ணை."

"என்னை ஏன் இங்கே கூட்டிட்டு வந்தே?"

"இதைவிட பாதுகாப்பான இடம் கிடையாது ஜெகா."

"என்ன உளர்ற? என்னைக் கொல்லணும்னு வெறியோட இருக்கிறவன் ஊருக்கே கூட்டிட்டு வந்திட்டு பாதுகாப்பான இடம்னு சொல்றே?"

"ஆமான்டா. முதல்ல நம்ம பண்ணைக்குள்ள போயிடுவோம். எல்லாம் சொல்றேன்."

"இல்ல... இப்பவே சொல்லு."

"உனக்கு மூளையே கிடையாதா ஜெகா!"

"ஏய்! என்னடா சொல்றே?"

"பின்னே! இப்பத்தானே சொன்னேன். ஊர் மொத்தமும் கூடி உன்னைத் தேடுதுன்னு...!"

"ஆமா."

"அப்போ எல்லாருமே வெளியேதானே தேடுவாங்க."

"என்ன?"

"உள்ளூர்ல எவனாவது தேடுவானா? இல்லே நீதான் இந்த ஊரு பக்கம் எட்டிப் பார்ப்பியா?"

"ஆமா..." என்றான் யோசனையாய்.

"அதான் உன்னை இங்கே கூட்டிட்டு வந்தேன். இன்னிக்குப் பூரா நம்ம ஊரைச் சுத்தி உள்ள எல்லா ஊர்லயும் அவங்க உன்னைத் தேடட்டும். நீ பத்திரமா என்கூட இரு... வா!"

ஜெகனின் முகம் புன்னகைத்தது. "நீ சொல்றது சரிதான்டா. உன் அளவுக்கு எனக்குப் புத்தி கிடையாது!" என்றவாறே ஆனந்தைத் தொடர்ந்து சென்று அந்தக் கோழிப்பண்ணையை அடைந்தனர்.

முள்ளால் ஆன வேலிக்கதவைத் திறந்து உள்ளே சென்றதும் கதவை மூடினான் ஆனந்தன். சைக்கிளை ஓரமாய் நிறுத்திப் பூட்டிவிட்டு நண்பனை அழைத்துக் கொண்டு சென்றான்.



முழுக்கத் தென்னை ஓலைகளால் வேயப்பட்டிருந்த பரந்த குடிசைக்குள் அழைத்துச் சென்றான். காற்றில் வீசிய கோழியின் கழிவுகளின் நாற்றத்தில் முகத்தைச் சுளித்தான் ஜெகன்.

"ஜெகன்! இப்படி உட்காரு. வந்திடுறேன்."

"எங்கேடா போறே?"

"கோழி எல்லாம் பசியில இருக்கும். தீனி போட்டுட்டு வர்றேன்!" என்றவன் விலகிச் செல்ல, அவஸ்தையாய் அங்கிருந்த சாக்குமூட்டையின் மேல் அமர்ந்தான் ஜெகன்.

ஒரே வரிசையாய் நீளமாய் கம்பி வலைகளால் அமைக்கப்பட்டிருந்த கூண்டில் ஏராளமான கோழிகள். கூண்டில் உள்ள தட்டுகளில் இரை. கிண்ணங்களில் தண்ணீர் என அந்த இடம் வெகுநேர்த்தியாய் சுத்தமாய் இருந்தது.

இன்னொரு வரிசையில் பிறந்து சில நாட்களே ஆன கோழிக்குஞ்சுகள். பஞ்சு உருண்டைகளாய் அங்குமிங்கும் ஓடிக்கொண்டு தனது குட்டிக் கால்களால் உணவுப் பொருளை கிளறிக் கொண்டும் இருந்தது.

காச்மூச்சென்ற சத்தம் காதை அடைத்தது. மற்றபடி ஆள் நடமாட்டம் அற்ற தனிப்பகுதி வெகு அமைதியாய் இருந்தது.

தவிட்டு மூட்டையைப் பிரித்து பெரிய வாளியில் கொட்டித் தண்ணீர் ஊற்றிப் பிசைந்தான் ஆனந்தன். பக்குவமாய்ப் பிசைந்ததும் வரிசையாய்க் கூண்டைத் திறந்து கிண்ணத்தில் கைநிறைய அள்ளி வைத்தான்.

கோழிகளும் ஆவலாய் வேகமாய் சாப்பிடத் தொடங்கின.

"ரொம்பப் பசியோட இருந்தீங்களா! கொஞ்சம் நேரமாகிப் போச்சு. ஸாரி... நல்லா சாப்பிடுங்க!" எனப் புன்னகையோடு சொல்லிக் கொண்டே தவிடை வைத்து முடித்தான்.

கைகளைச் சுத்தம் செய்துவிட்டு கிண்ணங்களில் இருந்த நீரை கீழே கொட்டிவிட்டு சுத்தப்படுத்தி புதிய நீரை ஊற்றினான்.

குஞ்சுகள் நீர்க்கிண்ணத்தைச் சூழ்ந்து கொண்டு தனது குட்டி அலகுகளால் நீர் அருந்திய காட்சி ரசனையைத் தூண்ட, அதில் லயித்துப் போனான் ஜெகன்.

மனதின் ஒரு மூலையில் லேசாய் ஏக்கம் இழையோடியது. பேசாமல் தோட்டக்காட்டைப் பார்த்துக் கொண்டு ஊரோடு இருந்திருக்கலாமோ?

கள்ளம், கபடம், சூது வாதின்றி கிடைத்த உணவைக் கொண்டு நிம்மதியாய் வாழ்ந்திருக்கலாம்.

பணம், பகட்டு வாழ்வு வேண்டுமென்று நகர வாழ்க்கை வாழ ஆசைப்பட்டு எல்லாவித சூதுவாதுகளையும் கற்றுக் கொண்டு தவறான சகவாசங்களைத் தேடிக் கொண்டு...

செய்யக்கூடாத பெரிய பாவத்தைச் செய்து விட்டு இப்படி உயிருக்குப் பயந்து ஒளிந்து பதுங்கி வாழ்வது ஒரு வாழ்க்கையா?



என்னதான் சுப்பிரமணியிடம் இருந்து சாமர்த்தியமாய்த் தப்பினாலும் தன் மனசாட்சி கூடவே இருந்து கொல்லாதா? தினம் தினம் வதைக்காதா?

ஆயிரம் தண்டனைகள் அனுபவிப்பதைவிட மனசாட்சி வதைப்பதைத் தாங்க முடியுமா? தன் சொந்த மாமன் மகளைத் தன் வருங்கால மனைவியைக் குடிவெறியில் சூறையாடி மற்றவர்களுக்கும் பலியாக்கினேனே!

எத்தனை யுகமானாலும் இந்தப் பாவம் தன்னை விடாது. தன் கண்முன்னே நெருப்பை வைத்துக் கொண்டாளே... அவளைத் தடுக்கவும் கூடத் தோன்றாமல் கோழையாய் ஓடித்தானே போனேன்.

தவறுக்கு மேல் தவறு செய்துவிட்டு தண்டனைக்காக ஓடி ஒளிகிறேனே... பேசாமல் இந்த ஆனந்தனைப் போல் கிடைத்த வாழ்க்கையை முழுமையாய் ஏற்றுக்கொண்டு நிம்மதியாய் வாழ்ந்திருக்கலாம்.

ஹூம்! காலம் கடந்த ஞானோதயம்.' - நீண்ட பெருமூச்சு விட்டவனைத் தோளில் தட்டினான் ஆனந்தன்.

"என்னடா! அசந்து போய் உட்கார்ந்திட்டே?"

கலைந்து நிமிர்ந்தான் ஜெகன். "ஆனந்த்! எப்படிடா இப்படி ஆகிட்ட. சொந்தப் பிள்ளைங்களைக் கவனிக்கிற மாதிரி இருக்குதுடா நீ செய்யுற வேலையைப் பார்க்கும் போது..."

"ஜெகா! எந்த வேலை செய்தாலும் அதுல முழு ஈடுபாடோட செய்தா... அதில கிடைக்கிற நிறைவு வேற எதிலயும் கிடைக்காதுடா."

"உனக்கு வெளியூர்ல போய் வாழணும்னு ஆசை இல்லையா?"

"ஏன்? எதுக்காக? நமக்குத் தேவையானதெல்லாம் கிடைக்கும்போது நாம ஏன் வெளியே போகணும்?"

"எல்லாமே கிடைக்குதா ஆனந்த்!"

"ஆமா! கண்டிப்பா. மனசுக்குத் தேவையான நிம்மதி. உண்மையான அன்பு. சூதில்லாத வாழ்க்கை. இதைவிட வேறென்ன வேணும்?"

"ம்ப்ச்! நான்தான் நிறைய இழந்திட்டேன்."

"என்ன சொல்றே?"

"கிராமத்தை வெறுத்திட்டுப் பட்டண வாழ்க்கைக்கு ஆசைப்பட்டேன். நிம்மதியைத் தொலைச்சிட்டு வாழ வேண்டியதாப் போச்சு."

"கிராமமோ நகரமோ நாம் வாழுறதுலதான் இருக்கு எல்லாம். நீ எப்போதுமே தப்பாத்தானே வாழ்ந்தே?"

"ஆனந்த்."

"எவ்வளவு பெரிய மோசக்காரன்டா நீ? பணவெறி பிடிச்சவன்னு தெரியும். தலைக்கனமும் அலட்சியமும் உண்டுன்னு தெரியும். ஆனா... நீ ஒரு குடிகாரன், காமவெறியன்னு தெரியாமப் போச்சே...!"

கண்கள் கோபச் சிவப்பேறிவிட, பற்களைக் கடித்தவாறே ஆனந்தன் பேச, முகம் மாறினான் ஜெகன்.

"ஆனந்த்! நீ... நீ என்ன சொல்ற?"

"உண்மையைத்தான் பேசுறேன்."



"எ... என்ன உண்மை?"

"அதை என் வாயால சொல்லணுமா? உன் அட்டூழியம் எல்லாருக்குமே தெரிஞ்சு போச்சே...!"

மிரட்சியாய்த் தடுமாறி எழுந்தான் ஜெகன்.

"உட்காருடா! ஆயிரம்தான் இருந்தாலும் நீ என் உறவுக்காரன். அதோட சின்ன வயசுல இருந்தே சிநேகிதன். உன்னைக் காப்பாத்த வேண்டியது என்னோட கடமை."

"ஆனந்த்! நான்... நான்..."

"எல்லாம் தெரியும். ஆனா ஒரே ஒரு வருத்தம்டா!"

"என்ன ஆனந்த்?"

"குடிச்ச... சீரழிச்ச... குடிவெறியில பண்ணிட்டன்னு ஒத்துக்கலாம். ஆனா அந்தப் பொண்ணு உன் கண் முன்னால எரிஞ்சாளே... அவளை அப்படியே விட்டுட்டுப் போக எப்படிடா மனசு வந்தது?"

"ஆனந்த்! உண்மையில் எங்களுக்கு யாருக்குமே அன்னிக்கு நிதானம் இல்லை. அவ ஏதோ சும்மா மிரட்டுறான்னுதான் நினைச்சோம். ஆனா திடீர்னு கொளுத்தினதும் எங்களுக்கு என்ன பண்றதுன்னு தெரியல்ல."

"சரி! நீ காப்பாத்த வேண்டாம். ஊர்ல வந்து கத்தி எல்லாரையும் எழுப்பியிருக்கலாமில்ல... ஏன் செய்யல்ல?"

"அது... அது வந்து..."

"பயம்! அந்தப் பொண்ணைக் காப்பாத்திட்டா உண்மை தெரிஞ்சிடும்ன்ற பயம் இல்லே?"

"அது... இல்ல ஆனந்த்! வந்து..."

"உன்னைக் காப்பாத்திக்க அவளைக் கொன்னுருக்க நீ. ஒரு உயிரைப் பத்திக் கவலைப்படாத நீ மனித ஜென்மமா?"

"ஆனந்த்!"

"உன் கெட்ட நேரமோ இல்ல... அவ நல்ல நேரமோ எப்படியோ அந்தப் பொண்ணு பொழைச்சிக்கிட்டா. இப்ப என்ன பண்ணப்போறே?"

"பிழைச்சிட்டாளா? எப்படி? எப்படி?"

"அவ மாமன் காப்பாத்திட்டார். அவர்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டா... நானும் எல்லாத்தையும் கேட்டுட்டேன்."

"நீ... எப்படி? உனக்கும் அவங்களுக்கும் என்ன உறவு?"

"உனக்குத் தெரியாதில்ல... கோவில் திருவிழாவில அந்தப் பொண்ணைப் பார்த்து பிடிச்சிப் போய் பெண் கேட்டுப் போயிருக்கேன். அப்போ இருந்தே பழக்கம்!"

"என்ன?" அதிர்ந்து எழுந்து நின்றான்.

"இது... எப்போ நடந்தது?"

"கொஞ்ச நாள் முன்னாலதான். ஆனா அவ என்னை மறுத்திட்டா!"

"ஏன்?"



"என்னைப் பிடிக்கலையாம். அதை விடு. நான் அதை மறந்திட்டேன். இப்ப உன் கதைக்கு வருவோம். இனிமே என்ன செய்யப் போறே?"

"என்ன செய்யுறது?"

"நீதான்டா சொல்லணும். என்ன செய்யப் போற?"

"நான்... எப்படியாவது நம்ம ஊரை விட்டுப் போயிடணும்."

"போயி...?"

"எங்கேயாவது வெளியூர்ல போய் வாழ்ந்திடுவேன். ஊர்ப்பக்கமே வரமாட்டேன். யார் கண்லயும் படமாட்டேன்."

"அப்போ நீ செய்த பாவத்திற்குச் சம்பளம் வேண்டாமா?"

"என்ன?"

"தப்பு செய்தவங்களை மன்னிச்சி விட்டுடலாம். பாவம் பண்ணினவங்களை யாராவது சும்மா விடுவாங்களா?"

"ஆனந்த்... நீ... நீ...!"

"உனக்கு நாள் குறிச்சாச்சி ஜெகன். இன்னிக்குத்தான் உன்னோட கடைசி நாள்!" – ஆனந்தனின் குரலில் மிரண்டு பின்வாங்கினான் ஜெகன்.

சுற்றுப்புற அமைதி இப்போது பலமாய் மிரட்டியது. கண்களில் மரணபயம் தோன்றிவிட நடுக்கமாய்ப் பார்த்தான் ஜெகன்.

# 21

சிரிக்கிறேன் சிரிப்பிலே
மலருகிறாய் அழுகிறேன்
துளிகளாய் சிதறுகிறாய்
சருகென உதிர்கிறேன் தனிமையிலே...

ஜெகனின் முகத்தில் மரணபயத்தைக் கண்டதும் திருப்தியாய் புன்னகைத்தான் ஆனந்தன்.

"என்ன நண்பா! பயந்திட்டியா?"

ஜெகனிடம் பதில் இல்லை.

"பயப்படாதே! என் நண்பனாக இருந்தாலும் நீ செய்தது தப்புதானே. அதான் மனசு தாங்காம கொஞ்சம் கடுமையாகப் பேசிட்டேன். மனசுல எதையும் வெச்சிக்காதே!"

இதமாய்ப் பேசியவனை நம்பிக்கையின்றிக் குழப்பமாய்ப் பார்த்தான்.

"என்னடா? பேயைக் கண்ட மாதிரி முழிக்கிறே?"

"ஆனந்த்! என்னை எதுக்காக இங்கே கூட்டிட்டு வந்தே?"

"உன்னைக் காப்பாற்றத்தான்."

"ஆனா... நீ பேசுறதைப் பார்த்தா... நீயே என்னைக் கொன்னுடுவ போலிருக்கே...!"

"நான் ஏன்டா உன்னைக் கொல்லப் போறேன்?"

"இப்போ... அப்படித்தானே சொன்னே?"

"என்ன சொன்னேன்?"



"கடைசி நாளுன்னு...!"

"ஓ! அதுவா... அதை நான் சொல்லல... அந்த மணி ஊர்க்காரங்ககிட்ட பேசினதைக் கேட்டேன்."

"எ... எப்போ?"

"இன்னிக்குக் காலையிலதான்..."

"எங்கே வெச்சு சொன்னான்?"

"அவங்க ஊர்ல வெச்சுத்தான்."

ஜெகனின் முகம் மருண்டது. "நீ... நீ ஏன் அங்கே போனே?"

"உனக்கு விஷயமே தெரியாதா? இன்னிக்கு சொக்கப்பனை கொளுத்துவோமில்ல...!"

"ஆமா."

"அதைக் கரிசப்பட்டியில உள்ள திடல்லதானே செய்வோம்."

"என்ன?" பலமாய் அதிர்ந்தான் ஜெகன்.

"ஏன்டா! அதுகூடவா உனக்கு மறந்திடுச்சி?"

"ஆமா... மறந்துதான் போயிட்டேன்..." - திணறினான்.

"நல்லா மறந்தே போ. நம்ம ஊரு சனம் சுத்துப்பட்டியில உள்ள சனமெல்லாம் விறகு, ஓலைன்னு கொண்டு போய் திடல்ல சேர்த்திட்டு வர்றாங்க. நான்கூட ஒரு வண்டி வைக்கோல் கொண்டு போய் இறக்கிட்டு வந்தேன்.

அப்பத்தான் அங்கே அவங்க பேசினதைக் கேட்டேன். உடனே உன் வீட்டுக்கு ஓடிவந்தேன்."

"ஆனந்த்! இப்போ... நான் எப்படித் தப்பிக்கிறது?"

"ஜெகா! ரோடு முழுக்க கரிசப்பட்டி ஆளுகள நிறுத்தி வெச்சிருக்காங்க. அதனால நீ பஸ்லயோ கார்லயோ போக முடியாது."

"அப்போ?"

"இந்நேரம் நம்ம ஊர்ல போய் ரகளை பண்ணியிருப்பாங்க. அதனால எல்லாருமே உம்மேல பயங்கர கோபத்தில இருப்பாங்க. அதனால யார் வீட்லயும் போய் ஒளிய முடியாது."

"ஐயோ...!"

"உங்க அம்மாவைப் பத்தி உனக்கே தெரியும். அவங்களே உன்னை வீட்டுக்குள்ள சேர்க்க மாட்டாங்க."

"அ... ஆமாம்."

"அதனால... எனக்குத் தெரிஞ்சு ஒரே ஒரு வழிதான் இருக்கு."

"எ... என்ன வழி?"

"சொன்னா நீ ஒத்துக்குவியா?"

"சொல்லு ஆனந்த். எதுவா இருந்தாலும் ஒத்துக்கிறேன்."

"அப்பச் சரி. ஜெகா! இப்போதைக்கு நீ ஒளிஞ்சுக்க ஒரே ஒரு இடம்தான் இருக்கு. யார் கண்ணிலும் படாத இடம்."

"எது? சீக்கிரம் சொல்லேன்."



"இன்னும் கொஞ்ச நேரத்தில சொக்கபனை செட் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க."

"சரி..."

"மரம், கம்பு, கட்டை எல்லாம் வெச்சிக் கோபுரம் மாதிரி கட்டுவாங்க."

"அதான் தெரியுமே!"

"வழக்கமா இந்த வேலையெல்லாம் கரிசப்பட்டி இளவட்டங்கள்தான் செய்யும். ஆனா இந்த வருஷம் எல்லாரும் உன்னைத் தேடி அலையுறதால அந்த வேலையை எங்க ஊருக்காரங்கள செய்யச் சொல்லிட்டாங்க."

"சரி. நான் எங்கே ஒளியணும்?"

"அவசரப்படாதே! சொல்றேன்."

"ம்... சொல்லு."

"உனக்காக நான்தான் இன்னிக்கு சொக்கப்பனை கட்டப் போறேன்."

"நீயா? நீ மட்டுமா கட்ட முடியும்?"

"ம்ஹூம். வெளிவேலைகளை மத்தவங்களைச் செய்ய வெச்சிட்டு உள்பக்க கோபுர வேலையை மட்டும் நான் செய்யப் போறேன்."

"ம்ப்ச்! எனக்கு ஒண்ணுமே புரியல்ல."

"ஜெகா! காலையில தொடங்குற வேலை சாயங்காலம் வரைக்கும் நடக்கும். நம்ம ஊர் கட்டுப்படி வேலை

முடியுற வரை வேற யாரும் அதை எட்டியோ உள்ளே வந்தோ பார்க்கக் கூடாது."

"ஆமா."

"அப்போ அதுதானே... உனக்குப் பாதுகாப்பான இடம்."

"என்னடா சொல்றே?"

"ஆமா ஜெகா! என் கூடவே வந்திடு. பரண் கட்டின உடனே நீ மேல ஏறி உட்கார்ந்துக்க. இவனுங்க ஊரெல்லாம் தேடி அலைஞ்சிட்டு இருட்டும்போது ஊருக்கு வந்திடுவாங்க."

"அப்போ நான்?"

"நான் இருக்கேனில்ல... பின்பக்க வழியா ஒரு ஓலையைப் பிரிச்சி உன்னை அனுப்பிடுறேன். நீ ஓடிடு."

"ஆனந்த்! இது எப்படி சரியா வரும்?"

"ஏன் வராது?"

"ஊர் முழுக்கக் கூடியிருக்கும்போது நான் எப்படி ஓட முடியும்?"

"தேவையில்ல... நடந்தே போ!"

"விளையாடாதே ஆனந்த்!"

"பின்னே என்னடா? எல்லாருமே சொக்கப்பனையைக் கொளுத்தப் போறதுக்காக கோவில்ல இருந்து வர்ற தீபத்தை எதிர்பார்த்திட்டு இருப்பாங்க. அதோட எல்லாருமே தூரமா இருந்துதான் பார்ப்பாங்க.



அந்த இருட்டுல போறது ஜெகன்தானான்னு எவனும் பார்க்க மாட்டான். நீ கூட்டத்தோட கூட்டமா நின்னு பொறுமையாக் கிளம்பிடு. யாருக்கும் சந்தேகம் வராது."

ஜெகனின் முகத்தில் தெளிவு வரவில்லை. பயமும் பதட்டமுமாய் யோசித்தான்.

"என்னடா? ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிற?"

"ஆனந்து! எனக்கென்னவோ இது சரியாப் படல்ல...!" ஜெகன் தயக்கமாய்ச் சொல்ல, ஆனந்த் உஷாரானான்.

"ஏ... ஏன்?"

"இது... ரொம்ப ரிஸ்க்கா இருக்கு."

"தப்பிக்கணும்னா ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும்."

"வேண்டாம் ஆனந்த். நான் வேணா இங்கேயே இருந்துடுறேனே... இருட்டினதும் கிளம்பிடுறேன்."

"இருக்கலாம்ப்பா. ஆனா இது என் சொந்த இடம் இல்ல. குத்தகைக்கு எடுத்திருக்கேன். பகல்ல தோட்டக்கார அம்மா அடிக்கடி வருவாங்க."

"வந்தா வந்துட்டுப் போகட்டுமே...!"

"என்னடா இப்படிச் சொல்ற! உன்னைப் பார்த்தா என்ன ஆகும்?"

"நான் யாருன்னு அவங்களுக்கு எப்படித் தெரியும்?"

"ஏன்டா! ஊரையே கூட்டி நிச்சயம் பண்ணியிருக்கு. கிட்டத்தட்ட மூணு நாலு மணிநேரம் உன் முகத்தைப் பார்த்திருக்காங்க. உன்னை அடையாளம் தெரியாதா?"

"தெரியுமா?"

"பின்னே? இந்த ஆம்பிளைகளைவிட பொம்பளைங்க தான் உம்மேல கடுமையான வெறுப்புல இருக்காங்க. நீ மட்டும் கையில கிடைச்ச... சக்கையாப் பிழிஞ்சிடுவாங்க... பார்த்துக்கோ!"

ஆனந்தனின் மிரட்டலில் பயமாய் எச்சில் விழுங்கினான் ஜெகன்.

"எ... என்னடா சொல்றே?"

"நடக்கப் போறதைச் சொல்றேன்."

"வேற... வேற வழியே இல்லையா?"

"எனக்குத் தெரிஞ்சு இந்த ஒரு வழிதான் இருக்கு. நீ தப்பிச்ச மாதிரியும் இருக்கும். நான் வேலை செய்த மாதிரியும் இருக்கும்.

"இல்லடா! நான் எப்படி?"

"இப்ப... என்ன பயம் உனக்கு?"

"இல்ல... ஆனந்து. எவ்வளவு நேரம் உள்ளேயே இருக்க முடியும்?"

"உசுரோட இருக்கணும்னா இருந்துதான் ஆகணும். நான்தான் கீழே உனக்குப் பாதுகாப்பா நிற்பேனே...!"

"ஒருவேளை... கடைசி நேரத்தில தப்பிக்க முடியலைன்னா...?"

ஆனந்தன் புன்னகைத்தான். "சொக்கப்பனையோட சேர்த்து உன்னையும் கொளுத்திடுவாங்களோன்னு பயப் படுறியா?"



"என்னடா இப்படிக் கேட்கிற?"

"உன்னைப் பத்திரமா யார் கண்லயும் படாம அனுப்பி வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு."

"இருந்தாலும்..."

"இதோ பாருப்பா. இதுவே என் மனசு கேட்காம செய்யுற உதவி. மத்தபடி உன்னைக் காப்பாத்தி எனக்கு என்ன ஆகப்போகுது?"

"கோவிச்சுக்காதேடா!"

"பிறகென்ன? எனக்கும் ஆயிரம் வேலை இருக்கு. சீக்கிரம் முடிவு பண்ணு. இப்போ நான் அங்கே போகலைன்னா பசங்க என்னைத் தேடி இங்கே வந்திடுவானுங்க..."

"ஆனந்த்! எனக்குக் கொஞ்சம் பயம்மா இருக்குடா."

"தப்பு செய்யும்போது இந்தப் பயம் எங்கே போச்சு?"

"ஏன்டா அதையே நினைவு படுத்துற?"

"சரி. வேற என்ன பண்ணப் போற?"

"வேற ஏதாவது ஐடியா கொடேன்."

"ஏன்? உனக்கு மூளை இல்லையா? இது உன் உயிர் சம்பந்தப்பட்ட விஷயம். நீயே முடிவு பண்ணிக்க!"

"ஆனந்த்! நான் வேணும்னா மணிகிட்ட பேசிப் பார்க்கட்டுமா?"

வியப்பாய் நோக்கினான். "என்ன பேசுவ?"

"வந்து... தண்ணியடிச்சதால தெரியாமப் பண்ணிட்டோம்னு சொல்லி மன்னிப்பு கேட்கட்டுமா?"

"மன்னிப்புக் கேட்டா சுசீலாவுக்குக் காயமெல்லாம் ஆறிடுமா? பழையபடி எழுந்து நடமாடுவாளா? இல்லே... நீ பண்ணின தப்பெல்லாம் இல்லேன்னு ஆயிடுமா?"

"அது... வந்து..."

"ஆனாலும் உனக்குத் துணிச்சல் அதிகம்டா. கண்ணே மணியேன்னு தாலாட்டிச் சீராட்டி வளர்த்த பெண்ணை நெருப்பில போட்டு பொசுக்கிட்டு அவங்க கிட்டயே போய் மன்னிப்புக் கேட்கிறேன்னு சொல்றியே... நீ தைரியசாலிதான்."

"என்ன ஆனந்த்! இப்படிச் சொல்றே?"

"பின்னே! உன்னைப் பார்த்தாலே கண்டம்துண்டமா வெட்டணும்னு அலையுறாங்க. நீ போய் சமாதானம் பேசுவியா?"

"அப்போ... வேற வழியே இல்லையா?"

"இருக்கு."

"என்ன? என்ன வழி?"

"பேசாம நீயும் உன் கூட்டாளிங்க மாதிரி தற்கொலை பண்ணிக்க...!" ஆனந்த் நிதானமாய்ச் சொல்ல, அதிர்ந்து நிமிர்ந்தான் ஜெகன்.

"ஆ... ஆனந்த்! உனக்கு..."

"எல்லாம் தெரியும்."

"எ... எப்படி?"



"நேர்ல பார்த்தேன். சவக்கிடங்குல... கரிக்கட்டையா..."

"ஆனந்த்! அவங்க தற்கொலை பண்ணிக்கல்ல...!"

"பின்னே?"

"இந்த... சுப்பிரமணிதான் கொன்னுருப்பான்..."

"ஆமா! அவருக்கு வேலை இல்லை பாரு. நம்ம ஊரை விட்டா வேற என்ன தெரியும் அவருக்கு? சுசீலாவை விட்டு நகர முடியுமா அவரால...?"

"அப்போ... அவனுங்க..."

"கண்டிப்பா தற்கொலைதான் பண்ணியிருப்பாங்க."

"ஏன்?"

"எங்கே மாட்டிக்குவோமோன்னு பயம்தான்."

"அப்படியா சொல்றே?"

"ம்... வேறென்ன? நீ என்ன பண்ணப் போற? தப்பிக்கப் போறியா? இல்லே... அவனுங்களை மாதிரியே..."

"நோ... நோ... நான்... நான் வாழணும்."

"அப்போ நான் சொன்ன ஒரே வழிதான் இருக்கு. உனக்கு ஓ.கேன்னா சொல்லு. இப்பவே போகலாம்."

"நீ கூடவே இருப்பல்ல...!"

"ம்... உன்னை மேல ஏத்திட்டு கீழேதான் நிற்பேன்." - ஆனந்தன் உறுதியாய்ச் சொல்ல, அரைமனதோடு தலையாட்டினான் ஜெகன்.

"போகலாம்..." - புன்னகையோடு புறப்பட்டான் ஆனந்தன்.

# 22

பூவிழி மூட முடியவும் இல்லை
மூடியபோது விடியவும் இல்லை
கடலைச் சேரும் காவிரி போல்
கலந்திட வேண்டும் உன் மடிமேல்...

கும்மென்ற இருள் சூழ்ந்திருக்க, ஊரார் அனைவரும் சுப்பிரமணியின் வீட்டின் முன் கூடியிருந்தனர். சுழல் காற்று சுழன்றடிக்க தூசு, குப்பைகள் எனப் பறந்து கொண்டிருந்தது.

ஊரார் அனைவரின் முகமும் பீதியில் உறைந்திருந்தது. வீட்டினுள் தன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருந்தாள் சுசீலா. வெளித்திண்ணையில் இறுகிப் போய் அமர்ந்திருந்தான் சுப்பிரமணி.

தொண்டைக்குழிக்குள் உயிர் கிடந்து துடிக்க, சுசீலாவின் உடல் உறுப்புகள் தன் வேலையை நிறுத்தியிருந்தன. செவிகள் கேட்கும் திறனைத் தொலைத்து, பார்வை சுத்தமாய் மறைந்து போயிருந்தது.

வயதான பெண்மணி ஈஸ்வரியை நெருங்கினாள். "ஈஸ்வரி! இன்னிப் பொழுது தாண்டாது. தொண்டைக் குழிக்குள்ள உசுர் கிடந்து தவிக்குது. மணியைக் கூட்டியாந்து பால் ஊத்தச் சொல்லு."

"ஐயோ!" முகத்தை மூடிக்கொண்டு அழுதாள் ஈஸ்வரி.

"அழுது என்னம்மா ஆகப் போகுது. போற உசுரு அவன் மடியில நிம்மதியாப் போய்ச் சேரட்டுமே!"



"நான் எத்தனையோ முறை கூப்பிட்டும் அவன் உள்ளே வர மாட்டேங்கிறானே... நான் என்ன செய்வேன்?"

அந்த அம்மாள் தடுமாறியவாறே வெளியே வந்தாள். "மணி! என்னய்யா இப்படி அடம்பிடிக்கிற? வந்து பால் ஊத்துய்யா!"

கலங்கிச் சிவந்த கண்களால் எதிரே தெரிந்த உயரமான சொக்கப்பனையை வெறித்துக் கொண்டே இருந்தான் சுப்பிரமணி.

அன்னம்மாள் நெருங்கி வந்து அவனது தோளைத் தொட்டாள்.

"இப்படி இருந்தா எப்படிய்யா? மாமா மாமான்னு உசுரை விடுவாளே... இப்படிக் கடைசி மூச்சுக்குப் போராடும் போது எட்டியே நிக்கிறியேப்பா!"

"பாட்டி! அவ சாகமாட்டா."

"என்னய்யா இது? சின்னப்புள்ளையாட்டம்..."

"அவ சாகக் கூடாது."

"என்னப்பா மணி! சுயநினைவோடதான் பேசுறியா?" ஊர்ப்பெரியவர் குரல் கொடுத்தார்.

"அதானே... உடல் முழுக்க வெந்து போச்சு. இனிமே எப்படிப் பிழைப்பா? என்னப்பா பேசற?"

"இல்ல... அவ இப்பச் சாகக் கூடாது."

"ஏன்?"

"இன்னிக்கு ராத்திரி சொக்கப்பனை எரியுறதைப் பார்த்திட்டுத்தான் போவா!"

"ஏம்ப்பா! மணி இப்போ மூணுதான் ஆகுது. மேகத்தைப் பார்த்தியா... எப்படி இருட்டிப் போச்சுன்னு... எந்த நிமிஷம் மழை பிடிக்கும்னு சொல்ல முடியாது.

பிறகெப்படி சொக்கப்பனை கொளுத்த முடியும்? காத்தும் புயல் மாதிரி வீசுது. புயலும் மழையும் வந்தா என்னப்பா பண்றது?"

"அதுக்கு?"

"சொக்கப்பனை இந்த வருஷம் இல்லேன்னா அடுத்த வருஷம் கொளுத்தலாம். ஆனா... இந்தப் புள்ளை இறுதிச் சடங்கை ஊர்கூடி பண்ண வேண்டாமா?"

"அதுக்காக... நான் அவளைக் கொல்லணுமா?" ஆத்திரமாய்க் கேட்டான் சுப்பிரமணி.

"அப்படிச் சொல்லலப்பா... அந்தப் புள்ளை கிடந்து துடிக்குதே!"

"இத்தனை நாளா அவ துடிக்கிறதைப் பார்த்திட்டுத் தான் இருக்கேன். இன்னும் கொஞ்சநேரம் போகட்டும்."

"ஏம்ப்பா! இப்படிப் பிடிவாதம் பண்றே?"

"என் சுசீயோட கடைசி ஆசை இன்னிக்கு சொக்கப்பனை எரியுறதைப் பார்க்கணும்னுதான்... உங்களால முடிஞ்சா அதைக் கொஞ்சம் சீக்கிரம் செய்யுங்க."

"என்னப்பா விளையாடுறியா? ஊருக்குள்ள சாவு விழும்போது கோவில் விசேஷம் கொண்டாட முடியுமா?"



"ஏற்கனவே இதைத் தடுக்கத்தான் இப்படிக் காத்தும் புயலுமா இருக்கு. இது நமக்கு ஆண்டவன் கொடுத்த எச்சரிக்கை!"

"இதை மீறி சொக்கப்பனை கொளுத்தினா தெய்வக் குத்தமாயிடும். பேசாம கம்மாப்பட்டிக்காரங்களைக் கூப்பிட்டு அதைப் பிரிக்கச் சொல்லிடுவோம்."

ஊர்ப்பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்க, அப்போது தான் அங்கே வந்த ஆனந்தன் பதறினான்.

"என்னய்யா இப்படிச் சொல்றீங்க? இதுக்காக நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கோம். நாங்க பட்ட பாடெல்லாம் வீணாகிடுமே...!"

"தம்பி! அதைப் பார்த்தா சரி வருமா?"

"இல்லங்கய்யா! கடவுள் அருளால இந்த வருஷம்தான் எங்களுக்கு இந்த வாய்ப்பு கிடைச்சிருக்கு. பாருங்க! ஒரு பனை உயரத்திற்கும் மேலே பிரமாதமா கட்டி முடிச்சிருக்கோம்."

"அதெல்லாம் சரிதாம்ப்பா... ஆனா... இங்கே சூழ்நிலை சரியில்லையே...!"

"அபசகுணமா எதுவும் நடக்காதுங்க. நம்பிக்கையோட விளக்கு ஏத்தச் சொல்லுங்க."

"சின்னப்பய.. நீ சொல்லிட்டுப் போயிடுவ. நாம அங்கே நிற்கும்போது இங்கே உசுரு போயிடுச்சின்னா... அது தெய்வக் குத்தமாயிடும்ப்பா... ஊருக்கு ஆகாது."

"நான் கடைசித் தண்ணி ஊத்துறவரைக்கும் அவ உயிரு போகாது. சொக்கப்பனை எரியாம நான் தண்ணி

ஊத்தமாட்டேன்!" உறுதியான குரலில் சுப்பிரமணி சொல்ல, ஊரார் அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"மணிதான் இவ்வளவு உறுதியா இருக்கானே... நாம ஆக வேண்டிய வேலையைப் பார்ப்போமே...!"

"சுசி நம்ம வீட்டுப் பொண்ணு. அதோட கடைசி ஆசையை நிறைவேத்திடுவோம். சொக்கப்பனை கொளுத்த ஏற்பாடு செய்வோம்."

"அவ பார்க்கிற கடைசி தீபம் இதுதானே! பார்த்திட்டுப் போகட்டும். நிம்மதியாக் கண்மூடட்டும்!" பெண்கள் பரிந்து கொண்டு பேச, மற்றவர்களும் மனம் இரங்கிச் சம்மதித்தனர்.

ஆனந்தும் சுப்பிரமணியும் ஒருவித நிம்மதியோடு பார்வையைப் பரிமாறிக் கொள்ள, வானமே பிளந்தது போல் இடிஇடித்தது.

பளீர் என்ற மின்னல் கண்களைக் கூசச் செய்தது. காற்றின் வேகம் பல மடங்கானது.

குழந்தைகள் பயத்தில் வீறிட்டு அலறின. சிலர் தங்களது வீட்டை நோக்கி ஓடினர்.

ஊர்த்தலைவர் பலமான குரலில் மறுத்தார். "பார்த்தீங்களா? நான் சொல்லலை... இது சரிப்படாது. இன்னிக்கு நாம கார்த்திகை தீபம் கொண்டாடறதுல ஆத்தாளுக்கு விருப்பமில்லை!

அதான் இப்படி இடியா மின்னலா வந்து தன் மறுப்பைத் தெரிவிக்கிறா... யார் என்ன சொன்னாலும் சரி.



இன்னிக்கு நடக்கப்போற விசேஷத்தைத் தள்ளி வெச்சிடுவோம்."

"ஐயா! என்ன சொல்றீங்க?" ஆனந்த் மீண்டும் பதறினான்.

"இதோ பாருப்பா! ஊருக்குள்ள ஏதோ கெட்டது நடக்கப் போகுது. அதுக்கான அறிகுறிதான் இது. அதனால எல்லாத்தையும் நிறுத்திடலாம்."

"அப்போ... நாங்க செய்ததெல்லாம்?"

"நீங்க பிரிக்க வேண்டாம்ப்பா... அடிக்கிற காத்துல எல்லா ஓலையும் பறந்திடும். கட்டைகள் எல்லாம் சரிஞ்சிடும். யாரும் அந்தப் பக்கம் போக வேண்டாம்!" - ஊர்ப்பெரியவர் தீர்மானமாய்ச் சொல்லிவிட, இருவரும் தவிப்போடு அந்தச் சொக்கப்பனையைப் பார்த்தனர்.

சுழற்றியடித்த காற்றில் ஓரிரு ஓலைகள் பறந்து கொண்டிருந்தன. இப்படியே பறந்து விழுந்தால் நிச்சயமாய் மேலே அமர்ந்திருக்கும் ஜெகன் எல்லோர் கண்ணிலும் பட்டுவிடுவான்.

இதையே சாக்காய் வைத்துக் கொண்டு தப்பினாலும் தப்பி விடுவான். இத்தனை நாளாய்த் துடித்த சுசீலாவின் துடிப்பிற்கும் தங்களின் வேதனைக்கும் பலன் இல்லாமல் போயிற்றே!

பட்டபாட்டிற்கு ஏமாற்றம்தான் மிஞ்சுமோ! இறுதியாய் சுசீலாவின் ஆன்மா நிம்மதியில்லாமல் பிரிந்து விடுமோ! கன்னிப்பெண்ணின் சாபம் பலிக்காதா?

அவளை வேட்டையாடியவனை தப்ப வைப்பதற்கா இந்த இயற்கையும் அந்த ஆண்டவனும் இப்படி உதவி செய்கிறார்கள்!

விபரம் அறிந்த நாள்முதலாய் தீபத்திருநாள் அன்று நடக்கும் திருவிழா இது. ஒருநாள்கூட காற்றோ மழையோ வந்ததே இல்லை. திருவிழா தடைபட்டதும் இல்லை.

ஆனால் இன்று... ஒரு நயவஞ்சகனைக் காப்பாற்ற இந்த இயற்கை சதி செய்கிறதா? சுசீலாவின் துடிப்பை... என் கண்ணீரை... எங்களின் கொந்தளிப்பை இந்த இயற்கை அறியவில்லையா?

இயற்கையை வணங்குவதும் கடவுளைத் தொழுவதும் வீண்தானா? நல்லவனாய் வாழ்ந்த என்னைக் கைவிட்டுத் துரோகத்தை மட்டுமே செய்த அவனுக்கா உதவி செய்கிறது இந்த இயற்கை?

ச்சே! வெறுப்பாய் வானத்தை நோக்கினான். கார்மேகம் சூழ்ந்து முழுக்க இருட்டாய் மாறியிருந்தது. உள்ளே சுசியின் முனகல் மிக மெதுவாய்க் கேட்டது.

நான் தோற்றுவிட்டேன் சுசி. என் கடமையை என்னால் செய்ய முடியவில்லை. உன்னைச் சிதைத்தவனை என்னால் அழிக்க முடியவில்லை. என்னை மன்னித்துவிடு கண்ணே!

நான் தோற்றுவிட்டேன். உன் மாமன் தோற்று விட்டேன். கடைசி நேரத்தில் நான் ஏமாந்துவிட்டேன்.

நீ சுற்றிச் சுற்றி கும்பிட்ட கடவுள் என்னைக் கைவிட்டு விட்டார். என் கடமையைச் செய்ய விடாமல் தடுத்து விட்டார். வெறுப்பாய் எழுந்து வீட்டினுள் நுழைய முற்படுகையில் அது நடந்தது.



'டமடம'வென பேரிரைச்சலோடு வந்த இடி மிக உயரமாய் நின்ற ஓலைகளால் கட்டப்பட்டிருந்த சொக்கப்பனையில் இறங்கியது.

ஊர்மக்கள் அனைவரும் மிரண்டு காதைப் பொத்திக் கொள்ள, யாரும் பற்ற வைக்காமலேயே திகுதிகுவென எரியத் துவங்கியது சொக்கப்பனை.

அதிர்ச்சியும் இன்பமுமாய் அனைவரும் இருகரங்களையும் தலைக்குமேல் தூக்கி ஆனந்தமாய் உற்சாகமாய்க் கும்பிட, ஆனந்தும் சுப்பிரமணியும் நம்பமுடியாமல் நின்றனர்.

தங்கள் கண்களையே நம்ப முடியாமல் விழிகளை விரித்துப் பார்த்தனர். உச்சியில் பற்றிக்கொண்ட நெருப்பு நொடியில் முழுவதும் பற்றிக் கொள்ள, ஜெகனோடு சேர்ந்து சாம்பலாகத் தொடங்கியது.

"நாம வேண்டாம்னு நினைச்சோம். ஆனா சாமியே சொக்கப்பனை கொளுத்திடுச்சி பார்த்தியா?"

"கண்கண்ட தெய்வமாச்சே... இனிமே ஊருக்கு ஒரு குறை வராது. யாருக்கும் எந்தச் சங்கடமும் இருக்காது."

"நம்ம சுசீ இனி எந்த மனபாரமும் இல்லாம கண்மூடுவா."

"அவளுக்காகத் தான் இந்த இடி நம்ம ஊர்ல அதுவும் சொக்கப்பனையில இறங்கியிருக்கு."

"எய்யா மணி! அதான் நீ நினைச்சது நடந்திடுச்சே... இன்னும் ஏம்பா நிற்கிறே? உள்ளே போ. சுசிக்கு இந்த அருமையான காட்சியைக் காட்டு."

"ஆமா ராசா. அந்தப் புள்ள பார்க்கட்டும். போய்யா...!" மற்றவர்கள் சொன்னபிறகே சுயஉணர்வு பெற்றான் சுப்பிரமணி.

அதுவரை அவனது மனதில் குடியிருந்த சங்கடமும் சஞ்சலமும் மறைந்துவிட, வேகமாய் வீட்டிற்குள் நுழைந்தான்.

தரையில் கிடத்தி வைக்கப்பட்டிருந்த சுசீலாவைப் பற்றித் தூக்கினான். மடியில் கிடத்திக் கொண்டான். லேசாய் அவளது கன்னத்தைத் தொட்டு அசைத்தான்.

"சுசிம்மா... பார்! சொக்கப்பனை எரியுது பார். பாரும்மா... கண்ணைத் திறந்து பாருடா!" என்றவாறு அவளது காதருகே குனிந்தான்.

"எரியுறது சொக்கப்பனை மட்டுமில்லடா. உன்னை... உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினவனும்தான்..."

சுசீலாவின் உடல் லேசாய் அதிர்ந்தது. மூடிய விழிகள் லேசாய் அசைந்தன. கருவிழிகள் உருண்டன. தொடர்ந்து பேசினான்.

"பாரும்மா... கண்ணைத் திறந்து பாருடா. எரியுது பார். உன் உடம்பும் மனசும் எப்படியெல்லாம் எரிஞ்சது. அதே மாதிரி எரியுறான் பார்...!"

இமைகள் திறக்க முடியாமல் திணற, உதடுகள் துடித்தன.

"சுசி நீ துடிச்ச துடிப்பைப் பார்த்து அந்த இயற்கையே அவனுக்கு கொள்ளி வெச்சிடுச்சி சுசி. கடவுள் இருக்கார் சுசி. நிச்சயம் இருக்கார்."



கை, கால்கள் அசைய விழிகளை சிரமமாய்த் திறக்க முயன்றாள்.

"கண்ணம்மா! கண்ணைத் திறடா. கடைசியா ஒருவாட்டி என்னைப் பாருடா. பாரும்மா... மாமா கூப்பிடுறேனில்ல...?"

இமைகள் பிரிந்து ஒளியிழந்த கண்களால் சுப்பிரமணியை நோக்கினாள் சுசீலா. உதடுகள் பிரித்துப் பேச்சு வராமல் தடுமாறியது.

"பாரும்மா! நான் உனக்குத் தெரியுறேனா?"

தலையாட்டினாள். "ம்...!"

"அதோ பாரு! எரியுறதைப் பாரு..." அவளது முகத்தை லேசாய் திருப்பி, வாசலுக்கு வெளியே கைநீட்டிக் காட்டினான்.

விழிகளைத் திறந்து பார்த்தாள். இமை மூடாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஒருகணம்... இருகணம்... சில கணங்களுக்குப் பிறகு கண்களைத் திருப்பினாள்.

பார்வை சுப்பிரமணியின் முகத்தில் நிலைத்தது. நன்றியில் கலங்கிய கண்களில் ஆத்ம திருப்தியும் நிம்மதியும் பரவியிருந்தது.

"பார்த்தியாடா! இனி உன் மனசு அமைதியாகிடும். உன்னை அழிச்சவங்க எல்லாருமே அழிஞ்சு போயிட்டாங்க சுசி. சொல்லுடா. இன்னும் நான் என்ன பண்ணணும்? சொல்லு... செய்யறேன்."

மறுப்பாய்த் தலையாட்டினாள். "போ... போதும் மாமா. இது.. இது போதும் மாமா!" - நிம்மதியாய் வெளியேறிய மூச்சு சுத்தமாய் நின்றுவிட, நிலைத்த பார்வையுடன் சுசீலா, தன் மாமனின் மடியில் தன் இறுதி நித்திரையில் ஆழ்ந்தாள்.

திகைத்த பார்வையுடன் அவளது கன்னங்களைத் தொட்டான்.

"சுசி... சுசிம்மா! சுசிக்கண்ணு...!" நடுங்கும் குரலில் அவன் அழைக்க, தலை ஒருபுறமாய் சாய்ந்தது.

"சுசி!" - சுப்பிரமணியின் வீறிடலில் சொக்கப்பனை எரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பதறி வீட்டினுள் ஓடி வர, ஈஸ்வரி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறினாள்.

அதுவரை இடியும் மின்னலுமாய் இருந்த வானம் பொத்துக் கொண்டு ஊற்ற ஆரம்பித்தது. சுசியின் மரணத்திற்காக ஊரோடு சேர்ந்து வானமும் அழுதது. அழுதுகொண்டே இருந்தது.